


துர்க்கா துணை

தெ[illegible]நகர் துர்க்கையின் அதி அற்புதத்தின் நிலை கொண்டு

உருவாக்கம் பெறும் ஐந்து புலவர்களின் சிந்தனைத் துளிகள்

# புலமையும் வறுமையும்

துர்க்கா கவிஞானி அவர்களின் 56 வது

பிறந்தநாளினைமுன்னிட்டு இந்த

நூல் வெளிவருகின்றது.

25.12.2011






## விநாயகர் காப்பு

புலமைக்கு அருள் புரிந்து புதுமைகள் புரிந்தவனே
புதுமைகள் பலபுரிந்து பூவுலகைக் காப்பவனே
வறுமையின் நிலைநீக்கி வந்தருள் தந்தவனே
வலம் வந்து வணங்குகின்றேன் உன்தன் பாதந்தனை

எந்தன் சிந்தையை எள்ளி நகைத்தவர் முன்னே
ஏக்கங்கள் தீர்தருளிய எங்கள் கஜமுகனே
கலியுகத்து விந்தை தனை கவி புனைய வைத்தவனே
கற்றிடும் தமிழ கொண்டு கருத்தமைத்த காப்பு இதற்கு
கருணை புரிய வந்தருள்வாய் கஜமுகனே
கணமேனும் உனை மறவாது துதி பாட அருள்புரிவாய் கஜமுகனே.



தெல்லிநகர் துர்க்கையம்பாளின் பாதம் வேண்டி

இறைவன் தந்த இன்பக் கவி
பாரினில் வேறு இல்லை பக்தி தரும் இன்பக்கவி
பாடிடும் பக்தர் எல்லாம் பரவசம் பெறும் இன்பக்கவி
பூமகள் பெற்றுத் தந்த புதுமை மிகு இன்பக்கவி
பூவுலகில் புதுமை மிகு தாய் தரும் இன்பக்கவி
நாமகள் நயந்தழித்த சிந்தை தரும் இன்பக்கவி
நாடெங்கும் நலம் பெற வைக்கும் துர்க்கையின் இன்பக்கவி
ஏங்கிடும் ஏழையின் உள்ளத்தின் எழில் மிகு இன்பக்கவி
எள்ளி நகைத்தவர் முன் ஏக்கங்கள் தீர்க்கும் இன்பக்கவி
புலமையும் வறுமையும் எனும் புதுமைதரும் இன்பக்கவி
பூவுலகில் புதுமை தந்த துர்க்கையின் பாதம்பணிந்து தரும் இன்பக்கவி

***எமது முன்னோர் காலத்தில் இல்லங்கள் தோறும் வாரத்தில் ஒரு நாளேனும் அதாவது வெள்ளிக்கிழமைகளில் சுவாமி அறையிலும் மாலை 6.00 மணிக்கு முகம் கழுவி நெற்றியில் திருநீறு அணிந்து திருமுறைகள் படித்து இறையருளை இல்லத்தில் உறைய வைத்து சகல சௌபாக்கியமும் பெற்று வாழ்வதுபோல் நாமும் அவ்வழியைக் கடைப்பிடிப்போமாக***

***உ***

***சிவமயம்***

***பன்னிரு திருமுறைப் பாராயணம்***

***திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்***

***முதலாம் திருமுறை***

***திருத்தலம்:- திருவண்ணாமலை***

***பண்:- தக்கேசி இராகம்:-காம்போதி***

திருச்சிற்றம்பலம்

பூவார் மலர்கொண் டடியார்
தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்க ளெரித்த
வன்று மூவர்க் கருள்செய்தார்
தூமா மழைநின் றதிர
வெருவித் தொறுவின் னிரையோடும்
ஆமாம் பிணைவந் தணையுஞ்
சார லண்ணா மலையாரே.

***இரண்டாம் திருமுறை***

***திருத்தலம்:- திருக்கேதீச்சரம்***

***பண்:- நட்டராகம் இராகம்:- பந்துவராளி***

விருதுகுன்றமா மேருவினாணர வாவனலெரியம்பாப்
பொருதுமூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதியெந்நாளும்
கருதுகின்றவூர் கனைகடற்கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருதநின்றகே தீச்சரங்கைதொழக் கடுவினையடையாவே.

***மூன்றாம் திருமுறை***

***திருத்தலம்:- திருகோணமலை***

***பண்:- புறநீர்மை இராகம்:-பூபாளம்***

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

*திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்*

*நாலாந்திருமுறை*

*திருத்தலம்:- திருவதிகை வீரட்டானம்*

*பண்:- கொல்லி* *இராகம்:- நவரோஸ்*

கூற்றாயின வாறு விலக் ககலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றா யடிக்கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

*ஐந்தாம் திருமுறை*

*திருத்தலம்:-பொது*

*பண்:- திருக்குறுந்தொகை* *இராகம்:- நாதநாமக்கிரியை*

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

*ஆறாம் திருமுறை*

*திருத்தலம்:- திருவாரூர்*

*பண்:- திருத்தாண்டகம்* *இராகம்:- அரிகாம்போதி*

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வ தன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலைபுனைந் தேத்திப் புகழ்ந்துபாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கராசய போற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீயென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

*சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்* *ஏழாம் திருமுறை*

*திருத்தலம்:- திருவேகம்பம்*

*பண்:- தக்கேசி* *இராகம்:- காம்போதி*

ஆலந் தான்உகந் தமுதுசெய் தானை
ஆதி யைஅம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

*திருவாசகம் மாணிக்கவாசகர் அருளியது*

*எட்டாம் திருமுறை*

*இராகம்:- மோகனம்*

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

*திருக்கோவையார்*

*இராகம்:- பைரவி*

காரணி கற்பகங் கற்றவர்
நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியணி
தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர்
தஞ்சங்க நிதி விதிசேர்
ஊரணி உற்றவர்க் கூரன்மற்
றியாவர்க்கும் ஊதியமே.

*திருவிசைப்பா சேந்தனார் அருளியது*

*ஒன்பதாம் திருமுறை*

*திருத்தலம்:- திருவீழிமிழலை*

*பண்:- பஞ்சமம் இராகம்:- ஆனந்தபைரவி*

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

*திருப்பல்லாண்டு*

*திருத்தலம்:- கோயில்*

*பண்:- பஞ்சமம் இராகம்:- ஆனந்தபைரவி*

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற

சிற்றம் பலமே இடமாக
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

***திருமூலர் அருளிய திருமந்திரம்***

***பத்தாம் திருமுறை சிவகுரு தரிசனம்:-***

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே.

***காரைக்காலம்மையார் அருளியது***

***பதினோராந்திருமுறை***

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் - சுடருருவில்
என்பறாக் கோலந் தெரியாடும் எம்மானார்க்
கற்பறா தென்னெஞ் சவர்க்கு.

***தொண்டர்சீர்பரவுவார் அருளிய பெரியபுராணம்***

***பன்னிரண்டாந்திருமுறை***

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

அபிராமி அந்தாதி
மணியே மணியின் ஒளியே
ஒளிரும் மணி புனைந்த
அணியே அணியும் அணிக்கு
அழகே அணுகா தவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே
அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம
பாதம் பணிந்த பின்னே.

-அபிராமிப்பட்டர்-

அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழ்
முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர

- எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும்

- அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு

பட்டப்பகல் வட்டத் திகிரியில்
- இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தருபொருள்
பஷ்த்தொடு ரஷித் தருள்வதும்
- ஒருநாளே
தித்தித் தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்கந டிக்கக் கழுதொடு
- கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத் தொகு தொகு
சித்ரப்பவு ரிக்குத் ரிகடக
- என வோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென
- முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி இட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல
- பெருமாளே

கந்தபுராண வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

### கௌரீ நோன்பு

கௌரி நோன்பின் மகிமை அறிந்து அடியேன் விருப்போடு அனுஷ்டித்து வரும் விரதம் இவற்றை அருள் மிகு துர்க்கையும் இணுவில் சிவகாமி அம்மனிலும் அவ் விரதத்தை 1993 ஆண்டு காலம் தொடர்ந்து அனுஷ்டித்து வருகின்றேன் இவற்றை மிகவும் பயபக்தியுடன் லிங்க மந்திரமும் காப்பு கட்டு பாடலும் பாடி இன்பம் பெறுவதுடன் தாயாரின் அருளையும் பெறுகின்றேன் இவற்றை அனைத்து மக்களும் அனுஷ்டித்து பாடி நலம் பெற இந்நூலில் இப்பாடலை வெளியிடுகின்றேன்

## ஶ்ரீ மஹா லிங்காஷ்டகம்

ப்ரஹ்ம முராரி ஸுரார்சித லிங்கம்
நிர்மல பாஸித ஶோபித லிங்கம்
ஜந்மஜதுக்க விநாசக லிங்கம்
தத்ப்ரண மாமி ஸதாசிவ லிங்கம்

தேவமுநிப்ரவ ரார்ச்சித லிங்கம்
காமதஹம் கருணாகரா லிங்கம்
ராவண தர்ப்ப விநாசக லிங்கம்
தத்ப்ரண மாமி ஸதாசிவ லிங்கம்

ஸர்வஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்திவிவிர்த்தன காரண லிங்கம்
ஸித்தஸுராஸுர வந்திக லிங்கம்
தத்ப்ரண மாமி ஸதாசிவ லிங்கம்
கநசு மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித ஸோபித லிங்கம்
தக்ஷஸுயக்ஞ விநாசக லிங்கம்
தத்ப்ரண மாமி ஸதாசிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹாரஸு ஸோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசக லிங்கம்
தத்ப்ரண மாமி ஸதாசிவ லிங்கம்

தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவைர்பத்திபிர் ஏவச லிங்கம்
தி நகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத்ப்ரண மாமி ஸதாசிவ லிங்கம்

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸ்முத்பவ காரண லிங்கம்
அஷ்டதரித்ர விநாசித லிங்கம்
தத்ப்ரண மாமி ஸதாசிவ லிங்கம்

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரே புஷ்ப ஸதார் சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத்ப்ரண மாமி ஸதாசிவ லிங்கம்

லிங்காஷ்டகம் இதம் புண்யம்
யஃப்படேச் ஸிவ ஸநிதௌ
ஸிவலோக் மவாப்னோதி
ஸிவனே ஸஹ மோததே

## கௌரிக் காப்பு

### விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்வாய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மோடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமல்கா.

### வேண்டுதற்கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தேவியே
கொடிய மகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உனையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்

நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா

நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே வாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுத் தலைவியரே பராசத்தி தாயவளே
எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏரலின்னி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்

நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு

பக்தி மனதுடனே பரவி அணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவரும்
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவரும்
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.
காலமெல்லாம் தவறாமல் காப்பு எமக்கு தந்தருளும்.

சுபம்



## சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்களின் ஆசியுரை

துர்க்கா கவிஞானி கு.கமலேஸ்வரன் அவர்கள் தம் இளமைக்காலம் முதல் யோகக்கலையில் ஆர்வம் மிக்கவர். இளம் வயதில் யோகக்கலையைப் பயில முன்னின்று பலரிடம் பாடம் கேட்க பலரை அணுகிய போது அவர்கள் இவருக்கு அக்கலையைப் போதிக்க முன்வந்தாரில்லை. அச்சமயத்தில் யோகர் சுவாமிகளின் பெருமையை உணர்ந்த இவர் அவரது படத்தை முன் வைத்து அவரையே குருவாக மானசீகமாகக் மனதில் கொண்டு இந்த யோகக்கலையின் நுணுக்கத்தை அறிந்து கொண்டார். இவர் எடுத்து வைத்திருக்கும் பலரூபமான யோகாசன நிழற்படங்கள் இதற்கு சான்று பயிலுகின்றன. சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இவரது யோகக்கலையின் சிறப்பை உணர்ந்து பரிசளித்திருக்கிறார்கள். இப்பொழுது "புலமையும் வறுமையும்" என்று நூல் ஒன்றை ஐந்து புலவர்களுடைய ஆக்கங்களை வெளியிட முன் வந்திருக்கும் இவரது முயற்சி பாராட்டுக்குரியது. கால ஆர்வலங்கள் இவரது வெளியீட்டுக்கு இயன்ற அளவு உதவி செய்து இவரது ஆக்கத்தை விரைவில் வெளிக்கொணர உதவுவார்களாக. இதன் மூலம் இவருக்கு எனது ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்களின்
பிரதம குரு,
இணுவில் மேற்கு.

## ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்களின் ஆசியுரை



"நகுலேஸ்வரானுக்கிரக வித்தியாதரர்"
ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்கள்
ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்
நகுலேஸ்வரம், கீரிமலை
காங்கேசன்துறை, ஸ்ரீலங்கா
021-3212440, 021-7900470

நகுலையம் பதியுறைந்து அருள் பாலிக்கும் நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப்பெருமானின் நல் ஆசி கொண்டு இவ் ஆசியை வழங்குகின்றேன்.

சிந்தைக்கு உரியோன் ஆகி சிவ உருத்திராட்சம் தான் அணிந்து சிவ உருத்தாங்கி சிவ சிந்தைகளை வளர்த்து வரும் குலசேகரம் மகன் கமலேஸ்வரன் துர்க்காகவிஞானி இவர்கள் ஆலயங்கள் தோறும் செய்து வரும் திருத்தொண்டுகள். அன்று உழவாரத் தொண்டு செய்த அப்பர் சுவாமிகள் போன்று இன்று இவர் செய்யும் பணி கண்டு வியக்கிறேன். இவர் தொண்டோடு மட்டுமன்றி நில்லாது பற்பல தெய்வங்கள் மீது பாடல்கள் இயற்றி பாடி பரவசம் கொண்டு இன்புறு இவர் நிலை கண்டு இன்புறுகின்றோம். இன்று பற்றுடைய ஏழை பக்தர்களின் மீது அன்பு பரிவு கொண்டு ஐந்து புலவர்களின் ஆக்கமாக வெளிவரும் "புலமையும் வறுமையும்" நூலில் இவர் ஆக்கம் மட்டுமன்றி குருவில்லா கலை, இன்று இவர், ஏகலைவன் பாதையில் ஒரு மாகலைவன் தோன்றி, பல ஆலய வரலாறுகளும் இன்னும் பல சிந்தை தொகுப்புகளும் இவரின் உள்ளத்தில் தோற்றுவித்தவள் தெல்லி நகர் துர்க்கை தான் என்று எண்ணுகின்றேன். இவருடைய ஆக்கங்கள் மேலும் மேலும் அறிவு கொண்டு துலங்க எல்லாம் வல்ல நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப்பெருமான் நல்லாசீர்வதிப்பாராக.

சிவ சிவ இவர் தொண்டு
சீர் தழைத் தோங்க இவர் தொண்டு
சிவ சின்னங்கள் தரித்தென்றும்
சீருடன் வாழ்க வாழ்க வாழ்க

## சிவஸ்ரீ. இ.சுந்தரேஸ்வரக்குருக்களின் ஆசியுரை



ஆதீனகர்த்தாவும், பிரதமசிவாச்சாரியாரும்
ஆஞ்சநேயர் ஆலயம் இணுவில்.

உலகில் வாழ்கின்ற மனிதன் தன் வாழ்வை வளமுடன் நடத்துவதற்கு வாழ்வாதாரங்களைத் தேடுகின்றான். அதில் ஒரு பகுதியாக இறையருளைக் கொண்டு தான் நினைத்த வாழ்வு தனக்கு கிடைப்பதற்கு பிரார்த்தனை செய்ய முற்படுகிறான். தன்னுடைய பஞ்சஸ்திரியங்களைக் கட்டுப்படுத்து வதற்குரிய தெய்வீகப்பாடல்களைப் பாடுகின்றான். இதனுடன்

யோகக்கலை, தியானம் போன்ற சாதனைகளைச் செய்து திருவருளைப் பெறுகிறான். திரு.குலசேகரம் கமலேஸ்வரன் அவர்கள் தன் வாழ்வில் இறைபணிக்காக சரியைத் தொண்டையும், தெய்வீகப் பாடல்களையும் இயற்றிப் பாடுவதும் யோகக்கலையை வளப்படுத்துவதும் தன் வாழ்வில் முக்கிய கடமையாகக் கொண்டு வருடா வருடம் தெல்லிப்பழை துர்க்காதேவியின் தேர்த்திருவிழா அன்று அருட்பாடல்களை வெளியீடு செய்வதை பல வருடங்களாகப் பார்த்திருக்கின்றோம். அவர்களுடைய தொண்டு சிறக்கவும், பணி மேலோங்கவும் இறையருளை வேண்டிப் பிரார்த்தித்து நல்லாசிகளை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

"சர்வே ஜனகா சுகினே பவந்து"

சிவஸ்ரீ சுந்தரேசக்குருக்கள்
பிரதம சிவாச்சாரியார்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை இலங்கை

## அகிலேஸ்வரக்கு ..க்களின் ..யுரை



தெல்லிப்பழை துர்க்காபுரம் உமுருடைப் பதியிலே குடிகொண்டு வீறிருக்கும் ஆதி சக்தியின் அம்சமான ஸ்ரீதுர்க்காதேவியின்பேரருளாலே சிறியபராயம் தொட்டு இறைபணியில், சமூகபணியில், சமயபணியில் தன்னை ஈடுபடுத்தி அம்பிகை தாசனாகவாழ்ந்து வருபவர் புலவர் குலசேகரம் கமலேஸ்வரன் ஆவார். இவர் அம்பிகையின் மேல் அசையாத பற்றால் (புலமையும் வறுமையும்) என்கின்ற நூல் வெளிவருவது இவரின் புலமைக்கு சான்றாக விளங்குகின்றது. வருங்காலத்தில் இவர் பல நூல்களை வெளியிட்டு அம்பிகையின் பேரருளைப் பெற்று பெருவாழ்வு வாழ்ந்து இறைபணி தொடர எனது மனமார்ந்த நல்லாசிகள் உரித்தாகுக.

"லோகா, சமஸ்தா, சுகினே, பவந்து"

சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள்
பிரதம சிவாச்சாரியார்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
துர்க்காபுரம், தெல்லிப்பழை, இலங்கை.



## கலாநிதி செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் அவர்களின் ஆசிச்செய்தி

துர்க்காதேவியின் திருவருளை வேண்டி அன்பர் துர்க்கா கவிஞானி கு.கமலேஸ்வரன் அவர்களின் "புலமையும் வறுமையும்" வெளிவருவது குறித்து வாழ்த்துக் கூறுவதில் பேரானந்தமடைகிறேன்.

துர்க்கை அம்பாளின் பக்தரான இவர் தெய்வங்கள்மீது பாடல் எழுதுவதில் மிகவும் ஆர்வமுடையவர். தெய்வ சந்நிதிகளில் பாடிப் பணிவதில் மிகவும் பிரிய உடையவர். சிவசின்னங்களை எவ்வேளையிலும் அணிந்திருப்பவர். இவரது ஆன்மீக நாட்டம் தொடர அம்பாளை வேண்டுவதோடு இவர் வெளியிடும் மலர் சிறக்கப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

"யாவர்க்குமாம் இன்னுரை"
ஆறு. திருமுருகன், தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.



## புலமையும் வறுமையும்
## நூல் வெளியீடு
## மாவை ஆதீனம் ஆசியுரை

மனநினைவுகளுக்கு அப்பாற்பட்ட நமது இந்து மதத்திலே சுயநல விரும்பிகள் இறைவனின் நாமங்களை உபயோகித்து பல்வேறு வழிபாடுகளை (வேதசிவாகம புராணங்களில் கூறப்பட்ட விடயங்களுக்கு அப்பாற்பட்டு) பூஜை, ஹோமம், பலி என்று பலவிதப்பட்ட இறைவழிபாடுகளை நடாத்துவித்து நடத்தி உலகின் அழிவின் விளிம்பில் நிற்பதை நாம் கண்ணூடாகப் பார்க்கின்றோம். வேதசிவாகமங்களிலும், புராணங்களிலும் கூறப்பட்ட நியதிப்படி எப்பொழுதும் மனிதர்கள் வாழ்ந்து இறைவழிபாட்டில் ஈடுபடுகின்றார்களோ அப்போது மன நிம்மதியுடன் சுகமான வாழ்க்கையும் அமைத்து உலகத்தையும் அழிவிலிருந்து காப்பாற்றப்படும் என்பதை எல்லோரும் உணர வேண்டும். இன்றைய சூழ்நிலையிலே மெய்யன்பர்களாகிய எல்லா மக்களும் கூட்டு வழிபாட்டின் மூலம் இறையருளைப் பெற்று இன்புற்று வாழவேண்டுமென இறைவனால் சிந்தனையூட்டப் பெற்ற அடியவர் குலசேகரம் கமலேஸ்வரன் துர்க்கா கவிஞானியின் முயற்சி நூற்றாண்டு காலம் வாழ வேண்டும் மேலும் மக்களை இறைசிந்தனையுடன் வழிபாடுகளை நடாத்த அவர்களுடன் கூடவே இருந்து நெறிப்படுத்தும் தன்மை போற்றக் கூடியதாகும். "புலமையும் வறுமையும்" என்னும் நூலில் சொல்லப்பட்ட நல்ல விடயங்களை மக்களுக்காக வெளிப்படுத்துவதை மாவை ஆதீனம் வரவேற்கின்றது

திரு. குலசேகரம் கமலேஸ்வரன் அவர்களது முயற்சி சிறு வயது முதல் ஆரம்பித்து இறையருளால் இன்று இரண்டாவது நூல்வெளியிடுமளவிற்கு வளர்ந்து வந்திருப்பதையிட்டு நாம் பெருமைப்படுகின்றோம்.

மேலும் அவர் தம் பஜனைப் பாடல்களுடன் திருமுறைகளையும் திருமுறைகளில் கூறப்பட்ட பூஜை வழிபாடுகளையும் வெளிக்கொணர்ந்து நன்னெறியில் மக்களை ஆற்றுப்படுத்த எல்லாம் வல்ல மாவை முருகப்பெருமானைப்


பிரார்த்திக்கின்றேன். வாழ்க மக்களும் அவர் தம் குடும்பத்தினரும் வளர்க சைவ நெறிகளும் ஆற்றுப்படுத்தும் சமய நூல்களின் சாரங்களும் உலகில் உய்யவே.

உலகின் கண் இன்பமே சூழ்க
உலகில் எல்லோரும் சுகமாக வாழ்க
மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெலாம்

இப்படிக்கு
அன்புடன்
து.ஷ.இரத்தினசாமிக்குருக்கள் மாவை ஆதீனம்.

## ஸ்ரீ தோதரவை இராஜ இராஜேஸ்வரி தேவஸ்தானத்தினரின் ஆசியுரை

தெல்லிப்பழை.
03.11.2011



சைவசமயம் தமிழ் கலை கலாச்சாரம் இவைகளை இன்றும் பேணிப்பாதுகாப்பதில் அளவையூரும் ஏழாலை ஆகிய இரு கிராமங்களும் முன்னிற்கின்றன. இவ்விரண்டு ஊரையும் (குலசேகரம் தந்தையார் யோகாம்மாள் தாயாரையும்) பெற்றோராகப் பெற்று இன்று சமயப் பணியிலும் தமிழ் கலாச்சார விழுமியங்களையும் முன்னிலைப்படுத்தி தன்னுடைய தொண்டினைச் சேவையாகக் கொண்டிருக்கின்றார். துர்க்கா கவிஞானி கமலேஸ்வரன் துர்க்காபுரத்தில் காளிகோவில் ஒன்று சைவப்பிரகாச வித்தியா சாலைக்கு அருகாமையில் இருக்கின்றது. அவ்வாலயத்தை கடந்த கால நாட்டுச் சூழ்நிலைகளினால் மக்கள் குடியிருப்புக்கள் இல்லாமல் பராமரிப்பு இல்லாமல் இருந்த பொழுது இவர் தனி மனிதராக அந்த ஆலயத்தை புனரமைத்து சரியைத் தொண்டு செய்து கோவிலை வளமாக்கி பூசைகளை நடாத்தி மக்களிடம் சென்று ஒவ்வொரு மாதம் பூரணைக்கும் அரிசி காய் கறி பெற்று அதனை அன்னதானமாக எட்டுவருட காலம் நடத்தி ஆரம்பித்து வைத்த பெருமையும் இவரையே சாரும்.

எமது ஆலயமாகிய தோதரவை அம்மன் மீதும் பாடல்களை இயற்றிப் பாடியுள்ளார். இவரது பணியின் முக்கியமானது உழவாரத் தொண்டு செய்வது. நாயன்மார் வரிசையில் அப்பர் சுவாமிகளின் உழவாரத் தொண்டுக்கு சான்றாக இவர் எங்கள் ஆலயங்களில் உழவாரத் தொண்டு செய்வது பாராட்டுக்குரியது. துர்க்கை அம்மனின் தீவிர பக்தராகிய இவர் பாடல்கள் இயற்றுவதில் மிகவும் புலமை பெற்றவர் எனினும் எங்கள் தமிழ் இலக்கியத்தில் புலவர்கள் வறுமையில் வாழ்ந்தவர்களாகவே இருக்கின்றனர் என்பது வரலாற்று முத்திரை எனவே சைவ சமயத்தையும் இறைவனைப் புகழ்ந்து பாடல்கள் இயற்றி பாடுவதில் வல்லமையையும் உடைய

கமலேஸ்வரன் அவர்கள் "புலமையும் வறுமையும்" எனும் சிறப்பு நூல் வெளியீட்டுக்கு எல்லாம் வல்ல ஸ்ரீஇராஜஇராஜேஸ்வரி அம்பிகையின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

இவரினால் இம்மலரில் வெளிக் கொண்டு வரும் வறுமையில் வாடும் புலவர்களின் வாழ்க்கை வளமுடன் வாழ தமிழ் அறிஞர்கள் துணைநின்று அரவணைப்பது அவசியமாகின்றது. இவர்களுக்கும் எனது நல்லாசிகள்


ஓம் சாந்தி சாந்தி சாந்தி

கிருஷ்ணமூர்த்திக்குருக்கள்
கணேசமூர்த்தி சர்மா,
ஸ்ரீஇராஜஇராஜேஸ்வரி அம்மன்
தேவஸ்தானம்.

திருமுறை வேந்தன்

திரு.சிவ. சண்முகவடிவேல் அவர்களின்

## ஆசீர் வாதம்



திருவருள் துணை நிற்க

'புலமையும் வறுமையும்' என்ற புதுமையான தலைப்புடன் வெளிவரும் நூலாகும்.

துர்க்கா கவிஞானி கு.கமலேஸ்வரன், கரகத்திலகம் மு.ஐயாத்துரை, புலவர் மு.காளிதாசர், லயன வாத்திய திலகம் ஐ.சிவபாதம், சண்முகலிங்கம் சிவயோகம் (பெண்புலவர்) என்னும் நால்ருடைய நற்றொண்டிற்குச் சான்றாக விளங்குவது புலமையும் வறுமையும் என்ற நூலாகும். அன்பர் கு.கமலேஸ்வரன் முன்னரும் இது போன்ற நூல்களை வெளியீடு செய்து பலராலும் பாராட்டுதல்களையும் புகழையும் பெற்றவர். ஏனைய நால்வரும் அவ்வத்துறையில் நின்று அரும்பணியாற்றும் மதிக்கத்தக்க புலமையோர்களும் கலைஞர்களுமாவர்.

இந்நூலில் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டும் பக்திப் பாமாலைகள் மாத்திரம் மல்ல, அருள்மிகு துர்க்கை அம்பிகையின் வரலாறும், இன்று அடியேனுக்கு தாய் அற்புதம் காட்டிய வரலாறும், அளவெட்டியில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் தவளக்கிரி முத்துமாரி அம்பாளுடைய அற்புதங்கள், கல்கமுவ தலையாட்டிப் பிள்ளையாரின் அற்புதங்கள், இன்று கண்ட அனுபவத் தொகுப்பு, ஆலயங்களின் அழகுமிகு வளர்ச்சியும் சமயத்தின் குன்றலும், அடியேன் கொண்ட இலட்சிய வழிகள், என் சிந்தை வழி நோக்குக்கு நேர்ந்த இன்னல்கள், மனிதன் கற்றுக்கொள்ள வேண்டியவை, ஐந்து இலக்கியத்திற்குரிய அரும்பொருள், தான்தோன்றி ஆலயங்கள்..... இன்னோரன்ன தலையங்கங்களில் படைக்கப்பட்ட புதுப்புது கருத்துக்களோடு விளங்குவது புலமையும் வறுமையும்.

புலமைக்குத் தடைநிற்கும் வறுமையின் இணைப்பை ஐவர் மூலம் நானிலத்தளித்தவர்க்கு நன்கு புலப்படும் சிந்தனைக் கருவூலம் புலமையும் வறுமையும் எனும் இந்நூல்.

ஏழாலையைச் சேர்ந்த குலசேகரம் கமலேஸ்வரன் இளம் பராயத்திலிருந்தே எனக்கு நன்கு பரிச்சயமானவர். தன்னூக்கத்தினாலும் தனிமுயற்சியாலும் அவருக்கு

இணையானவர்களையும் அன்போடு அணைத்து ஆற்றும் அவர் தமிழ்ப் பணிக்கு அணி செய்வதாக, அதற்கு எல்லாம் வல்ல சிவபரம் பொருள் கலைமகள் வாயிலாக ஆசீர்வதிப்பதாக என்று பிரார்த்தனை செய்து அமைகிறேன்.

பாடல்:- கற்றுணர்ந் தாரைக் கவரும் கமலேசு
நற்றமிழ் நாட்டுக நாநிலத்தில் - சொற்றிகழ்
நுண்பொருளும் நுண்கலையும் நுண்ணறிவும் நூலறிவும்
அண்ணல் அருளாலாக

சிவ: சண்முகவடிவேல்,
ஏழாலை மேற்கு, சுன்னாகம்,



## சங்கீதபூசணம் வீ.கே.நடராசா அவர்களின் ஆசியுரை

அளவையம் பதிதனில் அரும்கலை படைத்தோன் கரகத்திலகம் ஐயாத்துரை அவர் தலைமகன் குலசேகரம் வழித்தோன்றல் இவர் மகன் கமலேஸ்வரன் துர்க்கா கவிஞானி இவர் இறை பணிக்கென பிறந்தாரோ என்றே பார்க்கும் இடமெங்கும் இறைவன் ஆலயங்கள்தோறும்நற்பணி செய்து வருவதையும் இவர் இயற்றி பாடி வருவதையும் எம் அளவை மண்ணிற்கு பெருமை சேர்க்கும் தொண்டாகும். இன்று இவரால் உருவாக்கப்படும் ஐந்து புலவர்களின் இறை ஆக்கங்கள் ஆலயங்களின் வரலாறுகளும், யோகக்கலை சார்ந்த தொகுப்பும், கல்வி சார்ந்த சமயத் தொகுப்பும், நற்சிந்தைகளும் மதம் மாறும் எம் சமயத்தவர்க்கு சிந்தித்து தழைத்தோங்க வைக்கும் உண்மை நிலையாகும். எம் வரலாறு காக்க இவர் இக்கலையில் மட்டும் அல்லாது பற்பல நற்தொண்டுகளிலும் வளர்ச்சி பெற்று வளமுடன் வாழ எல்லாம் வல்ல கும்பழாவளைப் பிள்ளையார் நல்லருளும் நல்லாசியும் புரிய வேண்டி நல்லாசீர்வதிக்கின்றேன்.

வீ.கே.நடராசா சங்கீதபூஷணம்,
கும்பழாவளை, அளவெட்டி மத்தி.
ஓய்வு பெற்ற ஆசிரிய, ஆலோசகர்
வலிகாமம் வடக்கு.

## ஏகலைவன் பாதைவழி மாகலைகள் ஓதியவர்



அகத்தோற்றத்தைப் பார்க்காது புறத்தோற்றத்தைப் பார்த்து குருவாக இறைவனை வழிபடும் மார்க்கங்களாக விதந்துரைக்கப் பெற்ற சரியை, கிரியை, யோகம், ஞானம் போல இயமம், நியமம், ஆசனம் போன்றவையும் இதில் முக்கிய இடம் பெறுகின்றன. இவற்றில் யோகாசனம் என்ற ஆசனத்தால் உடல்சுத்தி, உளசுத்தி பெற்று நோயற்ற வாழ்வு வாழலாம் என்பர் ஆன்றோர்.

...ப் செல்லப்பா சுவாமிகளையே "விசர்ச்செல்லப்பர்" என்று

சொன்ன சமூகம் எமது சமூகம். குருவில்லா வித்தைபாழ் என்றுணர்ந்து சற்குரு ஒருவன் உளனோ? என்று தேடிய ஆத்மமயும் பாக்கியத்தை மறுத்ததில் வியப்பில்லை. விழைவு ஏகலைவன் பாதைவழி யோக கலைபயில ஓர் குருவாய் அகத்தெழுந்தார் கொழும்புத்துறை யோகர் சுவாமிகள். யோகம் கைகூட நிதானம் வந்தது. அதனாலே தியானத்தில் அமரமுடிந்தது. நீண்ட தியானத்தின் விளைவாலே ஞானம் வந்தது. கொண்ட ஞானத்தினாலோ பல கானம் பிறந்தது. இறையருளால் இயல்பாகவும் சுயமாகவும் பிறக்கும் இதற்கு எல்லைகளோ, இலக்கணமோ தேவையற்றது.

ஓர் உருவம் ஓர்நாமம் இல்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடிவழிபடுவது தொன்று தொட்டு உள்ள வழக்கம். ஆலயங்களில் எழுப்பப்படும் மங்கல வாத்தியங்களின் ஓசைகள், வேதகீதங்களின் அதிர்வுகள், பாடும் பண்ணிசையின் அதிர்வுகள், நாமசங்கீர்த்தனத்தின் இசைகள் எல்லாம் ஒன்றாகி சூழலையே ஒரு தெய்வீக நிலைக்குக் கொண்டு செல்கின்றன. நமது சைவம் ஆகமநெறி வழிபா... வலியுறுத்தினாலும் பக்திநெறி வழிபாட்டையும் அனுமதித் திருக்கின்றது. நல்லூர், செல்வச்சந்நிதி, தில்லையம்பலப்பிள்ளையார் போன்ற ஆலயங்கள் பக்திநெறி வழிபாட்டில் பேரோடும் புகழோடும் விளங்குவதை நாமறிவோம். நூலுரை வழிக்கப்பாலே தெய்வசக்திக்காட்படடு உள்ளிருந்து பீறிட்டுப்பெருகும் உணர்வு களாலே தன்னிலையிழந்து பித்தர்கள் போற் பிதற்றுதல், கூத்தாடுதல், பாடுதல், நாமசங்கீர்த்தனம் செய்தல் போன்றவற்றில் ஈடுபடும் ஓர் உன்மத்தநிலை. அந்த நிலையில் சிந்தையிலிருந்து சீறிப்பாயும் வார்த்தைப்பூக்கள் அவருரையாக இல்லாமல் இறையுரையாகக் கொள்வதில் தவறேதுமில்லை.

தெல்லிநகர்த் துர்க்கையின் திருப்பாதத்தினைச் சிக்கெனப்பற்றி வாழும் "துர்க்கா கவிஞானி" கு.கமலேஸ்வரன் அவர்கள் பற்பல வடிவங்களில் வழிபடப்பெறும் தெய்வங்களைப்பற்றி பக்தி வழிநின்று சிந்தையிலிருந்து சிதறிய செந்தமிழ்ப் பூக்களைத் தொடுத்து மாலையாக்கி உங்கள் கரங்களில் தவளவிடுகின்றார். அலைமகளும், கலைமகளும் ஒரே வீட்டில் அமர்வதில்லை. அதனாலே "புலமையும் வறுமையும்" சேர்ந்தே வருவது இயற்கை. ஆனால் கட்டிடங்களைப் போட்டிபோட்டுக் கட்டிவரும் ஆலய நிர்வாகங்கள் சிவநெறிகளையோ திருமுறைகளையோ மதிப்பதேயில்லை. ஒரு சில ஆலயங்கள் தவிர மற்ற ஆலயங்களெல்லாம் ஆசீர்வாதத்தின் பின் திருமுறையை ஓதுவிக்கும் பிழையான நடவடிக்கையில் ஈடுபடுவதொன்றே இதற்குச் சான்றாகும். தவிரவும் இறைபுகழை ஓதும் மெய்யடியார்களை உருவாக்குவதோ, ஊக்குவிப்பதோ, கவனிப்பதோ இல்லை. அது மட்டுமல்லாமல் இறையுணர்வோடு வாழும் அந்த மெய்யடியார்களை மதிப்பதுமில்லை.

இந்நிலை பெற்று வாழ்ந்த, வாழும் மெய்யடியார்கள் சிலரின் ஆக்கங்களோடு தனது சிந்தையில் மலர்ந்தவற்றையும் சேர்த்து "புலமையும் வறுமையும்" என்ற இந்த நூலைத் தொகுத்துள்ளார். இப்பாமாலை மலர்ந்து மணம்பரப்பும், நூல்வெளியீடு செழிக்கவும் இப்பாமாலையை உலகுக்கு உழைத்தளிக்கும் "துர்க்கா கவிஞானி" கு.கமலேஸ்வரன் அவர்கள் சகல செல்வயோக மிக்க பெருவாழ்விற் திழைக்கவும் அடியேனின் ஆசியை நல்குவதோடு இறையாசி வேண்டி எல்லாம் வல்ல பார்வதி பரமேஸ்வரன் பாதம்பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

----: சுபம் :-----

74/12 இராமநாதன் வீதி,
நாயன்மார்கட்டு,யாழ்ப்பாணம்.
"தெய்வத்தமிழிசைக்கவிஞர்" "தேசமான்ய"
இராசையா குகதாசன்

## சிவத்திரு.வ.குமாரசாமி ஐயர்



இன்றைய காலகட்டத்தில் ஆன்மீக விழிப்புணர்வு மிகஅத்தியா வசியமாகத் தேவைப்படுகிறது. ஆன்மீக விழிப்புணர் வென்பது ஆலய வழிபாட்டினால் மட்டும் அமைவதொன்றல்ல. அறிவு சார்ந்த ஆன்மீகவிழிப்புணர்வை வல்லதான நூல்கள் சஞ்சிகைகள் என்பனவற்றை வாசிப்பதன் மூலமாகவே இது சாத்தியமாகின்றது. ஆகவேஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய சிறந்த நூல்களை வெளியிடுவது வரவேற்கத்தக்கது.

இந்த வகையில் தெல்லிநகர் அருள்மிகு, துர்க்காதேவியின் தீவிர பக்தனும், பஜனைகள் மூலம் பக்தர்களைப்பரவசப் படுத்துபவருமான "துர்க்கா கவிஞானி" கு.கமலேஸ்வரன் அவர்கள் ஆன்மீக சிந்தனைகளை உள்ளடக்கிய "புலமையும் வறுமையும்" என்ற நூலை எழுதி வெளியிட இருப்பது மிகவும் போற்றுதற்குரிய விடயமாகும்.

ஆசிரியர் பதினொரு வருடங்களாகப் பாடிய பாடல் தொகுப்பு, கரகத்திலகம் ஐயாத்துரைப் புலவரின் பாடல் தொகுப்பு, காளிதாசப் புலவரின் பாடல் தொகுப்பு, மிருதங்க வித்துவான் சிவபாதம் புலவரின் வாழ்க்கை வரலாறும் பாடல் தொகுப்பும், சண்முகலிங்கம் சிவயோகம் (பெண்புலவர்) அவர்களின் பாடல்த் தொகுப்பும், படங்களுடன் கூடிய யோகக்கலை சம்பந்தமான விளக்கங்கள், நினைவில் நிற்கும் கலைகள், கல்கமுவா குளக்கரைப் பிள்ளையாரின் வரலாற்றுத்தொகுப்பும், பாடல்களும், தெல்லிநகர்த் துர்காதேவியின் ஆலய வரலாறும் பாடல்களும், தவளகிரி அருள்மிகு முத்துமாரி அம்மாளின் ஆலய வரலாறும் கும்மிப்பாடல்களும், ஸ்ரீமத்ஜகத்குரு பண்டிதாராத்ய, விஸ்வாராத்ய சிவாச்சார்ய விம்கதி நாமாவழிகள், மற்றும் துதிப்பாடல்கள், போன்ற இன்னோரன்ன பல சிறந்த விடயங்கள் நூலை அழகு செய்கின்றன.

ஆசிரியர் இளமையிலே யோகக்கலையைக்கற்க ஆர்வம் கொண்டு ஒரு குருவை நாடிய பொழுது இவரின் நவீன பாணியில் உடையணிந்திருந்த தோற்றத்தைக் கண்டு இவருக்கு யோகக்கலையைக் கற்பிக்க மறுத்துவிட்டார். இவர் தவத்திரு யோகர்சுவாமிகளின் திருவுருவப்படத்தை ஒரு பீடத்தில் வைத்துத் தமது குருவாக நினைந்து யோகக்கலை பற்றிய நூல்களைக்கற்று அக்கலையில் மிகச் சிறந்து விளங்குகிறார். ஏகலைவன் துரோணாச்சாரியாரைப் பொம்மை வடிவில் வைத்துக் குருவாக நினைந்து விற்பயிற்சியில் சித்தியடைந்ததை நினைவு படுத்துகிறது.

இதன் மூலமாக இவர் இறைவியின் திருவருளையும், மானசீகமாக் குருவின் திருவருளையும் பெற்ற உயர்ந்த பக்தனாக விளங்குகின்றார்.

இந்நூல் வெளிவருவதற்குச் சைவப்பெருமக்களாகிய அனைவரும் ஆதரவு நல்கி இந்நூலின் பயன்பாட்டைப் பெற்று உயர்வு பெற வேண்டுமெனவும், ஆசிரியர் இதுபோன்ற சிறந்த நூல்களை வருங்காலங்களிலும் வெளியிட வேண்டுமெனவும், தெல்லிநகர் உறையும் கருணைக் கடலாம் அன்னை துர்க்காதேவியின் பாதம்

பணிந்து வேண்டுவதுடன் எமது இதயபூர்வமான நல்லாசிகளையும் அருளுகின்றோம்.

சிவத்திரு.வ.குமாரசாமிஜயர்.
மயிலணி சுன்னாகம்.



### கம்பவாரிதி. இ. ஜெயராஜ் அவர்களின்
### வாழ்த்துச் செய்தி அருட்பணி வாழ்க

உலகை உய்விக்கும் நம் தமிழையும், சைவத்தையும், அறிவால் வளர்த்தோர் தொகையை விட, அன்பால் தொகையே மிக அதிகம். தம் உயிரினும் மேலாய், தமிழையும், சைவத்தையும் தம் இரு கண்கள் என நேசித்த அவர்கள், அந்நேசிப்பின் காரணமாய், அரிய ஆற்றலையும் பெற்றுக் அங்ஙனம் தாம் பெற்ற ஆற்றலை, தமிழினதும், சைவத்தினதும் வளர்ச்சிக்கே அர்ப்பணித்து, வாழ்வைத் தவமாக்கிக் கொண்ட அந் நல்லோர் வரிசையில், குலசேகரம் கமலேஸ்வரன் துர்க்கா கவிஞானி இவர்களும் இணைகிறார். இவர் தமிழை நன்கு நேசித்து, அந்நேசிப்பின் வெளிப்பாடாய் நூல்களை யாத்து வருகிறார். அங்ஙனம் அவர் வெளியிடும் நூல்களில் ஒன்றாய், புலமையும், வறுமையும் எனும் நூல் வெளிவருகிறது. மானசீகமாக குரு வணக்கம் செய்து, யோகக் கலையை பயின்றதாய்க் கூறும் இவர், திறமை அது போலவே தமிழையும் கற்றுத் தேர்ந்ததாய்ச் சொல்வது ஆச்சரியம் தருகிறது. தான் எழுதிய கவிதைகள், கட்டுரைகள், தன் யோகமுயற்சிகள் பலவற்றையும் தொகுத்து, ஓர் கதம்பத் தொகுப்பாக இந்நூலை வெளிக்கொணர்கிறார் கமலேஸ்வரன் அவர்கள். அவர் தம் இம் முயற்சியால் உலகம் பயன் கொள்ளட்டும். மறைந்த அன்னை துர்க்காதுரந்தரி அவர்களின், அன்புக்கு ஆளான இவ் அன்பர் தம் முயற்சிகள், மென்மேலும் சிறப்புற, என்னை வாழ்விக்கும்,
கம்பனாட்டாழ்வான் திருவடியைப் போற்றிப் பணிகிறேன்.

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

கம்பவாரிதி. இ. ஜெயராஜ்
வெள்ளவத்தை.



### தக்சாயினி செல்வகுமார் அவர்களின்
### ஆசியுரை

(கலாசார உத்தியோகத்தர் தெல்லிப்பளை)

"இறைவனின் இன்னருள் பெற்று பாரினில் புலமையால் உயர்ந்திடுவீர்"

வளர்ந்து வரும் தொழில் நுட்ப உலகில் எமது கலை கலாசாரம் பண்பாடு என்பதும் சமய வழிபாடுகள்,ஆன்மீகச்சிந்தனைகள்என்பவற்றிற்கான நாட்டம் என்பதும் குறைந்தே செல்கின்ற இக்கால

கட்டத்தில் நூலாசிரியர் குல சேகரம் கமலேஸ்வரன் என்பவரால் "புலமையும் வறுமையும்" எனும் நூல் தொகுப்பு வெளியிடப்படுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதோடு இவரது அரிய பெரிய முயற்சியால் வெளிவரும் இந்நூலிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

"புலமையும் வறுமையும்" எனும் நூலினை பிரசவித்த துர்க்கா கவிஞானி கமலேஸ்வரன் அவர்கள் எமது பிரதேசத்தை வதிவிடமாகக் கொண்ட ஓர் அன்னையின் பக்தர் ஆவார். புலமைக்கு வறுமை கேடல்ல, அந்த வறுமையிலேயே நல்ல புலவர்கள் உருவாகின்றார்கள் என்பதையும் விளங்க வைத்துள்ளார்.

இந்நூலாசிரியர் மிகவும் முயற்சியுடையவர். அனைவரையும் அம்மா, ஐயா என்று அன்பாக அழைத்துப் பேசுவார். ஆண்டவனிடம் அளவு கடந்த அன்பு கொண்டு பக்திச்சுவை மட்டுமல்லாது யோகக் கலையிலும் மிகுந்த பித்தனாக விளங்கும் ஒருவராவர். இதனை இவரது பாடல் தொகுப்புக்கள் மூலம், யோகக் கலையினூடாக காணமுடிகின்றது. அதாவது அகத்தாலும் புறத்தாலும் தெய்வீகத்தை உணரவைக்கலாம் என்பதோடு மேலும் இவ் முயற்சி ஆன்மீகத்தை முன்னின்று வெளிச்சம் போட்டுக் காட்டும் என்பதிலும் ஐயமில்லை.

மேலும் ஆசிரியர் இவற்றுடன் மட்டும் நின்று விடாது எமது பிரதேசக் கலை, கலாசார செயற்பாடுகளில் முன்னின்று உழைக்கும் உள்ளங்களில் ஒருவராக விளங்குவதோடு பிரதேச கலாசாரப் போட்டிகளிலும் பங்கு பற்றி பரிசில்களும் தட்டிக் கொள்வார்.

எனவே இவ்வாறு ஆன்மீகம், கலை ரசனைகளில் ஈடுபாடுடைய இவ் ஆசிரியரின் இன் நூற்தொகுப்பு வெளிவருவதற்கு அனைவரும் ஆதரவு நல்கி பயன் பெற வேண்டும் எனவும், இனிவருங் காலங்களில் இது போன்ற பல சிறந்த நூல்கள் வெளிவர வேண்டும் என்பதோடு எல்லாம் வல்ல தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவியின் பாதார விந்தங்களை வேண்டி நூலாசிரியரிற்கு எனது மனங்கனிந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தார் செயின் (484 திருக்குறள்)

"புலமையும் வறுமையும் புதுமைக்கு அழகாகும்"
தக்சாயினி செல்வகுமார், கலாசார உத்தியோகத்தர்,
பிரதேசசெயலகம், வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை.



**விவேகானந்தன் ரேவதியின் வாழ்த்துக்கவி**

வீரசைவகுலம் தளைக்க வித்தொன்று
விளைந்தது. குலம்காக்க தோன்றினான்
குலசேகரன் மகன் கமலேஸ்வரன்
அண்ணனை வாழ்த்தி வழங்கும் வாழ்த்துக்கவி
அன்பே உருவாய் அண்ணாய் உருவெடுத்தாய்
அர்த்தங்கள் பல உரைத்து அருளினைப் புரியவைத்தாய்
அடியவர் படும் துயரம் கண்டு கொதித்தெழுந்தாய்
அறம் என்னும் நெறிபுகட்டி அர்த்தங்கள் பல உரைத்தாய்
ஆண்டவன் ஒன்றே என்றென்றும் துணை என்றாய்
ஆனந்த நிலை கொண்டு அடியவர் குறை தீர்த்தாய்
ஆயிரம் அர்த்தங்கள் அறிய உண்டென்பாய்
ஆனாலும் அனைவரும் போற்ற நீ அருள்பெற்றாய்

சித்தம் தெளிய வைத்தாய் சிவன்பாதம் வேண்ட வைத்தாய்
சிவலிங்க பூசைசெய்து சித்தன் இவன் என்று அறியவைத்தாய்
எத்திக்கில் நீ வாழ்ந்தாலும் அவ்விடம் அறிவை ஊட்டுவிப்பாய்
எள்ளி நகைத்தவர்முன் எழில் கொஞ்ச நீ வாழ்க
என்றும் வளமுடன் வாழ்க வாழ்கவே

01.11.2011
விவேகானந்தன் ரேவதி
ஜேசுபுரம், வவுனியா

உ
சிவமயம்

## இந்து நாகரிகத்துறை



**பேராசிரியர் மா.வேதநாயகம் அவர்களின் ஆசியுரை**

துர்க்கா கவிஞானி தனது இளமைக்காலம் தொடக்கம் யோகநெறியில் ஈடுபாடு உடையவராக விளங்கி வருகின்றார். சிவத்தொண்டு செய்வதில் பெரிதும் விருப்பமுடையவர். சிவசின்னங்கள் தரிக்கும் பண்பாட்டாளர்.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற வழித்தடத்தில் தான் பெற்ற "யோகநெறி" அனுபவங்களை புலமையும் வறுமையும் என்ற ஆக்க நூலாகத் தொகுத்து வெளியிட விரும்புவது மிகவும் பாராட்டுதலுக்குரியது. இவரின் தொண்டுகள் மென்மேலும் சிறப்புற இறையருளை இறைஞ்சுகின்றேன்.

பேராசிரியர் மா.வேதநாதன்,
தலைவர் இந்து நாகரீகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்..



முன்னாள் துணைவேந்தர்

**பேராசிரியர் என்.சண்முகலிங்கன்**

**அவர்களின்**

**வாழ்த்துச்செய்தி**

எங்கள் பண்பாட்டின் உயிர்ப்பு மையங்களில் ஒன்றாக தெல்லிப்பளை துர்க்காபுரம் விளங்குகின்றது. சைவநெறியின் சமூக பரிணாமங்களை, சமயத் தொண்டின் மேன்மைகளை நிலை நாட்டி புதிய வரலாறு படைத்த துர்க்காபுரம் பல ஞானச் செல்வர்களையும் எமதாக்கியுள்ளது. இந்த வகையில் துர்க்கா துரந்தரி அன்னை கலாநிதி தங்கம்மா அவர்களின் அன்புக்குப் பாத்திரமாய், துர்க்கா கவிஞானியாக அறிமுகமான குலசேகரம் கமலேஸ்வரன் அவர்களின் புலமையும் வறுமையும்' எனும் நூலின் வரவு பெறுமதியானது.

யாழ்ப்பாணத்து சிவயோக சுவாமிகளை தம் மானசீக குருவாக கொண்டாடும் கமலேஸ்வரன் அவர்கள் யோகக்கலையில் வல்லவராக விளங்குகின்றார்.

துர்க்கையம்மன் ஆலயத்திலும், ஏனைய எங்கள் பண்பாட்டு வைபவங்களிலும் இவரின் அமைதியான பிரசன்னத்தைக் காணவும், ஆரவாரமில்லாத பக்தி இசையின் வெளிப்பாட்டினைக் கேட்கவும் முடியும். இப்பொழுது வெளியாகும் 'புலமையும் வறுமையும்' இவரது ஆன்மீக அனுபவ வாழ்வின் பகிர்வாகின்றது.

வறுமையில்லாத புலமையுடன் திரு.கமலேஸ்வரன் அவர்களின் ஆன்மீக பயணம் தொடர்ந்திடவும், அவரது ஆக்கங்களின் வழி எங்கள் சமுதாயம் நலம் பெறவும் எல்லையில்லாத என் அன்பு வாழ்த்துக்கள்.

பேராசிரியர், கலாநிதி என்.சண்முகலிங்கன்
முன்னாள் துணைவேந்தர் - சமூகவியல் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
02.12.2011

துர்க்காபுரம் தெல்லிப்பழை
**இந்து இளைஞர்சங்கத்தினரின்**
**வாழ்த்துச்செய்தி**

துர்க்கா கவிஞானி' திரு. கு.கமலேஸ்வரன் அவர்களின் "புலமையும் வறுமையும்" என்னும் நூலுக்கு
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் வழங்கும் வாழ்த்துரை

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான "மூலில் வாழ்ந்து வரும் "துர்க்கா கவிஞானி" திரு. கு.கமலேஸ்வரன் அவர்கள் எங்கள் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் உறுப்பினர்களில் ஒருவர் எங்கள் சங்கம் சரியைத் தொண்டுகளால் பெருமை பெற்றது. பாடு, பரவு, பணிசெய், என்ற தாரக மந்திரத்தைத் தன்னகத்தே கொண்டது.

ஏழாலையைப் பிறந்த இடமாகக் கொண்டாலும் துர்க்காபுரத்தைப் புகுந்த இடமாகக் கொண்டமையால் இவருக்கு ஒரு தனிச் சிறப்பு ஏற்பட்டது. அதுவே துர்க்கை அம்பாளைத் தரிசித்தமையாலும், சரியைத் தொண்டுகள் ஆற்றிய மையாலும் எனலாம். துர்க்கை அம்பாளை வழிபாடு செய்து தமது ஆற்றலினால் பக்தி ரச கீர்த்தனைகளை இயற்றிப்பாடுதல், ப்ட்டு வழிபாட்டுப் பாடல்கள் என்பவற்றைப் பாடி வந்தார். இதனால் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா சைவப்புலவர் அம்மையார், அருட்கவி. சீ.வினாசித்தம்பிப்புலவர் போன்ற பல பெரியவர்களிடம் நல்லாசிகளைப் பெற்றார். அருட்கவி சீ.வினாசித்தம்பிப் புலவரால் "துர்க்கா கவிஞானி" என்ற சிறப்புப் பட்டம் பெற்றார். இவர் வெளியிடும் "புலமையும் வறுமையும்" என்னும் நூல் ஈழத்துச்சித்தர்கள், யோகிகள் போன்றோரின் படங்களையும் தமது வாழ்வியல் சிந்தனைகளையும், ஐந்து புலவர்களின் ஆக்கங்களையும் தன்னகத்தே கொண்டதாகும்.

இந்நூல் சிறப்புறவும், இவரின் பணிகள் சிறப்புறவும் எங்கள் சங்கத்தினரின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

துர்க்காபுரம் தெல்லிப்பழை
இந்து இளைஞர்சங்கத்தினரின்
02.12.2011

என்னை ஈன்றெடுத்த எனது அன்புத் தெய்வங்களுக்கு
எனது முதல் வணக்கம்



தாயிற்சிறந்த கோயிலுமில்லை
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை
ஆயிரம் உறவில் பெருமைகள் இல்லை
அன்னை தந்தையே அன்பின் தெய்வம்

என்ற கூற்றுக்கு அமைய இன்று என் அன்னையின் அரவணைப்பும் தந்தையின் அறிவூட்டலும் அன்னை துர்க்கையின் அருளினால்இன்று இந்த அடியேன் இவ்வுயர் நிலையைப் பெற்றுள்ளேன். இன்நிலையில் மேலும் தழைத்தோங்க துர்க்கையின் அருளும் அன்னை தந்தையின் ஆசியும் என்றென்றும் உரித்தாகுக.




மனம்போல் மனைவி அமைந்தது அம்பிகையின் திருவருட்கடாட்சமே
என்சிந்தைக்கு துணை நின்று என்னுடன் இறைநாமங்கள் பாடி
துணைநிற்பார் என் பாரியார்.





துர்க்கா கவிஞானியின் பாரியார் வைரவர்
ஆலயத்தில் திருமுறை ஓதுதல்

ஜெய இல்லத்தில் வழிபாட்டறை



அருள்மிகு துர்க்காதேவியின் ஆலயதரிசனம்



ஆலய தரிசனம்



அடியேனின் கலை வளர்ச்சி




சமாதி அடைந்தாலும்
சரித்திரப்புகழ் காக்கும்
மாமேதை
கனவில் தோன்றி
ஆசீர்வதிக்கும்
குடைச்சாமி அவர்கள்



யோகர் சுவாமிகளின் ஆசிகளோடு
கனடா கவாத் தீவிலே
சிவன் கோயில் ஒன்று அமைத்து
சைவத்தின் பெருமையை
உலகறிய வைத்த மாமேதை
சுப்பிரமுனிய சுவாமிகள்
அடியேனின் நாமஇன்பரசம்
என்னும் நூல் அவ்வாலயத்திற்குக்
கிடைக்கப்பெற்றதும் அடியேனை
ஆசீர்வதித்த என்றும் என்னுடன்
இருப்பதாக







# சன்மார்க்க இறைவன் கோயில்

## அமெரிக்காவின் புனித யாத்திரைத் தலம் ஸ்ரீ ஸ்படிகலிங்கேஸ்வரர் திருக்கோயில்

யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவயோக சுவாமிகள் 1949ஆம் ஆண்டு வைகாசிப் பூரணையன்று குருதேவருக்கு சுப்பிரமுனிய சுவாமிகள் எனும் நாம தீட்சையை அருளி பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசஞ்செய்தார். சற்குரு சிவயோக சுவாமிகள் குருதேவரின் முதுகில் ஓங்கி பலமாக அடித்து இது அமெரிக்காவிலே கேட்கும் இனி உலகெங்கும் சென்று சிங்கம்போல் கர்ச்சிப்பாய், நீ பல ஆலயங்களை அமைத்து பலருக்கு உணவளிப்பாய் என்றும் கீழைத்தேசத்திற்கும் மேலைத் தேசத்திற்கும் இடையில் ஓர் பாலம் அமைப்பாயாக என்று ஆசி வழங்கினார். சற்குருவின் ஆணைப்படி குருதேவர் மேலைத் தேசத்தின் முதலாவது இந்துக் கோவிலை ஸ்தாபித்ததோடு உலகெங்கும் பல இந்து ஆலயங்கள் அமைய காரணகர்த்தாவாகவும் விளங்குகின்றார். கீழைத்தேசத்திற்கும் மேலைத் தேசத்திற்கும் இடையில் மையமாக பசுபிக் சமுத்திரத்தில் விளங்கும் ஹவாய் தீவுகளில் ஒன்றான குவை என்னும் தீவில் சைவ ஆதீனம் அமைத்து அங்கு பல துறவிகள் சகிதம் குருதேவர் வாழ்ந்து வருகின்றார். இங்குதான் மேலைத் தேசத்தின் முதலாவது முற்றிலும் கருங்கலால் ஆகம விதிப்படியமைந்த கோயிலாக சன்மார்க்க இறைவன் கோயில் உருவாகி வருகின்றது. ஓம்

எனது நாம இன்பரசம் நூல் கிடைக்கப்பெற்று ஆசிகூறி அனுப்பிவைக்கப்பட்ட படம்



தெல்லி நகர் துர்க்கை அம்பிகையை தோள்மீது சுமந்து இன்பங் காணுதல்



தெல்லி நகர் துர்க்கை அம்பாள் மகளிர் இல்லப்பிள்ளைகளுடன் திருமுறைகள் பாடி பரவசமடைதல்



கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய
தெல்லி நகர் துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகசபை இந்து இளைஞர் சங்க உறுப்பினர் மற்றும்
தொண்டர்சபையினரின் ஒன்று கூடல்



தெல்லி நகர் துர்க்கை அம்பிகை வீதி உலாவரும்போது மகளிர்
இல்லப்பிள்ளைகளுடன் கீர்த்தனை தரிசனம்

## இறை ஞானம்

அஞ்ஞானம், மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம் அது போன்று யோகம், விவேகம், நிதானம் அதன் மூலம் பெறுகின்ற தியானம் இந்நிலையை அடையும் போது தெய்வ சக்திக்குரியவர் ஆகின்றோம். அதன் மூலம் பெற்ற சிந்தனையின் துளிகளே இந்நூலின் ஆக்கம் பற்பல வடிவங்களில் வழிபடப் பெற்ற தெய்வங்களை பற்றி சிந்திக்கின்றேன், பாடுகின்றேன். ஆனால் சிந்தனைக்குரியவன் அவன் பாட்டுக்குரியவன் எவன் ஆட்டிவித்தார் யார் அறிவர். ஆடுகின்றேன் அவள் அறிவாள். அன்னை அன்பு தெய்வமாக அருள் தந்த துர்க்கை என்னை ஆண்டு கொண்டாள். அடியேன் கொண்ட அத்தனை கலைகளிலும் அவள் உண்டு என்று உணர் கின்றேன்.

விநாயகர் துதி

ஓம் என்னும் பிரணவ ரூபா விநாயகா
ஓடியே வந்தருவாய் விநாயகா
ஆதிசிவன் மைந்தனே விநாயகா
ஆனந்த ஜோதி தரும் விநாயகா

கற்றிடும் அடியவர் முன் விநாயகா
கருணை புரிய வல்லவன் நீ விநாயகா
சித்து நிலை தருபவனே விநாயகா
சிந்தையிலே வந்தருள்வாய் விநாயகா - என்

சிந்தையிலே வந்தருள்வாய் விநாயகா
சிந்தையிலே வந்தருள்வாய் விநாயகா

## ஆசிரியர் முன்னுரை

இறைவன் இன்றி இவ்வுலகம் இல்லை, இவ்வுலகம் இன்றி இறைவனும் இல்லை, இரண்டும் சேர்ந்தே இறைவன். முன்னோர்கள் கூறியது போல "சிவம் இன்றி சக்தி இல்லை, சக்தி இன்றி சிவம் இல்லை" இருவரும் சேர்ந்து தான் இவ் உலகுக்கு தந்தையும் தாயும் ஆனார்கள். பின் இவர்களின் திருவிளையாடலில் பல பல ஜீவராசிகள் பூமியில் உருவாக்கம் பெற்றன. இவற்றில் மானிட பிறப்பு மிகவும் அரிது. அதாவது ஔவையார் கூறிய கூற்றை இவ்வேளைதனிலே சிந்தித்தல் வேண்டும். "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது அதனிலும் கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது என்று கூறினார். அதனால் எம் வாழ்வின் விசித்திரத்தினை நாமறியோம்.

ஆனால் எமக்கு மேல் ஒரு சக்தி உண்டு என்பதை நாம் உணர முடிகிறது. இவ் வழியில் ஆதி மனிதர் சில அசரீதிகளை உணர்ந்து அஞ்ஞானம் என்னும் தவத்தில் இருந்து மெய்ஞானம் பெற்று அவர்கள் கண்ட வடிவங்களை தங்கள் கற்பனையின் மூலம் சிலையாக வடித்து வழிபட்டு வந்தனர். ஆனால் மனிதன் சிலையை வடிப்பதற்கான அறிவினை இறைவன் கொடுத்தான் என்பதை அன்றும் இன்றும் மறுக்க முடியாத உண்மை. அவ்வழிபாட்டின் மூலம் மெய்ஞ்ஞானம் பெற்று மனிதர்களால் இன்றைய உலகில் விஞ்ஞானம் தோன்றியது. இவற்றின் மூலம்

நல்நோக்குடைய மனிதர்கள் அறிவுடைய மிக நுட்ப உயிர் கருவிகளை உருவாக்கினார்கள்.

ஆனால் தீய எண்ணம் கொண்ட சில மனிதர்கள் விஞ்ஞானத்தை தீய வழிகளில் கையாண்டு தீய சக்தி கொண்ட கருவிகளை உருவாக்கி இன்றைய உலகில் நுட்ப ஆராய்ச்சியின் மூலம் அணுக்குண்டு எனும் தீய சக்தியின் மூலம் உலக மக்களையும் உயிர் உள்ள ஜீவராசிகளையும் அழிக்கும் நோக்குடையதாகும். இவற்றால் இன்று இயற்கை வளம் யாவும் சீற்றம் கொண்டு பொல்லாத அழிவினை கொடுக்கின்றது. இவற்றுக்கெல்லாம் காரணம் உண்மையானது. பயபக்தியினதும் வழிபாடுகள் தோன்ற வேண்டும். அன்று அருள் அளித்த ஈசன் இன்றும் அருள் அளிப்பார். இவற்றின் உண்மைக்கு இலக்கணமாக செல்லப்பா சுவாமி, யோகர் சுவாமி, சுப்பிரமணிகலார் சுவாமி, வினாசித்தம்பி சுவாமி இன்றும் திக்கெட்டும் புகழ் பரப்பி வான் உயர கோபுரமும் வளமிகு பல மண்டபங்களும் அமைய வழிவகுத்த எம் தாய் தங்கம்மா அப்பாக்குட்டி இவர்கள் எல்லாம் வறுமையில் வாடி நிலைத்து இறை அருள் பெற்று இன்றைய மக்கள் வாழ்வுக்கு நல்ல வழி அமைத்து வாழ வழி பெற வைத்தார்கள். இவர்கள் இன்றும் என்றும் உலகில் உயர்ந்து விளங்கும் பெருமைக்குரியவர்கள்.

ஆனால் இன்று கூட மறைபொருள் போன்று இறைவன் அருள் பெறும் வறுமையின் பிடியில் வாழ்ந்து தங்கள் மெய்ஞான உணர்வுகளை வெளிப்படுத்த முடியாது மரணித்த புலவர்களினதும் இன்று இறைவன் மீது மெய்யுருகி இயற்றிப் பாடிக்கொண்டிருக்கும் புலவர்களினதும் சிறு அடியேனின் சிந்தை ஆக்கமும் கொண்டு வெளிவரும் புலமையும் வறுமையும என்ற இந்நூலினை எனது இரண்டாவது ஆக்கமாக இறைவன் பாதம் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

முதலில் மனிதன் நம்பிக்கை கொள்ள வேண்டும். பின் விடாமுயற்சியுடனும் பற்றுடனும் மனதில் ஏதோவொரு உருவ வடிவத்தை நிலை நிறுத்தி மனம் தளர்வின்றி வழிபடல் வேண்டும். அவ்வேளையில் எத்தனையோ சோதனைகள் எம்மைச்சூழும். இவற்றைக்கண்டு மனம் தளரக்கூடாது. இறைவா உன் கதியின்றி வேறு துணையில்லை என்று மேலும் மேலும் இறைவனை அழுங்குப் பிடிபோல பிடிவாதத்தோடு பற்றிக்கொள்ளல் வேண்டும். அப்பொழுது எம்மில் இருக்கும் தீயகுணங்கள் யாவும் நீக்கி இறைவன் பற்றிக் கொள்வான். வல்லகுருநாதன் எம்மை வாட்டுவது கொல்லுவதற்காக அல்ல. பொல்லா பயனை இல்லாமை நீக்கிடவே எம்மை மறந்து தூய அன்பு செலுத்தி வழிபடல் வேண்டும். அப்பொழுது தான் இறைவனை எம்முள் காணலாம்.

ஆனாலும் போலியான மனிதர் முன் நாம் பித்தர்கள் தான். அந்தப் பித்தா பிறை சூடிய பெருமானின் முன் நாம் எல்லாம் பற்றுடைய சித்தர்கள் தான். எம்மையெல்லாம் பைத்தியக்காரன் என்று எண்ணும் மனிதருக்கு ஒரு உண்மை மட்டும் நான் அறியத்தருகின்றேன். நாம் பிறந்தது மண் மேல். அதனால் என்றோ ஒருநாள் இறப்பது உண்மை. ஆணவம் இன்றி இறைவன் பாதம் அடைய வேண்டும். இறந்த பின்னும் நாம் வாழ்ந்த வாழ்வைப் பின்பற்றி நல்லதொரு சமுதாயம் தோன்றல்

வேண்டும். நாம் செய்யும் தவம் நல்லனவாக இருத்தல் வேண்டும். இவற்றை இறைவன் எனக்கு உணர்த்தியுள்ளார். எத்தனை சோதனையும் வேதனையும் வந்தாலும் இவற்றை முடிக்க எல்லோருடைய ஒத்துழைப்பு எனக்கு கிடைக்க வேண்டும்.

"அவன் அருளாலே அவன் தாள் வணங்கி...." அடியேன் பெற்ற அருளினால் பல பல தெய்வங்கள் மீது இயற்றிப் பாடப்பெற்ற பாடல்களை இரண்டாவது தொகுப்பாக வெளியிடும் வேளையில் அறிவுடைய நான்கு புலவர்களின் ஆக்கங்களையும் "புலமையும் வறுமையும்" என்ற நூலின் மூலம் வெளி உலக மக்களுக்கு உணர வைப்பதன் மூலம் வறுமையில் வாழும் மனிதர்களின் அறிவின் சிந்தையையும் மெய் அடியார்கள் விழிப்புணர்வு கொண்டு இனிவரும் காலங்களிலும் அப்படிப்பட்ட மெய் உணர்வு கொண்டவர்களை உணர்ந்து அவர்களை மதித்து உதவி புரிந்து அவர்களின் மன மகிழ்ச்சியில் இன்பம் கொள்வோமாக.
அன்பே இன்ப ஊற்று அதுவே என் வாழ்வில் துர்க்கை தந்த இறை ஊற்று.

பக்தி என்பது பகிர்ந்து கொள்ளும் பொருளும் அல்ல, பசித்தால் உண்ணும் உணவும் அல்ல.
பற்றோடு பற்றிக் கொள்ளும் ஒரு பக்தியின் பந்தம் பாசத்தின் வலையில் வீழ்ந்து விட்டால் பாரினில் வேறு இன்பம் இல்லை.

இன்பம் துன்பம் எது வந்தாலும் இறைசக்தியின்றி இவ்வுலகில் வேறு ஒன்றும் இல்லை என்பதை நாம் உணர முடியும். துன்பம் வரும் போது துவண்டு விடுவதை விட துணிவோடு போராடு அந்த போராட்டத்தில்தான் உண்மையில் உன்னை உணர முடியும். அந்த முடிவில் உனக்கென்று ஓர் பாதை தோன்றும் அப்போது உலகின் மாயையை நீ அறிவாய். இது ஒரு விந்தை.

விந்தையான உலகம் என்பதையும், விசித்திரமான மனிதர்களைப் பற்றியும் அறிய முடியும். இவற்றின் உண்மை தான் - வாய்பேச்சின் வள்ளலார்கள் சொல்லில் தோள்தட்டி வலி தந்த வல்லவர்கள். செயல்பாட்டை எண்ணிய போது அவர்களின் சுயரூபத்தைக் காட்டினார்கள். அப்போதுதான் துணிவு வந்தது. எண்ணித் துணிந்த பின், எண்ணிய கருமம் இறை அருளால் ஈடேற்றம்.

ஆசிரியர்
துர்க்கா கவிஞானி
கு.கமலேஸ்வரன்.

## அருள்மிகு துர்க்காதேவி ஆலய வரலாறு

நம் கதிர்காமர், உண்மை நிலை உணர்ந்து, தல தீர்த்த யாத்திரைகளால் தன்னை இன்னாரென உணர்ந்த காலத்திலே குரு உபதேசம், ஸ்ரீ காசி சொர்ப்பனாதேவி பீடத்திலே கிடைத்தது. அந்த உபதேசத்தால் உபவாஸம் - பூஜை முதலியவை சிறந்தோங்கியது. நாள்தோறும் நியமந்தவிராதவராய் மீண்டவர், ஆங்காங்கு தன் கங்கா - துர்க்கா தீர்த்த கெண்டியையே இறைவியாகத் தொழுது பூசித்து வந்தார். வந்தவர் துவாத சாந்தத் தலமாகிய மதுரையம்பதியை அடைந்தார்.

'அப்பாலுக்கு அப்பாலாய் பொருந்திகந்த உயிர்கள் தோறும் புணராது புணர்ந்து அருளே பொழிந்து' நிற்கும் தந்தை தாய் இவ்வுலகுக்கு வந்து ஆட்சி செலுத்தி அன்பின் ஐந்திணையினை மக்களுக்கு அருளிய தலமன்றோ மதுரை.

கன்னியாக அங்கையற் கண்ணி அனைத்துலகையும் வென்று பாண்டிய குமாரியாக ஆட்சியை நடத்தி, இறைவனை மணந்த பின் அவனுக்கே தன் அரசையளித்த மதுரையம்பதி தொன்று தொட்டே சக்தி பீடமாயமைந்த சிறப்பினையுடையதாதலால் அங்கே பல நாள் தங்கித் தான் மேற்கொண்ட துர்க்கா பூஜையை வழுவாது செய்து வந்த கதிர்காமர், தெய்வீகம் நிரம்பப் பெற்றார்.

மதுரைக்குத் தெற்கிலுள்ள தல தரிசனஞ் செய்து கொண்டே ஸேதக்கரையை அடைந்து, படகு வழியாகக் கடலைக் கடந்து கீரிமலையை அடைந்தார்.

இந்நாள் போல 350 ஆண்டுகட்கு முன் பயண வசதிகள் உண்டா? பல்லக்கு பணக்காரரும் சந்நிதானங்களும் பயன்படுத்துவன; குதிரை, யானை, தேர் முதலியன மன்னரும் அவரது அலுவலரும் பயன்படுத்துவன; வணிகர் பொதிமாடு முதலியவற்றை பயன்படுத்த, உழவர் சகடைகளைப் பயன்படுத்தலே பெருவழக்கு.

வழிச்செல்வோர் துன்புறா வண்ணம், சாலையோரங்களில் மரங்களை வளர்த்தலும், 'காவளர்த்தும் குளம் தொட்டும்', சுமைதாங்கி, ஆவுரிஞ்சு தரி முதலிய நாட்டலும் இல்லறத்தார் வழித்தடங்களில் மேற்கொள்வன. இல்லத்திலே விருந்தயர்ந்து 'வருந்தி வந்தோர் அரும்பசி களைந்து, அவர் திருந்து முகம்' கண்டு மன நிறைவும் சிவ புண்ணியமும் பெறுவது 'செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்தி'ருக்கும் வள்ளன்மையுடையோர் இயல்பு. செல்வர் சிலர் ஆங்காங்கு அறச்சாலைகளை அமைத்து முகங்கோணாமல் வழிக்கொள்வோரை அருத்தி உபசரிப்போரை அமர்த்திப் புண்ணியம் தேடிக்கொண்டனர். சிவனடியாரை அருத்தியல்லாது உணவு கொள்ளா உறுதிகொண்ட சிறுத்தொண்டர் போன்ற அரசு

அலுவலர்களும் அறம் பேணிய காரணத்தால் சமய உணர்வு, மனஅடக்கம் முதலிய உடைய ஆன்றோர் ஆன்மலாபப் பேறுபெற, அவர்களை உபசரித்து இல்லறத்தார்க்கும் நற்கதி கிடைத்தமை திருத்தொண்டர் புராண முதலாம் வரலாற்று ஆதாரமுள்ள நூல்களால் துணியத்தகும்.

மக்கள் அன்பும் அருளும் பெற வழியெல்லாம் அந்நாள் மேற்கொள்ளப் பெற்றதாலேயே 'அருளிலார்க்கு அவ்வுலக மில்லை' என்ற பொய்யா மொழி எழுந்தது.

அறஞ்செய்வோரது அன்பு முதலிய கண்ட போலி (வழிப்போக்கராம்) துறவிகளும் நன்னெறிக்கண் சென்ற வரலாறும் உண்டென்பதற்கு மேல் இவ்விரிவினுக்கு ஈண்டு இடனின்று.

நம் கதிர்காமர் கீரிமலையினின்று நடை கொண்டார். சற்றேறக்குறைய 3 மைல் தொலைவு வந்தார். திருவருள் அவரை நடையில் தளர்வைத் தோற்றுவித்தது. ஆயிரக்கணக்கான மைல் தொலைவெல்லாம் நடை கொண்ட நம் பெருந்தகையின் ஆற்றலிலே அடங்கிக் கிடக்கும் அம்மை, ஆண்டிருந்து கொண்டு அனைவர்க்கும் திருவருள் பாலிக்கும் திருக்கருணை கொண்டாள். நடை தளர, உடல் தளர ஆண்டிருந்த இலுப்பைத் தோப்பிலே இளைப்பாறினார். திருவருட் கருணையால் அவர் முன் ஒரு சோதி தோன்றி, அவர் கொண்டு வந்த துர்க்கா சக்கரத்தை ஆங்கே தாபிக்குமாறு ஆணையிட்டது. அவ்வாணையைச் சிரமேல் தாங்கி, மரத்தடியிலேயே சக்கரத்தை அமைத்து வழிபடத் தொடங்கினார். வழி நடந்த நாள் வழிபாட்டின் போது என்னென்ன அற்புதங்கள் நிகழ்ந்தனவோ! அவர் அறிந்திருப்பினும், பிறரறிய அறிவித்தாரல்லர் போலும்! தற்புகழ்ச்சி அகந்தை (ஆணவமலம்) கொள்ள இடமாமென அறிவியாதிருந்திருக்கலாம். ஆயின், தெல்லிப்பழை இருப்பைத் தோப்பிலே நாகசர்ப்பங்கள் வருவதுண்டு. அவை பூசை முடிந்தவுடன் மறைந்து விடும். வெளிப்படத் தோன்றும் காலங்களிலும் பிற காலங்களிலும் யாரையும் அச்சமுறும் அளவிற்குங்கூட அந்நாகங்கள் நடந்து கொண்டதில்லை. பூசை காலத்திலே குருக்கள் பாம்புகட்குப் பாலும், பழமும் வைத்து வழிபடலும், அவை அவற்றை உட்கொள்ளலும் உண்டு.

கதிர்காமர், தன் உடல் கொண்டு பெற்ற தெய்வச் சால்புகளைக் கண்டோரும், கேட்டோரும் பயனுறுமாறு அந்த இலுப்பைத்தோப்பிலே தெய்வ சாந்நித்தியத்தை உண்டாக்கி விட்டார். நீண்ட நெடுந் தொலைவு, நீண்ட நாட்களாகப் போற்றி வழிபாடு செய்த சக்கரமும் தீர்த்த கெண்டியுமே அங்கு வழிபடும் திருவுருவங்களாயின. அந்தப் பேரருட் பொருள்களை அவை உள்ள சுற்றுச் சார்பெல்லாம் தெய்வ மணங் கமழவும் நேரில் வந்து வழிபட்டோரேயன்றிக் கேள்வியாலறிந்து உள்ளத்தால் உன்னி வழிபட்டோரையும், அங்கண் தொண்டு பூண்டோரையும் நல்லாறு உய்த்து நலங்கள் பல்கிப் பெருகக் காண்கிறோமெனவே, கதிர்காமரது ஆன்ம ஒளி இத்தனை காலங்கடந்தும் விளக்கமுற்று நன்மை செய்ததற்கு அவருடைய உழைப்புத்தான் எவ்வளவு இருக்குமெனவும் எண்ணி அவர் திருவடிகட்கு வணக்கம்

செலுத்துவோமாக.

தனக்கு இயலுமளவும் பூஜை மேற்கொண்டு வந்த கதிர்காமர் சற்றே வயது முதிர்ச்சியால் தளர்வுற்றார். அந்நாளில் அவருக்குக் 'காஞ்சியிலிருந்து அந்தணர் ஒருவர் வருவார்' என்னுங் குறிப்புப் புலப்பட்டது. அவ்வாறே ஒரு அந்தணர் வந்தார். தனக்கு விளைந்த குறிப்பின் வண்ணம் பூஜையை அவரிடம் ஒப்புவித்தார் கதிர்காமர். சில காலம் அந்தணர் பூஜையைத் தரிசனஞ் செய்து கொண்டிருந்து விட்டு ஜீவசமாதியடைந்தார். இந்துக்கள் சைவசமயத்தைப் பின்பற்றும் நெறியாளராயிருந்தன ரென்பது மொஹெஞ்சதாரோ, ஹரப்பா முதலான இடங்களின் அகழ்வாராய்ச்சிகளால் தெளிவாகின்றன. எகிப்து முதலாய பற்பல நாடுகளின் அகழ்வாராய்ச்சி முதலியவற்றிலிருந்து உலக முழுதுமே சிவபெருமானைத் தெய்வமாகக் கொண்டு தொழுதமை புலப்படுகின்றது. மொழி, பண்பாடு முதலியவற்றின் வேறுபாட்டால் பிற கடவுளர் எனக் கொள்ளும் வழக்கமும் வழிபாடுகளும் முறைகளும் தோன்றியதால், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று உணர்த்த வேண்டிய இன்றியமையாமை எழுந்தது. சைவம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சாக்தம், சௌரம் என ஆறு சமயங்களாய் விரிந்து கொள்கைகள் மக்களிடையே வேறுபாட்டினை உண்டாக்கின. பின்னாட்களிலே, 'யாதொரு தெய்வங் கொண்டீர், அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்' என்ற சமரச மனப்பான்மை கொள்ள வைக்க வேண்டிய நியதியும் புகுந்து உணவு ஒன்றேயெனினும் அவரவருடைய சுவை முதலாயவற்றுக்கேற்றவாறு வெவ்வேறு வகை, சுவையினவாய்த் தயாரித்துக் கொள்ளுமாறு போல, மேற்கூறிய அறுவகைச் சமய வழிபாடும் நூல்களில் இடம் பெற்றன. கடைப்பிடிப்பவரும் அவரவர் விருப்பத்திற்கேற்ப கைக் கொண்டனர். இந்த நிலையிலே, பற்பல ஒழுங்கு நியதிகளுடன் சாக்த வழிபாடு கைக்கொள்ளப்பெற்றது.

நீரின் தன்மையும் நெருப்பிற் சூடும் ஒன்றையொன்று பிரிக்க இயலாத நிலையினை ஆதல் போலச் சக்தியும் சிவனும் ஒருவரினொருவர் பிரியாத அபேத உருவினர் என்பதறிவித்தற்கே. உருவ வழிபாட்டிலே சிவனின் இடப்பாகத்திற் பார்வதியையும், விஷ்ணுவின் திருமார்பிலே லக்ஷ்மியையும், பிரமனின் நாவிலே சரஸ்வதியுமிருப்பதாகவும் காண்பித்த ஆன்றோர் நெறி கூர்ந்து கவனிக்க வேண்டுவதொன்று.

சாக்தர் (சக்தி வழிபாட்டினை மேற்கொள்வோர், பெரும்பாலும் திருவுருவத்தைப் பூசிப்பது கிடையாது) பீஜாக்ஷரங்களிலே அவள் திருவுருவத்தை ஆரோபித்து சக்கரத்தில் அவ்வக்ஷரங்களை வரித்து அதனையே அர்ச்சனை ஆராதனைகள் செய்து பூஜிப்பது மரபு. இங்ஙனமாகத் தென்னிந்தியாவிலே பல கோயில்களிலும் இன்றும் வழிபாடு நடைபெறுகிறது. ஸ்ரீகாசி, அன்னபூர்ணேசுவரி ஆலயத்திலே பக்தர்களே பூஜிக்க அர்ச்சனை, நிவேதன, ஆராதனைகளுக்காக ஒரு தாம்பாளத்திலே ஸ்ரீசக்கரத்தை அமைத்து அந்தக் கோயிலின் எந்த இடத்தில் வேண்டுமாயினும் எழுந்தருள்வித்துப் பூஜிக்கச் செய்கிறார்கள்.

எனவேதான் நம் கதிர்காமரும் அங்கிருந்து ஸ்ரீசக்கரத்தை எழுந்தருளச் செய்து வந்தார். ஸ்ரீசக்கரத்தில் ஷோடச அக்ஷரியாய் அன்னை விளங்குகின்றாள். 'ஷோடசம் - பதினாறு. பீஜாக்ஷரம் ஒன்றும், அக்கினி கண்டம் அல்லது வாக்பவ கூடமாக நான்கு அக்ஷரங்களும், சூர்ய கண்டம் அல்லது மத்ய கூடமாக ஐந்து அக்ஷரங்களும், சந்திர கண்டம் அல்லது சக்தி கூடமாக மூன்று அக்ஷரங்களும் கீழ்நோக்கிய 4 சிவ கோணங்களிலும் மேல் நோக்கிய 5 சக்தி கோணங்கொண்ட 44 கோணங்களை உடைய ஸ்ரீசக்கரத்திலே 16 அக்ஷரங்களிலே அன்னை பாராசக்தி விளங்குகிறாள்'. "காசிக்ஷேத்ரம் சரீரம், த்ரிபுவன ஜநநீ வ்யாபினி ஞானகங்கா...... தேஹேஸர்வம் மதியே யதிவாபதி புனஸ் தீர்த்தம் அன்யது கிம் அஸ்தி" என்று ஸ்ரீகாசி பஞ்ச ஸ்லோகத்தில் கூறுவதால், தேவீ உபாஸனையை அந்தர்முகமாகச் செய்வோர், எல்லாப் புண்ணிய தலங்களையும் தீர்த்தங்களையும் தம் சரீரத்திலேயே கண்டு விடுகிறார்கள் என்பது விளங்கும். (காசீ பஞ்ச ஸ்லோகம் ஸ்ரீசங்கரரால் இயற்றப்பெற்றது)

இதை ஆராய்ந்து பார்த்தால் நம் கதிர்காமர், அந்தர்முகதேவி உபாஸனை மேற்கொண்டு ஸ்ரீசக்கரபூஜை - கங்கா துர்க்கா தீர்த்த பூஜைகளை உலகோர் உய்யவே தெல்லிப்பழையில் எழுந்தருளச் செய்தார் என்பதும் முதன் முதலில் நாம் நினைவு கூர்ந்தவாறே நன்மக்களுக்கு உறைவிடமாய்த் திகழும் தெல்லிப்பழையைத் தன் கலைகளோடு விளங்கச் செய்ய இறைவன் திருவுளங் கொண்டே இந்த இடத்தைக் குறிப்பிட்டருளினான் என்பதும் வெள்ளிடை மலை.

ஏதோ சில காலம் இடையிலே சற்று விளக்கங்குன்றி இருந்ததெனினும் இன்று மேலும் விளக்கமுற வளர்ந்து வருவது மட்டுமன்றி, தொழுதல், பணிகளை மேற்கொள்ளல், சிறப்பொடு பூசனை செய்வித்தல், அவற்றிற்கு வேண்டும் உபகரணங்களையும், கட்டளைகளையும் நிறுவுதல் வாயிலாக அன்னைக்கு அன்பு பூண்டோர் அடையும் நன்மைகளை எண்ணுங்கால் ஈங்கு விளங்கும் தெய்வீகத் தன்மை யாவர்க்கும் தெற்றென விளங்கும்.

1965ம் ஆண்டு ஆவணித்திங்கள் திருவோண நட்சத்திரத்தில் மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டபின் இத்திருக்கோயில் வளர்ச்சி வியக்கத்தக்க வகையில் பெருகியது. இன்று (17-04-81 இல்) மகா கும்பாபிஷேகம் மீண்டும் பெற்று ஒளி விடும் இவ்வாலய பரிபாலனசபையும் அதன் தலைவி துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் கடந்த பதினைந்து ஆண்டுகளாக ஆற்றி வரும் சேவையை நாடும் ஏடும் நன்கறியுமன்றோ.

எனவே, பரோபகாரியாக அருள்ஞான வள்ளலாய்த் திகழ்ந்த திருமிகு கதிர்காமர் திருவடிகளை மீண்டும் போற்றி இவ்வரலாற்றினை நிறைவு செய்து, தேவியின் திருவருளை யாவர்க்கும் - எவ்விடத்தும் - எக்காலத்தும் அள்ளியளித்துப் பெருவாழ்வில் திளைத்திருக்கச் செய்யுமாறு இறைஞ்சுதும்.

ஓம் சக்தி!

ஸ்ரீதேவி பராக்கிரமம் முதலிய நூல்கள் அம்பிகையின் வீரச் செயல்களை உணர்த்துவன:

பண்டாஸுர வதம், மகிஷாஸுரமர்த்தனம், மந்த்ரிணீதேவியைக் கொண்டு விஷங்க வதம் செய்தவள், வராஹியைக் கொண்டு விகக்ரனை அழித்தவள் என்பன அவற்றுட்சில.

லக்ஷ்மியாகச் செல்வம் தருபவளும், காயத்ரியாக த்யான நலம் புரிபவளும், துர்க்கையாக வீரபராக்ரமந் தருபவளும் அவளே. நக்கீரரும் 'வெற்றிவேல் போர்க் கொற்றவை சிறுவ!' என முருகப்பெருமானை விளிக்கிறார்.

நக்கீரர் குறிப்பதற்கொப்ப, துர்க்காதேவியும், முருகப்பெருமானும் ரே போரில் அசுரரை அழித்து அமரரைக் காத்த வரலாறொன்று உ...டு. அவ்வரலாற்றினை விழாவாகக் கொண்டாடி மக்களுக்கு உணர்த்துவது தெல்லிப்பழையில் நடைபெறுகிறது. அத...வது:

பண்டு ஓர் காலத்திலே பிரம...னும், விஷ்ணுவும் அகந்தை மேலோங்க ஒவ்வொருவரும் தந்தை மகன் - பௌத்திரன் - பிரபௌத்திரன் - மருகன் எனும் முறை காரணமாகப் போரிட்டனர். போர் வலிவுடையதானபோது, திருமால் கோபமேலிட்டு வேள்வியொன்றியற்றி அத்தீயினின்று புலிமுகமுடைய ஓர் அசுரனை உண்டாக்கிப் பிரமனை அழிக்குமாறு ஏவினார். பிரமனும் ஓர் ஆபிசார ஓமம் செய்து அந்த அக்கினியிலிருந்து எருமைத் தலையுடன் கூடிய மகிஷாசுரனை உண்டாக்கித் திருமாலை அழித்து வருமாறு ஏவினார். இருவரும் போரிட்டனர். வெற்றி தோல்வியின்றிச் சலிப்படைந்த வேளை அசுரர் இருவரும் சமாதனமாயினர். 'மூர்க்கரை மூர்க்கர் முகப்பரன்றோ? இருவரும் தவம் புரிந்தனர். உருத்திரன் அவர்கள் தவத்தினுக்கிரங்கி எதிர் தோன்றி வேண்டிய வரங்கள் அளித்தார்.

மூர்க்கத்தனமும், கண்டார் அஞ்சத்தக்க தோற்றமும், மிக்க வலிமையுமுள்ள வியாக்கிராசுரன், (புலிமுக அசுரன்) அரசனாகவும், மகிஷாசுரன் அரசனாகவும் மூவுலகங்களையும் வென்று அரசாள்வாராயினர். அவர்களது அரசியலில் தேவர் முனிவர்க்கெல்லாம் பெருந்துன்பம் விளைந்தன. பிரம விஷ்ணு பதவிகளை விட்டு ஓட விரட்டப்பட்டனர்.

துன்பங் காரணமாகத் தேவர் முதலியோர் சிவபரஞ்சுடரை அடைந்து முறையிட்டு அழுது வேண்டினர். 'உயிர்களைக் காக்கும் தன்மை விட்டு, அகந்தை கொண்டதாலன்றோ துன்பம் தேடிக்கொண்டனை' எனத் திருமாலைக் கண்டித்த பரமபதி, துர்க்காதேவியையும், சுப்பிரமணியக் கடவுளையும் அனுப்பினார்.

துர்க்கைக்குத் துணையாகச் சுப்பிரமணியர் அசுரப்படைகளை அழித்தார். அதனாற் கொதிப்புற்ற வியாக்கிராசுரனும், மகிஷாசுரனும் மாயங் கொண்டு தேவர்களை வளைத்தார்கள். தேவர்கள் ஓலமிட்டு அரற்ற அன்னை துர்க்காதேவி மகிஷாசுரனை மாய்த்தாள். சுப்பிரமணியர் வியாக்கிராசுரனைத் தனது 'அநந்தகுணம்' என்ற வில்லில் அம்பு பொருத்தி விடுத்து அவன் தலையைக் கொய்து புறக்கடலில் வீழ்த்தித் தேவர் துன்பங்களைத் துடைத்தார்.

இந்த விழா, வாசிட்டலைங்க புராண, சுப்பிரமணிய பராக்கிரமத்தை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகிறது.

மக்கள் அகந்தையின்றி வாழ வேண்டும்; தம்முள்ளேயே உள்ள அசுர குணங்களை மன உறுதி என்ற போரிட்டு வெல்லல் வேண்டுமென்பதற்காகவே, சோழமன்னனால் அமைக்கப் பெற்ற மாவிட்டபுரத்தினின்று முருகப்பெருமான் ஆண்டு தோறும் விஜயதசமியன்று எழுந்தருளி வந்து அம்புபோடும் விழா நடைபெறுகிறது.

முருகன் திருவடி வாழ்க.

நன்றி

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்
மகா கும்பாபிஷேக மலர் - 1981

அன்று கதிர்காருக்கு அருளளித்து ஆலயத்தை உருவாக்கவைத்து வரலாறு படைத்த தாயார் இவ்வரலாற்றுக்குக்குப்பின் அ... பனின் வாழ்விலே காட்டிய அரும்பெரும் அற்புதத்தை அனைத்து உலக மக்களும் அறிந்து உண்மை வழிபாடுகள் உலகெங்கும் பெருக வேண்டும் என்ற நோக்கோடு இவ்வுண்மை நிலையை அறியத்தருகின்றேன். அன்று அருளளித்த துர்க்கை இன்று அருளளிக்க மாட்டாள் என்றல்ல உண்மையான வழிபாடுகொண்ட அடியவர்கள் நெஞ்சில் குடியிருப்பாள் இவற்றை அடியேன் கண்டுபெற்ற உண்மையை அனைத்து அடியவர்க்கும் அறியத்தருகின்றேன்.

## தெல்லி நகர் அருள்மிகு துர்க்கை அம்பிகையின் அதி அற்புதம்

வையகமெல்லாம் நிறைந்திருக்கும் மாதா பராசக்தியை கையெடுத்துக் கும்பிடவே கடிதென ஆதாரம் தந்தருள்வாள். மெய்யெல்லாம் உருகுகையில் மெய்சிலிர்க்க வைத்தருள்வாள்.அற்புதங்கள் காட்டி அருட்காட்சி தந்தருள்வாள். சிந்தனையும் வந்தனையும் எங்குள்ளதோ அங்கு செந்திருவுருவாய் அன்னை துர்க்கையாய் வந்தருள்வாள் அன்போடு அகம் குழைந்த தன்மையினால் பெற்றதோர்அற்புதத்தை இன்பமுடனே அன்புகொண்ட பத்த அடியவர்களுக்கு அறியத்தருகின்றேன். பற்று உற்றோர்க்கு பற்றுடையாள் பரம துர்க்கை இவள். பக்தியுடன் இவள் பாதம் பணிந்திடவே பாரினில் வேறு இன்பம் இல்லை. இன்பமுடன் இவள் பாதம் என்றும் பணிந்திடுவோம்.உண்மையின் அற்புதம் உலகறிய வேண்டிய
த த . . \ து வ ம .

நான் ஒன்பது வயதுச் சிறுவனாக இருந்த கால கட்டத்தில் எனக்கு அம்பாளின் சின்னமுத்து என்னும் நோய் பரவியது. அந்நோய் என்னை நன்கு பீடித்தமையால் அம்பாளுக்கு நேர்த்தி வைக்க வேண்டும் என்று என் தாயார் வாக்களித்திருந்தார். அதன்படி என்னை அருள்மிகு தெல்லிநகர்த் துர்க்கைத் தாயாரின் ஆலயத்திற்கு

அழைத்துச் சென்றார். அன்றைய நாட்கள் தோறும் நண்பகல் பன்னிரண்டு மணிக்குதான் அம்பிகைக்குப் பூஜை நடைபெறுவது வழக்கம். எனவே தான் அக்கால கட்டத்தில் என் தாயாரும் என்னை அங்கு அழைத்துச் சென்றிருந்தார்.

அங்கு நான் சென்ற போது அம்பிகையின் தோற்றநிலை ஒரு வகைப்பயத்தை என்னுள் ஏற்படுத்தியது. பாழடைந்த கோயிலாக இருந்த அந்தக் கட்டடத்தைச் சுற்றி இலுப்பை மரங்களும் அரச மரங்களும் பனங்கூடல்களும் அவற்றிடையே பாம்புப்புற்றுக்கள் அமைந்திருந்ததால் சிறுவனாகிய எனக்கு மேலும் ஒரு பெரும் பயத்தை அந்த ஆலயம் ஆக்கி விட்டது.

இந்த நிலையில் சுழல் கேற்றின் (கதவு) அருகே என்னை நிற்க வைத்து விட் குருக்கள் ஐயா அவர்களைக் கூட்டி வருவதற்காக எனது தாயார் சென்றிருந்தார். எனது தாயார் சென்ற பின் நானே சுழல் கேற்றின் மீது ஏறி நின்று பார்த்தேன். பயம்தான் பொத்திக் கொண்டு வந்தது. உள்ளம் படபடத்தது. எனது தாயாரும் அந்நேரத்தில் அந்த வயோதிப குருக்கள் ஐயாவோடு அங்கு வந்தார். என்னையும் அழைத்துச் சென்றார். நாங்கள் மூவரும் ஆலயத்துக்குள் சென்றோம். அங்கே அந்த அத்திவாரச் சுவர்கட்டுகளுக்கிடையே பெரும் பாம்புப்புற்றுகள் இருந்ததை நான் அவதானித்தேன். மீண்டும் ஒருவகைப் பயம் என்னை ஆட்கொண்டது. அதன் காரணமாக எனது தாயாரின் சேலைத்தலைப்பை எனது கையில் பிடித்தவாறே அம்பிகையைப் பார்த்தேன். பின் கையெடுத்துக் கும்பிட்டேன். அந்த நேரம் புற்று ஒன்றிலிருந்து பாம்பு ஒன்று வெளிவந்தது. அம்மா என்று அலறியவாறு நெஞ்சு கலங்கி நான் கதறியபோது "மகனே பயப்படாதே அது புற்றை விட்டு வெளிவராது எட்டிப்பார்க்கும் பின் போய் விடும்" என்று கூறியவாறு ஐயா புற்றினுள் பாலை ஊற்றினார். அந்தப் பாம்பு பின் உள்ளே நுழைந்து விட்டது. இக்காட்சிகள் இன்றும் என் நெஞ்சை விட்டு அகலாக்கட்சிகளே. அதே நேரத்தில் அதாவது அந்தப் பாம்பு என்னைத் தீண்டவில்லை என்ற உறுதி எனக்கு ஏற்பட்டபோது நான் அம்பிகையின் மீது நம்பிக்கையை ஏற்படுத்திக் கொண்டேன்..

அன்றிலிருந்து கோயில் பக்தியில் ஆழ்ந்தவனானேன் அதன் பின் 1978 இல் அம்பிகையின் ஆலயத் தொண்டுகள் செய்வதற்காக இயங்கப் பெற்ற இந்து இளைஞர் சங்கத்தில் ஒரு உறுப்பினராக நான் இணைந்து கொண்டேன். அம்பாளுக்கு நற்தொண்டுகள் ஆற்றத் தொடங்கினேன். அத்தோடு அம்பிகையின் ஆலயத்தில் நடைபெறும் தேவாரப்பஜனைகளில் பத்தர்களோடு ஓர் சிறு பத்தனாக நானும் பாடத்தொடங்கினேன். இந்த நிலை நீடித்த போது நானும் இளைஞனாக மாறினேன். தோற்றத்தில் அந்த அம்பிகையின் அருட்கடாட்சம் என்று எண்ணுகின்றேன். என் குடும்ப வாழ்வுக்கென்று ஒரு கன்னியை அம்பாள் தனது ஆலயத்தில் எனக்குக் காட்டித் தந்ததோடு எனது திருமண வாழ்வுக்கு அம்பிகையாள் நல்ல வழியும் காட்டினாள். இதன் காரணமாக என்னுடைய இலட்சியத் துணைவியாக தந்தை அற்ற வறுமைப்பெண் ஒருவரை இல்லாளாக அம்பாள் நிறைவேற்றி வைத்தாள். எனது இல்லாளின் மானங்காக்க குங்குமம் நிலைக்க அருள்மிகு துர்க்கை அம்பிகையின் பாதபூஜையில் மஞ்சள் நூலில் மாங்கல்யம் வைத்து அணிந்து கொண்டேன். இந்தத் திருமண வாழ்வின் பின் ஏற்பட்ட

எதிர்புக்களும் இன்னல்களும் எண்ணில் அடங்காது. எமது வாழ்வில் ஒரு துன்பச் சுழற்சியாகவே அமைந்தது. அதைச் சமாளிப்பதற்காக, அம்பிகையின் ஆசியோடு நானும் எனது மனைவி பிள்ளைகளும் தெல்லி நகரை விட்டு பளை என்னும் ஊருக்குப்பயணம் செல்ல எண்ணினோம். அம்பிகையின் திருப்பாதத்தினை வேண்டி அம்பிகையின் திரு உருவப்படத்தையும் பெற்றுச் சென்றோம். அங்கு இன்பமுடன் வாழ்ந்து வருகின்ற காலத்தில் எம் வாழ்வில் அம்பிகையாள் பேரிடியுடன் இப்படியோர் திருவிளையாடல் ஆடுவாள் என்று எண்ணியது கிடையாது.

**எமக்கு நேர்ந்த இன்னல்கள்**

1987 ஆண்டு இந்திய ராணுவம் எம்மை ஆக்கிரமித்த அன்றைய காலம் நாம் பெரும் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டு உயிருக்கு அஞ்சி வாழ்ந்த அந்தக் காலத்தில் வாழ்வில் இப்படி ஓர் பேரிடியும் கலக்கமும் ஏற்படும் என்று எண்ணியது கிடையாது. எனது மனைவியின் கழுத்தில் அணியப்பட்ட மாங்கல்யம் தொலைந்தது. எம் வாழ்வில் ஏக்கமும் பீதியும் குடிகொண்டது. எங்கு சென்ற போது தொலைந்தது என்று அறியாது தவித்தோம். எனது மனைவி நோய் உற்று இருந்தமையால் மருத்துவமனைக்குச் சென்றிருந்தார். அங்கு சென்ற போது தொலைந்ததோ என்று அங்கு சென்று பார்த்தோம். எங்கும் தேடிப்பார்த்தோம் கிடைக்கவில்லை. என்ன செய்வதென்று அறியாது ஏங்கி ஏங்கித் தவித்தோம். இப்படி ஓர் சோதனையும் வேதனையும் தந்த துர்க்கா தேவியை மனம் நொந்து வேண்டினோம். தேவியை வேண்டித் தேம்பித் தேம்பி அழுதோம். இவற்றின் நிலையால் எனது மனைவி கடும் நோயுற்றாள். தெய்வம் இல்லை என்று வழிபடுவதை நிறுத்தினாள். எனது மனைவியின் நிலை கண்டு எனது பிள்ளைகள் தவிக்கப் போகின்றார்களே என்ற கவலையுடன் அம்பிகையை வேண்டி விரதம் அனுஷ்டித்து வந்தேன். இப்படியாக இருபது நாட்கள் கழிந்தன இருபத்தியோராம் நாள் எனது மனைவி பிள்ளைகளை தூங்க வைத்து விட்டு யோகாசன நிஷ்டையில் அமர்ந்திருந்து அம்பிகையை வேண்டியவாறு பித்துப்பிடித்தவன் போல் திட்டியும் வேண்டியும் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்த வேளை, நான் கண்ட அந்த காட்சியின் நிலை என்னை ஒரு கணம் உருக்குலைய வைத்தது. எனது உடம்பு எல்லாம் புல்லரித்தது. நான் திகைப்புற்று பார்த்த போது தலைவிரி கோலத்தில் நரை விழுந்த கிழவியாக என்முன் காட்சி அளித்த அந்த அம்பிகையாள், "மகனே சதா என்னைச்சிந்தித்து கலங்கும் உனக்கு எவ்வித துன்பத்தையும் தரமாட்டேன். தோலைந்த தாலி உன்கைக்கு கிடைக்கும். பெற்றுக்கொள்வாய் என்று கூறி மறைந்து கொண்டாள். இவற்றைக் கண்ட நான் என்னை அறியாத உத்வேகத்தில் லைற்றை எடுத்துக்கொண்டு வளவு எங்கும் பார்த்தேன். ஒன்றும் தென்படாது போகவே நேரத்தைப்பார்த்தேன். நேரம் 12.10 நிமிடங்கள் எனக்குத் தூக்கம் வராமல் இருக்கவே அம்பிகையின் நாமங்களைப் பாடியவாறு விடியும் பொழுதை நோக்கி காத்திருந்தேன். காலை எழுந்ததும் எனது மனைவிக்கு இவற்றைக் கூறிய போது என்னை ஏளனம் செய்தார். இவற்றைக் கேட்டு என்மனம் உறுதி குலையவில்லை. இக்காட்சி கண்ட மறுவாரம் 6 11- 87 அன்று புளோப்பளை என்னும் இடத்தில் கிறீஸ்தவ சிஸ்ரர் வீட்டிலே நான் வேலை செய்து கொண்டு இருந்த வேளை அவருடைய தாயார் தமது தென்னந் தோட்டதில் இருந்து வந்தவாறே மகனே உன் தாலி கிடைத்ததா என்று கேட்டார். இல்லையென்று நான்

கூறவே இவ்விடத்தில் இருந்து 6 மைல்களுக்கு அப்பால் மணல்காடு என்கின்ற இடத்தில் குடியிருக்கிற பெண் ஒருத்தி தான் ஒரு தாலி ஒன்று நிலத்தில் இருந்து எடுத்ததாகவும் அதை வீட்டில் வைத்திருக்கும் போது இரவு கனவில் ஒரு பெண் தெய்வம் ஒன்று தோன்றி இத்தாலி எனது பக்தனுடையது. அதை பிரச்சாரம் செய்து எனது பக்தனிடமே ஒப்படைக்கும் வண்ணம் பணித்தார். என்பதை அப்பெண் கூறியதாக எனது தோட்டத்தில் வேலை செய்யும் சிலர் கூறினார்கள். என்று அவருடைய தாயார் கூறவே இதைக் கேட்ட நான் செய்த வேலையை மறந்தேன். இன்பமுற்று எனது மனைவியை காண்பதற்கு ஓடோடிச் சென்றேன். எனது மனைவி அடுப்பங்கரையில் கீரையை அடுப்பில் வைத்தவாறே இருப்பதைக் கண்டு எனது அம்பிகையின் மீது கொண்ட நம்பிக்கையினால் எனது மனைவியை “எடி என்னை ஏளனம் செய்தியே கீரைச் சட்டியை இறக்கிப் போட்டு விட்டு வாடி என்னோடு” என்று ஆனந்தத்தோடு மனைவியை அழைத்துக் கொண்டு மணற்காடு நோக்கிச் சென்றோம். நேரமோ மத்தியானம் மணலின் சூடோ உச்சி வரை சுட்ட போதும் தேன்நிலவிலே மணல் மீது நடந்தது போல் இன்பமுடன் நடந்து சென்றோம். அந்தப் பெண்ணின் வீட்டு வாசலை அடைந்து அம்மா என்று அழைத்தேன் அங்கிருந்து சுமார் 45 வயது மதிக்கக் கூடிய பெண்ணொருவர் வெளியே வந்தார். உங்கள் பெயர் தான் பாக்கியலக்ஸ்சுமியா என்று கேட்ட போது ஆம் என்று பதில் அளித்தார். நீங்கள் தாலி ஒன்று கிடைத்திருப்பதாக பிரச்சாரம் செய்து திரிந்ததாக அறிந்து வந்துள்ளோம். என்று கூறியவாறு எமது தாலியின் அடையாளத்தை நான் கூறிய போது அந்தப் பெண் எம்மை அழைத்து அமரும் வண்ணம் கூறி விட்டு தன் கதையைக் கூறினார்.

### எமது தாலியை கண்டெடுத்த பெண் கூறியவை

இந்திய வம்சாவழியான இப்பெண் சிறுவயதிலேயே தாம் வேலை செய்த எஸ்ரேட்டின் கங்காணியாளர் ஒருவரை விரும்பி திருமணம் செய்ததாகவும் அவர் கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தவர் என்றும் அதனால் தானும் 14 வயதிலே மதம் மாறிக் கொண்டேன். என்றும் தனக்கு மூன்று பிள்ளைகள் இருப்பதாகவும் 1983ம் ஆண்டு இடம் பெற்ற வன்செயல் காரணமாக கொழும்பில் இருந்து தனது இரு பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு மணல் காட்டில் குடியேறியதாக கூறினார். இப்படித் தனது குடும்ப நிலைமைக் கூறினார். இப்படித் தனது குடும்ப நிலைமையை கூறிய பெண் மேல்கண்டவாறு கூறியதோடு 10 -10-87 அன்று பளை மருத்துமனைக்கு மருந்து எடுக்கச் சென்றேன் மருத்துவ நிலைய வாசல் அருகாமையில் இந்த தாலியை கண்டெடுத்தேன். இவற்றை ஒரு வார காலமாக வைத்துப் பார்த்திருந்தேன். பின்னர் எனது கணவரிடம் இருந்து பதில் வரவே: மறுபடியும் கொழும்பு செல்தற்காக இந்த தாலியை விற்று பணம் பெற்றுக் கொள்வதற்காக யாழ்ப்பாணம் நகைக்கடைக்கு விற்பதற்கு கொண்டு சென்றேன். ஆனால் இரண்டு தடவைகள் தடை ஏற்பட்டமையால் பின்னர் 31-10-87 அன்று சாவகச்சேரியில் உள்ள முருகன் நகைக் கடைக் காரரிடம் இவற்றை விக்கக் கொண்டு சென்றேன். அவர் இவற்றின் நிறையைப் பார்த்து விட்டு பணம் கொஞ்சம் காணாமல் இருக்கின்றது. மறு நாள் வரும்படியும் இவற்றுக்கான முழுப்பணத்தையும் தருவதாகவும் கூறினார். எனவே எனது நிலைமையை அவரிடம் கூறினேன். மறுநாள் கொழும்புக்கு செல்வதற்கான ஒழுங்கோடு வருவதாகக் கூறிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். பின்னர்

பயணத்துக்கான ஒழுங்கை அடுக்குச் செய்து விட்டு தூக்கத்தில் ஆழ்ந்த நான் இருள் சூழ்ந்த அவ்வேளையில் தூக்கத்தில் திடுக்குற்ற நான் கண்ட காட்சி என்னை மெய்சிலிர்க்க வைத்து விட்டது. பயங்கரமான அக்காட்சி இப்படி ஒரு தெய்வம் உண்டா என்று திடுக்குற்றேன். கண்முன் தோன்றிய காட்சியோ நரை விழுந்த கிழவியாக தலைவிரி கோலத்தில் ஆங்கார சொரூபம் உடைய பெண் தெய்வமாக கதிகலங்க வைத்தது.. பின் என்னைச் சதா பூசிக்கும் அடியவன் எனது ஆலயத்தில், என் பாதபூசையிலே வைத்து அணியப் பெற்ற தாலி இது இதைப் பிரச்சாரப்படுத்தி அவற்றை உரியவரிடம் கிடைக்கச் செய்து அவனிடம் கண்டெடுத்த கூலியாகப் சிறுதொகை பண ந்தைப் பெற்றுக் கொள்வாய் என்று கூறி மறைந்து கொண்டது.

ஆதன் பின் நான் சாவகச்சேரியில் உள்ள முருகன் நகைக்கடைக்காரரிடம் சென்று நடந்தவற்றைக் கூறினேன். இச்சம்பவத்தை மக்கள் கூட்டம் உள்ள இடங்களில் கூறி வந்துள்ளேன். என்று எம்மிடம் அந்தப் பெண் கூறினார். இவற்றை அறிந்த நாம் அவரிடம் என்ன இவற்றுக்கு கேக்கிறீர்கள் என்று கேட்ட போது அவர் "ஐயா உங்கள் வழிபாட்டு தெய்வத்தின் படம் ஒன் [illegible]ங்கள். நாம் இங்கிருந்து கொழும்பு, செல்வதற்கு 250 ரூபா பணம் தந்தால் [illegible]ம்" என்று கேட்டார். இதை கேட்ட நாம் ஆச்சரியமும் இன்பமும் அடைந்தோம். பின் நாம் அந்தப் பெண்ணுக்கு ஆயிரம் ரூபா பணம் கொடுத்த போது அவர் 250 ருபா மட்டும் எடுத்து விட்டு மிகுதிப் பணத்தை அருகில் இருந்த ஞான வயிரவருக்கு கொடுத்து அர்ச்சனை செய்யுமாறு கூறி அம்பிகையின் படத்தையும் பெற்றுக் கொண்டார். பின்னர் நாம் அருகில் இருந்த வயிரவர்க்கு பொங்கல் இட்டு அங்கு குடியேற்றப்பட்ட அனைத்து மக்களையும் அழைத்து அருள்மிகு துர்க்கை அம்பிகையின் திருவிளையாடலைக் கூறி, தாலி கிடைத்ததன் மகிமையை எடுத்துரைத்து மகிழ்ந்தோம். எமது அம்பிகையின் அற்புதம் என்றென்றும் அழிவற்ற அருளாகும். அனைவருக்கும் பிரசாதம் வழங்கி மகிழ்ந்தோம்.

ஓம் சக்தி தாயே என்ற நாமம் என்றென்றும் ஒலித்திட வேண்டும்.

இன்று அருள்மிகு துர்க்கை அம்பிகையாள் வான் உயர்ந்த கோபுரம் வரலாறு மிக்க நாயன்மார்களது நால்வர் மண்டமும் தாமரைத் தடாகமும் அருள் ஞானத்தை அள்ளித் தரும் கலைவாணி மண்டபமும் அம்பிகை தீர்த்தம் ஆடும் கேணியும் தங்கரதத்தேர் கொண்ட முட்டியும் திருமண மண்டபமும் அன்னதான மண்டபமும் மகளீர் இல்லம், வாகனசாலையும் அன்னபூரணி மண்டபமும், அந்தணர்கள் வாழும் இல்லங்கள், இத்தனைக்கும் மத்தியில் அம்பிகைக்கு தொண்டு செய்யும் இந்து இளைஞர் சங்க மண்டமும் அன்று தொட்டு இன்று வரை வரலாறு கூறும் வேம்பும் அரசும் இணையப் பெற்ற பாம்புப் புற்றும் சூழ்திருவளம் மிகு சூழப்பெற்ற ஆலயமாகக்காட்சி அளிக்கும் அருள்மிகு அம்பிகையின் திருவடியே துணையென வாழும் சிறு அடியேன் அம்பிகையின் அருகினில் இல்லம் அமைத்து வாழும் எம்மை அணுகி உண்மை நிலை அறிய விரும்பும் பக்த அடியவர்கள் அவற்றின் மகிமை அறிந்து அருள்மிகு துர்க்கை அம்மன் ஆலயத்து அடியவர்கள் ஆக! தொண்டு செய்து வழிபட்டு வருவீர்களே ஆனால் அவள் அன்பின் பாதத்திற்கு அடியவர்கள் ஆகிவிடுவீர்கள் சக்தி தருபவள் அவளே சர்வ உலகிற்கும் தாயும் அவளே அவளன்றி ஓர் அணுவும் அசையாது. (சரணம் சரணம் தாயே எம்மைக் காப்பாய் தாயே நித்தமும் உன் பாதம் சரணம் தாயே ஓம் சக்தி தாயே சர்வ உலகையும் காக்கும் தாயே சாந்தியை தந்தருள்வாய் தாயே.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



**17வயது வாலிபப்பருவம்**
**யோகக் கலையைக் கற்றுக்**
**கொள்ள தடையாக இருந்தது**
**எனது இளமைத் தோற்றம்**
**மனம் கொண்ட குரு பக்தி**
**யோகர் சுவாமியின் யோகக்கலை**



குரு இல்லாக் கலை நிறைவில்லாக் கலை என்பார்கள். ஆனால் அடியேனின் வாழ்வில் அது ஒரு இன்பக்கலை.

17 வயது வாலிப பருவத்தில் பார்ப்பவர்கள் இரசனை கொள்ள நாடகம் ரியூஸ் நடனம் என்பவற்றில் நான் மிக ஆர்வம் காட்டியுள்ளேன். ஆனால் கிப்பி வடிவில் தலை மயிரினை அழகுபடுத்தியமையினால் யாரும் எனக்கு யோகக் கலையை கற்றுத்தர மறுத்து விட்டார்கள்.

சிறிது நேரம் சிந்தித்தேன். நான் பாடசாலை கற்கும் காலந்தனில் எனது ஆசிரியர் கற்பித்த குருபக்தி எனும் பாடம் எனக்கு ஞாபகம் வந்தது. வேடுவ குலத்தைச் சேர்ந்த ஏகலைவன் வில்வித்தையைக் கற்க ஆசைகொண்டு அரச குலத்திற்கு வில்வித்தையைக் கற்பிக்கும் துரோணச்சாரியாரிடம் வந்து தனக்கு வில்வித்தையைக் கற்று தரும்படி தாழ்மையுடன் கேட்டபொழுது தாழ்மையை மறந்து நாம் அரசகுலத்திற்கு மட்டும் வில் வித்தையை கற்பிப்பவன் நீ வேடுவ குலத்தவன். அதனால் என்னால் உனக்கு கற்றுத்தர முடியாது என மறுத்து விட்டார் துரோணாச்சாரியப்பர்.

அதன் பின் துரோணாச்சாரியாரை தனது மானசீக குருவாக ஏற்று அவரது திரு உருவை மண்ணால் எழுப்பி அதனை உயிருள்ள குருவாக எண்ணி குருவின் பயபக்தியுடன் சகல வில்வித்தையினையும் உருவாக்கி வில் வித்தையை கற்றுக்கொண்ட நிலையினை சற்று எண்ணிப் பார்த்தேன். அதுபோன்று யோகர் சுவாமிகளின் படத்தை புத்தகம் ஒன்றில் அகற்றி எடுத்து அதை வழிபட்டு யோகக்கலையை கற்கத் தொடங்கினேன். பின் யோகக்கலை படம் உள்ள புத்தகத்தை வாங்கினேன். அவற்றை பார்த்தும் படித்தும் ஒவ்வொரு அத்தியாயமாக செய்யத் தொடங்கினேன். இன்று அதன் வளர்ச்சியை படத்தில் பாருங்கள். அறிவை பயன்படுத்துங்கள். அதுவே உங்கள் வாழ்விற்கு ஒளிமயம் தரவல்லது. வாழ்வையும் தெய்வ சக்தியையும் தரும் என்பதை உணர்வீர்கள்.

**அப்பாக்குட்டி தங்கம்மா அன்னையின் அருளாசி**

அன்று அருள் தந்த துர்க்கை தாயின் முன்னால் அமர்ந்திருந்து என்னை உணர்வோடு பார்த்த தாயாக இருந்தவர் எம் தாயார் என்று போற்றப்படுபவர் எங்கள் அப்பாக்குட்டி தங்கம்மா அவர்கள். என் வாழ்வின் உயர்வுக்கு முன்னின்று வழிகாட்டியவர். எனக்கு ஏற்படும் துன்ப நிலைகளை எடுத்து கூறப்பட்ட வேளையில்

யோகர் சுவாமிகள்



# மனங்கொண்ட குருபத்தி

யோகக் கலையை மானசீகமாக நான் கற்றுக்கொள்ள உதவிய மானசீக குரு

# யோகக்கலை



நரம்பியல் ஆசனம்





அஸ்தமஸ்ஜேந்திர ஆசனம்



பத்மாசனம்



நிஷ்டை ஆசனம்



வித்தி ஆசனம்



புசஆனம்




சிரசானம்




ஞானாசானம்



மூட்டு சிரசாசனம்




அட்டான்ச சிரசாசனம்




பழுவிரிவாசனம்



நெஸ்டை ஆசனம்



ஈஸ்தான தியானம்



வைதீக ஆசனம்



மௌன தூக்காசனம்



சர்வாங்காசனம்



நிஷ்டையில் சிந்தையாசனம்

# யோகக்கலை



இடம் வலம் தக பாத ஆசனம்



இடம் வலம் நிஷ்டை ஞான ஆசனம்



தனபாத ஆசனம்



உண்டியாசனம்



வித்தியாசனம்



சர்வாங்காசனம்



பத்மாசனம்



தியான ஆசனம்



வித்திய தியானம்



மௌன தியானம்




நெஷ்டையானம்



புசரட்ஸதியானம்



பாதரட்ஸ தியானம்



கீர்த்தனையானம்




ஞானசிந்தனை



அன்னையின் ஆசிபெற்று தாயின்மீது அடியேன்
இயற்றிப்பாடிய கவிதைத் தொகுப்பு



எம்தாயின் உருவப்படத்திற்கு தூபம் இட்டுவரல்



எம்தாயின் உருவச் சிலைக்கு
மலராஞ்சலி செலுத்துதல்



எம்தாயின் தீப ஜோதியை வணங்குதல்











என்சிந்தையில் என்றென்றும் நிலைநிறுத்தி நிற்கும் எம் தாயாரின் பிறந்த நாளில்
அடியேனின் சிந்தையில் ஐந்து ஆண்டுகள் என்னால் வழங்கப்பெற்ற
அன்னையின் ஆசி பெற்ற படத்தொகுப்பு

எனது உணர்வின் உண்மை நிலையை அறிந்து அன்றில் இருந்து எனக்கு ஒரு தாயாக செயல்பட்டு என்னால் உருவாக்கப்படும் சிந்தை ஆக்கங்களை அன்போடு கேட்டு அவற்றுக்குரிய கருத்துக்களை பரிமாறி எனது அறிவை ஊட்டிய தாய். இருமுறை எனது ஆசையைக் கூறிய போது உனது சிந்தை ஆக்கத்தை உருவாக்க மிகவும் பணம் தேவை என்ன செய்ய போகிறாய் என்று கேட்ட அந்த தாய் 2001/= பணத்தைத் தந்து மிகுதியை மக்களிடம் பெற்று அவற்றுக்கு ஏற்றது போல புத்தகத்தை வெளியிடு என்று கூறினார்.

அன்று எம் தாய் தந்த நிதி என் உயர்வுகளுக்கு வழி காட்டியாகி 56281/= ரூபா நிதி திரட்டப்பெற்று "நாம இன்பரசம்" என்னும் நூலை உருவாக்கி அப்புத்தகம் வெளியிடப்பட்டு அனைவரின் ஆதரவையும் எனது ஆக்கத்தின் திறமைக்கு அம்பிகையுடன் என்னையும் அருள் புரிந்தமையினால் தான் இன்று இந்த துர்க்கையின் நாமம் கொண்ட பதக்கத்தை இந்து சமய பேரவைத் தலைவராக இருந்த விநாசித்தம்பி புலவர் அவர்களால் துர்க்கா கவிஞானி என்ற பட்டமும், பதக்கமும் வழங்கப்பட்டது. இதற்கெல்லாம் முன் நின்றவர் எம்தாய்.

அன்று எம் தாயை உணர்ந்த அடியேன் அத் மீது கொண்ட பாசத்தால் அவரை இயற்றிப்பாடிய பாடல்கள் வாழ்த்துப்பா பின்வருமாறு

**அன்புள்ள அம்மாவிடம் சில நாட்கள்.**

அன்புக்கு இலக்கணமாக பண்பிற்கு உறைவிடமாக பாசத்திற்கு இருப்பிடமாக கடமையின் வாழ்விடமாக எம் தாயிடம் கற்றறிந்தவை ஏராளம். என்றும் எம் நெஞ்சை விட்டகலா தெய்வத் தாயின் நினைவாக ............

**கவிதைத் தொகுப்பு**

துர்க்கா துணை

சிவத்தமிழ்ச்செல்வி

**தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்**

**75வது பிறந்தநாள் வாழ்த்துக்கவி**

தெய்வத்தாய்

தாயின் திருவழி
தவம் அறிந்த பெருவளி
தயவுடன் தாங்கிடும் தாய்...... இவர்
தாழ் பணிவோம் தாயின் பாதம்

சிவ சிவ அவர் நாமம்
சீர் தழைத்தோங்கும் தமிழ் ஞானம்
சிவத்தமிழ் செல்வி இவர்
சீர்வழி தந்தார் நமக்கு
தள்ளாடும் வயதினிலே இவர் பணி
தழைத்தோங்க வாழ்க வாழ்கவே.

சிவத்தமிழ்ச்செல்வி

**தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்**

**76வது பிறந்தநாள் வாழ்த்துக்கவி**

சிவத்தின் நயம் உரைக்கும் தாயுமானாள்
சிந்தையில் நின்றிடும் தாயும் ஆனாள்
சிதறிய மக்களுக்கெல்லாம் தாயும் ஆனாள்
சிவ சிவ என்றிடும் தாயின் பாதம் பணிந்து
என் கவியை நயம்பட உரைக்கின்றேன்.

தத்துவ வித்துவ தங்கம்மா
தகதக என்றும் ஒளிர்ந்திடும் தங்கம்மா
தன்னிலை மறந்திட்ட தங்கம்மா
தரணி எங்கும் போற்றிடும் தங்கம்மா
தயாள மனம் கொண்ட தங்கம்மா
தவத்தில் சிறந்து விளங்கும் தங்கம்மா
தவிக்கின்ற மக்களுக்கெல்லாம் தாயான தங்கம்மா
தமிழ்ப் பண்பு காக்கும் தாயான தங்கம்மா
நற்பணி புகட்டிடும் தங்கம்மா
நல்லுரை புகட்டிடும் தங்கம்மா
நற்றமிழ் கொண்டு போற்றிடும் எங்கள் அம்மாவை
நலமுடன் என்றென்றும் வாழ்க வாழ்க வாழ்கவே.

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P அவர்களின்

**77வது பிறந்தநாள் வாழ்த்து**

இறை அருள் வேண்டி

அருள் தரும் ஆதி முதல்வன் திருவடிதனை வேண்டி
அடியார் குறை தீர்த்தருளும் துர்க்கையின் திருவடிதனை வேண்டி
அண்ட சராசரங்களை ஆளுகின்ற அனைத்து தெய்வங்களையும் வேண்டி
அன்னையின் பாதந்தனை வணங்கிடுவோம்.

தாயின் பாதம் பணிந்திடுவோம்
தாயல்ல தாய் இவர்
தவத்தின் வழி கொண்ட தாய் இவர்
தவிக்கின்ற மக்களுக் கெல்லாம் தாய் இவர்
தாழ் பணிவோம் இவர் பாதம்.

அறநெறி வளர்த்திடும் தாய் இவர்

அறிவுரை புகட்டிடும் தாய் இவர்
அகம் குழைந்து அணைத்திடும் தாய் இவர்
அடி பணிவோம் இவர் பாதம்.

வேதங்கள் வளர்த்திடும தாய் இவர்
வேள்விகள் நிறுத்திடும் தாய் இவர்
வேதனை தாங்கிடா தாய் இவர்
வேண்டிடு வோம் இவர் பாதம்.

வளம்மிகு வளம் கொண்ட துர்க்கை தாயார்
வாழ்வினில் இன்பம் தரும் துர்க்கை தாயார்
வளமுடன் இவர் அருள் பெற்று வாழ
வணங்கி வாழ்த்திடுவோம் வாழ்க வாழ்க வாழ்கே
கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட அவர்களின்

## 07.01.2008 – 78 வது அம்மாவின் ஜனன நினைவாக..

### எம்மையெல்லாம் வழிநடத்திய தாயின் ஆத்மா சாந்திக்காக

தாயல்ல எமக்கெல்லாம் தாய் ஆனார் இவர்
தன்நலம் அறியாத் தாயுமானார் இவர்
தரணி போற்றிடும் தர்மத்தின் தாயுமானார் இவர்
தாள்பணிந்து இவர் தவப்பணி செய்திருவோம் இவர் வழியில்.

## 07.01.2009 – அம்மாவின் ஜனன நினைவாக..

### அம்மாவின் நினைவாக

ஓர் ஒளி மறைந்தும் மலர்ந்தொலிக்கும் உள்ளத்தில் ஓர் ஆண்டு நிறைவு அடைந்தாலும் நீங்கா நினைவுகள் இன்றும் தாய் அல்ல தாயானாள் எமக்கெல்லாம் தாயானார் தரணி போற்றிடும் தாயானார் எம்தாய். இல்லை என்று தத்தளிக்கின்றோம் இன்று எம்தாய் இல்லையென்று தாயின் பாதத்தைப் பணிந்து தவப்பணி செய்திடுவோம்.உலகெங்கும் சாந்தி நிலையும் சமாதானத்தையும் நல்லறிவையும் நல்ஞானத்தையும் அவரின் திருநாமத்தையும் திருவருட்காட்சியும் நீதியும் செல்வத்தையும் வெற்றியையும் தந்தருள் அவவின் திருவடிகளே சரணம் சரணம் சரணம்

## 07.01.2010 – அம்மாவின் ஜனன நினைவாக..

### அம்மாவின் நினைவாக

பற்பலரும் போற்றும் தாயும் இவரே பரிவுடன் அரவணைத்திடும் தாயும் இவரே
பசித்த முகம் பார்த்து புசிக்க அமுதளிக்கும் தாயும் இவரே பரிவுடன் இவர் பாதம் பணிந்திடுவோம். ஓர் ஈராண்டு ஆண்டு ஆனாலும் ஒலிப்பதிவில் காலையில்

ஒலிக்கும் அம்மாவின் குரல் ஓசை எம்மையெல்லாம் ஒருகணம் சிந்திக்க வைக்கின்றது. அம்மா எம்முன் இருந்து சொல்வதுபோல் ஓர் உணர்வை ஊட்டுகின்றது. அவரின் எண்ணங்களைக் கடைப்பிடித்து நாமும் அவ்வழியில் நடப்போமாக.

## ஸ்ரீமத் ஜகத்குரு ரேணுக சிவாசார்யா

### அஷ்டோத்தரசத நாமாவலி

சத்யோஜாத முகோத்பூதம்
சத்யோ வைபவ தாயகம்
சித்திதம் சித்த வீறுத்தஸ்ய
வந்சுதத ஸ்ரீ ரேணுகம்குரும்

| | | |
|---|---|---|
| ஓம் ஸ்ரீ ரேணுகாசார்யாய | நமக | |
| ஓம் ரேவண சித்தாய | நமக | |
| ஓம் ரேசகாதி நிரதாய | நமக | |
| ஓம் அணுரூபாய | நமக | |
| ஓம் அபாரமகிம்னே | நமக | (5) |
| ஓம் அப்ராக்ருதாய | நமக | |
| ஓம் அப்ராசுருதவரணாஸ்ரம ஸ்தாபகாய | நமக | |
| ஓம் அஸ்வத்த தண்ட தராய | நமக | |
| ஓம் அஸவங்கிய லீலாய | நமக | |
| ஓம் அகண்டாய | நமக | (10) |
| ஓம் ஆகண்டல நமிதாய | நமக | |
| ஓம் ஆகமஸ்து தாய | நமக | |
| ஓம் உபநிஷித் வந்தியாய | நமக | |
| ஓம் ஏரகா~ர சிவாசார்யாய | நமக: | |
| ஓம் ஏகமுகா சார்யாய | நமக | (15) |
| ஓம் கதநாய | நமக | |
| ஓம் கோர~ நாதகர்வாய | நமக | |
| ஓம் திரிகோடி குருரூப தராய | நமக | |
| ஓம் திரிலோக திலகாய மாநாய | நமக | |
| ஓம் திரிகுணா தீதாய | நமக | (20) |
| ஓம் திரிதச வந்தியாய | நமக | |
| ஓம் திரிலோசனாய | நமக | |
| ஓம் திரிலோசனாதரயா | நமக | |
| ஓம் திரிலோசன பூஜாபராய | நமக | |
| ஓம் திரிமல மூலோத்பாடகாய | நமக | (25) |

| | | |
|---|---|---|
| ஓம் திரிபுண்டர தாரிணே | நமக | |
| ஓம் திரிபுடீசந்தனா தாயினே | நமக | |
| ஓம் திரிபேதி மத மர்தகாய | நமக | |
| ஓம் திரிலிங்கஜ்ஞான தாய | நமக | |
| ஓம் திரிலிங்க ஜன பூஜிதாய | நமக | (30) |
| ஓம் திரிஜந்ம துரிதீதாராய | நமக | |
| ஓம் திரிமூர்த்தி பிரபவே | நமக | |
| ஓம் திரிகால ஜ்ஞானிநே | நமக | |
| ஓம் திரிசக்தி ரூபாய | நமக | |
| ஓம் திரிவித்துக்க துவம்சகாய | நமக | (35) |
| ஓம் திரிரூபதராய | நமக | |
| ஓம் தீக்ஷாகுரவே | நமக | |
| ஓம் சிக்ஷாகுரவே | நமக | |
| ஓம் போக்ஷாகுரவே | நமக | |
| ஓம் ஜகத் குரவே | நமக | (40) |
| ஓம் நிகமகாம்யாய | நமக | |
| ஓம் நிரஞ்ஜனாய | நமக | |
| ஓம் நிரூடாத்வைதாய | நமக | |
| ஓம் நிஷ்களாய | நமக | |
| ஓம் நிர்மோகாய | நமக | (45) |
| ஓம் நிர்தத்வம் த்வாய | நமக | |
| ஓம் நிராபாரிணே | நமக | |
| ஓம் நிராபாரி சிஷ்ய சமூகாலங்க்ருதாய | நமக | |
| ஓம் பஞ்சக்லேச நாசாய | நமக | |
| ஓம் பஞ்சத்[illegible]ராய | நமக | (50) |
| ஓம் பஞ்சாயுதத்வம்ஸகாய | நமக | |
| ஓம் பஞ்சானனப்பாய | நமக | |
| ஓம் பஞ்சானனபீடாய | நமக | |
| ஓம் பஞ்சாசாரப்பரபோதகாய | நமக | |
| ஓம் பட்விடிசூத்ரகர்தரே | நமக | (55) |
| ஓம் பரப்ரக்ஷ்மஸ்வரூபாய | நமக | |
| ஓம் பவித்திரகராய | நமக | |
| ஓம் பிரசாத பஞ்சாக்ஷரோபதேசகாய | நமக | |
| ஓம் பிரதாய சிங்காசனப்ரதிஷ்டாயகாய | நமக | |
| ஓம் பிரதம புங்கவாய | நமக | (60) |
| ஓம் பிரதமாசார்யாய | நமக | |
| ஓம் பூர்வகலசாததீசாய | நமக | |
| ஓம் துவாதசசஹரசரலிங்காத்ய~ாய | நமக | |

ஓம் துவாதசஹஸ்ரகன்யாப்ரதாயிகே நமக
ஓம் துஷ்டநிகரஹாய நமக (65)

ஓம் திருஸ்டாந்தா திருஷடாய நமக
ஓம் தைத்யத்வயதவம்சினே நமக
ஓம் பத்ரதாய நமக
ஓம் பத்ராதீரவாசினே நமக
ஓம் பவரோகபீஷஜே நமக (70)

ஓம் பகவச்சாணாய நமக
ஓம் பஸ்மகுண்டிகாலங்கிருதாய நமக
ஓம் பஸ்மாயாய நமக
ஓம் பஷ்யகாத்ரே நமக
ஓம் பாவகம்யாய நமக (75)
ஓம் மலயபர்வதவித்ரகாரய நமக
ஓம் ரம்பாபுரிநிவாசாய நமக
ஓம் வரதராஜசிரஜகிரகராய நமக
ஓம் விக்ரமமனோபீஷ்டதாய நமக
ஓம் விபீஷணாபீஷ்டவரப்ரதாய நமக (80)

ஓம் விஸ்வரூபாய நமக
ஓம் விதிவிதாயினே நமக
ஓம் வீரகோத்ராதிநாதாய நமக
ஓம் வீரசைவசித்தாந்தஸ்தாபகாய நமக
ஓம் வைராக்ய சீலாய நமக (85)

ஓம் லிங்கயஜ்ஞோபவீதினே நமக
ஓம் சங்கராசார்யலிங்கப்ரதாயினே நமக
ஓம் சாந்தஸ்வரூபாய நமக
ஓம் சிவதத்வானுகாதாரகாய நமக
ஓம் சிவலாஞ்சன தாரகாய நமக (90)

ஓம் சர்வலோக சஞ்சாரிணே நமக
ஓம் சர்வதந்திரஸ் தந்திராய நமக
ஓம் சமஸ்தக்ஷேதரபவிதரகராய நமக
ஓம் சத்யோஜ தமுகோதபவாய நமக
ஓம் சூர்யகோடிப்ரகாசாய நமக (95)

ஓம் சோமேஸ்வரலிங்க சம்பவாய நமக
ஓம் ஸ்வேச்சரவிக்ரகாய நமக
ஓம் ஷட்த்ரிம்சத்தஜடாம குடாண்டிதசய நமக
ஓம் ஷ்ட்த்ரிம் சத்தத்வஸ்வரூபாய நமக
ஓம் ஷ்ட்ஸ்தல ஞானகாரணாய நமக (100)

ஓம் ஷடத்வஸ்வரூபதர்சகாய நமக
ஓம் ஹரித்கர்தாய நமக




புலவர் குலசேகரம் கமலேஸ்வரன் துர்க்கா கவிஞானி

ஓம் ஹரித்வர்ணாய நமக
ஓம் ஹாத்வர்ணகமண்டலுதாரிணே நமக
ஓம் ஹரிந்தயாய நமக (105)

ஓம் ஹரிசம்பத்தாயினே நமக
ஓம் ~ாந்திமயாய நமக
ஓம் காசிநாதமனஸரோஜஹர்ஸாய நமக (108)

## தெல்லியூர்
## அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவியின்
## தேர்க்காலப் பாமாலை
## 20.08.2002

அருள்மிகு ஸ்ரீ துர்க்கையின் அற்புத சித்தியினா டியவன் என் சிந்தையிலே அருளப் பெற்ற இப்பாமாலை இன்றைய தினம் பக்த அடியவர்களுக்கு சமர்ப்பணம்.

புவிதனில் அமர்ந்து புவிதனில் பவனிவரும் துர்க்கை தாயே புதுமைகள் பல புரிந்து பூவுலகைக் காத்தருளும் தாயே எழில் மிகு தேரினிலே எழுந்தருளிவரும் நாளில் எள்ளி நகைத்திடும் மனிதர்முன் எல்லையில்லா இன்பம் தரும் தாயே வருந்தி வரும் மெய்யடியார் குறை தீர்த்தருளும் தாயே வலம் வந்து வணங்கி உனை வாயார பாடிடுவோம் தாயே.

### துதி

ராகம் :- புன்னவிராளி

ஆதி முதல்வனே அரும பெரும் கலைஞனே
அற்புத ஜோதியே அருந்தரும் வித்தகனே
வேதப் பொருளானே வெற்றி வரும் அருள்வோனே
வேண்டும் வரம் அருளி தேவனை தீர்ப்பவனே
(ஆதி முதல்வனே.....)
ஏதுநிலை அறியோம் எமையாளும் வித்தகனே
எமதுள்ளம் கோயில் கொண்ட அற்புத வித்தகனே
தாயுடன் அருகமர்ந்து தவஅருள் புரிபவனேனன
தாங்கியே எமைகாத்து தரணியை ஆள்பவனே
(ஆதி முதல்வனே.....)

### துர்க்கை துதி

ராகம் :- புன்னகவராளி

துர்க்கையே துர்க்கையென வந்தருளும் துர்க்கையே
தூய மனம் கொண்டருளும் எங்கள் துர்க்கையே
சக்தியே சக்தியென வந்தருளும் துர்க்கையே
சக்தியெங்கும் தந்தருள்வாய் எங்கள் துர்க்கைத் தாயே
(துர்க்கையே.....)

பக்தியே பக்தியென வந்தருளும் துர்க்கையே
பக்தர் குறை தீர்த்தருளும் எங்கள் துர்க்கையே
வந்த துயர் தீர்த்தருளும் வல்ல துர்க்கையே
வாழ்வில் இன்பம் தந்தருளும் எங்கள் துர்க்கையே
(துர்க்கையே.....)

ஆவணியில் தேர் ஏறி வந்தருளும் துர்க்கையே
ஆனந்தம் தந்தருளும் எங்கள் துர்க்கையே
சத்தியத்தை காத்தருளும் கன்னி துர்க்கையே
சாந்தி நிலை தந்தருளும் எங்கள் துர்க்கையே
சாந்தி நிலை தந்தருளும் எங்கள் துர்க்கையே
சாந்தி நிலை தந்தருளும் எங்கள் துர்க்கையே
(துர்க்கையே.....)

## தெல்லிநகர் துர்க்கை துதி

ராகம் :- பீம்பிளாஸ்

அடியார் குறை தீர்த்தருளும் ஆதி சக்தி தேவி நீ.....
ஆனந்த யோதி தரும் ஆதி சக்தி தேவி நீ.....
பரமசிவன் சக்தியின் தங்கையான தேவி நீ.....
பாவலரின் பாட்டு கேட்டு இன்பம் காணும் துர்க்கை நீ.....
(அடியார் குறை.....)

மகுடா சூரன் உடல் பிளந்து மாயம் செய்த சக்தி நீ.....
மமதை கொண்ட மனிதர் முன்னே இன்பம் தருளும் சக்தி நீ.....
முழுமதியாய் வந்து நின்று அருள்பவளே சக்தி நீ ....
முனிவர் குலம் காத்தருளும் ஆதி சக்தி துர்க்கை நீ.....
(அடியார் குறை.....)

நத்தனங்கள் ஆடிவரும் நகுலையம்பதி சக்தி நீ.....
நாடி வரும் அடியார் குறை தீர்த்தருளும் சக்தி நீ.....
நாவினிலே நாமம் தந்து நாடி நிற்கும் சக்தி நீ.....
நாநிலமே போற்றி நிற்கும் ஆதி சக்தி துர்க்கை நீ.....
(அடியார் குறை.....)

## தாய்த் தாலாட்டு

ராகம் :- தூர்க்கை

முந்தி அடித்தது தாய் உள்ளம்
முழுமதி போன்றது தாய் உள்ளம்
முத்தமிழ் பாடிய தாய் உள்ளம்
முனிவர்கள் போற்றிடும் தாய் உள்ளம்
தாய் உள்ளம் இது தாய் உள்ளம்

பக்திக்கு ஒரு உள்ளம் தாய் உள்ளம்
பள்ளியில் கற்றிடு தாய் உள்ளம்
பரம் பொருள் ஆனவர் தாய் உள்ளம்

பராசக்தி உலகின் தாய் உள்ளம்
தாய் உள்ளம் இது தாய் உள்ளம்

செந்தமிழ் பாட வைத்தாய் தாய் உள்ளம்
செய்தவறு அறியா தாய் உள்ளம்
செல்வம் தருபவள் தாய் உள்ளம்
செந்தா மரையில் வீற்றிருப்பவள் தாய் உள்ளம்

தாய் உள்ளம் இது தாய் உள்ளம்
தேசம் காப்பவள் தாய் உள்ளம்
தேனிலும் இனியவள் தாய் உள்ளம்
தேடி அருள்பவள் தாய் உள்ளம்
தேவி துர்க்கை என தாய் உள்ளம்
தாய் உள்ளம் இது தாய் உள்ளம்

கள்ளம் அறியா தாய் உள்ளம்
கவலைகள் தீர்ப்பவள் தாய் உள்ளம்
கல்வி தருபவள் தாய் உள்ளம்
கலைவாணி என தாய் உள்ளம்
தாய் உள்ளம் இது தாய் உள்ளம்

## வைரவர் துதி

ராகம் :- கம்சத்வனி

வயிரவ சாமி வயிரவ சாமி
வலம் வந்து அருள் வாயே வயிரவசாமி
வந்த வினைகளை இல்லாமல் நீக்கி
வாழ்வில் இன்பம் தரும் வயிரவ சாமி
(வயிரவ சாமி.....)

உலக இன்பம் தனை நாடி சாமி
உற்ற துணை ஏதும் இன்றி [illegible] வரும் சாமி
எந்த வினை ஆனாலும் தீர்த்தருளும் சாமி
ஏழை முன் வந்தருளும் வயிரவ சாமி
(வயிரவ சாமி.....)

வடை மாலை பிரியனாய் வலம் வந்தசாமி
வறுமைகள் நீக்கிட வந்தருளும் சாமி
சடுதி வந்தெம்மை காத்தருளும் சாமி
சஞ்சலங்கள் தீர்த்தருளும் வயிரவ சாமி
(வயிரவ சாமி.....)

உ

சிவமயம்

## அளவை நாகவரத நாராஜனன்

அளவை பதிதனில் அருள் அளிக்கும் நாகவரத நாராஜனன் நாடிவரும் அடியவர் குறை தீர்த்து நாமங்கள் தந்தருள்வான். நாடிய அடியேனுக்கு நாடு நலம் பெற வேண்டி நின்று பாட நாமம் தந்த நாராஜனன் தந்திட்ட துதி 09.09.2001 தேர்த்திருநாளில் பக்த அடியவர்களுக்கு சமர்ப்பணம்.

### நாராஜனன் துதி

ராகம் :- மாண்டு

நாராஜனன் நாமம் பாடுங்கள்
நாடு நலம்பெற வேண்டிடுங்கள்
என்றும் நாடு நலம்பெற வேண்டிடுங்கள்
பாராயணம் செய்து பாடுங்கள்
பரந்தாமன் அருள்தனைப் பெற்றிடுங்கள்
அந்த பரந்தாமன் அருள்தனைப் பெற்றிடுங்கள்
(நாராஜனன்.....)

ஆயர் குலத்தினர் வேண்டியே
அனந்த அருள்தனைப் பெற்றனர்
அன்று ஆனந்த அருள்தனைப் பெற்றனர்
வேதங்கள் பாடியே நின்றனர்
வேண்டும் வரம்தனைப் பெற்றனர்
அன்று வேண்டும் வரம்தனைப் பெற்றனர்
(நாராஜனன்.....)

பாரதப் போரினில் பாண்டவர் வென்றதும்
பாஞ்சாலி துயில்காக்க கையை கொடுத்ததும்
பகவானின் பாதத்தை வேண்டியே நின்றதால்
அந்த பகவானின் பாதத்தை வேண்டியே நின்றதால்
(நாராஜனன்.....)

நாராஜனன் என்று நாமங்கள் பாடியும
நாடியே நாள்தோறும் வேண்டியே நின்றனர்
பரந்தாமன் மீதிலே பக்தியும் கொண்டனர்
பாரதம் எங்கும் வெற்றியே கண்டனர்
பாசமுடன் என்றும் அவன் பாதம் பணிவோமே
(நாராஜனன்.....)

**தெல்லி நகரினிலே தேர் ஏறி வந்தருளும் தாய்**
**இவள் பாதம் பணிந்திடுவோம்.**

**07.09.2003**

காலை இளம் காற்று மெல்ல வீசி மகிழ்வுற
காலைக் கதிரவன் ஒளி பரப்பி மகிழ்வுற

கன்னி இவள் காலத்தை வென்று அருள்வுற்று மகிழ்வுற
களிப்புறும் பக்தர்கள் கானம் பாடி மகிழ்வுற

தெல்லிநகர் துர்க்கையின் தேர் ஏறி வந்தருள் பாலிப்பாள் தெய்வீக திசை எங்கும் தெள்ளு தமிழ் பாட்டு ஒலிக்க தேவரும் மூவரும் போற்றிடும் தேவி இவள் தேவாரப்பண்ணுடன் வீதி உலா வந்தருள்வாய் இன்னல்கள் நீக்கி எங்கும் அருள் தருபவள் இவளே இவள் பாதம் பாடியே நின்று பணிந்திடுவோம் தத்துவப் பொருள் அளித்த தாயும் இவளே தரணியைக் காத்திடும் தாயும் இவளே இவள் பாதம் பணிந்திடும் அடியவர்களுக்கு இம்மலர் சமர்ப்பணம்.

## துர்க்கை துதி

ராகம் :- மாண்டு

ஆதிகடவூராளே அபிராமி
ஆனந்தம் தருபவளே அபிராமி
என்றும் ஆனந்தம் தருபவளே அபிராமி
இன்பமய சோதியே நீ அபிராமி
இன்னல்கள் நீக்கி இன்பம் தரும் அபிராமி
எங்கும் இன்னல்கள் நீக்கி இன்பம் தரும் அபிராமி
(ஆதி கடவூரானே)

தெல்லிநகர் பதி உறைந்த அபிராமி
தெள்ளு தமிழில் பாடவைத்தாய் அபிராமி
தேவர் மூவர் போற்றி நின்ற அபிராமி
தேசம் எங்கும் போற்றி நிற்கும் அபிராமி
(ஆதி கடவூரானே)

சக்தி தரவல்லவளே அபிராமி
சர்வலோக நாயகியே அபிராமி
எங்கள் சர்வலோக நாயகியே அபிராமி
பாடி என்றும் மகிழவைத்தாய் அபிராமி
பக்தர் துயர் தீர்த்தருளும் அபிராமி
பக்தர் துயர் தீர்த்தருளும் அபிராமி
(ஆதி கடவூரானே)

மூவுலகும் காப்பவளே அபிராமி
முத்தி தரவல்லவளே அபிராமி
நித்தம் உமை வேண்டி நிற்போம் அபிராமி
நீயின்றி வேறு இல்லை அபிராமி
என்றும் நீ இன்றி வேறு இல்லை அபிராமி
(ஆதி கடவூரானே)

## உள்ளத்தில் துதி

ராகம் :- மாண்டு

உள்ளத்தில் உதித்தவளே துர்க்கையம்மா
உலகறிய வைத்தவளே துர்க்கையம்மா
உன்னையன்றி வேறு உண்டோ துர்க்கையம்மா

உன் பாதம் சரணடைந்தோம் துர்க்கையம்மா

**(உள்ளத்தில் உதித்தவளே)**

மங்கள வாழ்வு தந்தாய் துர்க்கையம்மா
மாங்கல்ய மகிமை தந்தாய் துர்க்கையம்மா
மனதாறப் பாட வைத்தாய் துர்க்ககையம்மா
மக்கள் மனம் அறிய வைத்தாய் துர்க்கையம்மா
மக்கள் மனம் அறிய வைத்தாய் துர்க்கையம்மா

**(உள்ளத்தில் உதித்தவளே)**

சக்தி தரும் தாயானாய் துர்க்கையம்மா
சரித்திரப் புகழ் படைத்தாய் துர்க்கையம்மா
சரணம் அடைந்தவர்க்கே துர்க்கையம்மா
சாந்தி நிலை தந்தருள்வாய் துர்க்கையம்மா
சாந்தி நிலை தந்தருள்வாய் துர்க்கையம்மா
சாந்தி நிலை தந்தருள்வாய் துர்க்கையம்மா

**(உள்ளத்தில் உதித்தவளே)**

**யாழ் நல்லை பதி முருகன் தீர்த்த துதி**

ராகம் :- மனோலையம்

தீர்த்தங்கள் ஆடி வரும்
    தில்லை நடராஜன் மைந்தன்
தீராத வினை தர
    தீர்த்தங்கள் தான் இடுவான்
ஏராளமான பக்தர்
    எல்லை இல்லா இன்பம் கொள்ள
எழில் மிகு தோற்றத்துடன்
    எழுந்தருளி தீர்த்தம் இடுவான்
நல்லையம் பதிதனிலே
    நலமுற வீற்றிருக்கும்
நல்லை நகர் கந்தன் இங்கு
    நல்லருள் தீர்த்தம் இடுவான்
வந்திடும் அடியவர் தம்
    வல்வினை நீங்கிடவே
வானுற எழுந்தருளி நீங்கிடவே
    வண்ணமலர்த் தீர்த்தம் இடுவான்
சக்தியின் வேல் கொண்டு
    சத்தியத்தைக் காப்பவனே
சாந்தி நிலை சந்தருள
    சமுத்திர தீர்த்தம் இடுவான்
சாந்தி நிலை சந்தருள
    சமுத்திர தீர்த்தம் இடுவான்
சாந்தி நிலை சந்தருள
    சமுத்திர தீர்த்தம் இடுவான்

**ஏழாலை பத்தி அருள்மிகு ஞான வயிரவர்**

ராகம் :- மாண்டு

ஆதி மூலமானவரே ஞானவயிரவா
ஆனைமுகன் தம்பியாரே ஞானவயிரவா
சோதி வடிவானவரே ஞானவயிரவா
சொக்கனின் மைந்தனே ஞானவயிரவா
(ஆதி மூலமானவரே)

ஏழாலை பதி உறைந்த ஞானவயிரவா
ஏழைகளுக்கு அருள் புரிவாய் ஞானவயிரவா
பக்தர் குலம் காப்பவரே ஞானவயிரவா
பாலர் குறை தீர்த்தருள்வாய் ஞானவயிரவா
(ஆதி மூலமானவரே)

சக்தி உமை பாலகனே ஞானவயிரவா
சஞ்சலங்கள் தீர்த்தருள்வாய் ஞானவயிரவா
கரிய நிற நாய்தனிலே ஞானவயிரவா
காவல் செய்ய வல்லவனே ஞானவயிரவா
(ஆதி மூலமானவரே)

வடை மாலை பிரியனான ஞானவயிரவா
வாழ்வுதர வல்லவன் நீ ஞானவயிரவா
உள்ளத்திலே குடியிருப்பாய் ஞானவயிரவா
உன்பாதம் சரணடைந்தோம் ஞானவயிரவா
உன்பாதம் சரணடைந்தோம் ஞானவயிரவா
உன்பாதம் சரணடைந்தோம் ஞானவயிரவா
(ஆதி மூலமானவரே)

**அருள்மிகு துர்க்கை தாயார்**

உலகெங்கும் சாந்தி நிலையையும்
சமாதானத்தையும் நல்லறிவையும்
நல்ஞானத்தையும் அவவின் திருநாமத்தையும்
திருவருட்காட்சியையும் நீதியின் செல்வத்தையும்
வெற்றியையும் தந்தருள அவின் திருவடிகளே
சரணம்! சரணம் சரணம்!

உ

## கருமாரி அம்மன்

வவுனியா

வவுனியா பதிதனிலே அருள் கொண்டு உறைந்த கருமாரி தாயார் வருந்திவரும் அடியவர் குறை தீர்த்தருளும் எம்தாய் என் சிந்தையில் தந்திட்ட சிந்தைத் துளிதனை அன்புகொண்ட அடியவரின் உள்ளம் மகிழ்ந்துருகிப் பாடிட தேர் திருநாளான இன்றைய தினம் 17.03.2003 கருமாரி தாயாரின் பாதங்களில் சமர்ப்பணம்.

துதி

ராகம் :- கம்சத்தனி

ஓம் என்னும் பிரணவ ரூப விநாயகா
ஓடியே வந்தருள்வாய் விநாயகா
ஆதி சிவன் மைந்தனே விநாயகா
ஆனந்த ஜோதியே நீ விநாயகா
(ஓம் என்னும்.....)

கற்றிடும் அடியவர் முன் விநாயகா
கருணை புரிய வல்லவனே விநாயகா
சித்து நிலை தருபவனே விநாயகா
சிந்தையிலே வந்தருள்வாய் விநாயகா
(ஓம் என்னும்.....)

கருமாரி துதி

ராகம் :- மனோலையம்

கருமாரி கருமாரி கற்பக தாயாளே
கருணை உள்ள தாயாகி கலி நடனம் புரிபவளே
உருமாறி உருமாறி உள்ளத்தில் உறைந்தவளே
உலக வாழ்வின் இன்பம் தனை உணர வைத்த தாயாளே
(கருமாரி.....)

வவுனியா பதிதனிலே வலம் வந்து அருள்பவளே
வந்த துயர் நீக்கி எங்கும் இன்பம் தரும் தாயாளே
குறுகிய வீதியிலே குலம் காக்க உறைந்தவளே
குங்குமம் தனை காத்து குலவிளக்காய் திகழ்பவளே
(கருமாரி.....)

வேப்பிலையின் துணையுடனே வேதனைகள் தீர்ப்பவளே
வேண்டிடும் அடியவரின் குறைதீர்த்து அருள்பவளே
பக்தர் குறை தீர்ப்பவளே பாவவினை அறுப்பவளே
பாலகனின் குரல் கேட்டு பாசமுடன் அணைத்தவளே
(கருமாரி.....)

எத்திக்கும் நிறைந்தாளே எல்லையில் இருப்பவளே
எம்துயர் தீர்த்தருளும் எல்லையில்லா கருமாரி (யாளே)
சஞ்சலங்கள் தீர்ப்பவளே சடுதியில் காப்பவளே
சாந்தி நிலை தருபவளே சரணம் கருமாரியாளே
சரணம் கருமாரியாளே! சரணம் கருமாரியாளே!

## தெல்லிநகர் துர்க்கை தாயாரின் திருநாளான

## இன்றைய தினம் 27.08.2004

அருள்மிகு துர்க்கைத் தாயாரின் அருளால் அடியேன் சிந்தையில் மலர்ந்த புலமையும் வறுமையும் என்ற நாமத்தில் வெளிவர உள்ள தொகுப்புக்களின் ஒரு சிலவற்றை இத்தேர் திருநாளில் உங்கள் சிந்தைக்கு துர்க்கையின் பாதத்தில் சமர்ப்பிக்கின்றேன்..

காலை கதிரவன் கதிர்விட்டெழ காக்கையும் கருங்குயிலும் கானம் பாடிட செங்கதிரோன் செந்நிற ஒளி பரப்ப செவ்விதழ் மலர்கள் மணம் கமழ மலைமகள் மங்கையிவள் மனம் மகிழ்ந்தருள மங்கள வாத்தியங்கள் இசை முழங்க தெல்லிநகர் துர்க்கைத் தாயாள் தெய்வீகத் தேர் ஏறி வந்தருள் தந்தருள் இவ்நன் நாளில் அடியேனின் சிந்தையில் மலர்ந்த இனிமை தரும் நாமங்கள் அன்னையின் பாதங்களில் சமர்ப்பணம்.

புதுமைகள் பல புரிந்து புகழ் படைத்த துர்க்கைத் தாயே
பூவில்லை உனக்கு இங்கு புவி காக்கும் சுந்தரியே
நாடியே வந்துன்னை நாவார நாம் பாட
நல்லருள் தந்தருள்வாய் துர்க்கைத் தாயே அம்மா.

## பிள்ளையார் வணக்கம்

கல்லாய் உருவாய் கருணையின் வடிவாய் கஜமுகன் அவதரித்தான்
கருணை பொழிய உலகினில் தோன்றி கடவுளாய் அ[illegible]ன்
சொல்லால் செயலால் சொக்கனின் மகனாய் கயமுகன் அவதரித்தான்
சொல்லிடும் துயர்தனை இல்லாமல் நீக்கியவனே சொருபமாய் காட்சி தந்தான்.

### பிள்ளையார் துதி

ராகம் :- பிரிந்தவன சாரங்கா

ஓம் என்னும் பிரணவ ரூபா வா
ஒளி தர வல்ல ரூபா வா
ஆனைமுக அழகனே வா வா வா
ஆனந்தம் தந்தருள வா வா வா
தொந்திக் கணபதியே வா வா வா
தொழுதிடுவோம் உன்பாதம் வா வா வா
(தொழு.....)

### அருள்மிகு தெல்லிநகர் துர்க்கையின் துதி

ராகம் :- மாண்டு

அம்பிகை என்றதும் அருள் பொழியும் துர்க்கையே
அம்மா என்றிட ஆனந்தம் தந்தருள்வாய்
(அம்பிகை.....)
ஆவணியில் கொடி ஏறி வந்தருள் துர்க்கையே
ஆனந்தம் தந்தருள் தேர் ஏறி வருவாள்
(அம்பிகை.....)
இன்னல்கள் நீக்கியே இன்பங்கள் தந்தருள்வாள்
இவளின்றி என் வாழ்வில் இன்பம் இல்லை
(அம்பிகை.....)
வெம்பியே நின்றிட வேதனை தீர்த்தருள்வாய்
வெந்துயர் தீர்த்தெங்கும் வெற்றியைத் தந்தருள்வாள்
(அம்பிகை.....)

நம்பியே வந்திடும் அடியவர் கூட்டம்
நல்லருளைத் தந்தருள்வாள் துர்க்கைத் தாயாள் இவள்
(அம்பிகை.....)

சரணம் அடைந்தவரைக் காத்தருளும் துர்க்கை
சாந்தி நிலை தந்தருள்வாள் எங்கள் துர்க்கை
சாந்தி நிலை தந்தருள்வாள் எங்கள் துர்க்கை
சாந்தி நிலை தந்தருள்வாள் எங்கள் துர்க்கை

## அமுதம் பொழியும் துர்க்கை துதி

ராகம் :- ஆனந்தபைரவி

அமுதம் பொழியும் துர்க்கை என்னை ஆண்டு கொண்டவள்
அவள் அருளைப் பாட அடியேன் இங்கு பிறவி கொண்டவன்
எனது உள்ளம் அவளிடத்தில் அடிமை ஆனது
இதை எண்ணி பார்க்க எனது மனம் இன்பம் கொள்வதேன்
அம்மா அம்மா அம்மா அம்மா
(அமுதம் பொழியும்)

பண்பு அற்ற பகட்டு வாழ்வை பற்றும் மனிதர்கள்
இந்தப் பாவிகளை என்னவென்று நாவால் சொல்வது
மனிதனிடத்தில் பற்றுமற்று வாழ நினைப்பது ஏன்
மனம் ஏன் இன்னும் கலக்கம் உற்று வாழ நினைப்பது ஏன்
அம்மா அம்மா அம்மா அம்மா
(அமுதம் பொழியும்)

இன்னல்கள் நீக்கி இனிய வாழ்வை தந்து நின்றவள்
இன்பம் கொண்டு இனிமையுடன் பாட வைத்தவள்
உலகம் எங்கும் சக்தி மயம் ஆகியிருப்பவள்
உள்ளத்திலே உறுதி கொண்டு உறைந்திருப்பவள்
அம்மா அம்மா அம்மா அம்மா
(அமுதம் பொழியும்)

## அருள்மிகு தெல்லிநகர் உறைந்து அருள் அளிக்கும் காளி தாயார் துதி

ராகம் :- புனருகவராளி

முத்துக்கள் ஒரு காளி முழு நிலவில் வரும் காளி
முனிவர்கள் போற்றிடவே முழு மதியாய் வரும் காளி
பக்திக்கு ஒரு காளி பால் நிலவில் வரும் காளி
பக்தர்கள் துயர் தீர்க்க பௌர்ணமியில் வரும் காளி
சித்தம் குளிரவே சிந்தை தரும் காளி
சிறு அடியேன் குரல் கேட்டு சீறிவரும் காளி அம்மா
((முத்துக்கள்.....)

பதினெட்டு கரம் கொண்ட பத்திரகாளி
பகைவர்கள் சிரம் கொய்த உத்தம காளி

எந்த வினையாலும் தீர்த்தருளும் காளி
எமது பயம் நீக்கியே எமைக்காக்கும் காளி
பக்தர் குறை தீர்க்க பறந்து வரும் காளி
பஞ்சங்கள் நீக்கியே பக்தி தரும் காளி அம்மா
(முத்துக்கள்.....)

நிலவில் அவள் வருவாள் நித்தம் அருள் தருவாள்
நிம்மதியை தந்திடவே நீறுடனே வருவாள்
எம்முன்னே வருவாள் எமது நிலை அறிவாள்
ஏது நிலை அறியாள் எமது துயர் தீர்ப்பாள்
சரணம் அடைந்திட்டாள் சஞ்சலங்கள் தீர்ப்பவளே
சக்தி தரும் தாயே சாந்தி நிலை தருவாய்
சக்தி தரும் தாயே சாந்தி நிலை தருவாய்
சக்தி தரும் தாயே சாந்தி நிலை தருவாய்

**மங்களம்**

ராகம் :- மாண்டு

பிரணவத்தின் பொருளான ஐங்கரர்க்கு மங்களம்
பிணி யாவும் தீர்த்தருள வேண்டுகின்றோம் மங்களம்
ஆதிசிவம் ஆன எங்கள் ஐயனுக்கு மங்களம்
ஆனந்த கூத்தனின் அருள் வேண்டும் மங்களம்
தெல்லிநகர் பதியுறைந்த துர்க்கைக்கு மங்களம்
தெள்ளு தமிழ்ப் பாட்டுத்தந்த அன்னைக்கு மங்களம்
மண்ணையுண்டு மாயம் செய்யும் கண்ணனுக்கு மங்களம்
மக்கள் துயர் தீர்த்தருள வேண்டுகிறோம் மங்களம்
கலியுகத்தில் வேல் கொண்ட கந்தனுக்கு மங்களம்
காலமெல்லாம் காத்தருள வேண்டுகிறோம் மங்களம்
வடை மாலை பரியனான வைரவர்க்கு மங்களம்
வலம் வந்து காத்தருள வேண்டுகிறோம் மங்களம்
வானவர்க்குமமம் மங்களம் வல்லவர்க்கும் மங்களம்
வணங்கிடும் அடியவர்க்கு் வாழ்வளிக்கும் மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் ஜெய மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் சுப மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் சுப மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் சுப மங்களம்.

அருள்மிகு துர்க்கை தாயார் உலகெங்கும் சாந்தி நிலையையும், சமாதானத்தையும் அவளின் திருக்காட்சியையும் திருநாமத்தையும் நல் அருளையும் நல் ஞானத்தையும் உலகெங்கும் தந்தருள அவளின் திருவடியே சரணம்.....

உ

தேவிதுணை

**தெல்லிநகரினிலே தேர் ஏறி வந்தருளும் தாய் இவள் பாதம் பணிந்திடுவோம்**

**14.09.2006 இன்றைய தினம்**

காலை இளம் காற்று மெல்ல வீசி மகிழ்வுற
காலைக் கதிரவன் ஒளி பரப்பி மகிழ்வுற
கன்னி இவள் காலத்தை வென்று அருள்வுற்று மகிழ்வுற
களிப்புறும் பக்தர்கள் கானம் பாடி மகிழ்வுற

தெல்லிநகர் துர்க்கையிவள் தேரேறி வந்தருள் பாலிப்பாள் தெய்வீக திசை எங்கும் தெள்ளு தமிழ்ப்பாட்டு ஒலிக்க தேவரும் மூவரும் போற்றிடும் தேவி இவள் தேவாரப் பண்ணுடன் வீதி உலா வந்தருள்வாள் இன்னல்கள் நீக்கி எங்கும் அருள் தருபவள் இவளே இவள் பாதம் பாடியே நின்று பணிந்திடுவோம் தத்துவப் பொருள் அளித்த தாயும் இவளே தரணியைக் காத்திடும் தாயும் இவளே இவள் பாதம் பணிந்திடும் அடியவர்களுக்கு இம்மலர் சமர்ப்பணம்.

**ஐங்கரன் துதி**

ராகம் :- ஆனந்தபைரவி

உலகாளும் நாயகனே ஐங்கரனே
உமை மைந்தன் ஆனவனே ஐங்கரன்
பதி நான்லோகமும் உனக்கு உறவாக
பக்தர்கள் கூட்டம் பணிந்துனைப்பாட
வருவாயே எலி மீது ஐங்கரனே
வலம் வந்து வாழ்த்தி வரம் தர வேண்டும் ஐங்கரனே.

துர்க்கா துதி

ராகம் :- மாண்டு

அம்பிகையே அம்பிகையே
அடியவரின் அன்னையே
அன்பர் குறை தீர்த்தருளும்
எங்கள் அன்னையே
ஆவணியில் கொடி ஏறி
வந்தருளும் அன்னையே
ஆனந்த தேர் எறி
இன்பம் தரும் அன்னையே
(அம்பிகையே.....)
தெல்லி நகர் வந்துதித்த
தெய்வீக அன்னையே
தெள்ளு தமிழில் பாடவைத்த

எங்கள் அன்னையே
தேவர் குலம் காத்தவளும்
எங்கள் அன்னையே
தேடி வரும் அடியவர்க்கு
அமுதளிக்கும் அன்னையே
(அம்பிகையே.....)
செங்கதிரோன் ஒளியினிலே
வந்தருளும் அன்னையே
செந்தமிழில் பாட்டு இசைக்க
செல்வம் தந்த அன்னையே
சேரும் செல்வம் யாவுமே
தேடித்தரும் அன்னையே
சேவை செய்ய சேருமிடம்
அம்பிகையின் ஆலயமே.
(அம்பிகையே.....)

### வெக்காளியம்மன்

வேப்பிலைக்குள் இருக்கும் வெக்காளியம்மா
வெப்பு நோயை தீர்த்தருள்வாய் எங்கள் வெக்காளியம்மா
பார்த்திருக்கும் உள்ளம் எல்லாம் பரிதவிக்க வைத்திடுவாய்
பாவிகள் உமை வேண்டுகின்றோம் பாவவினை தீராயே
பார்போற்றும் தாயாளே பாசக்தியே வாருமம்மா
பக்தர் குறை தீர்த்தருள்வாய் எங்கள் வெக்காளியம்மா

### துதி

ராகம் :- புனந்தவராளி

வேப்பிலையை சுமந்து வரும் தாயே
எங்கள் வேதனைகள் தீர்த்தருள்வாய் தாயே
மங்களங்கள் பாடிவரத் தாயே
உன் மகனுடை குறைகளை நீ தீரும் தாயே
(வேப்பிலை.....)
வேப்பிலைக்குள் இருக்கும் தாயே
எங்கள் வெப்பு நோயை தீர்த்தருளும் தாயே
வெண் நீற்றின் ஒளி விளங்கத் தாயே
எங்கள் வென் துயர்கள் தீர்த்தருள்வாய் தாயே
(வேப்பிலை.....)
சந்தண மணம் கமல தாயே
நீயும் சாந்த மணம் கொள்வதும் ஏன் தாயே
சத்தியத்தின் சோதனைகள் தாயே
எங்கள் சஞ்சலங்கள் தீர்த்தருள்வாய் தாயே
(வேப்பிலை.....)
ஆயிரம் கண் உடையவளே தாயே

எங்கள் ஆதி பராசக்தியான தாயே
நவ சக்தி வடிவெடுக்கும் தாயே
என்றும் நானிலத்தை காத்தருள்வாய் தாயே
(வேப்பிலை.....)

**நல்லை குமரன்**

**நாவார நயந்துரைத்த நாமம் துதி**

ராகம் :- மாண்டு

நல்லை குமரனடி அம்மா அம்மா
நாம் வணங்கும் தெய்வமடி அம்மா அம்மா
செல்வக் குமரனடி அம்மா அம்மா
அவன் செந்தில் தலை வேலனடி அம்மா அம்மா
(நல்லை.....)

மலைமேலே குடி கொண்டான் அம்மா அம்மா
அவன் மயில் மீது வந்தருள்வான் அம்மா அம்மா
முத்துக் குமரனடி அம்மா அம்மா
அவன் முன்ன வினை தீர்த்தருள்வான் அம்மா அம்மா
(நல்லை.....)

பக்தருக்கு பக்தனடி அம்மா அம்மா
அவன் பரமசிவன் மைந்தனடி அம்மா அம்மா
பார்ப்பவர்க்கு பாலனடி அம்மா அம்மா
அவன் பார்போற்றும் வேலனடி அம்மா அம்மா
(நல்லை.....)

ஆறுபடை கொண்டவனாம் அம்மா அம்மா
எங்கள் ஆறுமுக வேலனவாம் அம்மா
ஆற்றல்கள் மிகு தெய்வமடி அம்மா அம்மா
அவன் ஆறுதலை தந்தருள்வான் அம்மா அம்மா
(நல்லை.....)

சரவணத்து ஐயனடி அம்மா அம்மா
அவன் சக்தி வேலை கொண்டவனாம் அம்மா அம்மா
சஞ்சலங்கள் தீர்த்தருள்வான் அம்மா அம்மா
அவன் சாந்தி நிலை தந்தருள்வான் அம்மா அம்மா
(நல்லை.....)

உ

தேவி துணை

**இன்னல்கள் நீக்கி இன்பங்கள் தந்தருளும் அருள்மிகு**

**தெல்லிநகர் துர்க்கை தேரேறி வந்தருளும் இன் நன்நாளில்**

**எம் தாய் இவள் பாதம் பணிந்திடுவோம்**

**அன்பு கொண்ட அடியவர்க்கு இன் நாளில்**

சக்தியை தருபவள் அவள் அருளாலே
சங்கு சக்கர நாயகி அவளே
சரணம் என்ற நாம் உன்னை அடைந்தோமே
சாந்தியை எங்குமே தந்தருள் தாயே

(துர்க்கை.....)

**சங்கானை கூடத்து மனோன்மணி துதி**

ராகம் :- பிம்பினாஸ்

மனோன்மணித் தாயே மங்காத செல்வம் நீயே
மாறிலா ஜோதியாய் மனம் கவர்ந்தாய்
எம் தாயும் நீயே ஏது நிலை அறியேன்
எமது உள்ளம் கோயில் கொண்ட மனோன்மணி தாயே அம்மா

(மனோன்மணி.....)

சங்கானை கூடத்து பதியுறைந்தாய்
சடுதியில் வரும் துயரில் எமையெல்லாம் கவர்ந்தாயே
வஞ்சனை கொண்டவரை வஞ்சிக்கும் தாயே
வருந்திடும் அடியவரின் துயர் தீர்க்கும் தாயே
வயல்வெளி கொண்டவளே வரும் பசி தீர்ப்பவளே
வலம் வந்து வணங்குகின்றோம் மனோன்மணி தாயே

(மனோன்மணி.....)

**தெல்லிப்பழை சந்திரமௌலீஸ்வரர் கீரிமலை**
**நகுலேஸ்வரர் பெருமான் இணையப் பெற்ற துதி**

ராகம் :- கம்சத்வனி

பல்லவி

சந்தன மணங்கமல வந்தருள் தந்தருளும் சந்திரமௌலீஸ்வரா
சய சய போற்றியென சக்தியுடன் வந்தருளும் சந்திரமௌலீஸ்வரா
தெல்லியம் பதிதனிலே அருள்கொண்டு உறைந்தவரே சந்திரமௌலீஸ்வரா
தேடிவரும் அடியவரின் குறைகளை தீர்த்தருளும் சந்திரமௌலீஸ்வரா

(சந்திர.....)

அனுபல்லவி

நகுலையம் பதிதனிலே நலமுற வீற்றிருக்கும் சந்திரமௌலீஸ்வரா
நாடிவரும் அடியவரின் குறைதனை தீர்த்தருளும் சந்திரமௌலீஸ்வரா
கீரிமலை தனிலே கீர்த்தனைகள் பாடவைத்த சந்திரமௌலீஸ்வரா
கீரி முகந்தனையே நகுல முனிவர்க்கு நீக்கியே அருள்புரிந்த சந்திரமௌலீஸ்வரா

(சந்திர.....)

சரணம்

ஆதி சிவனாயிருந்து அர்த்தங்கள் பல உரைக்கும் சந்திரமௌலீஸ்வரா
ஆதிசிவன் சக்தி என்று ஆனந்த நடனமிடும் சந்திரமௌலீஸ்வரா
சித்தர்கள் கூட்டம் இங்கு பித்தராய் போனதய்யா சந்திரமௌலீஸ்வரா
பித்தர்கள் கூட்டத்திற்கு பிறை சூடி வந்தருளும் சந்திரமௌலீஸ்வரா
எங்கள் சந்திரமௌலீஸ்வரா

(சந்திர.....)

## ஆடி அமாவாசையில் அருளும் மாவை முருகனின் துதி

ராகம் :- கம்சத்வனி

ஆடித் திருநாளில் அழகுறும் குமரா
ஆதி சக்தி மகனே அருள் தரும் குமரா
மாவைப்பதி உறைந்த மனம் கவர் குமரா
மாருத வள்ளியின் மனம் மகிழ் குமரா

(ஆடி.....)

ஞானத்தின் திரு ஒளியாய் நலம் அருளும் குமரா
ஞானமும் யோகமும் தந்தருளும் குமரா
வேதத்தின் பொருள் உரைத்த வேல் தாங்கும் குமரா
வேண்டி வரும் ஆடியவரின் வினை தீர்க்கும் குமரா

(ஆடி.....)

வேதங்கள் பாடி உனை வேண்டுகிறோம் குமரா
வேறு துணையில்லை வேல் காக்கும் குமரா
ஆடி அமாவாசையில் அல்லலுறும் ஆத்மாவை
ஆடி வரும் தீர்த்தத்தில் சாந்தி தரும் குமரன் அருள்

## அருள்மிகு செல்வச் சன்னிதியான் நாடி வழிபடும் துதி

ராகம் :- மாண்டு

சன்னதி முருகனை கும்பிட போறோம்
சஞ்சலம் நீங்கிட வேண்டிட போறோம்
வஞ்சக உலகினில் வந்தருள் தந்த
வள்ளி மணாளனை கும்பிடப் போறோம்

(சன்னதி.....)

வடம் கொண்டு கடல் தனில் வந்த முருகன்
வருந்திடும் அடியவரின் குறை தீர்க்கும் முருகன்
வள்ளி தெய்வானையுடன் வந்தருளும் முருகன்
வாழ்வில் என்றும் இன்பம் தரும் சன்னதி முருகன்

(சன்னதி.....)

அலை போன்று வருகின்ற அடியவர் கூட்டம்
அவன் அருள் இல்லை என்றால் இன்பங்கள் இல்லை
அர்த்தங்கள் பல உரைத்த ஆறுமுக கந்தன்
ஆனந்த கூத்தனின் அற்புத கந்தன்

(சன்னதி.....)

கடல் சூழ்ந்த கங்கையில் களிப்புறும் முருகன்
கவலைகள் தீர்த்தருளும் எங்கள் முருகன்
கானகத்தில் ஆண்டியாய் நின்ற முருகன்
காலமெல்லாம் காத்தருளும் எங்கள் முருகன்

(சன்னதி.....)

உ

தேவி துணை

**தெல்லிநகரில் துர்க்கை தேர் ஏறி** வந்தருளும் தாய் இவள் பாதம் **பணிந்திடுவோம் 04.09.2006 திங்கள் இன்றைய** தினம் காலை இளம் காற்று மெல்ல வீசி மகிழ்வுற **காலைக்கதிரவன் ஒளி பரப்பி** மகிழ்வுறகன்னி இவள் காலத்தை வென்று அருள்வுற்று **மகழ்வுறகளிப்புறும் பக்தர்கள் கானம்** பாடி மகிழ்வுற தத்துவப்பொருள் அளித்த தாயும் **இவளேதரணியைக்** காத்திடும் தாயும் இவளே இவள் பாதம் பணிந்திடும் **அடியார்களுக்கு** இவ் அடியோரின் சிந்தையில் மலர்ந்த இம்மலர் சமர்ப்பணம்

## விநாயகர் வணக்கம்

ராகம் :- நவரோஸ்

**வேதத்தின்** முதல்பொருளே வெற்றி விநாயகனே
**வேண்டும் வரம்** அருள்பவனே வேல் முகத்தோனே
**நாத்தின் உ**ற்பொருளே நலம் அருளும் வித்தகனே
**நாடிவரும் அடியவ**ரின் குறை களையும் அற்புதனே
**சரணம்** அடைந்தவரின் சஞ்சலங்கள் தீர்ப்பவனே
**சாந்தி நிலை** தந்தருளும் சக்தி உமை பாலகனே

## அருள்மிகு துர்க்கை தாயாரின் தேர் துதி

ராகம் :- மாண்டு

**தெல்லிநகர்** துர்க்கை அம்மா தேடிவரும் அடியார் அம்மா
**தேவி நீயும்** வந்தருள்வாய் தெய்வீக தாயே அம்மா
**தேசம் காக்கும்** தாயே அம்மா தேரேறி வந்தருள் அம்மா
**தேவர் குலம்** போற்றி நிற்கும் தெய்வீக தாயே அம்மா
(தெல்லி.....)

**கதிரவனின்** ஒளியினிலே காட்சி தரும் தாயே அம்மா
**கற்பக தாயாய்** நின்று கருத்தருளும் தாயே அம்மா
**காலையிலே** நாடி வந்து கவலைகளை நாம் மறந்து
**கருணை பொழியும்** தாயாரை கைகூப்பி தொழுதிடுவோம்
(தெல்லி.....)

**ஆவணியிலே** கொடியேறி அற்புதங்கள் புரிபவளே
**ஆனந்த தேரேறி** வந்தருளும் தாயே அம்மா
**ஆதிசக்தி** நீயென்று அகிலம் எல்லாம் காப்பவளே
**ஆலயத்தில் அலையலையாய்** அடியார் கூடும் துர்க்கையம்மா
(தெல்லி.....)

**சர்வலோக** நாயகியே சக்தி தரும் தாயே அம்மா
**சஞ்சலங்கள்** தீர்த்தெங்கும் சாந்திதர வேண்டும் அம்மா
**சக்தி சக்தி** என்று சொல்லி சரணடைந்தோம் உன்பாதம்
**சாந்தி நிலை** தந்தருள்வாய் தாயே எம் துர்க்கை அம்மா

## நெல்லிநகர் அருள்மிகு அற்புத காளி பௌர்ணமி துதி

ராகம் :- புன்னகவராளி

முத்துக்குள் ஒரு காளி முழு நிலவில் வரும் காளி
முனிவர்கள் போற்றிடவே முழு மதியாய் வரும் காளி
பக்திக்கு ஒரு காளி பால் நிலவில் வரும் காளி
பக்தர் குறை தீர்த்தருள பௌர்ணமியில் வரும் காளி
சித்தம் குளிரவே சிந்தை தரும் காளி
சிறு அடியேன் குரல் கேட்டு சீறிவரும் காளி
நிலவில் அவள் வருவாள் நித்தம் அருள் தருவாள்
நிம்மதியை தந்திடவே நீறுடனே வருவாய்
எம் முன்னே வருவாள் எமது நிலை அறிவாள்
ஏதுநிலை அறிவாள் எமது துயர் தீர்ப்பாள்
சரணம் அடைந்திட்டால் சஞ்சலங்கள் தீர்ப்பவளே
சக்தி தரும் தாயே அம்மா சாந்தி நிலை தருவாய்

## அளவைப்பதி உறைந்த
## தவளைக்கிரி முத்துமாரி அம்மன் தாலாட்டு துதி

ராகம் :- மாண்டு

முத்துமாரி அம்மா முத்துமாரி
முன்ன வினை நீக்கவல்ல முத்துமாரி அம்மா முத்துமாரி
காலை கதிரோன் ஒளியினிலே முத்துமாரி
கருணை புரிய வந்தருள்வாய் முத்துமாரி அம்மா முத்துமாரி
(முத்து.....)

அளவைப்பதி வந்துறைந்தாய் முத்துமாரி
அல்லல் நீக்கி அருள் புரிவாய் முத்துமாரி அம்மா முத்துமாரி
தவளைக்கிரி என்றழைப்பார் முத்துமாரி
தத்துவங்கள் தந்தருள்வாய் முத்துமாரி அம்மா முத்துமாரி
(முத்து.....)

ஏழை எளியோர் வாழ்வில் எல்லாம் முத்துமாரி
எழில் கொஞ்சி வந்தருள்வாய் முத்துமாரி அம்மா முத்துமாரி
கலைகள் வளர்ந்த இம்மண்ணில் முத்துமாரி
கவலை கொள்ள வைக்குதம்மா முத்துமாரி அம்மா முத்துமாரி
(முத்து.....)

பாலர் படும் துயரம் கண்டு முத்துமாரி
பறந்து நீயும் வந்தருள்வாய் முத்துமாரி அம்மா முத்துமாரி
சரணம் சரணம் என்று சொல்ல முத்துமாரி
சஞ்சல்கள் தீர்த்தருள்வாய் முத்துமாரி அம்மா முத்துமாரி
(முத்து.....)

## இணுவில் சிவகாமி அம்மன் கேதார துதி

ராகம் :- நவரோஸ்

சிந்தையில் நின்றிடும் பிரசாதம்
சிவகாமி அம்மனின் அருள் சாதம்
வந்த பிணி நீக்கிடும் வாழ்வினில் இன்பம் தரும்
அவள் சாதம் அவள் சாதம்

(சிந்தையில்.....)

கேதார நோன்பிருந்தால் கேட்டவரம் அருள்வாள்
கேதிச்சரத்தானின் பாதம் தனை வேண்டி நிற்பாள்
கேதாரகௌரி இவள் பாதம் தனை பணிந்திடுவோம்
கேடின்றி என்நாளும் உலகினில் வாழ்ந்திடுவோம்

(சிந்தையில்.....)

சிவலிங்கப் பூசைதனை சிந்தையில் தான் நிறுத்தி
சிவசிவசிவ என்று சிவலிங்க நோன்பிருந்தால்
சிவன் பாதம் வேண்டி நின்றால் துன்பங்கள் ஏதும் இல்லை
சிவசிவ என்றிட சிவ கதி தான் அருள்வாள்

(சிந்தையில்.....)

இணுவைப் பதிதனிலே அருள் கொண்டு உறைந்தவளே
இன்னல்கள் நீக்கி எங்கும் இன்பங்கள் தருபவளே
இவள் இன்றி எம் வாழ்வில் இன்பங்கள் வேறு இல்லை
இலட்சிய ஈடேற்றத்தின் இன்பம் தரும் தாய் இவளே

### அருள்மிகு துர்க்கை தாயார்

உலகெங்கும் சாந்தியையும், சமாதானத்தையும், நல்லறிவையும், நல்ஞானத்தையும் அவவின் திருநாமத்தையும், திருவருட்காட்சியையும், நீதியையும், செல்வத்தையும், வெற்றியையும் தந்தருள அவளின் திருவடிகளே

சரணம்! சரணம்! சரணம்!

உ

தேவி துணை

இன்னல்கள் நீக்கி இன்பங்கள் தந்தருளும் அருள்மிகு
தெல்லிநகர் துர்க்கை தேரேறி வந்தருளும் இன் நன்நாளில்

## தாய் இவள் பாதம் பணிந்திடுவோம

**அன்பு கொண்ட அடியவர்க்கு இன் நன்நாளில் 26.08.2007**

**ஞாயிற்றுக்கிழமை அடியேனின் சமர்ப்பணம்.**

**காப்பு**

புலமைக்கு அருள் புரிந்து புதுமைகள் புரிந்தவனே
புதுமைகள் பல பரிந்து பூவுலகை காப்பவனே
வறுமையின் நிலை நீக்கி வந்தருள் தந்தவனே
வலம் வந்து வணங்குகின்றோம் உந்தன் பாதம் தனை

எந்தன் சிந்தனையை எண்ணி நகைத்தவர் முன்
ஏக்கங்கள் தீர்த்தருளிய எழில் மிகு கயமுகனே
கலியுகத்து விந்தைதனை கவி புனைய வைத்தவனே
கற்றிடும் தமிழ் கொண்டு கருத்தமைத்த காப்பு இதற்கு
கருணை புரிய வந்தருள்வாய் கயமுகனே
கணமேனும் உனை மறவாது துதிபாட அருள்புரிவாய் கயமுகனே

### அன்னை துதி

ராகம் :- மாண்டு

அன்னம் அருள்பவளே அன்னை துர்க்கையே
அடியார் குறை தீர்த்தருளும் அன்னை துர்க்கையே
தெல்லிநகர் வந்துதித்த அஅன்னை துர்க்கையே
தேரேறி வந்தருள்வாள் அன்னை துர்க்கையே
(அன்னம் அருள்பவளே)

பண் இசைக்க வைத்தவளே அன்னை துர்க்கையே
பக்தரோடு கூடி நிற்பாள் அன்னை துர்க்கையே
பார்வதி தாயாளும் அன்னை துர்க்கையே
பார் போற்ற அருள்பவளும் அன்னை துர்க்கையே
(அன்னம் அருள்பவளே)

உதிக்கின்ற செங்கதிரும் அன்னை துர்க்கையே
உலகாளும் நாயகியும் அன்னை துர்க்கையே
கன்னியாக ஆள்பவளும் அன்னை துர்க்கையே
காலமெல்லாம் காத்தருள்வாள் அன்னை துர்க்கையே
(அன்னம் அருள்பவளே)

### கலைவாணி துதி

ராகம் :- மனோலயம்

கலாவணி கலைவாணி கருணை உள்ள கலைவாணி
கல்வியை அருள்பவளே கருணை மிகு கலைவாணி
அருள்வாய் நீ அருள்வாய் நீ அனைவருக்கும் அருள்வாணி
அகிலத்தை அறியவைத்த அருள்மிகு கலைவாணி
(கலைவாணி.....)

இசையினில் இருப்பவளே இன்பம் தரும் கலைவாணணி
இல்லத்தில் இனிய மொழி இசைக்க வைக்கும் கலைவாணி
சங்கீத ஓசையிலே சாறிரம் தரும் வாணி
சககலரின் நாவினிலே தத்துவங்கள் தரும் வாணி
(கலைவாணி.....)

### அற்புதக்காளி துதி

ராகம் :- மாண்டு

கருணை முகம் கொண்டவளே காளியம்மா தாயே
காக்கும் தரம் கொண்டவளே காளயம்மா தாயே

பதினெட்டு கரம் கொண்ட பத்திரகாளியம்மா
பகைவர்கள் சிரம் கொய்த உத்தம காளியம்மா

(கருணை முகம்.....)

பக்தரின் குறை தீர்த்தருளும் பத்திரகாளியம்மா
பறந்து நீயும் வந்தருளும் பார்போற்றும் காளியம்மா
நிலையற்ற வாழ்விற்கு நீறருளும் காளியம்மா
நீதானே எம்வாழ்வில் வேறு துணை ஏதம்மா

(கருணை முகம்.....)

காளிதாசன் வாழ்வினிலே காளியம்மா தாயே
கவி அருளி கருணை கொண்டாய் காளியம்மா தாயே
சரணம் என்று நாம் அடைந்தோம் காளியம்மா தாயே
சாந்தி நிலை தந்தருள்வாய் காளியம்மா தாயே
சாந்தி நிலை தந்தருள்வாய் காளியம்மா தாயே
சாந்தி நிலை தந்தருள்வாய் காளியம்மா தாயே

## தோதரையம் பதி உறைந்த
## இராஜஇராஜேஸ்வரி அம்பாள் துதி

ராகம் :- புன்னகவராளி

இராஜ இராஜேஸ்வரி அம்மமா இராஜ இராஜேஸ்வரி அம்மா
இரகு குலம் காத்தவளே
இடர்களை நீக்கி வைப்பாய் இரணியர்கள் இங்கு வாழுகின்றார்

(இராஜ இராஜேஸ்வரி அம்மா)

தோதரையும் பதிதனிலே தொல்லைகளை நீக்கி வைப்பாய்
தொழுதென்றும் வாழ்ந்திடுவோம் தோத்திரங்கள் பாடிடுவோம்

(இராஜ இராஜேஸ்வரி அம்மா)

வயல்வெளி கொண்டவளே வறுமைகளை நீக்கி வைப்பாய்
வையகம் புகழ்ந்திடவே வந்தருள் தருபவளே

(இராஜ இராஜேஸ்வரி அம்மா)

வந்தருள் பெறவேண்டும் வலம் வந்து தர வேண்டும்
வணங்கிடும் அடியார்கள் வாயாரப்பாட வேண்டும்

(இராஜ இராஜேஸ்வரி அம்மா)

சரணம் என்று உனை அடைந்தோம் சஞ்சலங்கள் தீர்த்து வைப்பாய்
சாந்தி நிலை தந்தெங்கும் சரித்திரப்புகழ் படைப்பாய்

(இராஜ இராஜேஸ்வரி அம்மா)

## நயினை நாகபூசணி துதி

ராகம் :- மாண்டு

நயினைதேவி ஆனவளே நாகம்மா அம்மா நாகம்மா
நாடி உமை வந்தோமம்மா நாகம்மா அம்மா நாகம்மா
நடுக்கடலில் துணைவருவாய் நாகம்மா அம்மா நாகம்மா

நாடுகாக்க வந்தருள்வாய் நாகம்மா அம்மா நாகம்மா
(நயினை தேவி.....)

செம்பாம்போ கரும்பாம்போ நாகம்மா அம்மா நாகம்மா
செவ் இளநீர் தீர்த்தம்மா நாகம்மா அம்மா நாகம்மா
செங்கதிரோன் ஒளியினிலே நாகம்மா அம்மா நாகம்மா
செந்துருவாய் வருபவளே நாகம்மா அம்மா நாகம்மா
(நயினை தேவி.....)

ஆழ்கடலில் நீயிருக்க நாகம்மா அம்மா நாகம்மா
ஆதிசேடன் குடைபிடிக்க நாகம்மா அம்மா நாகம்மா
ஆதிசிவன் ஆணையிட்டால் நாகம்மா அம்மா நாகம்மா
ஆறுதலை தருவாயோ நாகம்மா அம்மா நாகம்மா
(நயினை தேவி.....)

சங்கு சக்கர நாயகியே நாகம்மா அம்மா நாகம்மா
சஞ்சலங்கள் தீர்த்தருள்வாய் நாகம்மா அம்மா நாகம்மா
சரணம் என்று உனையடைந்தோம் நாகம்மா அம்மா நாகம்மா
சாந்தி நிலை தருவாய் நாகம்மா அம்மா நாகம்மா
சாந்தி நிலை தருவாய் நாகம்மா அம்மா நாகம்மா

### மங்களம்

ராகம் :- மாண்டு

ஆதி முதலான எங்கள் ஐங்கரனுக்கு மங்களம்
அகிலம் இதை ஆளுகின்ற ஈஸ்வரர்க்கு மங்களம்
அன்னையாக வீற்றிருக்கும் அம்பிகைக்கு மங்களம்
கருணை வடிவான எங்கள் குமரனுக்கு மங்களம்
கலியுகத்தில் காட்சிதரும் கையனார்க்கு மங்களம்

சீதைதனை மீட்டு வந்த அனுமனுக்கு மங்களம்
சீர் நிலையை தந்தருள வேண்டுகின்றோம் மங்களம்
காரிருளில் காத்தருளும் வயிரவர்க்கு மங்களம்
காலம் எல்லாம் காத்தருள வேண்டுகின்றோம் மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் ஜெய மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் சுப மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் சுப மங்களம்

உ

தேவி துணை

## அருள்மிகு தெல்லிநகர் துர்க்கையின் அற்புதம்

ஓர் ஆண்டு இரண்டாண்டாய் இருபத்தி இரண்டு ஆண்டுகள்
சிந்தையில் அருள் புரிந்த தெல்லிநகர் துர்க்கையின்
அற்புதத்தை அடியேனின் சிந்தையில் தந்து இன்புறும்
அற்புதத் துர்க்கையின் பாதந்தனை பணிந்து

## இவ்வாண்டு தேர் உற்சவ நாளான இன்று 01.09.2009 செவ்வாய்க்கிழமை நன்நாளில் அடியவர்களின் சிந்தைக்கு அருள் விருந்தாக சமர்ப்பணம்.

### விநாயகர் வணக்கம்

ராகம் :- கம்சத்வனி

நவசக்தி நாயகனே நலம் அருள்வாய்
நாடிவரும் அடியவரின் குறை களைவாய்
எல்லோர்க்கும் முன்னின்று அருள்பவனே
எந்நாளில் கவி தந்து அருள்பவனே
திருவடி வேண்டி உன்னை சிரந்தாழ்த்தி வணங்குகின்றோம்
திருவருள் தந்தருள்வாய் எந்நாளும் பாடி உனை வணங்கிடுவோம்.

### துர்க்கையின் துதி

ராகம் :- சிந்தோளம்

பல்லவி

மங்களமாய் வாழ அருள் தரும் தாயே
மகா சக்தி நீயே மாயனின் தங்கையே
(மங்கமாய்.....)

அனுபல்லவி

எங்கும் நிறைந்தவளே ஏகாந்த நாயகியே
எமதுள்ளம் கோயில் கொண்ட துர்க்கை தாயே
(மங்கமாய்.....)

சரணம்

வலம் வந்து வணங்கி உனை வாழ்த்துகின்றோம் தாயே
வருக பகை நீக்கி என்றும் வந்தருளும் தாயே
சரணம் என்று உமை அடைந்தோம் சக்தி தரும் தாயே
சாந்தி நிலை தந்தெங்கும் காத்தருளும் தாயே
(மங்கமாய்.....)

### அன்னம் அருளும் துதி

அம்பிகை நீயே அருள் தரும் தாயே
அன்னமும் சொர்ணமும் சேர்ந்தருளும் தாயே
அர்த்தங்கள் பல உரைத்து அருள் தரும் தாயே
அன்புடன் ஆதரிக்கும் அனனை துர்க்கை தாயே
(அம்பிகையே.....)

சிந்தைக்கு அருள் புரிந்து சிவகவி தரும் தாயே
சிவஞான யோகியாய் ஆக்கிடும் தாயே
சிவலிங்க பூசை செய்து காத்திடும் தாயே
சிதறிய மக்கள் தனை சேர்த்திடும் தாயே
(அம்பிகையே.....)

துன்பத்தின் நிலை அறிந்து துணைவரும் தாயே
துதித்திடும் அடியவரின் குறை களையும் தாயே
தூய நின் பாதத்தை வேண்டுகின்றோம் தாயே
துர்க்கையே எந்நாளும் துணை நிற்பாய் தாயே
(அம்பிகையே.....)

### நாகபூசணித் தாயின் துதி

ராகம் :- சிம்பினாச

நாகபீடம் கொண்டவளே நாக பூசணி
நடுக்கடலில் உறைந்தவளே நாகபூசணி
நர்த்தனங்கள் ஆடிவரும் நாகபூசணி
நாடிவரும் அடியார் முன்னே நாகபூசணி
(நாகபீடம்.....)

ஐங்கரனைப் பெற்றவளே நாகபூசணி
ஐந்து தலை கொண்டவளே நாகபூசணி
ஐயமுடன் வருபவரை நாகபூசணி
ஐயம் நீக்கி அருள்பவளே நாகபூசணி
(நாகபீடம்.....)

செங்கதிரோன் ஒளியினிலே நாகபூசணி
செந்துருவாய் வருபவளே நாகபூசணி
செல்வம் எல்லாம் தருபவளும் நாகபூசணி
செந்தூரப் பொட்டழகி நாகபூசணி
(நாகபீடம்.....)

### கீரிமலை நகுலேஸ்வரப் பெருமானின் துதி

நகுலயம் பதிதனிலே நலமுற வீற்றிருக்கும் நடராஜன் பாதமே தஞ்சமென வரும் அடியவர்கள் குறைதீர்த்தருளும் எம்பெருமான் நினைவுடன் நீறு அணிந்து நித்திரை விழித்திடவே வஞ்சமுடன் வந்தவினை எல்லாம் பஞ்சு போல் பறந்திட வைத்திடுவான் எம்பெருமான். நெஞ்சமே கலங்காதே வஞ்சக வலையறுத்து வந்தருள்வான் எம்பெருமான்.

### துதி

ராகம் :- கம்சத்வனி

வஞ்சக வலை அறுத்து வந்தருள்வான் எம்பெருமான்
தஞ்சமென அடைந்திட்டால் தரணியிலே வேறு உண்டோ
பக்தர் குறை தீர்த்தருளும் பரம்பொருளும் அவன் என்றே
பாரினில் வேறு உண்டோ பாலகரே கூறும் இங்கு
எத்தனையோ மலை அமர்ந்து எம்பெருமான் அருள்கின்றான்
அத்தனை மலைகளிலும் அவன் அருள் தானே உண்டு
(வஞ்சகரே.....)
கோணேச்சரம் அமர்ந்து கோணம் எங்கும் ஒலிக்கின்றான்

கோடான கோடி மக்கள் கூடிவர அருள்கின்றான்
கேதீஸ்வரம் தனிலே கேணியில் நீராடி
கேதார நோன்பிருக்க கேட்டவரம் அருள்கின்றான்
(வஞ்சகரே.....)

முனீச்சரம் தனிலே முனிவர்கள் தவம் இருந்து
முத்தமிழைக் காத்த எங்கள் முக்குலத்தின் பெருமை சொல்வோம்
வைத்தீஸ்வரம் தனிலே வானுயர்ந்த கோபுரமாய்
வருந்தி வரும் அடியவரின் குறைதீர்க்கும் எம்பெருமான்
(வஞ்சகரே.....)

நகுலேஸ்வரம் தனிலே நகுலை முனி தவமிருந்து
நல்லருளை தான் பெற்று நாடு காத்த பெருமை சொல்வோம்
நகுலையம்பதி உறைந்து எம்பெருமான் ஆட்சி செய்ய
நாடி வந்து அவன் பாதம் வேண்டி என்றும் வணகிடுவோம்
(வஞ்சகரே.....)

**கையப்பனி துதி**

ராகம் :- மாண்டு

எங்கும் அருள்பவன் கையப்பன்
எதிலும் இருப்பவன் கையப்பன்
விந்தை புரிபவன் கையப்பன்
விண்ணவர் போற்றிடும் கையப்பன்
(எங்கும்.....)

மன்மதன் போன்றவன் கையப்பன்
மலைதனில் வாழ்பவன் கையப்பன்
கருணையின் வடிவமே கையப்பன்
காத்திட வல்லவன் கையப்பன்
(எங்கும்.....)

சிந்தையில் அருள்பவன் கையப்பன்
சிவனாரின் மைந்தன் கையப்பன்
சவரிமலை ஆளும் கையப்பன்
சாந்தியைத் தருபவன் கையப்பன்
அவன் தான் மெய்யப்பன்
(எங்கும்.....)

சிந்தைக்கு அருள்புரியும் ஐங்கரர்க்கு மங்களம்
சிவசக்தி தங்கையான துர்க்கைக்கு மங்களம்
எங்கும் நிறைந்திருக்கும் தெய்வங்களுக்கு மங்களம்
எல்லோரையும் வாழ வைக்க வேண்டுகின்றோம் மங்களம்
அட்டதிக்கு காவல் கொள்ளும் வயிரவர்க்கு மங்களம்
அன்பு கொண்டு வணங்கிடும் அடியவர்க்கு மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் ஜெய மங்களம்
மங்களம் மங்கள் மங்களம் சுப மங்களம்

அருள்மிகு துர்க்கைத்தாயாரின் தேர்த்திருவிழா நாளான 22.08.2010 அன்று வெளியீடுசெய்த

அருள்மிகு தெல்லி நகர் துர்க்கையின் அற்புதம் அகிலாண்டேஸ்வரி ஆதிநாயகி இன்னல்கள் தீர்த்தருளும் ஈடுஇணை அற்றவள். விண்ணவர் போற்றிட விரைந்து எமைக் காக்க தேர் எறி வீதிஉலா வந்தருளும் எம் துர்க்கை தாயார் அடியேனின் சிந்தையில் ஓராண்டு இரண்டாகி இருபத்திரண்டு ஆண்டான இன் நன்நாளில் அடியேனின் சிந்தையில் தந்திட்ட நன்நாமங்களை தேர்த்திருநாளான ஆவணி 22.08.2010 இன்றைய நன்நாளில் அம்பிகையை தரிசிக்க வரும் அடியவர்களின் சிந்தைக்கு அம்பிகையின் தாழ்பணிந்து சமர்ப்பணம்.

## விநாயகர் வணக்கம்

சிவ உமை பாலகனே சிந்தையில் நிறைந்தவனே
எங்கும் நிறைந்தவனே எங்கள் விநாயகனே (சிவ............)
வந்திடும் அடியவர்கள் வலம் வந்து வணங்கிடவே
வாயாரப் பாடிநின்று வடம் தன்னை பற்றிடவே
வந்தருள் புரிவாயே எங்கள் விநாயகனே
வணங்குகிறோம் உந்தன் பாதம்தனை வேண்டுகின்றோம்
சரணம் என்று உனை அடைந்தோம் எங்கள் விநாயகனே
சாந்திநிலை தந்தருளும் எங்கள் விநாயகனே

## அருள்மிகு துர்க்கை அம்மனின் துதி

ஆதி சக்தி ஆனவளே
அருள் தந்து அருள்பவளே
அன்பு கொண்டு அழைத்திடவே
அன்னையாக அருள்பவளே (ஆதி...........)
நீதியை காப்பவளே காத்தரும் தாய் இவளே
நீறு கொண்டு வருபவளே நித்தம் அருள் தருபவளே
நித்தம் உனை வேண்டி நின்றால்
நிழலாக வரும் தாய் இவளே (ஆதி...........)
ஆசைகளை அழித்தருள்வாள்
அர்த்தங்கள் பல தந்தருள்வாள்
அடியவர் குரல் கேட்டு
அமுதளிக்கும் தாய் இவளே (ஆதி...........)

சரணம் என்று உனை அடைந்தால்
சஞ்சலங்கள் தீர்த்தருள்வாள்
சக்தி நிலை தந்தெங்கும்
சரித்திர புகழ் படைத்திடுவாள் (ஆதி...........)

## கீரிமலை நகுலேஸ்வரப் பெருமானின் துதி

சிவாய நம ஓம் ஓம் சிவாய நம ஓம்
அம்பலத்தரசே அருள் இறை தந்தவா சிவாய நம ஓம்
அற்புத கூத்தனே அண்ணா மலையானே சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் ஓம் சிவாய நம ஓம்
ஆதி முதல்வனே ஆனந்த கூத்தனே சிவாய நம ஓம்
ஆடும் அரவமாலை அணிந்தவ சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் ஓம் சிவாய நம ஓம்
இன்னல்கள் தீர்த்து எம்மை ஆழ்பவா சிவாய நம ஓம்
இராவணன்மீது அன்பு கொண்டவா சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் ஓம் சிவாய நம ஓம்
ஈடு இணை அற்றவா இன்பம் தருபவா சிவாய நம ஓம்
ஈசன் எந்தை இணை அடி போற்றி சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் ஓம் சிவாய நம ஓம்
உலகின் முதல்வனே முன்னின்று காப்பவா சிவாய நம ஓம்
உன்னடி பணிந்தோம் உயிரினை காப்பாய் சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் ஓம் சிவாய நம ஓம்
ஊனினை காத்து உடல்தனை வளர்ப்பாய் சிவாய நம ஓம்
ஊக்கமும் உயர்வும் தந்து அருள்வாய் சிவாய நம ஓம் ஓம்
சிவாய நம ஓம் ஓம் சிவாய நம ஓம்
எண்ணும் எழுத்தும் கண்ணென தருவாய் சிவாய நம ஓம்
எங்கும் எதிலும் நிறந்திருப்பாய் சிவாய நம ஓம் ஓம்
சிவாய நம ஓம் ஓம் சிவாய நம ஓம்
ஏக்கம் தீர்த்து எம்மில் இருப்பாய் சிவாய நம ஓம்
ஏகாந்த நாதனே ஏழையின் மைந்தனே சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் ஓம் சிவாய நம ஓம்
ஐங்கரன் தந்தையே அறிவினை தந்தவா சிவாய நம ஓம்
ஐயம் நீக்கி அருள் தர வல்லவா சிவாய நம ஓம்
சிவாய நம ஓம் ஓம் சிவாய நம ஓம்

ஒன்றே உலகேன உணரவைத்தவா சிவாய நம ஓம்

ஒளியும் ஓசையும் உலகுக்கு அருள்பவா சிவாய நம ஓம்

சிவாய நம ஓம் ஓம் சிவாய நம ஓம்

ஓடும் கங்கையை சடையில் சுமந்தவா சிவாய நம ஓம்

ஓங்கார ஓசையை உலகுக்கு தந்தவா சிவாய நம ஓம்

சிவாய நம ஓம் ஓம் சிவாய நம ஓம்

ஔடதம் ஊட்டி ஆருயிர் காப்பவா சிவாய நம ஓம்

ஔவைக்கு அருள் புரிந்தவனே அருள்மழை பொழிந்தவா சிவாய நம ஓம்

சிவாய நம ஓம் ஓம் சிவாய நம ஓம்

**அவளை தவளக்கிரி முத்துமாரி அம்மன்**

**காத்தவராயன் மெட்டு கற்பனை துதி**

தாயல்லவோ நீ எனக்கு மாரியம்மன் தாயே அம்மா மாரியம்மன் தாயே

சேயல்லவோ நான் உனக்கு மாரியம்மன் தாயே அம்மா மாரியம்மன் தாயே

எந்த இடம் சென்றாலும் மாரியம்மன் தாயே அம்மா மாரியம்மன் தாயே

அந்த இடம் எனக்கு சொந்த இடம் அம்மா சொந்த இடம்

மகனே உனக்கு ஆசை உண்டு

என்ன சொல்வேன் அம்மா என்ன சொல்வேன் என் ஆசையை நான் எங்கு சொல்வேன்

சொல் மகனே நீ சொல் மகனே உன்ஆசையை என்னவென்று சொல் மகனே

ஆதி சிவனை அந்த ஆதிசிவனை அம்மா நான் கண்டுவர விடைதாரும் அம்மா

அப்படியானால் நீ அழகர்மலை செல்ல வேண்டும் மகனே

சென்றுவர நானும் சென்றுவர விடை தந்தாய் அம்மா எனக்கு தந்தாய் அம்மா

**அழகர்மலை செல்கின்றார்**

சென்று வந்தேன் அம்மா நான் சென்று வந்தேன் அழகர்மலை நானும் சென்று வந்தேன்

அப்படியானால் ஆதி சிவனை கண்டு வந்தியா மகனே

கண்டு வந்தேன் அம்மா நான் கண்டு வந்தேன் ஆழமரம் அம்மா அரசமரம்

அழகு பொங்கும் அந்த சோலை வனம் ஆதிசிவனை அங்கு காணவில்லை

அம்மா நான் காணவில்லை

அப்படியானால் மகனே நீ கைலயங்கிரி செல்வாயாக

அப்படியானால் இதோ சென்று வருகின்றேன் அம்மா

**_கையைங்கிரி சென்று வருங்காட்சி**

கண்டு வந்தேன் அம்மா நான் சென்று வந்தேன் ஆதி சிவனை நான் கண்டு வந்தேன்

அம்மா நான் கண்டு வந்தேன்கைலை மலை அம்மா கைலைமலை கண்கொள்ளக்

காட்சி தரும் அம்மா என்ன தவம் செய்தேன் அம்மா நானும் செய்தேன் அம்மா இறைவனடி நானும் சரணடைந்தேன் அம்மாவே சரணடைந்தேன் இனி எனக்கு என்றும் இன்பம் தானே அம்மாவே இன்பம் தானே சரணம் அம்மா சரணம் அம்மா சாந்தி நிலை எங்கும் தாரும் அம்மா அம்மா தாரும் அம்மா

### ஏழாலை மத்தி அருமிகு ஞான வைரவர்

ஆதி மூலமானவரே ஞான வயிரவர்
ஆனைமுகன் தம்பியாரே ஞான வயிரவா
சோதி வடிவானவரே ஞான வயிரவா
சொக்கனின் மைந்தனே ஞான வயிரவா (ஆதி மூலமானவரே)
ஏழாலை பதி உறைந்த ஞான வயிரவா
ஏழைகளுக்கு அருள் புரிவாய் ஞான வயிரவா
பத்தர் குலம் காப்பவரே ஞான வயிரவா
பாலர் குறை தீர்த்தருள்வாய் ஞான வயிரவ (ஆதி மூலமானவரே)
சத்தி உமை பாலகனே ஞான வயிரவா
சஞ்சலங்கள் தீர்த்தருள்வாய் ஞான வயிரவா
கரிய நிற நாய்தனிலே ஞான வயிரவா
காவல் செய்ய வல்லவனே ஞான வயிரவா (ஆதி மூலமானவரே)
வடைமாலை பிரியனான ஞான வயிரவா
வாழ்வு தர வல்லவன் நீ ஞான வயிரவா
உள்ளத்திலே குடியிருப்பாய் ஞான வயிரவா
உன்பாதம் சரணடைந்தோம் ஞான வயிரவா
உன்பாதம் சரணடைந்தோம் ஞான வயிரவா
உன்பாதம் சரணடைந்தோம் ஞான வயிரவா (ஆதி மூலமானவரே)

அருள்மிகு துர்க்கை தாயார் உலகெங்கும் சாந்தி நிலையும் சமாதானத்தையும்
நல்லறிவையும் நல் ஞானத்தையும் அவரின்
திருநாமத்தையும் திருவருட்காட்சியும் நீதியும்
செல்வத்தையும் வெற்றியையும் தந்தருள் அவவின் திருவடிகளே
சரணம் ! சரணம் !! சரணம் !!!

அழகு மிகு தோற்றம் கொண்டு அருள் பாலிக்கும் துர்க்கைத்தாயார் தெல்லி நகர் பதி தனிலே தேவரும் மூவரும் போற்றிட சிற்பக்கலை வடிவம் கொண்டு அருள் பாலிக்க எழுந்தருளும் இக்கும்பாபிஷேகத் திருநாளான 2011.01.24 (திங்கட்கிழமை) இந்நாள்

தனில் அம்பாளின் மஹா கும்பாபிஷேகத்தை தர்சிக்க வரும் அடியார்களுக்கு ! அடியேனின் சிந்தைதனில் மலர்ந்திட்ட இப்பாமாலை சமர்ப்பணம்.

**விநாயகர் துதி**

நவசத்தி நாயகனே நலம் அருள்வாய்
நாடிவரும் அடியவரின் குறை களைவாய்
எல்லோர்க்கும் முன்னின்று அருள்பவனே
என் நாளில் கவி தந்து அருள்பவனே
திருவடி வேண்டி உன்னை சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்
திருவருள் தந்தருள்வாய் என் நாளும் பாடி உனை வணங்கிடுவோம்.

**அருள்மிகு துர்க்கை அம்மனின் துதி**

இலுப்பை மரத்தடியில் அருள் கொண்டு உறைந்தவளே
இணையற்ற இன்பம் தரும் ஈடு இணையற்ற தாயாரும் இவளே
தெல்லியம் பதிதனிலே தெய்வீக கலை கொண்டு எழுந்தவளே
தெவிட்டாத அமுதழிக்கும் துர்க்கைத்தாய் இவளே
பற்பல கலை வடிவாய் பார் போற்றத் திகழ்பவளே
பத்த கோடிகள் திக்கெட்டும் புகழ்பாட வைத்தவளே
சிற்பக்கலை கொண்டு சீர் தழைதமிழ் ஓங்க வைத்தவளே
சிதறிய மக்கள் தனை சீருடன் ஒன்றிணைத்து பார்ப்பவளே
பார் போற்றிட வந்தருளும் அபிராமித் தாயே
பணிவுடன் பாதம் பணிந்து உனதருள் வேண்டி
போற்றிப் பாடுகின்றோம் தாயே

கலை வடிவாய் திகழும் கன்னி மகாத் தாயே
கருணையின் வடிவமே கற்பகத் தாயே
தெல்லி நகர் வந்துதித்த தெய்வீகத் தாயே
தென்னிலங்கை போற்றி நிற்கும் தேவி மகாத் தாயே
கலை வடிவாய் ........

அழகுறும் மடங்களும் அன்னையர் இல்லமும்
அடியவர் பசி தீர்க்கும் அன்னை சத்திரமும்
கதி கலங்கி வந்தடைந்த கள்ள மற்ற பிள்ளைகள்
கலிப்புற இன்பம் கொல்லும் இல்லங்களும்
நல்வழி கூறிடும் திருமுறை மண்டபமும்
நல மிகு தாயாரின் ஞானவெளி மண்டபமும்
கலை வடிவாய் ........

அர்த்தங்கள் பல கூறி அருள் தந்த தாயே
அகிலாண்ட நாயகியே ஆதி சத்தி தாயே
சரணம் என்று உனை அடைந்தோம் சத்தி தரும் தாயே
சாந்தி நிலை தந்தொங்கும் காத்தருளும் தாயே
சாந்தி நிலை தந்தொங்கும் காத்தருளும் தாயே
சாந்தி நிலை தந்தொங்கும் காத்தருளும் தாயே

## அருள்மிகு துர்க்கை அம்பாள் தீர்த்தப் பாமாலை

ஆடிவாறா அம்பாள் ஆடிவாறா
ஆனந்த தீர்த்தம் ஆடிவாறா
அம்பாள் ஆனந்த தீர்த்தம் ஆடி ஆடிவறா
நாடிவாறா அம்பாள் நாடிவாறா
நாடும் வீடும் காத்தருள நாடிவாறா
அம்பாள் நாடும் வீடும் காத்தருள நாடிவாறா (ஆடிவாறா ............)

தெல்லிநகர்த் துர்க்கையம்பாள் நாடிவாறா
தெள்ளுதமிழ் பாட்டுக்கேட்டு நாடிவாறா
அம்பாள் தெள்ளு தமிழ்ப் பாட்டுக்கேட்டு நாடிவாறா
தேவர் மூவர் போற்றிடவே நாடிவாறா
தேசந்தனைக் காத்தருள நாடிவாறா
அம்பாள் தேசந்தனைக் காத்தருள நாடிவாறா (ஆடிவாறா ............)

எந்தன் உள்ளம் இன்பம் கொள்ள நாடிவாறா
எல்லோரையும் வாழவைக் நாடிவாறா
அம்பாள் எல்லோரையும் வாழவைக்க நாடிவாறா
ஏற்றத்தாழ்வு நீங்கிடவே நாடிவாறா
ஏகபோகம் தந்தருள நாடிவாறா
அம்பாள் ஏகபோகம் தந்தருள நாடிவாறா (ஆடிவாறா ............)

அன்பர் இல்லம் இன்பம் கொள்ள நாடிவாறா
அர்த்தயாம வேளையிலே நாடிவாறா
அம்பாள் அர்த்தயாம வேளையிலே நாடிவாறா
அன்னை துர்க்கை அம்பிகையே நாடிவாறா

அல்லல் உற்ற மக்கள்தனை காக்கவாறா

அம்பாள் அல்லலுற்ற மக்கள் தனைகாக்க வாறா (ஆடிவாறா ............)

ஜோதிவடிவாக இங்கு நாடிவாறா

ஜோகபோகம் தந்தருள நாடிவாறா

அம்பாள் ஜோகபோகம் தந்தருள நாடிவாறா

சரணம் சரணம் என்று சொல்ல நாடிவாறா

சாந்தி நிலை தந்தருள நாடிவாறா

அம்பாள் சாந்தி நிலை தந்தருள நாடிவாறா

அம்பாள் சாந்தி நிலை தந்தருள நாடிவாறா

## "இறைநாமங்கள் தழைத்தோங்குக"

அழகு மிகு தோற்றம் கொண்டு அருள் பாலிக்கும் துர்க்கைத்தாயார் தெல்லி நகர் பதி தனிலே தேவரும் மூவரும் போற்றிட சிற்பக்கலை வடிவம் கொண்டு அருள் பாலிக்க எழுந்தருளும் இக்கும்பாபிஷேகத் திருநாளான 2011.01.24 (திங்கட்கிழமை) இந்நாள் தனில் அம்பாளின் மஹா கும்பாபிஷேகத்தை தர்சிக்க வரும் அடியார்களுக்கு !அடியேனின் சிந்தைதனில் மலர்ந்திட்ட இப்பாமாலை சமர்ப்பணம்.

### விநாயகர் துதி

நவசக்தி நாயகனே நலம் அருள்வாய்
நாடிவரும் அடியவரின் குறை களைவாய்
எல்லோர்க்கும் முன்னின்று அருள்பவனே
என் நாளில் கவி தந்து அருள்பவனே
திருவடி வேண்டி உன்னை சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்
திருவருள் தந்தருள்வாய் என் நாளும் பாடி உனை வணங்கிடுவோம்.

### அருள்மிகு துர்க்கை அம்மனின் துதி

இலுப்பை மரத்தடியில் அருள் கொண்டு உறைந்தவளே
இணையற்ற இன்பம் தரும் ஈடு இணையற்ற தாயாரும் இவளே
தெல்லியம் பதிதனிலே தெய்வீக கலை கொண்டு எழுந்தவளே
தெவிட்டாத அமுதழிக்கும் துர்க்கைத்தாய் இவளே
பற்பல கலை வடிவாய் பார் போற்றத் திகழ்பவளே
பத்த கோடிகள் திக்கெட்டும் புகழ்பாட வைத்தவளே
சிற்பக்கலை கொண்டு சீர் தழைதமிழ் ஓங்க வைத்தவளே
சிதறிய மக்கள் தனை சீருடன் ஒன்றிணைத்து பார்ப்பவளே
பார் போற்றிட வந்தருளும் அபிராமித் தாயே
பணிவுடன் பாதம் பணிந்து உனதருள் வேண்டி
போற்றிப் பாடுகின்றோம் தாயே

கலை வடிவாய் திகழும் கன்னி மகாத் தாயே
கருணையின் வடிவமே கற்பகத் தாயே
தெல்லி நகர் வந்துதித்த தெய்வீகத் தாயே
தென்னிலங்கை போற்றி நிற்கும் தேவி மகாத் தாயே

கலை வடிவாய் ........

அழகுறும் மடங்களும் அன்னையர் இல்லமும்
அடியவர் பசி தீர்க்கும் அன்னை சத்திரமும்
கதி கலங்கி வந்தடைந்த கள்ள மற்ற பிள்ளைகள்
கலிப்புற இன்பம் கொல்லும் இல்லங்களும்
நல்வழி கூறிடும் திருமுறை மண்டபமும்
நல மிகு தாயாரின் ஞானவெளி மண்டபமும்

கலை வடிவாய் ........

அர்த்தங்கள் பல கூறி அருள் தந்த தாயே
அகிலாண்ட நாயகியே ஆதி சத்தி தாயே
சரணம் என்று உனை அடைந்தோம் சத்தி தரும் தாயே
சாந்தி நிலை தந்தொங்கும் காத்தருளும் தாயே
சாந்தி நிலை தந்தொங்கும் காத்தருளும் தாயே
சாந்தி நிலை தந்தொங்கும் காத்தருளும் தாயே

**அருள்மிகு துர்க்கை அம்பாள்**

**தீர்த்தப் பாமாலை**

ஆடிவாறா அம்பாள் ஆடிவாறா
ஆனந்த தீர்த்தம் ஆடிவாறா
அம்பாள் ஆனந்த தீர்த்தம் ஆடி ஆடிவறா
நாடிவாறா அம்பாள் நாடிவாறா
நாடும் வீடும் காத்தருள நாடிவாறா
அம்பாள் நாடும் வீடும் காத்தருள நாடிவாறா (ஆடிவாறா ............)

தெல்லிநகர்த் துர்க்கையம்பாள் நாடிவாறா
தெள்ளுதமிழ் பாட்டுக்கேட்டு நாடிவாறா
அம்பாள் தெள்ளு தமிழ்ப் பாட்டுக்கேட்டு நாடிவாறா
தேவர் மூவர் போற்றிடவே நாடிவாறா
தேசந்தனைக் காத்தருள நாடிவாறா
அம்பாள் தேசந்தனைக் காத்தருள நாடிவாறா (ஆடிவாறா ............)எந்தன் உள்ளம்
இன்பம் கொள்ள நாடிவாறா
எல்லோரையும் வாழவைக் நாடிவாறா
அம்பாள் எல்லோரையும் வாழவைக்க நாடிவாறா
ஏற்றத்தாழ்வு நீங்கிடவே நாடிவாறா
ஏகபோகம் தந்தருள நாடிவாறா
அம்பாள் ஏகபோகம் தந்தருள நாடிவாறா (ஆடிவாறா ............)

அன்பர் இல்லம் இன்பம் கொள்ள நாடிவாறா
அர்த்தயாம வேளையிலே நாடிவாறா
அம்பாள் அர்த்தயாம வேளையிலே நாடிவாறா
அன்னை துர்க்கை அம்பிகையே நாடிவாறா
அல்லல் உற்ற மக்கள்தனை காக்கவாறா
அம்பாள் அல்லலுற்ற மக்கள் தனைகாக்க வாறா (ஆடிவாறா ............)

ஜோதிவடிவாக இங்கு நாடிவாறா
ஜோகபோகம் தந்தருள நாடிவாறா
அம்பாள் ஜோகபோகம் தந்தருள நாடிவாறா
சரணம் சரணம் என்று சொல்ல நாடிவாறா
சாந்தி நிலை தந்தருள நாடிவாறா
அம்பாள் சாந்தி நிலை தந்தருள நாடிவாறா
அம்பாள் சாந்தி நிலை தந்தருள நாடிவாறா

அருள்மிகு துர்க்கைத்தாயார் உலகெங்கும் சாந்தி நிலையும் சமாதானத்தையும் நல்லறிவையும் நல் ஞானத்தையும் அவரின் திருநாமத்தையும் திருவருட்காட்சியும் நீதியும் செல்வத்தையும் வெற்றியையும் தந்தருள் அவவின் திருவடிகளே வேண்டிநிற்கும் சிறு அடியேன்

"இறைநாமங்கள் தழைத்தோங்குக"
நன்றி

## முருகண்டி விநாயகர்

07.10.2011 மன்னாரில் உள்ள எழுந்தூர் அகிலாண்டேஸ்வரி ஆலயத்திற்கு சென்று அடியேன் தாயின் மீது இயற்றி பாடி விட்டு வரும் போது மோட்டார் சைக்கிளை முருகண்டி பிள்ளையாருக்கு அருகில் நிறுத்தி விட்டு அந்த அப்பனிடம் வேதனையை வாசலில் அமர்ந்து வேண்டுதல் செய்த போது தேகம் சிலிர்த்தது சற்று நேரம் மௌனத்தில் சிந்தித்தேன். சிந்தையில் உதித்தது அவன் நாமம் சிந்தைக்குரியவன் அவனிடம் சமர்ப்பணம்.

பாடல்
பால மரத்தடியில் பரம் பொருளாய்
உறைந்தவனே
பக்தர் குறை தீர்த்து பார் போற்ற
ஆள் பவனே
வேழ முகத்தவனே வேண்டும்

வரம் அருள்பவனே
வேண்டிடும் அடியவர்க்கு
வேதனைகள் தீர்ப்பவனே
(பால..........)

முருகண்டி பதி தனிலே
முதல்வனாய் அருள்பவனே
மூலப் பரம் பொருளாய் முன்னின்று
அருள்பவனே காப்பவனே
(பால..........)

ஞானத்தின் திரு உருவே
நலம் அருளும் நாயகனே
நாடி வந்து உனைப் பாட
நாவில் கவி தந்தவனே
(பால..........)

வேதனைகள் சொல்லி அழ
வேறு துணை இல்லை அப்பா
வேழ முகத்தோனே
வேடிக்கை காட்டி நின்றாய்
(பால..........)

ஆதி அந்தம் இல்லாத
அரும் பெரும் ஜோதியப்பா
அடியவர் குறை களைந்து
அற்புதம் காட்டுமப்பா
(பால..........)

## மாவை முருகன்

11.10.2011 செவ்வாய் பௌர்ணமி தினமன்று மாவை முருகனின் ஆலயத்தில் பூஜை செய்யும் குருக்களிடம் ஆசியுரை பெறுவதற்கு சென்று அவன் பாதம் தரிசித்த வேளை மயிலை பார்த்து அது தோகை விரித்து ஆடுவதைக் கண்டு அந்த மயிலின் இறகு ஒன்று கிடைத்தால் எனது பூஜை அறையில் வைத்து வழிபடலாம் என்று நினைத்துக் கொண்டு உள் செல்லும் வேளை மயில் அகவும் சத்தம் கேட்டு எனது பேரன் தாத்தா உங்களைப் பார்த்து மயில் கத்துகிறது எனக் கூற நான் சுற்றி வந்து கும்பிட்டு வருவோம் என்று பின் வந்து பார்த்த பொழுது ஆச்சரியமாக இருந்தது. பெரிய இறகு கைக்கு கிடைக்கக் கூடிய நிலையில் கிடந்தது. அதை எடுத்து கும்பிட்டு விட்டு சிந்தித்த வேளை சிந்தையில் தோன்றிய இப்பாடல் அவன் பாதத்திற்கு சமர்ப்பணம்.

பாடல்

மாவையிலே வேலைக் கண்டேன்
மயில் ஆடும் அழகைக் கண்டேன்
வேதனைகள் தீரக் கண்டேன்
வேண்டும் வரம் அருளக் கண்டேன்
(மாவை.........)

சோதனைகள் தீரக் கண்டேன்
சொர்க்கன் மகன் அருளைக் கொண்டேன்
எத் திக்கும் பாடக் கேட்டேன்
என் நாவில் மொழிகள் கேட்டேன்
(மாவை.........)

தோகை மயில் ஆடக் கண்டேன்
தோத்திரங்கள் பாடி நின்றேன்
அத்தனையும் அருள்வேன் என்றான்
அவன் பாதம் வேண்டி நின்றேன்
(மாவை.........)

பக்தர் கூட்டம் கூடக் கண்டேன்
பரவசத்தில் பாடி நின்றேன்
சரணம் என்ற கோஷம் கேட்டு
சஞ்சலங்கள் நீங்கி நின்றேன்
(மாவை.........)

தேவி துணை

**இணுவில் சிவகாமி அம்மன்**

தித்திக்கும் தேன் அமுதாய்
தெவிட்டாத சொல்லமுதாய்
பக்திக்கு அருள் அமுதாய்
பரம சிவன் பாதம் வேண்டி நிற்கும்
சிவகாமி சுந்தரியே
சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்

துதி

சிந்தையில் நின்றிடும் பிரசாதம்
சிவகாமி அம்மனின் அருள்சாதம்
(சிந்தையில்.............)

வந்த பிணி நீக்கியே வாழ்வினில்
இன்பம் தரும் அவன் சாதம்
(சிந்தையில்.............)

கேதார நோன்பிருந்து
    கேட்ட வரம் அருளும்
சிவகாம சுந்தரியே
    சிந்தையில் அருள் புரிந்தாய்
(சிந்தையில்............)

மூன்று நல் வாரங்கள்
    முயன்றுனை வேண்டிடவே
முத்தமிழ் பாடிடவே
    முழுமதியாய் அருள் தருவாய்
(சிந்தையில்............)

சத்திய சோதனை
    எத்தனை ஆயினும்
சாந்தி நிலை தந்தெம்மை
    காப்பவள் நீயே அம்மா
(சிந்தையில்............)

சிவன் துதி

தீராத நோய்கள் எல்லாம்
    தீர்த்தருளும் திருமருந்தே
தில்லை நடராஜனின் தீர்த்தம்
    என்னும் பெருமருந்து
(சிந்தையில்............)

மாறா நோய்கள் எல்லாம் மாற்றி
    வைத்திடும் மதி மருந்து
மாயவன் சிந்தையினில்
    மதி மயங்கும் அருள் மருந்து
(சிந்தையில்............)

ஏராளமான பக்தர் எழில்
    கொஞ்சும் சிவ மருந்து
ஏக்கங்கள் தீர்த்தருளும்
    தீர்த்தம் என்னும் அருள் மருந்து
(சிந்தையில்............)

**காப்பு**

கணபதி என்றிட கவலைகள் போக்கிடுவான்
கணபதி என்றிட காலனும் கை கொடுப்பான்
கணபதியின் அருள் வேண்டி நின் காப் இதர்க்கு
கணபதி நின்றருள்வாய் நின் திருப்பாதம் போற்றி

தோதரையம் பதியில் தொந்திக் கணபதி வீற் எழ
தோத்திரம் பாடி நாம் தொழுது எழ
தோன்றிடும் தாயே முன் நின்று எம் முன் எழ
தோதரை தாயாளே பன்னி எழுந்தருளாயே

இராஜ இராஜேஸ்வரி அம்மா

தாயாய் நின்று எங்கும் தரணி காத்திட இங் எழ
தாமரை பூர்த்திங்கு தண்ணீரில் தத்தளித்து எழ
தாரமர் கொன்றை தரணி போற்றி இங் எழ
தாங்கிடும் மண்ணுயிர்கள் தாழ் பணிந்திட பள்ளி எழுந்தருளாயே

இராஜ இராஜேஸ்வரி அம்மா

காலை கதிரவன் கதிர் விட்டு இங் எழ
காக்கையும் குயிலும் கானம் பாடி மகிழ்ந் எழ
கலங்கிடும் மண்ணுயிர்கள் கவலையுற்று இங் எழ
கண்ணை இமை காப்பது போல் தாயே கருணை கொண்டு எமை காக்க பள்ளி எழுந்தருளாயே

இராஜ இராஜேஸ்வரி அம்மா

பூமுகம் பொழிந்திட புதுமைகள் புரிந்திங் எழ
பூமியில் பொன்னும் மணியும் நெல் மணிகள் விளைந் எழ
பூ மாதர்கள் பூ மலர்கள் கொய்து இங்கு வந்து இங் எழ
பூங் குழலாலே புவிகாக்க பள்ளி எழுந்தருளாயே

இராஜ இராஜேஸ்வரி அம்மா

நல்லதும் தீயதும் நயந்தறிய நாம் இங் எழ
நலம் புரியும் நாயகி தாயே எம் முன் எழ
நர்த்தமிழ் சொல்லெடுத்து நாவிலே நாமங்கள் தந் இங் எழ
நக்கீரர் நயந்துரைத்த நாயகித் தாயே பள்ளி எழுந்தருளாயே

இராஜ இராஜேஸ்வரி அம்மா

செங்களணீர் சேற்றில் மகிழ்ந்து மலர்ந்து எழ
சென்னிற வானம் செவ்விதழ்விரிந் எழ
செல்வம் எங்கும் கொழித்து சீர் பொழிந் இங் எழ
செங்கமலப் பொற்பாதம் வேண்டி நாம் தொழுதிட பள்ளி எழுந்தருளாயே

இராஜ இராஜேஸ்வரி அம்மா

பரந்தெங்கும் பலவகை தானியங்கள் விலைந் எழ
பண்ணும் பரதமும் பார் எங்கும் இசைந்து எழ
பக்தர்கள் கூடிப் பாடி இன்புற்று இங் எழ
பற்றுற்று நாம் இங்கு பரிவுடன் பணிபுரிய பள்ளி எழுந்தருளாயே
இராஜ இராஜேஸ்வரி அம்மா

மன்னாதி மன்னவரும் மாயவரும் மதித்து எழ
மங்கள வாத்தியங்கள் முழங்கி எங்கும் ஒலித் எழ
மங்கையர்கள் மனம் குளிர மணவாளன் இங் எழ
மாயவனின் தங்கையே மண்ணுலகின் மங்கையே பள்ளி எழுந்தருளாயே
இராஜ இராஜேஸ்வரி அம்மா

சரணம் என்று உமை நாம் கூவி அழைத் எழ
சஞ்சலங்கள் நீங்கி எங்கும் இன்பம் தழைத் எழ
சங்கரனார் பாகம் அமர்ந்து எங்குலம் காக்க சக்தி இங் எழ
சௌபாக்கியவதியே எம் பெருமாட்டியே பள்ளி எழுந்தருளாயே
இராஜ இராஜேஸ்வரி அம்மா

## காரைநகர் சிவன் ஆலயம்

அம்பலத்தே ஆடுகிறான் அருள் மிகு நடராஜன்
எம்மனத்தில் ஆடுகின்றான் எழில் மிகு நடராஜன்
(அம்பலத்தே............)

காரையம் பதிதனிலே கருணை மிகு நடராஜன்
காண்பதெல்லாம் அவன் கலை வண்ண வடிவாகும்
சிலை வடிவாய் திகழும் சிற்பத்தின் ஓவியங்கள்
சிந்தையில் நின்றருளும் சிவ என்னும் அருள் நாமம்
(அம்பலத்தே............)

ஈழத்து சிதம்பரமாய் இணைமிகு நடராஜன்
ஈடில்லா சோதியாக இன்பம் தரும் நடராஜன்
வளம் மிகு வயல் கொண்டு வலம் வரும் நடராஜன்
வறுமைகள் நீக்கி எங்கும் இன்பம் தரும் நடராஜன்
(அம்பலத்தே............)

சுடலை வனம் சென்று நடம் இடும் நடராஜன்
சுத்த திருநீறணிந்தால் ஞானம் தரும் நடராஜன்
எழில் மிகு வதனமாய் நடம் இடும் நடராஜன்
ஏழைகள் வாழ்வில் என்றும் இன்பம் தரும் நடராஜன்
(அம்பலத்தே............)

செந்நிற மேனிவண்ணன் செந்தமிழை காக்கும் மன்னன்
செய்வது நாம் அறியோம் செயல் மிகு முக்கண்ணன்
சரணம் அடைந்திட்டால் காத்திடும் முக்கண்ணன்
சஞ்சலம் தீர்த்தருளும் அருள் மிகு முக்கண்ணன்.

### வயிரவர்

(வேலவா வடி வேலவா)
வயிரவா அப்பா வயிரவா
வல்ல தெய்வமானவரே வயிரவா
வயிரவா அப்பா வயிரவா
வாழ்வில் இன்பம் தந்தருளும் வயிரவா
(வயிரவா..........)
எட்டு திக்கும் காவல் கொள்ளும் வயிரவா
எம்மவரை காவல் கொள்வாய் வயிரவா
பக்தியுடன் பாடுகிறோம் வயிரவா
பாவ வினை தீர்த்தருள்வாய் வயிரவா
(வயிரவா..........)
கரிய நிற நாயினிலே வயிரவா
காலமெல்லாம் வலம் வருவாய் வயிரவா
காலடியை நாடி வந்தோம் வயிரவா
காத்தருள வேண்டும் அப்பா வயிரவா
(வயிரவா..........)

### விநாயகா

அருள் தருவாயே ஞான விநாயகா
அற்புத ஜோதியே ஆதி விநாயகா
சிந்தையில் அருள்வாயே சித்தி விநாயகா
சிரம் தாழ்த்தி என்றும் வணங்கிடுவோமே
(அருள் தருவாயே...........)
வந்த துயர் நீங்கவே வலம் வருவோமே
வணங்கிடும் உயிர்களை காத்தருள்வாயே
எந்தன் குறை தீர்த்த ஏகாந்த நாயகனே
எண்ணம் எல்லாம் என்றும் உன்னினைவாகவே
(அருள் தருவாயே...........)
பக்தரின் உள்ளங் கொண்டு பரம் பொருளாய் அமர்ந்தாய்
பரமசிவன் பார்வதியின் புதல்வனாய் தவழ்ந்தாய்
தாவடி பதியுறைந்து தவ அருள் புரிபவனே
தரணியில் போற்றிடவே தாங்கி எமை காப்பவனே
(அருள் தருவாயே...........)

## ஏழாலை பதியுறைந்த ஞான வைரவர்

ஆதி மூலமானவரே ஞான வைரவா
அன்புருவாய் வந்தருள்வாய் ஞான வைரவா அப்பா
அன்புருவாய் வந்தருள்வாய் ஞான வைரவா
சோதி வடிவானவரே ஞான வைரவா
சொக்கனின் மைந்தனே ஞான வைரவா அப்பா
சொக்கனின் மைந்தனே ஞான வைரவா

(ஆதி மூல............)

ஏழாலை பதியுறைந்த ஞான வைரவா
எட்டுத்திக்கும் காவல் கொள்வாய் ஞான வைரவா அப்பா
எட்டுத்திக்கும் காவல் கொள்வாய் ஞான வைரவா
எத்தனையோ பிணிகள் அப்பா ஞான வைரவா
எம்மவர்க்கு நீக்கி வைப்பாய் ஞான வைரவா அப்பா
எம்மவர்க்கு நீக்கி வைப்பாய் ஞான வைரவா

(ஆதி மூல............)

கரிய நிற நாய் தனிலே ஞான வைரவா
காத்தருள வல்லவனே ஞான வைரவா அப்பா
காத்தருள வல்லவனே ஞான வைரவா
சஞ்சலங்கள் தீர்த்தருளும் ஞான வைரவா
சாந்தி நிலை தந்தருளும் ஞான வைரவா எங்கும்
சாந்தி நிலை தந்தருளும் ஞான வைரவா எங்கும்
சாந்தி நிலை தந்தருளும் ஞான வைரவா

(ஆதி மூல............)

## கன்னி மூல கணபதி

கன்னி மூல கணபதியே வருவாய் அருள்வாய்
கன்னியர்க்கு வாழ்வு தர கணபதி நீ அருள்வாய்
செங்கதிராய் செஞ்சுடராய் கணபதி நீ வருவாய்
செந்தமிழை காத்திட கணபதி நீ அருள்வாய்

(கன்னி மூல.........)

உலக வாழ்வை காத்தருள கணபதி நீ வருவாய்
உள்ளத்திலே குடியிருந்து கணபதி நீ அருள்வாய்
பக்தர் குறை தீர்த்தருள கணபதி நீ வருவாய்
பரம் பொருளாய் குடியிருந்து கணபதி நீ அருள்வாய்

(கன்னி மூல.........)

அன்னை தந்தை உலகெனவே அருள் மொழி அளித்தாய்
அருங்கனியைப் பெற்றிடவே அறிவொளி படைத்தாய்

கயமுகனை அழித்து எங்கும் கருணைகள் புரிந்தாய்
காலமெல்லாம் கருணையுடன் திருவடி தொழுவோம்
உன் திருவடி தொழுவோம்
உன் திருவடி தொழுவோம்

## அருள்மிகு கண்ணகி அம்மன் துதி

கண்ணகியே கண்ணகியே
எங்கள் கருணை உள்ள தாயாரே நீ
கருங்கூந்தல் கொண்டவளே
எங்கள் கண்ணகியே வாரும் அம்மா
கற்புக் கனல் கொண்டவளே
அம்மா கதி கலங்க வைத்தவளே
கன்னியரை காப்பவளே
எங்கள் கண்ணகியே வாரும் அம்மா
(கண்ணகியே கண்ணகியே.........)
அற்புதங்கள் கொண்டவளே
எங்கள் அன்னையும் நீயே அம்மா
அல்லலுற்று நிற்பவரை
அம்மா அன்பு கொண்டு காப்பவளே
மதுரைக்கோர் நீதி சொன்ன
எங்கள் கண்ணகியே வாருமம்மா
மாய ரூபம் தா னெடுத்த
உந்தன் மாயம் தான் சொல்லுமம்மா
(கண்ணகியே கண்ணகியே.........)
வெப்ப நோயை தணிப்பவளே
எங்கள் வேதனையை தீரும் அம்மா
வேப்பிலையோ கசக்குதம்மா
எங்கள் வெப்பு நோயோ தணிக்குதம்மா
மருந்தொன்றும் இல்லையம்மா
அதன் தாயம் தான் சொல்லும்மா
மலையேறி வந்தருளும்
எங்கள் கண்ணகியே வாரும் அம்மா
(கண்ணகியே கண்ணகியே.........)
ஆயிரம் கண்ணுடையாள்
எங்கள் ஆதி சக்தி சொல்லுடையாள்
ஆலமர நிழலினிலே
அம்மா வீற்றிருந்து அருள்பவளே

சத்தியத்தை காப்பவளே
எங்கள் சஞ்சலங்கள் தீர்ப்பவளே
சாந்தி நிலை வேண்டுகின்றோம்
உந்தன் பாதமலர் சரணம் அம்மா
சரணம் சரணம் சரணம் அம்மா
உந்தன் பொன்னடிகள் சரணம் அம்மா
சரணம் சரணம் சரணம் அம்மா
உந்தன் மலரடிகள் சரணம் அம்மா

## பஞ்சாய் பறந்திட வைப்பாள் நாகதேவியம்மா

நயினை கடல் தனிலே நர்த்தனம் ஆடிவரும் நாகதேவியம்மா
நம்பி வரும் அடியார் குறை தீர்த்தருளும் நாகதேவியம்மா
வன்செயல் ஒழித்தெங்கும் வலம் வர வேண்டுமடி நாகதேவியம்மா
வந்ததுயர் நீக்கியெங்கும் வளம் பெற வேண்டுமடி நாகதேவியம்மா

காலைக் கதிரவனின் கண் ஒளியிலே காட்சி தர வேண்டுமடி நாகதேவியம்மா
காணுகின்ற காட்சி எல்லாம் நீயாக வேண்டுமடி நாகதேவியம்மா
வந்திடும் அடியார்கள் வடம் பற்றிடவே நாகதேவியம்மா
வலம் வந்து நின்றிடவே வந்த துன்பம் எல்லாம் பஞ்சாய் பறந்திடும் நாகதேவியம்மா

## மஞ்சவனப்பதி முருகன்

மஞ்சம் தனில் அமர்ந்து மகிழ்வுறும் திருக்குமரா
மஞசவனப் பதியுறைந்த மால் மருகா
நெஞ்சம் தனில் உறைந்து நெகுள் உறும் திருக்குமரா
நெகிழந்துனை பாட வேண்டும் எழில் மிகு மால் மருகா
முருகா..... முருகா..... முருகா..... முருகா.....
(மஞ்சம்..........)

வஞ்சக மனிதர் முன்னே வந்தருளும் திருக்குமரா
வாயாரப் பாடி உனை வலம் வர வேண்டும் ஐயா
அருள் கொண்ட கனி கொடுத்து ஔவைக்கு அருள் புரிந்தவனே
அர்த்தங்கள் பல உரைத்து அருளும் திருக்குமரா
முருகா..... முருகா..... முருகா..... முருகா.....
(மஞ்சம்..........)

கெஞ்சிடும் அடியவர்க்கு கேட்ட வரம் அருள்பவனே
கேளிக்கை செய்பவர்க்கு கேடு இழைக்கும் திருக்குமரா
தஞ்சம் என அடையும் அடியவர் கூட்டம் தன்னை
தளிர்க்கரம் கொண்டு காத்தருளும் திருக்குமரா

முருகா..... முருகா..... முருகா..... முருகா.....

(மஞ்சம்..........)

நெஞ்சார பாடி உனை நெகிழ்ந்துருக வேண்டும் ஐயா
நேசக்கரம் கொண்டு காத்தருள வாரும் ஐயா
சஞ்சலங்கள் தீர்த்தெம்மை காத்தருள வேண்டும் ஐயா
சத்தியத்தை காத்திங்கு சாந்தி நிலை தந்திடையா

## மன்னார் எழுந்தூர் அருள் மிகு அகிலாண்டேஸ்வரி ஆலயம்



அருள் மிகு துர்க்கை தாயாரின் தேர்த்திருநாளான அன்று அம்பிகையை அடியேன் தரிசிக்கச் சென்ற போது அருள் மிகு அகிலாண்டேஸ்வரியின் உருவப் படத்தை இ.பாலகந்தவேல் ஐயாஅவர்கள் என் கையில் தந்தார். பின் அந்த அகிலாண்டேஸ்வரியை வேண்டி ஒரு பாடல் இயற்றி வந்து பாடுமாறு வேண்டினார். அப்படத்தை வீட்டிற்கு கொண்டு சென்று இரவு வெகு நேரமாக பார்த்து விட்டு தூக்கத்தில் ஆழ்ந்த நான் அன்று 09.09.2011 12.15 மணியளவில் திடுக்குற்று எழுந்து அகிலாண்டேஸ்வரியின் சிந்தையிலே மூழ்கிய வேளை திடீரென என் மனதில் உதித்த பாமாலைத் தொகுப்பினை 04.10.2011 செவ்வாய்க்கிழமை அகிலாண்டேஸ்வரியின் ஆலயத்திற்குச் சென்று சரஸ்வதி பூஜை நன்நாளில் அடியேன் கீர்த்தனை செய்து அம்பிகையின் தரிசனத்தைப் பெற்றுள்ள இன்பத்தை அடியவர்களும் பெற்றுய்ய வேண்டுகின்றேன்.

**அகிலாண்டேஸ்வரியின் துதி**

அம்மா நீயே! அணைத்தருள் தாயே
அன்னையே நம்பினேன் வந்தருள் தந்தாயே

[அம்மா...]

ஆதி சக்தி ஆனவளே அகிலாண்ட நாயகியே
ஆனந்தம் தந்தெனை ஆண்டவள் நீயே
அனைத்தும் அறிந்தவள் நீ நீ நீ
அன்னையே என்னிடம் வா வா. ... வா

[அம்மா...]

பண்புள்ளபாலகர் நாம் பரிவுடன் நாடிவந்தோம்
பாசத்தை காட்டி நீ பக்தியை ஊட்டினாய்
என்னை அறிந்தவள் நீ - நீ நீ
என்றும் எனக்கருள் தந்திடவா வா வா வா

[அம்மா...]

மன்னாரில் வந்துதித்த அகிலாண்டேஸ்வரி தாயே
மகிமைகள் புரிந்தெமை என்நாளும் ஆள்பவளே
மக்களின் குறைதனை தீர் ... தீர்... தீர்
மாயங்கள் கொண்டனை ஆண்டிட வா..வா..வா

[அம்மா நீயே.........]

**துதி**

ஜோதியாய் ஒளிர்பவளே
யோக யோகம் தருபவளே
எழுந்தூரில் எழுந்தருளும் எல்லையில்லா தாய் இவளே
எம் மனதில் இருப்பவளே எம்மை எல்லாம் காப்பவளே
என் நாவில் மொழி தந்து எனைப் பாட வைத்தவளே

[ஜோதியாய்...]

மன்னாராம் தலை நகரில்
மாய சக்தி கொண்டவளாம்
மக்கள் குறை தீர்த்தருளும்
மகா சக்தி ஆனவளே

[ஜோதியாய்...]

பாலாவி உற்றெடுத்து பல வினைகள் தீர்த்தருளும்
பரமசிவன் பார்வதியும் உறைந்த இடம் ஈச்சரமே
பக்தரின் குறைகள் எல்லாம்
பரிவுடனே தீர்த்தருளும் பரமசிவன் சன்நிதியே

[ஜோதியாய்...]

**அருள் வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர்**

எல்லோரும் வாழ அருள்வாய்
வடகுல பதி தனிலே வந்து உறைந்த ஆஞ்சநேயா
இருள் தனை நீக்கியே இன்பம் தர வேண்டும் ஐயா
ஈடில்லா ஜோதி நீ என்று இன்பம் கொள்ள வேண்டும் ஐயா
ஈழ மக்கள் என்றும் இனிதுடன் வாழ வேண்டும் ஐயா
வலம் வந்து நின்று எங்கும் வணங்கிட வேண்டும் ஐயா
வஞ்சித்தோர் நெஞ்ச இருள் நீக்கி வணங்கிட வேண்டும் ஐயா
எந்தன் உள்ளம் எங்கும் இன்பம் கொள்ள அருள் தாரும் ஐயா
எல்லோரும் ஒன்று சேர்ந்து வளமுடன் வாழ அருள் தாரும் ஐயா
சஞ்சலம் நீங்கி எங்கும் உந்தன் நாமம் சொல்ல அருள் தாரும் ஐயா
சாந்தியும் சமாதானமும் உலகெங்கும் நிலைத்திட உந்தன் அருள் ஒளி தாரும்

## அனுமார்

அன்பு கொண்ட அனுமாரே ஆதி தூதன் ஆனாயே
அன்பருக்கு அருள் புரிய ஆலயமாய் ஆனாயே
(அன்பு......)

இராவணன் பகை தீர்க்க இராம தூதன் ஆனாயே
இன்னல்களை களைந்தருள இணுவில் பதி உறைந்தாயே
(அன்பு......)

வானர சேனையுடன் வலம் வந்து நின்றாயே
வாலியை தான் அழித்து வல்லமைகள் பெற்றாயே
(அன்பு......)

சீதை தனை தேடிச் செல்ல சிறு குரங்காய் சென்றாயே
சிந்தை நிலை தருபவனே சீர் நிலையைத் தந்தருள்வாய்
(அன்பு......)

இலங்காபுரி தான் நோக்கி இன்னல் பல தான் புரிந்தாயே
இரக்கம் அற்ற அரக்கர்களை இல்லாது அழித்தாயே (அன்பு......)

சஞ்சலங்கள் தீர்ப்பவனே
சர்வ பலம் கொண்டவனே
சரண் அடைந்தோம் உன் பாதம்
சாந்தி நிலை தந்தருள்வாய்
சாந்தி நிலை தந்தருள்வாய்
சாந்தி நிலை தந்தருள்வாய்

## ராமர் (ஆஞ்சநேயர்)

ராம ராம ராம ராம ராம ராமனே
ராம குலம் காத்த எங்கள் ஆஞ்சநேயனே
சீதை தனை தேடிக்கண்ட ஆஞ்சநேயனே
சீர் நிலையை தந்தருள்வாய் ஆஞ்சநேயனே
(ராம ராம ராம.........)

வானரத்தின் தலைவனான ஆஞ்சநேயனே
வாயு புத்திர மைந்தனே ஆஞ்சநேயனே
வந்த துயர் தீர்த்தருளும் ஆஞ்சநேயனே
வாழ்வில் இன்பம் தந்தருளும் ஆஞ்சநேயனே
(ராம ராம ராம.........)

உள்ளம் எங்கும் இன்பம் கொண்ட ஆஞ்சநேயனே
உளகறிந்து போற்ற வேண்டும் ஆஞ்சநேயனே
உந்தன் அடி நாடி வர ஆஞ்சநேயனே
உந்தன் புதுமை தனை காட்ட வேண்டும் ஆஞ்சநேயனே
(ராம ராம ராம.........)

ராம ராம ராம் ராம ராம ராம் ராம பக்த அனுமான்
பக்தர் நெஞ்சினிலே கோயில் கொண்ட வா ராம பக்த அனுமான்
இணுவில் பதிதனில் இன்னல் நீக்கியே கோயிலாக அமர்ந்தாய்
இணையில்லா இன்பம் கொண்டு நீ இமயம் போல வளர்ந்தாய்
(ராம ராம.........)

வாயு தேவனே வானரத் தலைவா வந்து அருளும் தந்தாய்
வந்து வணங்கிடும் அடியார் நெஞ்சிலே கோயிலாக அமர்ந்தாய்
எண்ணி வந்திடும் கருமம் யாவையும் எளிதில் தீர்த்து வைப்பாய்
எந்தன் உள்ளத்தில் இன்பம் கொண்டு நீ கவிகள் பாட வைத்தாய்
(ராம ராம.........)

மனம் மகிழ்ந்து நாம் பாடுகிறோமே ராம பக்த அனுமான்
மாய லீலைகள் புரிந்து அருள்பவா ராம பக்த அனுமான்
அல்லலுற்று நாம் அலறுகின்றோமே ராம பக்த அனுமான்
அடியார் நெஞ்சிலே இன்பம் அருள்பவா ராம பக்த அனுமான்
(ராம ராம.........)

## II

ராம ராம ராம ராம ஆஞ்சனேயனே
ராம பக்த அனுமானே ஆஞ்சனேயனே
இணுவில் பதி உறைந்தவனே ஆஞ்சனேயனே
இன்பமுடன் வாழ வைப்பாய் ஆஞ்சநேயனே
(ராம ராம.........)

நெஞ்சிலே கோயில் கொண்டாய் ஆஞ்சனேயனே
நேசக்கரம் நீட்டிடுவாய் ஆஞ்சனேயனே
வஞ்சம் அற்ற நெஞ்சினிலே ஆஞ்சனேயனே
வந்துறைந்து அருள்பவனே ஆஞ்சனேயனே
(ராம ராம.........)

எண்ணி வரும் கருமம் யாவும் ஆஞ்சனேயனே
எழிதுடனே தீர்த்து வைப்பாய் ஆஞ்சனேயனே
மனம் மகிழ்ந்து பாடுகின்றோம் ஆஞ்சனேயனே
மங்களமாய் வாழ வைப்பாய் ஆஞ்சனேயனே
(ராம ராம.........)

**அனேகரின் வேண்டுதலுக்கு இணங்க இவ்விரு பாடல்களையும்**

**இந்நூலில் வெளியிட்டுள்ளேன்.**

**ராம மந்திரமும் வெற்றிலை மாலைப்பாடலும்**

**என் நெஞ்சைத் தொட்டு உருக்கும் பாடல்கள்.**

**இவை இன்னொரு நூல்த்தொகுப்பிலிருந்து எடுத்துப் பாடப்பட்டவை.**

சொல்லட்டும் சொல்லட்டும் உள்ளங்கள் என்றும் ராம ஜெயம்
பாடட்டும் பாடட்டும் உதடுகள் ராம ஜெயம்
பேசட்டும் பேசட்டும் யாவரும் எங்கும் ராம ஜெயம்
ஊரெங்கும் வீசிடும் காற்றாய் எங்கும் ராம ஜெயம்
அன்னை தந்தை இல்லா யாவர்க்கும் அன்னை ராம ஜெயம்
அங்கும் இங்கும் துள்ளும் மனதை வெல்லும் ராம ஜெயம்
கண்ணை இமை போல காவல் செய்து காக்கும் ராம ஜெயம்
கன்னங்கரிய இருளில் ஒளியாய் வருமே ராம ஜெயம்

(சொல்லட்டும்...........)

கூனும் குருடும் செவிடும் மறையும் சொன்னால் ராம ஜெயம்
கூடியிருக்கும் குலத்தைக் காக்கும் சொன்னால் ராம ஜெயம்
தன்னந்தனியே செல்லும் பாதையில் துணையாய் வருமே ராம ஜெயம்
தன்னலமற்ற மனிதரின் முன்னே ஒளியாய் வருமே ராம ஜெயம்
தீயும் உன்னைத் தீண்டும் போது சொல்லுவாய் ராம ஜெயம்
தீமை கொண்ட மனதை கூட மாற்றும் ராம ஜெயம்
தேகம் எங்கும் பன்னீர் தூவி காக்கும் ராம ஜெயம்
தேசம் காக்க வேண்டிச் சொன்னால் காக்கும் ராம ஜெயம்

(சொல்லட்டும்...........)

**வெற்றிலைப்பாடல்**

வெத்திலை எடுத்து மாலை கட்டுங்க மாலை கட்டுங்களே
உங்கள் வேதனையை சொல்லி சொல்லி மாலை கட்டுங்களே
துளசியிலே கொழுந்தெடுத்து மாலை கட்டுங்களே
ராம தோத்திரத்தை சொல்லி சொல்லி மாலை கட்டுங்களே
கட்டுங்க கட்டுங்க மாலை கட்டுங்க
வெத்தலை எடுத்து மாலை கட்டுங்க

(வெத்தலை..........)

கோடி பணம் கேட்பதில்லை மாருதி ராஜா
அவன் கொட்டும் பனி நேரத்திலே பூத்திடும் ரோஜா
ராம ஜெயம் சொன்னா நீங்க வந்து நிற்பானே
அந்த இராமர் சாமி பேர தினம் சொல்லி நிப்பானே
ஆசையெல்லாம் வேர் அறுத்த அற்புத சாமி

அவன் ஓசை தரும் மணியினிலே வாசம் கொள்வானே
காற்றடித்தா புயலடித்தா கலங்கிடலாமா
அவ கட்டித் தங்க மனசிருக்கத் தவிப்பது ஏமா

(வெத்தலை..........)

பொட்டு வைத்து பொட்டு வைத்து பூசை செய்தாலே
அவர் எட்டி வைத்து வாசல் கதவை தட்டி நிப்பானே
மெட்டெடுத்து ராமனுக்கு பாட்டுமிட்டாலே
அவன் மெல்ல வந்து தாளமிட்டு கேட்டு நிற்பானே
நம்பி நின்று நம்பி நின்று நல்லதைக் கேளு
மனம் வெம்பி நிற்கத் தேவையில்லை நன்மைகையோடு

(வெத்தலை..........)

ஆதரிக்கும் நெஞ்சம் தனில் பூத்து நிற்பானே
அவன் அந்தியிலே பூத்த மல்லி போலிருப்பானே
பட்ட மரம் போலிருக்கும் வாழ்வில் எல்லாமே
அவன் சொட்டு சொட்டாய் தேன் வடிய மாற்றி வைப்பானே
சந்தனத்தை பூசி வைத்த செந்நிற மேனி
அவன் சாந்த மனம் கொளுளுகின்ற மிஞ்சிய சாமி
வட்டமிட்டு வட்டமிட்டு வாழ்த்துக்கள் பாடு
எங்கள் வானரத்து தலைவனுக்கு சரணங்கள் போடு
இராமரையும் வேண்டி நின்று சரணங்கள் போடு
எங்க கோம காண மருதிக்கு சரணங்கள் போடு

(வெத்தலை.........

## அருள் தருவாய் கையப்பா

கருணை தாரும் கருணை தாரும் கையப்பா எங்கள் கையப்பா
கருணை புரிய வல்லவன் நீ கையப்பா எங்கள் கையப்பா
காடு மேடு தாண்டி வந்தோம் கையப்பா எங்கள் கையப்பா
காத்தருள வாரும் அப்பா கையப்பா எங்கள் கையப்பா

(கருணை தாரும்..........)

கோண்டாவில் பதி உறைந்த கையப்பா எங்கள் கையப்பா
கொடுமைகளை களைந்தருள்வாய் கையப்பா எங்கள் கையப்பா
அடியார் குறை தீர்த்தருள்வாய் கையப்பா எங்கள் கையப்பா
அடிமைத்தனம் ஒளித்தருள் வாய் கையப்பா எங்கள் கையப்பா

(கருணை தாரும்..........)

மணிகண்ட நாதனே கையப்பா எங்கள் கையப்பா
மாய ரூபம் பெற்று வந்தாய் கையப்பா எங்கள் கையப்பா
சவரி மலை ஆள்பவனே கையப்பா எங்கள் கையப்பா

சாத்தானே வந்துறைவீர் கையப்பா எங்கள் கையப்பா

(கருணை தாரும்..........)

2 தருணம் இது தருணம் இது கையப்பா 2

2 வருவாய் நீ வருவாய் நீ கையப்பா 2

2 வாழ்வில் இன்பம் தருவாய் நீ கையப்பா 2

2 சரணம் சரணம் சரணம் கையப்பா 2

2 சரணம் உன் பாதமலர் கையப்பா 2

நன்றி

## கையப்பன்

பாட்டுக்குள்ளே பாட்டெடுத்து பாட வேண்டும் நாம்

பகவானின் அருள் வேண்டி பாட வேண்டும் நாம்

பக்தர் கூட்டம் கூடி எங்கும் பாட வேண்டுமே

பதினெட்டு படிகள் தாண்டி ஏற வேண்டுமே

அரிகர புத்திரனே கையப்பா

அரிகர புத்திரனே கையப்பா

(பாட்டுக்குள்ளே.........)

வீட்டுக்குள்ளே விந்தை புரிந்தாய் கையப்பா

வித்தகர் கூட்டம் காத்தருள்வாயே கையப்பா

விண்ணுலகெங்கும் போற்றிட வேண்டும் கையப்பா

வீதிகள் எங்கும் வலம் வருவாயே கையப்பா

அரிகர புத்திரனே கையப்பா

அரிகர புத்திரனே கையப்பா

(பாட்டுக்குள்ளே.........)

பள்ளிக்கட்டில் பள்ளி கொண்டாயே கையப்பா

பாசமுடன் நாம் பாடி வருவோம் கையப்பா

பரம சிவனின் சக்தியில் வந்தாய் கையப்பா

பாருலகம் போற்றிட வைத்தாய் கையப்பா

அரிகர புத்திரனே கையப்பா

அரிகர புத்திரனே கையப்பா

(பாட்டுக்குள்ளே.........)



வீ.சதாசிவம் அர்ச்சகர்

## கல்கமுவாவில் பழமை மிகு வரலாறு கூறும் அரசடி தலையாட்டிப் பிள்ளையார்.கல்கமுவ விநாயகர் ஆலயம்



நா.வரதராசா அர்ச்சகர்

இவர்களுக்குப்பின் இன்றைய அர்ச்சகர் ஜீவசர்மா

ஏறத்தாழ 500 வருடங்கள் பழைமை வாய்ந்த இக்கோவில் வரலாற்றை இப்பகுதி வாழ் பல்லின மக்களின் கருத்துக்களின் படியே எழுதக்கூடியதாக உள்ளது. பெரும் காட்டுப் பகுதியாக இருந்த இந்த ஊரில் சிறிய குளமொன்று உள்ளது. அக்காலத்தில் மக்கள் இக்குளத்தையே உபயோகித்து வரும் போது, அடிக்கடி காட்டு யானைகளும் நீரருந்த இக்குளத்துக்கு வருவதுண்டு. அவ்வப்போது யானைகள் இம்மக்களைத் துன்புறுத்தியுள்ளது. சில சிவபக்தர்கள் இந்த யானையை ஆனைமுகத்தானாக எண்ணி வழிபட இந்த யானைகளும் பலமுறை விலகிச் சென்றுள்ளது. இக்குளக்கரையில் ஓர் அரச மரமும் உள்ளது. இம்மரத்தின் வயது கிட்டத்தட்ட 500 வரையிருக்கும். இம்மரத்தடியிலே பக்தர்கள் பூஜைகள் பல ஆரம்பத்தில் செய்தனர். யானையும் இம்மரத்தடியில் அடிக்கடி நிற்கும். ஒருநாள் யானை மரத்தடியில் அமர்ந்து ஆனைமுகத்தானைப் போல் காட்சி தந்துள்ளது.

ஒருமுறை குளக்கரையில் ஒரு பெண் தன் குழந்தையுடன் குளித்துக் கொண்டிருந்த போது முதலை அக்குழந்தையை இழுத்துச் சென்றதாம். அச்சமயத்தில் அவ்விடத்தில் யாரும் இல்லாதபடியால் இப்பெண் பயந்து கதறியழுது அவ்விடத்தில் அமைக்கப் பெற்றிருந்த ஆனைமுகத்தானை வேண்டினாள். அவ்விநாயகப் பெருமான் தலையை ஆட்டியுள்ளார். என்ன அற்புதம். குளத்தின் மறு கரையில் அக்குழந்தை யானைக்கருகில் இருந்ததாகச் சொல்கின்றார்கள். இதனாலேயே இவ்விநாயகர் ஆலயத்துக்கு அரசமரத்தடி தலையாட்டி விநாயகர் என்று பெயர் வந்ததாக ஒருசாரார் கூறுகின்றனர்.

இந்நிலத்தை அந்நியர் அபகரிக்க முயன்ற போது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்புக் கூறுவதற்கு முதல் ஏழை விவசாயியான வீரன் எம்பெருமானை வேண்ட அவர் தலையாட்டி அவருக்கு சாதகமாகத் தீர்ப்புக் கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்தியதாகவும் கூறுகின்றனர்.

இக்கோவில் வீரன் பரம்பரையினரே தொடர்ந்து பராமரித்து வந்துள்ளனர். இதன் பின் முத்தான் (மூத்த விதான) என்பவர் அவரின் தகப்பனாரின் கடைசிக் காலத்தில் பொறுப்பேற்று 1930 ஆம் ஆண்டளவில் நாகலிங்கம் என்பவரைப் பூசகராக நியமித்துள்ளார். அப்போதே இவ்விடத்தில் ஆலயத்தைத் திருத்திய மைத்துள்ளார். ஓடுகள் வேயப்பட்ட சிறிய ஆலயமாகக் காட்சியளித்தது.

அச்வத்த மூலவாஸன் (அரச மரத்தடியில் இருப்பவன்) பக்தர்கள் வேண்டும் வரம் எல்லாவற்றையும் அளித்துக் குறைவற்றவர்களாக வாழ வைத்தான் வரப்பரதன். இடையிடையே பாம்புகளும் வந்து தொல்லைப்படுத்தியுள்ளன. தாழ்ப்ப காடுகளில் பாம்புகள் அதிகமாக இருந்ததாகவும் கூறுகின்றனர். இதனால் மக்கள் எம்பெருமானைத் தவறாது பூஜை செய்து வந்துள்ளனர். முத்தானின் பிள்ளைகளாகிய நாகம்மா, குமாரவேல் (விதான), கந்தையா, பொன்னம்மா, சின்னையா இவர்களின் முயற்சியாலும் ஏனைய இப்பகுதி வாழ் மக்களின் உதவிகளாலும் 1947 இல் நாகலிங்கம் என்ற அர்ச்சகரின் மருமகன் முறையிலான வீரகத்தில் சதாசிவம் என்பவரின் ஆலோசனைப்படி பழைய விநாயக விக்கிரகத்தை எடுத்து விட்டு புதிய விநாயக விக்ரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

எம்பெருமான் வீற்றிருந்த அவரை எதிர்நோக்கி மேற்கு முகம் கொண்டு மூஷக வாகனமும் ஐயனார் அரச மரத்தடியிலும் வீற்றிருக்கின்றனர். எம்பெருமானின் மூலஸ்தானத்துக்கு இடது பக்கமாக ஆதி விநாயகரும் (பழைய) வலது புறம் முருகப் பெருமானின் ஞானசக்தி வேலும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இங்கு உற்சவ மூர்த்தி விநாயகரும் எழுந்தருளிய நிலையில் உள்ளார். அரச மரத்தடியில் கிழக்கு முகம் நோக்கி எம்மை ஆட்சி செய்யும் சக்திதேவி மாரியம்மாவாக திரிசூலத்தில் அமர்ந்துள்ளாள். அத்துடன் மேற்கு முகம் கொண்டு பைரவரை குறிக்கும் முகமாக பைரவரின் ஆயுதமும் (சூலம்) தனியே அறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

எம்பெருமானின் ஆவணி சதுர்த்தியில் வெளிவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றார். இன்றும் தம்மை நம்பி வந்த பக்தர்களை அவர்களின் மனம் கோணாதபடி அவர்களின் கோரிக்கையை ஏற்று அவற்றை நிறைவேற்றியுள்ளார். கடந்த வருடத்தில் யானைகள் வந்து அட்டூழியம் செய்ததால் இவ்விநாயகப் பெருமானுக்கு இப்பகுதி மக்கள் பூஜை ஒன்றைச் செய்து முடித்தனர்.

பழமை மிகு பழம் பெரும் பிள்ளையார் அழகு மிகுந்த குளத்தருகினில் அரச மரத்தடியில் அல்லலுற்று வரும் அடியவர் குறைகளை தீர்த்து அருள் புரிய வட குலம் இருந்து 250 மைல்களுக்கு அப்பால் அமையப் பெற்ற கல்கமுவா வளமான

வழிகாட்டும் பிள்ளையார். இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன் இஸ்லாம் மதத்தை சேர்ந்த இளம் குடும்பஸ்தரான நபர் ஒருவர் குளத்தில் குளிக்கும் போது அக்குளத்தில் உள்ள முதலை காலைப்பிடித்து குளத்தினுள் இழுத்துச் சென்றது. இதனை கண்ணுற்ற இவர் மனைவியார் ஓடிவந்து அரச மரத்தின் கீழ் இருந்த கருங்கல்லால் செதுக்கப்பட்ட பிள்ளையாரை கட்டிப் பிடித்து கதறியழுது தனது தலையை முட்டி மோதிய போது இரத்தம் பெருகி மயக்கமுறும் நிலையில் அவ்விக்கிரகம் தனது தலையசைத்து "கவலைப்படாதே" எனும் பாவனையில் அசைத்ததை உணர்ந்த அம்மனைவியார் தனது கணவன் குளக்கரையில் பெருவிரல் அற்ற நிலையில் அவ்விடம் வந்தடைந்தார். அங்கு கணவனைக் கண்ட அம்மனைவியும், அதனை கண்ணுற்ற மக்களும் ஆனந்தம் அடைந்து அப்பிள்ளையாரை "தலையாட்டிப் பிள்ளையார்" எனும் திருநாமம் சூட்டி அனைத்து மத மக்களும் அவ்வாலயத்தைப் புனரமைத்து அன்று தொடக்கம் இன்று வரை சிறப்பாக வழிபட்டு வருகின்றனர். அவ்வாலயத்து அர்ச்சகராக வீர சைவ பரம்பரை சந்ததி சந்ததியாக அவன் பாதம் தொழுது தொண்டாற்றி ஆலயத்தை சிறப்பாக நடத்தி வருகின்றனர். இவ்வால யத்திற்கு பலமுறை சென்று வரும் சிறு அடியேன் அவ்வாலயத்திற்கு செல்லும் போதெல்லாம் அவ்வீதிகளை துப்பரவு செய்து வருவது மட்டுமன்றி அவனது அருளால் இயற்றிப் பாடும் திறமையும் பெற்றேன். என்னால் இயற்றப்பட்ட பாடல்கள் வருமாறு,

**கல்கமுவா பிள்ளையார்**

அருள்மிகு கல்கமுவாப் பிள்ளையார், 21.03.2000 அன்று ரெலிபோனில் எமது உறவினருடன் கதைத்துவிட்டு இரவு தூங்கும் வேளை கனவிலே பிள்ளையாரின் காட்சி காணப்பெற்று திடுக்குற்று விளித்த நான் அவற்றை பாமாலையாக இயற்றப் பெற்று பத்தர்களுக்கு சமர்ப்பணம்.

## துதி

ராகம் :- மாண்டு

கல்கமுவா பதிதனிலே காட்சி தரும் பிள்ளையாரே
கருணை முகம் கொண்டு காத்தருளும் பிள்ளையாரே
பிள்ளையாரே கஜமுகப் பிள்ளையாரே
பிள்ளையாரே கஜமுகப் பிள்ளையாரே
(பிள்ளையாரே)

அரச மரத்தடியில் அழகுற வீற்றிருந்தாய்
அல்லாவின் வழியோற்கு அற்புதங்கள் காட்டி நின்றாய்
ஆதிசிவன் மைந்தனாக அற்புதங்கள் காட்டுகின்றாய்

ஆனந்த அடியவர்க்கு அருள் ஞானம் தந்தாய்
(பிள்ளையாரே)

வேதப்பரம் பொருளாய் வீற்றிருக்கும் பிள்ளையாரே
வேண்டும் வரம் அருளும் வெற்றி விநாயகனே
வேதங்கள் பாடவைத்தாய் வேட்கை தணிவித்தாய்
வேலமுகம் கொண்டு வேடிக்கை காட்டுகின்றாய்
(பிள்ளையாரே)

யாப்பரை பதியுறைந்த யானைமுகப் பிள்ளையாரே
யாதி மத பேதம் இன்றி அருளளிக்கும் பிள்ளையாரே
யாகத்தை காத்திடவே போர் புரிந்த பிள்ளையாரே
யாவரையும் காக்கும் யானைமுகப் பிள்ளையாரே.
(பிள்ளையாரே)

**குளக்கரை ஓரம் பிள்ளையார் துதி**

குளக்கரை ஓரம்
குன்றம் கொண்ட மர்ந்த
குணநிதியே எங்கள் குலம் காக்கும்
பிள்ளையாரே

சமயங்கள் ஏதும் இல்லை
சாதி மதம் பேதம் இல்லை
சஞ்சலங்கள் தீர்த்து அருளும்
சக்தி விநாயகனே

எங்கும் நிறைந்தவனே
எங்கள் விநாயகனே
எழில் மிகு வடிவமாய்
எலி மீது வருபவனே

பற்பல வடிவமாய்
பல இடம் நீ அமர்ந்தாய்
பகைவர்கள் உனக்கில்லை
பார் போற்ற அருள் கின்றாய்

நித்தம் உனை வேண்டுவோர்க்கு
நிம்மதி என்றும் உண்டு
நீயே கதியென்றும்
நிழலாக வந்தருள்வாய்

**கல்கமுவ பிள்ளையார் துதி.**


அழகு மிகு சோலையில்
அமர்ந்து அருள் புரியும் ஐங்கரனே
அடியவர்க்கு அருள் அமுதளித்து
அவலங்கள் தீர்த்து அருளும் ஐங்கரனே

பழமை மிகு பிள்ளையாராய்
பக்தர் பசி தீர்த்தருளும் பிள்ளையாரே
பார் போற்றி துதிக்கும்
பற்பல வடிவம் கொண்டருளும் பிள்ளையாரே

விரைந்துன்னை வேண்டுகின்றேன்
வித்தக விநாயகனே
விண்ணவரும் மண்ணவரும் மக்களும்
போற்றி புகழ்ந்திட
விரைந்து வந்தருள் புரிவாய் ஐங்கரனே.

**இன்று கண்ட அனுபவத் தொகுப்பு**

**பூமியில் கண்டேன்**



புலமை என்னும் புதுமைகள் படைக்கும்
புலவர்களைக் கண்டேன்
பூவுலகில் இல்லை பூமித்தாயின் மடியிலே
மகிழ்வுறும் ஏழைப்புலவர்களைக் கண்டேன்
வறுமையின் பிடியில் வதங்கி வாழும் நிலையும் கண்டேன்
வளமிகுந்த பகட்டு பக்தர்கள் மத்தியிலே பரிகாசம் செய்யக் கண்டேன்
பக்தரோடு பக்தராக பாடி பரவசம் அடையும் நிலையும் கண்டேன்
பற்றுற்றேன் பரிவுடன் அவர் நிலைகள் அறிந்து கொண்டேன்
இவர்களை கண்டு இன்பம் கொண்டேன்
இலை மறை காய் போன்று மறைந்திருக்கும் இவர்களின் நிலை கண்டேன்
புலமைக்கு மட்டுமல்ல புதுமைகள் படைக்கும் பூவுலகிற்கே இழுக்கென்று கண்டேன்
புனித சக்தி தரும் தாயை வேண்டிப் புறப்பட்டேன்
மெய் அடியார்கள் உள்ளம் புகுந்தேன் மேன்மையுடன் இப்பணி கொண்டேன்
மேதினியில் வேறு இன்பம் இல்லை என பெற்றுக் கொண்டேன்
இத்தனையும் அன்னை துர்க்கையின் பாதமே சரணம் சமர்ப்பணம்.

**சில ஆலயங்களின் இடம்பெறும் செயல்கள்**

கோயில்கள் யாவும் வியாபாரம் கொடிக்கம்பம் குத்தகையாம் தேவர்கள் எல்லாம் வான்நோக்கிச் சென்று விட்டார்கள் ஓதல் ஓதுவித்தல் ஈதல் ஈதுவித்தல் இல்லாத அர்ச்சகர் உறவெல்லாம் உறவல்ல

## ஓர் அந்தணரின் இழுக்கான செயல் கண்டேன்

பெருமை மிகு பழம் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் வசிக்கும் அந்தணர் ஒருவர் எனக்கு விளைவித்த துன்பத்தின் உண்மையை அறியத்தருகின்றேன். மலை மாமறை அடிகளார் தூய்மையான அந்தணர் குலத்தின் பெருமையை இவ்வாறு கூறுகிறார். மெய்அடியார் ஒருவரோடு அடியவனோடு அடியவனாக அருகிருந்து அமுது உண்டு இன்புற்று வாழ்வதே அந்தணர் குலத்தின் பெருமை என்று கூறினார். ஆனால் ஒரு சில அந்தணர் மெய் அடியவர்களை அலட்சியம் செய்து அலைக்களித்துள்ளார். உண்மையான பக்த அடியார்களே! உங்களுக்கு அறியத்தருகின்றேன். எனது "புலமையும் வறுமையும்" என்ற நூலுக்கு நிதிகேட்டு 10.07.2011 அன்று சென்ற பொழுது அந்த அந்தணர் என்னை 22 நாட்கள் அலைக்கழித்து விட்டு 23ம் நாள் ஒரு மணிக்கு நிச்சயம் பணம் தருகிறேன் என்று கூறியதைக் கேட்டு நானும் அவரது வீட்டிற்குப் போய் பார்த்த பொழுது படுத்திருந்தார். நான் பழம் பிள்ளையார் வாசலில் நின்றேன். கிட்டத் தட்ட மூன்று மணித்தியாலங்கள் அவ் வாசலிலே காத்திருந்து விட்டு பின் அவரை யன்னல் ஊடாக ஐயா ஐயா என அழைத்தேன். அவரோ நித்திரை செய்வது போல் பாசாங்கு செய்வதை அறிந்து கொண்டேன். அவரது வீட்டு வாயிலிலே 5 மணிவரையும் நடப்பதை பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் குளித்து விட்டு ஜன்னல் அருகே இருந்த வேட்டியை உடுத்து விட்டு கையை உயர்த்திய போது நான் பார்த்து விட்டேன். மறுபடி மெதுவாக மற்ற வேட்டியை ஜன்னலுக்கு மறைவு போட்டார். இதனைக் கண்டு வேதனை உற்ற நான் இவரின் வெளி வாசலில் அவரின் வரவை நோக்கிக் காத்திருந்தேன். அவர் தனது மோட்டார் சைக்கிள் தலைக்கவசத்தை அணிந்து கொண்டு மறு பக்கம் வேலியின் அருகே மறைந்து நின்றார். நான் மறு பக்கமாக சுற்றி வந்து அவரைப் பார்த்தேன். இதனை வேறு சிலரும் பார்த்தனர். நேரம் 6 மணி ஆகிவிட்டது. என் மனவேதனையை பிள்ளையாரிடம் வேண்டுதல் செய்து விட்டு இந்த அந்தணரின் செயல் எனக்கு ஏற்பட்டது போல வேறு யாருக்கும் நடைபெறக் கூடாது என இறைவனிடம் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

## அலட்சியம் செய்த அதிபரின் நிலைகண்டு குமுறிய உள்ளத்தின் வாசகம்

மல்லாக பதிதனில் பழமை மிகு பிள்ளையாரே! மாணவ சமுதாயம் உருவாக்கும் பிள்ளையாரே. மாணவ சமுதாயத்திற்கு சற்று சிந்திக்க!

கற்ற கல்விக் கூடத்தில் கடிநாய் போன்று 05.09.2011 அன்று குதறிய அதிபரின் நிலை கண்டு கலங்கிய உள்ளத்தின் குமுறலில் எழுதும் வாசகம் - படியுங்கள் பண்பு கொண்டு நடவுங்கள்.

கற்ற கல்லூரியில் முன்பு இருந்த அதிபர் போன்று இன்றிருக்கும் அதிபரும் நடந்து கொண்டது அதிர்ச்சி தரும் செயலாகும். இக் கல்லூரியில் படித்த மாணவருக்கு கொடுக்கும் மரியாதை அவ் அதிபருக்கு நான் இங்கு படித்தற்கான ஆதாரங்கள் உண்டு காண்பிக்கிறேன் என்று கூறியும் அதற்கு செவி மடுக்காது உதாசீனம் செய்து அனுப்பிய அதிபருக்கு அறியத்தருவது பணக்கார வர்க்கத்து மாணவர்கட்கும் பகட்டான ஆசிரியரின் மாணவப்பிள்ளைகட்கும் படிப்பு குறைந்திருகந்தும் பட்டம் புகழ் பெற்றுக் கொடுக்க முற்படும் அதிபர்மாருக்கும்

ஆசிரியர்மாருக்கும் ஒன்று மட்டும் அறியத்தருகிறேன். சற்று சிந்தியுங்கள்.

எத்தனையோ வரலாறு படித்திருப்பீர்கள் ஏழை மாணவ சமுதாயம் தான் நல்ல அறிவைக் கொண்டு சமுதாய வளர்ச்சிக்கு சமய வழிபாடுகளும் மெய் உணர்வுகள் கொண்டு இறை அன்பு பெற்று விளங்குகின்றனர். இவற்றுக்கு உதாரணமாக மகாகவி காளிதாசன், குசேலர், அபிராமிப்பட்டர் இவற்றை விட மிகமிக சிறுவயதில் இருந்து கல்வி கற்க ஆசை கொண்டு இரவலாக புத்தகத்தை வாங்கிப் படித்து விட்டு வைத்த போது மழையில் நனைந்து விட்டது. அப்போது மன வேதனையுடன் அப் புத்தகத்தை உரியவரிடம் நடந்தவற்றைக்கூறி அத்தவறுக்கு அவருடைய தோட்டத்தில் வேலை செய்து பெருமை மிகுந்த மாணவனானான். பின் அமெரிக்க ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கன். உங்களைப் போன்று பசுத்தோல் போர்த்த புலிவேடம் போடும் அதிபர்மாருக்கும் ஆசிரியருக்கும் கற்றுணர்ந்த மாணவ சமுதாயமே உணர்ந்து பாருங்கள் வாழ்வில் இப்படி ஒரு நிலை வந்தால் உங்கள் உள்ளம் வேதனை கொள்ளும் என்று சிந்தியுங்கள்.

**சாதிபேசும் மனிதா**

சாதி இரண்டொழிய சாற்றும் கால் வேறு
இல்லை நீதி நெறி நளுவாதோர் இட்டோர்
பெரும் குலத்தோர் இடாதோர் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி என்ற கூற்றை நோக்கலாம்
இவற்றை நன்கு அறிய விரும்பும்
மனிதர்களே யாழ்ப்பாண வைபவ மாலை என்னும்
நூலைப் படியுங்கள் அவற்றில் இருந்து
உண்மை அறிந்து மற்றவர் மனதை
புண்படுத்தாது வாழப் பழகுங்கள்

பண்டாரம் என்று கூறி கேலி
பண்ணுபவரே சரியான சொல் விளக்கம்
தருகின்றேன் "பண் ஆரம்" என்பது இறைவனுக்கு தொண்டு செய்தல்
பண் என்பது பாடுவது ஆரம் என்பது
இறைவனின் கழுத்தில் மாலை கட்டி அணிவது
அதன் மூலம் இறைவனுக்கு பணி செய்பவர்
ஆகின்றோம் ஒரு சிலர் செய்யும் தவறுக்கு எல்லோரையும்
இழிவு படுத்தி இன்பம் கொள்வது
இறை அடியவரை இழிவு படுத்துவதாகும்.

**அடியேனின் எண்ணச் சிந்தனைகள்**

கோடான கோடி பொன் கொடுத்தாலும்
கொவ்வை இதழ் சிந்தும் பெண் கொடுத்தாலும்
நாடாளும் மன்னனின் முடி கொடுத்தாலும்
நயவஞ்சகர் எனதுயிர் எடுத்திட வந்தாலும்
பாடி உன் பாதம் பணிதேனே அன்றி

பாரினில் வேறு இன்பம் எனக்குண்டோ பராசக்தியே

சொந்தங்கள் என்பதும் பொய்யே
சொர்க்கங்கள் என்பதும் பொய்யே
பந்த பாசம் என்பதும் பொய்யே
பற்றுற்ற உடலும் பொய்யே
பரமனே உனதருள் மெய்யே
பற்றினேன் உனதிருப்பாதம் மெய்யென பணிந்தேன்.

### உலகின் தோன்றல்

கல்லாய் உருவாய் கருணையின் வடிவாய் கயமுகன் அ[illegible]ரித்தான்
சொல்லால் செயலாய் சொக்கனின் மகனாய் கயமுகன் [illegible]ன்றி நின்றான்
புல்லாய் பூண்டாய் புழுவாய் மரமாய் பூமியில் பிறக்க[illegible]ந்தான்
குரங்காய் பிறந்து குறிகள் மாறி மனிதனா[illegible]ப் பிறப்பெடுத்தான்
ஞானம் கொண்டு நல்லருள் பெற்று நலமு[illegible]ன் வாழ்ந்து வந்தான்
பிறப்பின் நிலைகளை அறிந்திடா மனிதன் [illegible]ணம்தனை மாற்றிக்கொண்டான்
எல்லா நிலைகளும் தனதென ஆக்கி வாழ்ந்திடக் கற்றுக் கொண்டான்
ஏழை மக்களின் ஏழ்மையைப் போக்கிட எவருக்கும் மனசு இல்லை

### வெற்றியும் பதவியும்

பட்டம் பறக்கிறது ஆனால் பட்டம்போல் பறக்க ஆசைப்பட்டு
பட்டம் பதவியை இழக்காதே
ஆட்சியில் இருந்து அதிகாரத்தை பயன்படுத்து
ஆனால் ஆட்சியை ஆள நினைக்காதே
நேர்மையுடன் நடந்து கொள் அதுவே
உனக்கு நீதியை பெற்றுத் தரும்
சோதனை என்பது வேதனை காலம் அதில்
வென்று விட்டால் அது இன்பத்தின் காலம்
உடலில் உறுதிகொள் உள்ளத்தின் உண்மைகள்
உறக்கம் கொள்வதில்லை
உன் உண்மை உணர்வுகள் ஈடேற வேண்டுமானால்
உன்னை நீ உணர் ஈடேற்றம் காண்பாய்.

### பக்குவம் எது

(கயவர்) கண்றொன்று சொல்வார் கண்றது தாம் அறியார் உரைப்பார்
கயவர் இவர் களிப்புறுவர் கள்ள உள்ளம் நாம் அறியோம்
சொல் ஒன்றறியாது சொல்லில் பொய் உரைப்பார் சோதியே நாம் அறியோம்
சொக்கனே நீ அறிவாய் அப்பா
(நல்லவர்) நல்லது ஒன்று சொல்வார் நயம்பட உரைப்பார் நாடி எம் நிலை அறிவார்
நல்லதும் கெட்டதும் நாம் உணர வறிய வைப்பார் எம் நிலை தாம் அறிவார்

(பக்தர்) பண்ணின் நிலை சொல்வார் பாட்டின் பொருள் தாம் அறிந்துரைப்பார்
பக்தரின் உள்ளம் பணிந்திட வைத்திடுவார் பக்குவ நிலை அறிந்தோர்.

**மாயையே மனிதா**

மாயையின் நிலை அறிய வரும் மனிதா
மானிடத்தில் மனிதன் நிலை அறிவாய் மனிதா
மாநிலத்தில் தெய்வங்கள் ஏதடா மனிதா
மானிடனின் அறியா மாயையே
சக்தியின் தாண்டவம் தானடா மனிதா
சிவம் என்பது உனது உயிர் தானடா மனிதா
சக்தி என்பது உடலின் அழிவதானடா மனிதா
சக்தி இழந்தால் பிணம் தானடா மனிதா
இவற்றை எண்ணி எண்ணி பாரடா மனிதா
இவை எல்லாம் மாயை தானடா மனிதா

**மனிதன் உணர வேண்டியவை**

1. அஞ்ஞானத்தால் உன்னால் இறைவனைக் காண முடியவில்லை என்றால் அதற்காக இறைவனே இல்லை என்று சொல்லி விடாதே
2. தூய்மையான இதயம் இல்லாத எந்த ஆணும் பெண்ணும் இறைவன் சன்னிதியை நெருங்கவே முடியாது
3. உலக ஆசையில் முழ்கிய ஒரு புழுவாக இருப்பதிலும் உண்மைப் போதித்துக் கொண்டே கடமையாற்றும் களத்திலே உயிரை விடுதல் மிக மிக நன்றே
4. மனோசக்தியை வளர்த்தால் நமக்கு ஆயுதபலம் தேவையில்லை
5. முகத்துதி செய்வது எழிது மனந்திறந்து பாராட்டுவதுதான் கடினம்.
6. ஏறிவந்த ஏணியை எட்டி உதைக்காதே வாழ்ந்துவந்த வாழ்க்கையை ஒருகணம் மறக்காதே

**அச்சம் தவிர்**

இமைகளைப் பூட்டி விழிகளைச் சிறை வைக்காதே,
பூட்டை உடைத்தெறி நம்பிக்கையின் ஒளிக்கீற்று
உன்நரம்பெல்லாம் பாராட்டு மூட்டைப்பூச்சிகூட முடங்கிக்கிடப்பதில்லை
மூளை கெட்ட மனிதனே
இன்னுமா அச்சம் சுகமே உன் சுமையாகும்
நீ சுறுப்பானால் சுமை உனக்கு சுகமாய் இருக்கும்

**மனித தர்மம்**

கோபத்திலும் பொறுமை தோல்வியிலும் விடாமுயற்சி
துன்பத்திலும் தைரியம் செல்வத்திலும் எழிமை
பதவியிலும் பண்பு இத்தனையும் கொண்டால் உன்வாழ்வில் வெற்றி நிச்சயம்.

## ,இறைவனுக்குத்தான் தெரியும்

கவி பாட வென்று நானும்
மேடைக்கு வந்து விட்டேன்
என்ன கவி பாடுவது என்று
தெரியாது நின்று விட்டேன்
சிந்தித்து சிந்தித்து பார்த்தேன்
சிந்தைக்கு வரவில்லை கவி என்னும்
புரட்டிப் புரட்டிப் பார்த்தேன்
மாதமோ பத்துமானது
பார்த்துப் பார்த்து இருந்தேன்
பருவ மழை பொழியும் என்று
ஆடிக் காற்றடித்து ஓய்ந்திடும் வேளையிலே
ஐப்பசியும் வந்ததப்பா
ஐப்பசியில் மழை பொழியுமென்று
காத்துக் காத்திருந்தோம்
அங்கிருந்து வந்ததொரு புயல் காற்று
அடடா என்ன காற்று
அடிக்கின்ற காற்றோ
அடை மழையை அடக்கி விட்டதப்பா
அப்பப்பா அது ஒன்றுமில்லையப்பா
காலத்தின் கோலம் செய்யும் யாலமப்பா
காத்திருக்கும் உழவனோ
ஏர் பிடிக்கும் காலம் வந்தால்
எத்தனை நேர்த்திகள் செய்வானப்பா
அப்பப்பா அத்தனையும் போய் விட்டதேயப்பா
ஆண்டவன் பேராலே அடிபிடி சண்டைகள்
ஆராய்ந்து பார்த்திட்டால்
அணுவுக்குள் ஆராட்சி
அப்பப்பா இது என்ன ஆராட்சி
அணுக்குண்டு ஆராட்சி
செத்திடும் பிணங்களும் சேதமுற்ற மரங்களும்
இப்புவி இயற்கையை மாற்றி விட்டதப்பா
இயற்கையின் சீற்றத்தால்
இன்னுமென்ன ஆகுமென்று
இறைவனுக்கு தானப்பா தெரியும்
இடி மழை வருவதற்குள்
இறைவணக்கமப்பா

## உலகில் எதற்கும் பாரபட்சம் பாராது
## தன்கருமத்தை சரியாக முடிப்பவன் யமன்

### காரிருள்

காரிருள் போல வந்து
கடிதென முடித்திடுவான்
கடிகாரம் செல்லாதையா - இவன் முன்
கடிகாரம் செல்லாதையா

பணம் பண்டம் செல்லாதென்றும்
பட்டம் புகழ் பார்க்க மாட்டான்
பட்டென்று முடிப்பான் ஐயா - இவனே
பட்டென்று முடிப்பான் ஐயா

வேகமாக வந்திடுவான்
வேடிக்கையாய் நின்றிடுவான்
வேதனை அறியான் ஐயா - இவனே
வேதனை அறியான் ஐயா

சாதி மதம் பாரான் இவன்
சான்றிதழும் கேக்கமாட்டான்
சட்டென்று முடிப்பான் ஐயா - இவனே
சட்டென்று முடிப்பான் ஐயா

காலநேரம் வந்துவிட்டால்
கணப்பொழுதும் பொறுக்க மாட்டான்
காரியத்தை முடிப்பான் ஐயா - இவனே
காரியத்தை முடிப்பான் ஐயா
வாகனத்தில் சென்றால் என்ன
வாய் மூடி நின்றால் என்ன
வாழ்வு தனை முடிப்பான் ஐயா - இவனே
வாழ்வு தனைமுடிப்பான் ஐயா

வாதங்கள் செய்தால் என்ன
வழிதவறி போனால் என்ன
வாழ்வு தனை முடிப்பான் ஐயா - இவனே
வரும் வழி தெரியாது ஐயா
கதிகலங்க வைத்திடுவான்

கவலைகள் ஏதும் பாரான்
காரியத்தை முடிப்பான் ஐயா - இவனே
காரியத்தை முடிப்பான் ஐயா

தூதன் இவன் என்று சொல்லி
துணிவுடன் நின்று இடல்
தூய்மை மணம் அறியான் ஐயா - இவன்
தூய்மை மணம் அறியான் ஐயா

பாசமுடன் நின்றிடுவான்
பாசக் கயிற்றை போட்டிடுவான்
பார பட்சம் பாரான் ஐயா - இவனே
பார பட்சம் பாரான் ஐயா

## ஸ்ரீமத் ஜகத்குரு பண்டிதாராத்ய சிவாசாரிய விம்சதி நாமாவளி

தத்புருஷமுகோத்பூதம்
ஸத்புருஷௌக வந்திதம்!
ஸ்துத்யம் ஸ்ரீ பண்டிதாராத்யம்
ஸம்ஸ்தவேஶ்ரீப்ஸிதாஸ்தயே!!

| | | | |
|---|---|---|---|
| ஓம் | ஸ்ரீ பண்டிதாராத்யாய | நமக | |
| ஓம் | பண்டிதமண்டலிமண்டனாய | நமக | |
| ஓம் | பரப்ரஹ்மஸ்வருபாய | நமக | |
| ஓம் | பரதத்வோபதோசகாய | நமக | |
| ஓம் | பரமாத்மனே | நமக | (5) |
| ஓம் | பரமேஷ்டிவந்தியாய | நமக | |
| ஓம் | பரமௌதார்யசாலினி | நமக | |
| ஓம் | பரமஹம்சாய | நமக | |
| ஓம் | பரதமர்த்தகாய | நமக | |
| ஓம் | பரமாச்சர்யகராய | நமக | (10) |
| ஓம் | பரசிவதாரகாய | நமக | |
| ஓம் | பரசிவலோகாலங்காராய | நமக | |
| ஓம் | பரசதலீலாகராய | நமக | |
| ஓம் | பரஹிருதயவித்தே | நமக | |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | பராத்பராய | நமக | (15) |
| ஓம் | பராதீனபராங்முகாய | நமக | |
| ஓம் | பரிதாபகராய | நமக | |
| ஓம் | பரித்தியக கவிபவாய | நமக | |
| ஓம் | பரிவிராஜகாசார்யாய | நமக | |
| ஓம் | பரிபூர்ணாய | நமக | (20) |

## ஸ்ரீமத் ஜகத்குரு விஸ்வாராத்ய சிவாசாரிய விம்சதி நாமாவலி

பஸ்யஸ்மரண மாத்திரேண
நிறூணாம்முக்கிகரஸ்திதா!
தம்வந்தேஜகதாதாரம்
வஸ்வா ராத்திவம் ஜகத்குரும்!!

| | | | |
|---|---|---|---|
| ஓம் | விஸ்வாராத்தியாய | நமக | |
| ஓம் | விஸ்வகர்ணாய | நமக | |
| ஓம் | விஸ்வநாதொத்பவாய | நமக | |
| ஓம் | விஸ்வரூபாய | நமக | |
| ஓம் | விஸ்வவந்தியாய | நமக | (5) |
| ஓம் | விஸ்வகர்த்திரே | நமக | |
| ஓம் | விஸ்வகேப்திரே | நமக | |
| ஓம் | விஸ்வஹரத்திரே | நமக | |
| ஓம் | விஸ்வகுரவே | நமக | |
| ஓம் | விஸ்வவிஜயாய | நமக | (10) |
| ஓம் | விஸ்வக்லேசராசாய | நமக | |
| ஓம் | விஸ்வவித்யாதிநாதாய | நமக | |
| ஓம் | விஸ்வசாந்திரயோநயே | நமக | |
| ஓம் | விஸ்வவேதவேத்யாய | நமக | |
| ஓம் | விஸ்வசக்ஷுஷே | நமக | (15) |
| ஓம் | விஸ்வக்லேசராசாய | நமக | |
| ஓம் | விஸ்வபாவக்ஷயாய | நமக | |
| ஓம் | விஸ்வகேதுநாசாய | நமக | |
| ஓம் | விஸ்வவிக்ரஹிய | நமக | |
| ஓம் | விஸ்வசம்பத்தாயினே | நமக | (20) |

## வீரசைவ சிவாச்சாரியார்கள் பூசை செய்த, செய்யும் ஆலயங்கள்

| | |
|---|---|
| கீரிமலை | - ஸ்ரீ இரேணுகேஸ்வர் ஆலயம் |
| கீரிமலை | - ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் |
| கீரிமலை | - ஸ்ரீ தீர்த்தக்கரை பிள்ளையார் ஆலயம் |
| கீரிமலை | - ஸ்ரீ குழந்தைவேள் சுவாமி ஆலயம் |
| கீரிமலை | - ஸ்ரீ குடியேற்ற வயிரவர் |
| பனிப்புலம் | - ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம் |
| பனிப்புலம் | - ஸ்ரீ ஞானவயிரவர் ஆலயம் |
| சாந்தை | - ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் |
| சாந்தை | - ஸ்ரீ காளியம்பாள் ஆலயம் |
| காலையடி | - ஸ்ரீ ஞானவயிரவர் ஆலயம் |
| சில்லாலை | - ஸ்ரீ ஞானவயிரவர் ஆலயம் |
| அளவெட்டி | - ஸ்ரீ தவலக்கிரி முத்துமாரியம்மன் ஆலயம் |
| அளவெட்டி | - ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம் |
| அளவெட்டி | - ஸ்ரீ ஐயனார் ஆலயம் |
| அளவெட்டி | - ஸ்ரீ சின்அம்பாள் ஆலயம் |
| அளவெட்டி | - ஸ்ரீ நாகவரதநாராயணர் ஆலயம் |
| இளவாலை | - ஸ்ரீ நாதோலை முத்துமாரியம்பாள் ஆலயம் |
| இளவாலை | - ஸ்ரீ மயிலங்கூடல் வயிரவர் ஆலயம் |
| கொல்லங்கலட்டி | - ஸ்ரீ கிளானை ஞானவயிரவர் ஆலயம் |
| கொல்லங்கலட்டி | - ஸ்ரீ மயிலங்கூடல் வயிரவர் ஆலயம் |
| காங்கேசன்துறை | - ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம் |
| காங்கேசன்துறை | - ஸ்ரீ ஐயனார் ஆலயம் |
| காங்கேசன்துறை | - ஸ்ரீ துர்க்கை அம்பாள் ஆலயம் |
| காங்கேசன்துறை | - ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம் |
| காங்கேசன்துறை | - ஸ்ரீ நரசிங்க வயிரவர் ஆலயம் |
| சாங்கேசன்துறை | - ஸ்ரீ வைத்திலிங்கமட சிவன் ஆலயம் |
| தெல்லிப்பழை | - ஸ்ரீ வல்லிபுர வயிரவர் ஆலயம் |
| யாழ்ப்பாணம் | - ஸ்ரீ கோட்டை முனீஸ்வரர் ஆலயம் |
| யாழ்ப்பாணம் | - ஸ்ரீ பண்ணை மீனாட்சி ஆலயம் |
| யாழ்ப்பாணம் | - ஸ்ரீ வைத்தியசாலை வைரவர் ஆலயம் |
| சரசாலை | - ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் |
| மந்துவில் | - ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் |
| கோண்டாவில் | - ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலயம் |
| உரும்பிராய் | - ஸ்ரீ சிவபூதநாதர் ஆலயம் |
| உரும்பிராய் | - ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம் |
| உரும்பிராய் | - ஸ்ரீ கிழக்கு அம்மன் ஆலயம் |
| திருகோணமலை | - ஸ்ரீ திருக்கோணேசர் ஆலயம் |

| | |
|---|---|
| திருகோணமலை | - ஸ்ரீ சமாது தங்கவிநாயகர் ஆலயம் |
| திருகோணமலை | - ஸ்ரீ உப்புவெளி பிள்ளையார் ஆலயம் |
| திருகோணமலை | - ஸ்ரீ சல்லி அம்மன் ஆலயம் |
| திருகோணமலை | - ஸ்ரீ ஆதிகோணேசர் ஆலயம் |
| மட்டக்களப்பு | - ஸ்ரீ கொக்கட்டிச்சோலை ஆலயம் |
| மட்டக்களப்பு | - ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம் |
| மட்டக்களப்பு | - ஸ்ரீ களுதாவளை பிள்ளையார் ஆலயம் |
| மட்டக்களப்பு | - ஸ்ரீ சங்கமான்கண்டிப் பிள்ளையார் ஆலயம் |
| கல்கமுவ | - ஸ்ரீ பிள்ளையார் ஆலயம். |
| கேகாலை | - ஸ்ரீ நூரி முத்துமாரியம்பாள் ஆலயம் |
| கிளிநொச்சி | - ஸ்ரீ கனகாம்பிகை அம்மன் ஆலயம் |
| கிளிநொச்சி | - ஸ்ரீ உருத்திரபுரீஸ்வரர் ஆலயம் |
| கிளிநொச்சி | - ஸ்ரீ எள்ளுக்காடு முருகன் ஆலயம் |
| கிளிநொச்சி | - ஸ்ரீ மீனாட்சியம்மன் ஆலயம் |
| கிளிநொச்சி | - ஸ்ரீ அம்பாள்குளம் துர்க்கையம்மன் ஆலயம் |
| கிளிநொச்சி | - ஸ்ரீ மலையாளபுரம் சித்திவிநாயகர் ஆலயம் |
| கிளிநொச்சி | - ஸ்ரீ ஊற்றுப்புலம் முருகன் ஆலயம் |
| கிளிநொச்சி | - ஸ்ரீ ஊற்றுப்புலம் முருகன் ஆலயம் |
| கிளிநொச்சி | - ஸ்ரீ காந்திகிராம் துர்க்கை அம்மன் ஆலயம் |
| கிளிநொச்சி | - ஸ்ரீ 55ம் கட்டை மனோன்மணி ஆலயம் |
| கிளிநொச்சி | - ஸ்ரீ துர்க்கையம்பாள் ஆலயம் |
| கிளிநொச்சி | - ஸ்ரீ திருவையாறு பிள்ளையார் ஆலயம் |
| கிளிநொச்சி | - ஸ்ரீ பன்னங்கண்டி பிள்ளையார் ஆலயம் |
| கிளிநொச்சி | - ஸ்ரீ செவ்வாநகர் துர்க்கையம்மன் ஆலயம் |
| கிளிநொச்சி | - ஸ்ரீ ஐந்தாம் வாய்க்கால் பிள்ளையார் ஆலயம் |
| கிளிநொச்சி | - ஸ்ரீ அறிவியல்நகர் முருகன் ஆலயம் |
| கிளிநொச்சி | - ஸ்ரீ திருவையாறு முத்துமாரியம்மன் ஆலயம் |
| வவுனிக்குளம் | - ஸ்ரீ சிவாலயம் ஆலயம் |
| மாங்குளம் | - ஸ்ரீ பிள்ளையார் ஆலயம் |
| செட்டிகுளம் | - ஸ்ரீ பெரியபுளியாலங்குளப்பிள்ளையார் ஆலயம் |
| செட்டிகுளம் | - ஸ்ரீ மதவு வைத்த குளப்பிள்ளையார் ஆலயம் |
| வீரபுரம் | - ஸ்ரீ பிள்ளையார் ஆலயம் |
| வவுனியா | - ஸ்ரீ மதவு வைத்த குளம் சித்திவிநாயகர் ஆலயம் |

## சமாதியில் இருந்து தோன்றிய ஆலயங்களும் ஆலய அருகில் சமாதி உள்ள ஆலயங்களும்

01. கீரிமலை ஸ்ரீ ரேணுகேஸ்வரர் ஆலயம் (ஐயம்பிள்ளைக்குரு)
02. கீரிமலை ஸ்ரீ குழந்தைவேற்சுவாமி ஆலயம்
03. நீராவியடி ஸ்ரீ கடையிற்சுவாமி ஆலயம்

04. கோண்டாவில் ஸ்ரீ அற்புதநாதன விநாயகர் ஆலயம் (குடையிற் சுவாமி)

05. கோண்டாவில் ஸ்ரீ பழங்காளி கோவில்

06. கோண்டாவில் ஸ்ரீ ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம் (ஏகாம்பரக்குருக்கள்)

07. மருதனாமடம் ஸ்ரீ இராமநாதன் சிவன் கோவில் (சேர்.பொன்.இராமநாதன்)

08. ஏழாலை ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம் (முருகேசு சுவாமி)

09. கொடிகாமம் ஸ்ரீ மடத்து சிவன் ஆலயம்

10. திருகோணமலை ஸ்ரீ சமாது தங்க விநாயகர் ஆலயம்

11. அளவெட்டி தெற்கு ஸ்ரீ நாகவரநாராயணர் ஆலயம்

12. உருத்திரபுர ஸ்ரீ உருத்திரபுரேஸ்வர ஆலயம் (சாமியம்மா)

13. அளவெட்டி ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம் (முருகையாக் குருக்கள்)

## சமாதிக் கிரியை பற்றிய தகவல்

சமாதிக்கிரியை யார் யாருக்கு செய்யலாம் என நோக்குமிடத்து மகான்கள், மற்றும் வீரசைவர்கள் சமாதி வைக்க தகுதி உடையவர்களாகின்றனர். சமாதி இரு வகைப்படினும் ஞானசமாதி தானாக கைகூடுவதும், கிரியாசமாதி உயிர் பிரிந்த உடலை தூய்மையாக்கி சிவரூபம் ஆக்கி செய்யும் கிரியையாகும். நாங்கள் இங்கே கிரியா சமாதி பற்றி அறிவதே தேவையாகவுள்ளது. வீரசைவர்களை இலிங்காயதர்கள் என்றும் அழைப்பர். "அந்தணர் ஆதிசன்" என்ற கந்தபுராண அடிகளால் இவர்களும் அந்தணர்களாவர். வீரசைவர்கள் மூன்று வகையாக படிநிலைக்கேற்ப வீரசைவ விளக்க வினாவிடையில் கூறப்பட்டுள்ளது. அவையாவன, நிராபார வீரசைவர்கள் (துறவிகள்), விசேட வீரசைவர்கள் (இலிங்கதாரணம் உடையவர்), சாமானிய வீரசைவர்கள் (அந்த மரபை உடைய விபூதி தாரணம் உடையவர்), இந்த மூன்று பிரிவினரையும் சிறு சிறு கிரியை வேறுபாடுகளுடன் சமாதி வைத்தலே முறையாகும். இவர்கள் உயிர் நீத்தலை சிவ ஐக்கியம் என்றே அழைப்பர். இவர்கள் சிவ ஐக்கியமானதும் அவ்வுடலை பத்மாசனத்தில் இருத்தி சிவரூபமாக பாவனை செய்து விசேம வீரசைவருக்கு இரேவணாராத்திரியார், தாருகாராத்திரியார், ஏகோராமராத்திரியார், விஸ்வவாராத்திரியார், பண்டிதாராத்திரியார் என்றும் ஐம்பெரும் குரவரான பஞ்சாசாரியை பூசித்தும் சாமனிய வீரசைவர் எனின் மகாதேவருத்திரர், சிவருத்திரர், உருத்திரருத்திரர், சங்கரருத்திரர், நீலகோகிதருத்திரர், ஈசானருத்திரர், விஜயருத்திரர், பீமருத்திரர், தேவதேவருத்திரர், பவோத்பவருத்திரர், கபாலீசருத்திரர் என்னும் ஏகாதசருத்திரரை பூசித்தும் இவ்வுடலை ஆற்றங்கரையிலோ, கடற்கரையிலோ, ஆயத்தருகிலோ, குளக்கரையிலோ சமாதி வைப்பர். சமாதி வைக்கும் போது உடலை உப்பு, நெல்லு, செங்கல்மா, விபூதி, வில்வம், கற்பூரம் முதலிய பொருட்களால் மூடி நிறைவாக்கி மூன்றாம் நாள் (மூன்றாங்குழி) பஞ்ச பூதத்தினாலான இவ்வுடம்பை அந்தந்த பூதங்களுக்கு அர்ப்பணிக்கும் பொருட்டு பஞ்சலிங்கங்கள் மண்ணிலே பிடித்து சிரசின் மேல் வைத்து அபிஷேகித்து படைத்து பூசிப்பர். பின்பு பதினொராம் நாள் மோட்சதீபம் செய்து நிறைவு செய்வர். இவர்களது சமாதிக்கிரியைகளை பூர்வ கிரியைகள் என்றே அழைப்பர். ஆதலினால் பூசை முதலிய ஆலய கிரியைகள் செய்வோர் சமாதிக்

கிரியைகள் செய்தலினால் அவர்கள் கோயிற் கிரியைகள் செய்யக்கூடாது என்கிற கருத்து அர்த்தமற்றதாகிறது. தொன்மையான காலம் தொட்டே வீர சைவ சிவ வழிபாடும் புதைக்கும் (சமாதி) மரபும் நிலவி வருகிறது என்பது வரலாற்று சான்றாகும்.

"மனைவிதாய் தந்தை மக்கள் மற்றுள சுற்றமென்னும்
வினையுளே விழுந்த முந்தி வேதனைக் கிடமாகாதே
கனையுமா கடல்சூழ் நாகை மன்னுகா ரோணத்தானை
நினையுமா வல்லி ராகில் உய்யலாம் நெஞ்சினீரே".

(அப்பர் தேவாரம்)

"பாருலகத்தோர் வாழ்க பரமர்தன் அடியர் வாழ்க
சீர்பெறும் அன்னை சுற்றம் திகழவே வாழ்க வாழ்க
கூர்மழு வேந்துங் கையோன் குருமலர்பாதம் போற்றும்
வீரசைவத்தோர் வாழ்க விண்ணவர் வாழ்கத்தானே
பஞ்சமடம் பன்னீராயிர மகாமடத்துக்கும் குருலிங்க
சங்கமத்துக்கும் அல்லமாப்பிரபு தேர்க்கும் சிவசரண சரணார்த்தி"

மாரி பெய்க மநுநெறி யோங்குக
பாரி லொண்சிவ பக்தர்கள் மல்குக
சீரின் மல்குங் சிவன்புகழ் வெல்குக
வீரசைவம் விளங்குக வெங்குமே

## ஐந்தின் வகைகள்

| | |
|---|---|
| ஐந்தெழுத்து | - ந ம சி வா ய |
| பஞ்சபுராணங்கள் | - தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம். |
| பஞ்சலிங்கம் | - சோமேசலிங்கம், சித்தேஸ்வரலிங்கம், இராமநாதலிங்கம், மல்லிகார்ச்சுனலிங்கம், விஸ்வநாதலிங்கம் |
| பஞ்சபூதங்கள் | - பிருதுவி (நிலம்), அப்பு (நீர்), தேயு (தீ), வாயு (காற்று), ஆகாசம் (வெளி) |
| பஞ்ச லிங்கம் | - சுயம்புலிங்கம், காணலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மானிடலிங்கம். |
| பஞ்சபூதலிங்கம் | - மண்லிங்கம் (திருவாரூர்), நீர்லிங்கம் (திருவாணைக்கா), அக்கினிலிங்கம் (திருவண்ணாமலை), காற்றுலிங்கம் (திருக்காலத்தி), ஆகாயலிங்கம் (சிதம்பரம்). |
| பஞ்ச ஈஸ்வரங்கள் | - திருகோணேச்சரம், திருக்கேதீச்சரம், முனீஸ்வரம், நகுலேஸ்வரம், தான்தோன்ரீச்சரம். |
| பஞ்சபிரமந்திரம் | - ஈசானம், தத்புருஷம், அசோகம், வாமதேவம், சத்தியோஜாதம். |
| பஞ்ச சபைகள் | - இரத்தினசபை (திருவாலங்காடு), கனகசபை (சிதம்பரம்), |

ரஜதசபை (மதுரை), தாமிரசபை (திருநெல்வேலி), சித்திரசபை (திருக்குற்றாலம்)

பஞ்சகோசம் - அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம்.

பஞ்சசுத்தி - ஆத்மசுத்தி, ஸ்நானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, லிங்கசுத்தி.

பஞ்சகலை - திவிர்த்திகலை, பிரதிஷ்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தீயாதீதகலை.

பஞ்சாசனம் - அநந்தாசனம், சிங்காசனம், யோகாசனம், பத்மாசனம், விமலாசனம்.

பஞ்சாசாரியர் - இரேவணாராத்திரியார், தாருகாராத்திரியார், ஏகோராமராத்திரியார், விஸ்வாராத்திரியார், பண்டிதாராத்திரியார்.

பஞ்சாங்கம் - திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம்.

பஞ்சலோகம் - பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம்.

பஞ்சமூலம் - செவ்வியம், சித்திரமூலம், கண்டுபரங்கி, பேரரத்தை, சுக்கு

பஞ்சகிருத்தியம் - சிருஷ்டி (படைத்தல், திதி (காத்தல்), சம்காரம் (அழித்தல்), திரோபவம் (மறைத்தல்), அனுக்கிரகம் (அருளல்).

பஞ்சகௌவ்வியம் - பால், தயிர், நெய், கோசலம், கோமயம்.

பஞ்சாமிர்தம் - வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், மாதுளம்பழம், தேங்காய்த்துருவல் (சூட்சு மாகமம்)

இரசபஞ்சாமிர்தம் - பால், தயிர், நெய், தேன், சக்கரை.

பஞ்சபாணம் - தாமரை, அசோகு, மா, முல்லை, கருங்குவளை.

பஞ்சவாசம் - இலவங்கம், ஏலம், கற்பூரம், சாதிக்காய், தக்கோலம்.

திருமால்பஞ்சாயுதம் - சக்கரம், தனுசு, வாள், தண்டு, சங்கம்.

பஞ்சசிவதத்துவம் - நாதம், விந்து, சாதாக்கியம், மகேச்சுரம், சுத்தவித்தை.

பஞ்சமிநட்சத்திரம் - அவிட்டம், சதயம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி.

பஞ்சபாண்டவர்கள் - தருமன், வீமன், அர்ச்சுணன், நகுலன், சகாதேவன்.

ஐம்பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி

ஐம்புலன் - ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை.

ஐந்துவத்தை - சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்.

ஐந்துகன் மேந்திரியம்- நாக்கு, கை, கால், குதம், குறி

பஞ்சமாபாதங்கள் - கொலை, களவு, பொய், மது அருந்துதல், குருநித்தை.



கரகத்திலகம் புலவர் ஐயாத்துரை

# கரகத்திலகம் ஐயாத்துரை

## தவளக்கிரி முத்துமாரியம்மன் ஆலய வரலாறு

சைவமும் தமிழுந்தழைத் தோங்கும் ஈழவள நாடு திண கைலாசம் என்னுஞ் சிறப்புப் பெயருங் கொண்டுள்ளது. ஊர்கள் தோறும் கோவில்கள் பக்தி மணம் பரப்பி நிற்கின்றன.

இவ் ஈழ நாட்டில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடபால் அமைந்துள்ள அளவெட்டி என்னும் அரிய புகழ் படைத்த எம் ஊர் வயலும் வயல் சார்ந்த பண்ணைகளும் வளஞ் செழித்த பச்சைப் பசேலென்றும் என்றும் காட்சியளிக்கும். இவ்வூர் ஆன்றவிந்தடங்கிய கேள்விச் சான்றோர் பலர் வாழ்ந்த பெருமை பெற்றது. இங்கு வாழ்ந்த வடமொழி, தென்மொழி வல்லுனரான வைத்தியநாதமுனிவர் வியாக்கிரபாத புராணம், புலியூர்ப் புராணம் என்னும் நூல்களை ஆக்கி சைவ நல்லுலகத்திற்குத் தந்திருக்கிறார்கள். சங்கீதம், நாட்டியம், நாடகம், சிற்பம், ஓவியம் ஆகிய இன்கலைகளின் இருப்பிடம் இவ்வூர்.

நகுலேஸ்வரத்திற்கு நேர் தெற்கே இரண்டு கல்தொலைவில் தெல்லிப்பழை பண்டத்தரிப்பு வீதியில் அளவையூரின் அமைதி மிகு சூழலில் ஓமெனும் மந்திரத்தின் பொருளாயிருக்கும் உலகத்து நாயகி அன்னை முத்துமாரி கோயில் கொண்டு அருள் பாலிக்கும் தவளக்கிரித்திருத்தலம் அமைந்திருக்கிறது.

### தவளக்கிரி

தவளக்கிரித் திருத்தலத்தின் வரலாற்றைச் சரிவரச் சொல்லக்கூடிய சரித்திர புராணச் சான்றுகளோ சாசக ஏடுகளோ எவையுமில்லை. கர்ண பரம்பரைக் கதைகளே ஓரளவுக்குக் கைகொடுக்கின்றன. கோவிலின் பழமையை அன்னையின் திருவுருவ அமைப்பும் முன்பிருந்த தூண்களும் கட்டடம் அமைக்கப் பயன் படுத்தப்பட்ட பொருட்களும் எடுத்துச் சொல்லுகின்றன.

### முணுமுணுத்த அம்மன்

அன்னை முத்துமாரி அளவெட்டியில் கோயில் கொண்ட வரலாறே அதிசயமானது. நீண்ட நெடுங்காலத்துக்கு முன்பு வட்டுக்கோட்டை சுழிபுரம் வாழ்மக்கள் கடலிலிருந்து எடுத்த அன்னையின் திருவுருவச் சிலையை வீடொன்றில் வைத்து ஆதரித்து வந்திருக்கிறார்கள். இரவு நேரங்களில் அன்னையை வைத்திருந்த இடத்திலிருந்து முணுமுணுக்கும் சப்தம் வந்து கொண்டிருந்தது. இதனால் அச்சமும் அதிசயமும் கொண்ட அடியவர்கள் பொங்கலென்று பூசையென்றும் பக்தி பரிமளிக்க சிறப்பாகச் செய்து வந்தார்கள். இருந்தும் முணுமுணுப்பு நிற்கவேயில்லை. அதேவேளை அன்னை பேசியது யாருக்கும் புரியவுமில்லை. நிறைவில் முணுமுணுத்த அம்மன் என்று பெயர் சூட்டி விட்டார்கள்.

### கூடத்தம்மன்

அக்காலப்பகுதியில் அளவெட்டியிலிருந்து ஆசார சீலர்களாகிய சிலர் அவ்வூர்களுக்குப் போய் வருவதுண்டு. அங்குள்ளவர்கள் இவர்களிடம் அம்பிகையைப் பற்றிப் பிரஸ்தாபித்து தங்கள் அச்சத்தையும் கூறினார்கள். அம்பிகையை உரிய முறையில் ஆராதிக்க முடியாதென்பதை உணர்ந்த அவர்கள் எடுத்துச் சென்று ஆராதிக்குமாறும் வேண்டிக்கொண்டார்கள். அவர்கள்

வேண்டுகோட்படி தேவியை அளவெட்டிக்கு கொண்டு வந்தார்கள். அளவெட்டியில் தவளக்கிரி கோயிலுக்குத் தென்புறமாக பிரதான வீதியோரம் இப்போதுமுள்ள மடத்தின் பின்புறமுள்ள வீட்டின் கூடத்தில் வைத்து வழிபடலாயினர். முதன் முதலில் தேவியை ஆராதித்து வந்தவர் ஒரு சாமியார் என்று கூறப்படுகின்றது. சாமியார் காலமான பின் மடத்து வளவின் பின்பக்கம் அவரை அடக்கம் செய்த இடத்தில் ஒரு சிறு சமாதி கட்டப்பட்டுள்ளது. கூடத்தில் வைத்து வணங்கியமையால் கூடத்தம்மன் என்ற பெயருங் கூடவே வழங்கலாயிற்று. இங்கு வந்த பின்பும் தேவியின் முணுமுணுப்பு நீடித்ததாகவும் பின்னர் படிப்படியாகக் குறைந்து முற்றும் இல்லாமல் போய்விட்டதாகவும் கூறுகிறார்கள்.

அம்பிகை அளவெட்டிக்கு வந்து சேர்ந்தாலும் வட்டுக்கோட்டை சுழிபுரம் வாழ் மக்கள் நெல்லும் பூஜைத் திரவியங்களும் தேவி வழிபாட்டுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். இடையிடையே வந்து வணங்கியும் சென்றார்கள். மாவிட்டபுரம் சந்நிதி கோவில்களுக்குச் செல்லும் போதும் இங்கு தங்கி பொங்கலிட்டுப் பூஜை செய்யத் தவறுவதில்லை. அவர்களின் வசதிக்காகவே இந்த மடமும் காலப்போக்கில் பல மாறுதல்களைக் கண்டுள்ளது. மடத்தைக் கட்டுவித்தவர் அளவெட்டியைச் சேர்ந்த றங்கூன் நாகலிங்கம் அவர்களின் முன்னோர்கள் ஆவார். இவ்மடம் தற்போது புனரமைப்பு வேலைகள் கருதி இடிக்கப்பட்டுள்ளது.

இப்போது அம்பிகையை பிரதிஷ்டை செய்திருக்கும் தவளக்கிரி கோயிலுக்கும் மடத்து வளவுக்குமிடையே கோவில் தெற்கு வீதி மட்டும்தான் உண்டு. கூடத்தம்மன் தவளக்கிரிக் கோவிலில் எக்காலத்தில் யாரால் பிரதிஷ்டை செய்யப் பெற்றாள் என்பது அறிய முடியாதிருக்கின்றது.

## காத்தவராயர் கோவில்

இத்தவளக்கிரிக் கோவில் கூடத்தம்மனைப் பிரதிஷ்டை செய்ய முன்பு காத்தவராயர் கோவில் என்றே வழங்கி வந்திருக்கின்றது. இன்றும் தூரத்திலிருப்பவர்கள் காத்தவராயர் கோவில் என்றே கூறுகிறார்கள். மரபு வழி வந்த மாவைக்கந்தன் காவடிப்பாடல் ஒன்றில் “செங்கழனி சூழ் அளவை நடுவண் கோவில் அமர் காத்தவராயன் சந்நிதியிலிருந்து துங்கமிகு காவடியை எடுத்து” என்று இக்காத்தவராயர் கோவிலிருந்து காவடிகள் புறப்பட்டு மாவிட்டபுரம் சென்றதாகப் பாடப்பட்டுள்ளது. இன்னும் காத்தவராயர் உற்சவமூர்த்தியும் கழுமரமும் இன்றுங் கோவிலில் உள்ளன. பலியிடும் வழக்கமும் நீண்ட காலமாக இருந்திருக்கிறது. எது எப்படியாயினும் இப்போது தேவி முத்துமாரி கருவறையில் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கிறாள்.

அன்னையின் கருவறை அமைந்த பகுதி அளவையூரைச் சேர்ந்தது. ஆயினும் வடக்கு வீதி பன்னாலை ஊரைச் சேர்ந்தது. அன்னையை முதல் முதலில் வணங்கி வந்தவர்கள் வட்டுக்கோட்டை சுழிபுரம் வாழ் மக்கள். வட்டுக்கோட்டை. சுழிபுரம், அளவெட்டி, பன்னாலை ஆகிய நான்கு ஊரவர்களும் தேவியை தங்கள் குல தெய்வமாகக் கொள்ளுவதில் வியப்பேதுமில்லை. அயல் ஊரவர்கள் மட்டுமன்றி

தொலைவிலிருந்தும் அன்னையின் அருள் வேண்டி வந்து கொண்டிருப்பவர்களுக்கு அளவேயில்லை.

## பலியிடுதல்

நீண்ட காலமாக இக்கோவிலில் வேள்விக் கொடியேற்றி பலியிடும் வழக்கம் இருந்து வந்திருக்கிறது. நாமறிந்த வரையில் 1918ம் ஆண்டளவில் ஒரு மகா கும்பாபிஷேகத்தைக் கோணேசர் கோவிலைச் சேர்ந்த சிவஸ்ரீ சரவணமுத்துக் குருக்களவர்கள் நடத்தி வைத்திருக்கிறார்கள். 1924, 1925 அளவில் பலியிடுதல் நிறுத்தப்பட்டு மகோற்சவம் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். தொடர்ந்து பத்து ஆண்டுகள் வரையில் மகோற்சவம் நடந்திருக்கின்றது. ஆயினும் திரும்பவும் பலியிடும் வழக்கத்தைக் கொண்டு வரும் முயற்சியில் சிலர் ஈடுபட்டமையால் பெரிய குழப்பநிலை தோன்றி மகோற்சவம் தடைப்படலாயிற்று. பலியிடும் முயற்சியும் பலிக்கவில்லை. 1935ம் ஆண்டளவில் தூபியின் திருத்த வேலைகள் செய்யப் பெற்று இரண்டாவதாக மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து சில ஆண்டுகளின் பின்னர் திரும்பவும் மகோற்சவம் நடைபெறத் தொடங்கியது. கொடியேற்றத்திலிருந்து பத்தாம் நாள்தோறும் பதினொராம் நாள் ஆனி உற்சவத்தன்று தீர்த்தமும் நடைபெறலாயிற்று. கும்பாபிஷேகத்தையும் மகோற்சவத்தையும் பண்டித சிவஸ்ரீ மகாணிக்கத்தியாகராஜக் குருக்களவர்கள் செய்து வைத்தார்கள். 1965ம் ஆண்டு தை மாத அத்த நட்சத்திரத்தில் மூன்றாவது மகா கும்பாபிஷேகம் கோவிலில் செய்யப் பெற்ற பல திருத்த திருப்பணி வேலைகளைத் தொடர்ந்து நடைபெற்றது. இக்கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்களவர்கள் செய்து வைத்தார்கள்.

வீர சைவக் குருக்கள் மட்டுமன்றி பிராமணக் குருமாரும் சில சந்தர்ப்பங்களில் மகோற்சவத்தில் பணி புரிந்திருக்கிறார்கள். இதுவரையில் இக்கோவிலில் குருமாராகப் பணிபுரிந்தோர்.

| | |
|---|---|
| சிவஸ்ரீ சரவணமுத்துக் குருக்கள் | பிரம்மஸ்ரீ சதாசிவக் குருக்கள் |
| இரத்தினம் குருக்கள் | சிவஜ சி.மாணிப்பத்தியாகராஜா குருக்கள் |
| ச.சதானந்தம் குருக்கள் | ச.சொக்கலிங்கம் |
| இராசையா | கந்தையா |
| ஐ.செல்வரத்தினம் | சி.ஐயம்பிள்ளை |
| செ.வைரவநாதன் | |

இங்கு ஐந்து வீர சைவ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பரம்பரையாகப் பூசை உரிமை பெற்றிருக்கிறார்கள். சமீப காலத்தில் இங்கு பூஜை செய்பவர்கள் வீராகம விதிப்படி இலிங்கதாரணம் செய்தவர்களாக இருக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது.

இக்கோவிலுக்குரிய தலவிருட்சம் சரக்கொன்றை. இது வடக்கு வெளிவீதியில் வானுயர வளர்ந்து நிற்கிறது. ஆனி மகோற்சவ காலத்தில் பொன் போலப் பூச்சொரிந்து தேவியைப் பூசித்து நிற்கிறது. வயல் நிலங்களும் தோட்டக் காணிகளும் இக்கோவிலுக்குத் தர்மசாசனம் செய்யப்பட்டுள்ளன. இத்தகைய நிலமொன்றில் தவளக்கிரி கோவிலின் பின் புறமாக ஆதி வீரபத்திர சுவாமி ஆலயம் 1982ம் ஆண்டில் எடுக்கப்பட்டிருக்கிறது.

கோவிலின் முன்புறமும் வலப்புறமும் கோவில் தொண்டு செய்யும் இசையாளர் மரபினரும், மலர்மாலை புனைவோரும், வேளாண் பெருமாக்களும் ஏனையோரும் வாழ்கின்றனர். சிற்ப சித்திர நுண்கலை வல்லுநர்களும் இங்கு வசிக்கின்றனர். அன்னையின் அடித்தொண்டே வாழ்க்கையில் ஆக்கமெலாந் தருமென்று உறுதியாக நம்புகின்றனர்.

## உற்சவமூர்த்தி

முன்பு விநாயகர், காத்தவராயர், அம்பிகை மூவரும் உற்சவ காலங்களில் பவனி வரும் வழக்கம் இருந்திருக்கிறது. இப்போது அம்பிகை மட்டுமே உற்சவ காலங்களில் வீதி வலம் இருக்கிறாள். 1935ம் ஆண்டு நடந்த மகா கும்பாபிஷேகதத்துக்கு சிறிது காலம் முன்னதாக இப்போதிக்கும் உற்சவமூர்த்தி உருவாக்கப்பட்டது. இவ் அம்பிகையின் அழகும் ஒளியும் அருட்பொலிவும் மிகமிகச் சிறப்பாக அமைந்ததிருக்கிறது. இந்த வகையில் சிற்ப ப்பம்சம் பொருந்திய தேவி திருவடிவம் இப்பகுதியில் இல்லையென்று சிற்ப நூல் வல்லுநர்கள் கூறுகின்றார்கள். இச்சிலையை வடிவமைத்த சிற்பி மூன்று முறை முயன்றும் ஏதோ ஒரு ஊனம் சிலையில் ஏற்பட்டு வந்தமையால் மனம் சோர்ந்து இருந்த போது அம்பிகையே ஒரு மூதாட்டி உருவில் வந்து ஆறுதல் கூறி ஆசி வழங்கிய பின் நான்காவதாக வடித்த திருவுருவம் தான் இது என்றும் இம்மூதாட்டி நிழல் கருவறையில் பதிந்திருந்ததாகவும் ஒரு கதை கூறப்படுகின்றது.

நடராஜப் பெருமானுக்கு இங்கு தனிச் சந்நிதி இருக்கிறது. இது தெற்கு நோக்கி அமைக்கப் பெற்றிருக்கிறது. வருடத்தில் ஆறு விசேட அபிஷேக தினங்களோடு ஏனைய இரு தினங்களில் மட்டும் நடராஜப் பெருமான் வீதி வலம் வருகிறார். பரிவார மூர்த்திகளான விநாயகர், முருகன், நாகேஸ்வரர், வைரவர் சந்நிதிகளும் இங்கு இருக்கின்றனர்.

## சில வழக்கங்கள்

இக்கோவிலுக்கே சிறப்பாக அமைந்த சில வழக்கங்கள் நீண்ட காலமாக இருந்து வருகின்றன. சிவராத்திரி தினத்தன்று இரண்டாம் ஜாமப்பூசை முடிவுற்றதும் பூசகர் மூலஸ்தானத்திலிருந்து கர்ப்பூரச்சட்டி ஒன்றை ஏந்தி வருகிறார். மங்கள வாத்தியங்கள் ஒலிக்க அது எதிரே சிறிது தூரத்திலிக்கும் ஐயனார் ஆலயத்துக்குக் கொண்டு வரப்பட்டு வீதி வலம் வந்து மூலஸ்தானத்தில் வைக்கப் பெற்ற பின்னரே அங்கு பூஜை நடைபெற்று பிரசாதம் வழங்கப்படுகிறது. விஜயதசமி அன்று தேவி கும்பிழாவளைப் பிள்ளையார் கோவிலுக்குச் செல்கிறாள். அங்கு வாழை வெட்டி மகா நோன்பு விழா முடிந்து திரும்பி வரும் போது ஐயனார் ஆலயத்திலும் வாழை வெட்டும் வழக்கம் இருந்திருக்கிறது.

பங்குனி மாதம் கோவில் குளிர்த்திக்கு வரும் பண்டங்களிலிருந்து சிறிய அளவில் சேர்த்து அயலிலுள்ள ஆலயங்களுக்கு முதல் நாள் மாலையிலேயே அனுப்பப்படுகிறது. குளிர்த்தி தினத்தன்று அதிகாலை நான்கு ஐந்து மணியளவில் சோறு ஆக்கும் முதல் அண்டா அடுப்பேற்றப்படுகிறது. இந்த அடுப்பேற்றும்

வைபவத்தை ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பரம்பரையாகச் செய்து வருகின்றார்கள். இவ்வழக்கங்கள் எப்போது ஏற்பட்டன என்பதைச் சொல்ல வல்லவர்கள் எவருமில்லை.

## புகழ் பாமாலைகள்

அன்னையின் அருட்பெருக்கினைப் போற்றிப் புகழ்ந்து பாடப்பட்ட பாடல்கள் சில நயமிக்கவை. ஆக்கியவர் யாரென்று தெரியாதத தவளக்கிரி முத்துமாரியம்மை பதிகம், வழிவழி அண்ணாவிமார் போற்றிப் பரவிய துதிப்பாடல் தொகுப்பு, வைத்தியர் அம்பலவாணர் கதிரித்தம்பியவர்கள் செய்த தவளக்கிரி முத்துமாரியம்மன் இரட்டை மணிமாலை, பன்னாலை ஊரைச் சேர்ந்த அறிஞர் மு.பொன்னம்பலமவர்கள் இயற்றிய முத்துமாரியம்மன் திருவூஞ்சர், கவிஞர் செ.கதிரேசர்பிள்ளை அவர்களின் திருப்பள்ளியெழுச்சி தவளக்கிரி முத்துமாரியம்மன் அந்தாதி என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

## அற்புதங்கள்

அன்னை முத்துமாரியின் அருளுக்கு எல்லையேது. அவள் அருட்பார்வை பெற்ற இவ்வூரில் விடந்தீண்டி மாய்ந்தவர்கள் எவருமில்லை. தொற்று நோய்களும் மக்களைத் துன்புறுத்தியதில்லை. மரத்திலிருந்து விழுந்தோ, நீரில் மூழ்கியோ எவரும் இறந்ததில்லை. அம்மையைத் தஞ்சம் அடைந்தவர்களுக்கு அல்லல் எதுவுமில்லை. பக்தியுடன் அணுகுவார்கள். அவள் ஒரு கற்பகம். கேட்டதெல்லாம் தருவாள். பிள்ளை வரம் வேண்டுவோர்க்கு அவள் பேரருளால் கிடைத்துவிடும். தீராத பிணிகளெல்லாம் அவள் திருவடிகள் தீர்த்து வைக்கும். அம்மை செய்த அற்புதங்கள் அனேகம். சிவராத்திரி தினத்தன்று விரதம் அனுஷ்டிக்க வந்தவர்களில் சிலர் தேவி வெண்பட்டு உடுத்தி மின்னும் ஒளியுடன் சர்வாலங்கார பூஷி தாயாக மூலஸ்தானத்தில் உலவியதை நேரில் கண்டிருக்கிறனர். பூசகர் கணபதிப்பிள்ளையின் மகள் மறுநாள் புதிய வெண்பட்டு எடுத்து வந்து தேவிக்கு அணிவித்த பின்னரே உணவு உட்கொண்டாராம். தேவியின் வாயிலில் வந்து பொய்ச் சத்தியம் செய்தவர் அனுபவித்த தண்டனைகள் சொல்லுந் தரமன்று. மகோற்சவத்தில் ஒரு விழாவைச் செய்பவர் விழா பற்றி ஏனோதானோ என்றிருக்க பின்னிரவு இவர்கள் தோட்டத்துக்கு இறைந்த நீர் முழுவதையும் மாடாக வந்து பருகிய மாயமும், விழா ஒன்றுக்கு அலங்கரிக்க வாழை தருபவர் ஒருதரம் மறுத்த போது அப்போது வீசிய காற்றில் அவர் தோட்டத்தில் மட்டும் நின்ற வாழைகள் அத்தனையும் சாயச்செய்த அதிசயமும் அம்மை செய்த திருவிளையாடல்கள். சமீப காலத்தில் குளிர்த்திக்கு இளநீர் கேட்டுச் சென்ற போது தரமறுத்த ஒருவரின் தென்னையில் இருந்த இளநீர் மட்டுமன்றி குரும்பை முதலாக அத்தனையும் மறுநாள் காலை வீழ்ந்து விட்டன.

அன்னையிடம் ஆரா அன்பு பூண்ட தவில் மேதை தெட்சணாமூர்த்திக்கு வித்துவ சபையில் வெற்றி கிடைக்க கனவில் தோன்றி அவர் கை விரலில் புதுப்புது வித்தைகளைப் புகுத்திய விந்தையும் உண்டு. அன்னை தனக்கு அளிக்கும் வாசிப்புக்களை மீள வாசிக்க முடிவதில்லை எனவும் இவர் கூறுவார். கோவில் “உல்” லுக்கு ஈயம் வார்க்கும் போது கண்களில் ஈயம் தெறித்து அதனால் கண்பார்வை

இழந்த கரக ஆட்ட வல்லுனர் ஐயாத்துரை பிடிவாதமாகத் தேவியின் தீர்த்தத்தையே மருந்தாக விட்டுக்கொள்ள அவர் கண்பார்வை பெற்று கண்கட்டு வித்தையும், கோவிலில் பல தொண்டுகள் செய்தவர் கண்பார்வை இழந்து வைத்திய வகையால் பயன் கிடையாது போகவே தினமும் தேவி வாயிலில் வந்து அன்னையோடு அன்போடு பேசியே கண்பார்வை பெற்றதுவும் குறிப்பிட வேண்டியவையாகும்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வல்லிபுரம் என்பவர் ஈசான மூலையில் உள்ள கிணற்றை வெட்டினார். ஏதோ காரணத்தால் தண்ணீர் காணும் வரை வெட்ட முடியவில்லை. பருத்தித்துறையிலிருந்த கந்தையா என்பவரிடம் தேவி கனவில் தோன்றி தாகத்துக்கு தண்ணீர் கிணற்றிலிருந்து மொண்டு தருமாறு கேட்க அவர் கிணற்றைப் பார்த்த போது தண்ணீர் இல்லாமை கண்டு திகைத்து நிற்க "வாளியை விடு தண்ணீர் வரும்" என்று கூறி அவர் எடுத்துத் தந்த தண்ணீரைப் பருகி தவளக்கிரிக் குறிப்பைக் காட்டி மறைந்திருக்கின்றாள் மறுநாள் தவளக்கிரி வந்து சேர்ந்தவர் கனவில் கண்ட அதே கிணற்றைக் கண்டு அதிசயித்து, தேவியின் திருவிளையாடலை நினைந்து மெய்சிலிர்த்து கிணற்றை முழுமையாக வெட்ட வேண்டிய வசதிகளை செய்து வைத்திருக்கிறார்.

கோவில் தேவைக்காக இலுப்பை மரம் ஒன்றைத் தருமாறு பிறமதத்தவர் ஒருவரிடம் கேட்ட போது அவர் மறுத்துவிட்டார். சில தினங்களில் அவர் குடும்பத்தவர் அத்தனை பேருக்கும் சின்னம்மை வேதனையால் அவர்கள் வருந்த அயலவர் தேவியின் திருவிளையாடலைச் சுட்டிக்காட்டிய போது தான் செய்த தவறுக்காக வருந்திய அவர் ஆளனுப்பி இலுப்பை மரத்தைத் தறிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

குளிர்த்திக்குத் தந்த அரிசியுடன் தவறுதலாகச் சேர்ந்து போன குழந்தை ஒன்றின் காதணிகள் ஆயிரம் ஆயிரம் மக்கள் உண்ணும் சோற்றில் போகாது அக்குழந்தையின் பாட்டனார் அண்ணாவி வல்லிபுரம் கொண்டு வந்த குளிர்த்தி சோற்றிலேயே வெளிவரச் செய்தும் அன்னை புரிந்த அற்புதங்களில் ஒன்று.

சிவஸ்ரீ சண்முகம் பூசகர் வாழ்க்கையில் தேவி விளையாடிய சுவையான செய்தி ஒன்று. அப்போது சிறுவர் சண்முகம் சாதாரண பூசகர் ஆனால் பக்திப் பயித்தியம். தேவி பூசையில் சிறிய தவறும் செய்யமாட்டார். வழக்கம் போல ஒரு நாள் வட்டுகக்கோட்டை சென்று நெல்லோ அரிசியோ பெற்றுக் கொண்டுவர நேரமாகி விட்டது. பூஜை நேரம் போய் விட்டது. அவசர அவசரமாக குளித்து அமுது பொங்கி வைத்து விட்டு கர்ப்பக்கிரக கதவின் பூட்டை திறந்தார். கதவைத் தள்ளினார். கதவு திறபடவில்லை. பலங் கொண்ட மட்டும் தள்ளிப் பார்த்தார். பயன் இல்லை. கும்பிட வந்தவர்களும் முயன்றார்கள். கதவு திறபட மறுத்தது. சண்முகத்தாருக்குப் பயம் வந்துவிட்டது. கூட அழுகையும் வந்தது. அங்கேயே விழுந்து புலம்பினார். "அம்மா தாயே! உனக்காகத் தானே இந்த உச்சி வெய்யிலில் திரும்பி வந்திருக்கின்றேன். சற்று நேரம் தாமதத்துக்காக என்னைத் தண்டிக்கிறாயா? என்று வேண்டியனார். ஆவேசம் வந்தவர் போல் எழுந்து சென்றவர் கதவைத் தொட்டவுடன் கதவு தானாக திறந்து கொண்டது. நின்றவர்களும் மெய் மறந்து நின்றார்கள். அன்று சண்முகத்தார் செய்த பூசையைப் பற்றி சொல்ல வேண்டுமா. தேவி விளையாடி சின்ன விளையாட்டு

இது. இச் செய்தியை சமீப காலத்தில் சிவஜக்கியப் பேறுபெற்ற சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்களவர்கள் கூறும் போது அவர் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது.

அளவெட்டியைச் சேர்ந்த தேவி பக்தர் ஒருவர் மன்னார் செட்டிக்குளத்தில் வசிக்கின்றார். தவளக்கிரி கோயிலிலிருந்து ஒரு கல்லை எடுத்துச் சென்று தேவியாக வைத்து வணங்கினார். குறுகிய காலத்தில் அன்னை முத்துக்குமாரியின் அருள் அங்குள்ளோர் அனைவருக்கும் கிடைக்கவே இன்று அங்கு தவளக்கிரி முத்துமாரியம்மன் கோவில் உருவாகி விட்டது.

வெண்மையான சிகரங்களைக் கொண்டிருப்பதனால் இமய மலைக்கு தவளக்கிரி என்றும் பெயருண்டு. இமயத்தின் திருச்செல்வி பார்வதி, பார்வதி தேவியின் ஒரு அம்சமான அன்னை முத்துமாரி எங்கள் தவளக்கிரியிலிருந்து அருளாட்சி செய்து வருகிறார்.

## தவளக்கிரித் தாயைப் பணிந்து சஞ்சலம் தீர்த்திடுவோம்.

கலை பல படைப்புக்கள் படைத்தோன். வயல்வெளி கொண்ட வளம்மிகு நுணாவில் பதிதனில் பெருமை பூத்த 16.11.1903 முத்தையா ஐயாத்துரை பிறந்து கலை பல பயின்று காவடி கரகம் கம்பத்தில் நின்று சதுராடும் கலைஞன் இவன். கதி கலங்க வைக்கும் கூராயுத வாளிலே சதுர் நடனம் புரிந்து அளவை ஊர் மண்ணில் புகழ் பூத்த கலைஞன் இவன். அழகுமிகு இராசம்மாவை கரம் பிடித்து இன்பமுடன் வாழ்ந்து வந்த இவர் இல்லறம் சிறக்க நல்லறம் பெருக நலமிகு ஞானக் குழந்தைகளான திரவியம், குலசேகரம், ஞானம், சிவபாதம் - பூபதி சரோசாதேவி அருங் கலைகளை படைத்திட மூவிரு புதல்வர்களை ஈன்றெடுத்து இவ் வம்சவழி சீரோங்கி வளர்ந்திட அருள்மிகு தவளக்கிரி, முத்துமாரி அம்மனின் பாதம் பணிந்து திருத்தொண்டு ஆற்றிய இவர் திருப்பணி செய்யும் காலத்தில் தொண்டாற்றிய வேளையில் சுயம் காச்சி குழியில் ஊற்றி கீழ் இறக்கும் வேளையில் அவரது இரு கண்களிலும் ஈயம் பொங்கித் தெறித்த வேளையில் பார்வை இழந்த இவர் வைத்தியம் எதையும் நாடாமல் மாரித் தாயாரின் புனித தீர்த்தத்தை கண்களிலே ஊற்றி ஈய துகள்களை தன் கையாலே இழுத்தெடுத்து அத் தீர்த்தத்தின் மூலமே அவரது கண் பார்வை கிடைக்க எல்லாம் வல்ல தவளக்கிரி முத்துமாரியின் அருள் கிடைத்தது. அன்றிலிருந்து ஞான நிலையில் மாரித் தாயாரின் மீது அன்பு கொண்டு பாடத் தொடங்கினார். ஐயாத்துரை.

இத்தொகுப்பினை உருவாக்கியவர்
துர்க்கா கவிஞானி
கு.கமலேஸ்வரன் அவர்கள்.

**அவர்களின் முதலாவது பாடலில்**

உன்னை நம்பினேன் தாயே

பல்லவி

உன்னை நம்பினேன் தாயே - ஈரேழ்
உலக மாதே அருள்வாயே

அனுபல்லவி

என்னை இரு வினையில் ஈடழியாது காப்பாய்
அன்னை பராசக்தியே ஆதரிப்பாய் மாரியே

சரணங்கள்

கண்ணொளி இரண்டளித்தாய் கரகத் திறமை தந்தாய்

கத்தி முனையிலாடும் கருண யெனக் களித்தாய்
சக்தி நிறைந்த மாதே ஆதரிப்பாய் எம் தாய்
எத்திசையு மேமதிக்க என்னை வளர்த்தாயே

**விருத்தங்கள்**

நாடுயர் நுணாவிலூரின் நலந்திகழ் முத்தையாவும்
வீடுயர் வள்ளிப்பிள்ளை மெல்லிய லாளும் பெற்ற
தேடரும் புதல்வனாகிச் சீர்ஐயாத் துரையாம் நாமம்
கூடிய கலைவிளக்கே குணக்குன்றே யன்புக் கோவே.

மன்னிய இராசம்மாவை மணம்புரிந் தினிது வாழ்ந்து
முன்னுணர் திரவி யம்பேர் மொழிகுல சேகரம், பார்
உன்னுஞா னகலை கீதம் உயர்சிவ பாதம் பூவின்
பொன்னினர் அருளமிர்த பூபதி தமை நயந்தாய்

வீட்டினி லிருந்து ஞான வீட்டினுக் கேறத் தேவர்
பாட்டினிற் கரகமாடும் பணிக்கலா மணியாய் ஈழ
நாட்டிலும் கடல்கடந்த நாட்டினும் புகழைநாட்டி
ஏட்டினிற் பெயர்விளங்க எம்மனத் திருந்தா யன்றோ

மேவிய முத்துமாரி வேலவ னருள்புரிந்
பாவடி முதலாய்கொண்டு பனுவனூல் பலவே யாத்துக்
காவடி கரகம் தாங்கிக் கத்திமேல் சக்தி தந்த
சேவடி பிடித்துச்செல்வச் சிவனுல கடைந்த சேயே

புன்னகை முகமும், கற்றோர் போற்றிடும் வாழ்வும், கல்வி
முன்னிய தெய்வ வாக்கும், முக்குறி நீற்று நெற்றி
தன்னிறை திலகவண்ணம் தாங்கிய வடிவும், சாந்தக்
கன்னலின் நெஞ்சும் கொண்ட கற்பகப் புலவன் நீயே

ஆற்றிய நினது சைவ அரும்பணி யாலே மக்கள்
போற்றிடும் பேறுபெற்ற புண்ணியா புவியை நீத்துக்
காற்றென மறைந்தாயென்று கலங்கினோம், கலக்கம் தீர
நீற்றெழில் நிமலிபாதம் நின்றுநீ ரூழிவாழி

**திரு.த. சண்முகசுந்தரம் அவர்கள் எழுதிய கலையும் மரபும் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பெற்ற கரகக் காவடிக் கலைஞர் திலகம் முத்தையா ஐயாத்துரை அவர்கள் அளித்த நேர்முக உரையின் தொகுப்பு.**

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவன்று பிற்பகல் வேளை, சுவாமி தேர்முட்டியிலிருந்து இறங்க ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. பக்தர்களின் பார்வை காவடி ஆட்டம் ஒன்றின்மீது திரும்புகின்றது. ஆயிரத்தெட்டு வேல் கலைப் பாய்ச்சிய முருகபக்தர் ஒருவர் பரவசநிலையில் மயில் போல ஆடுகின்றார். செடிற்கயிறு பிடித்துக்கொண்டுகாவடியை ஆட்டுவிக்கின்றவரும் தாளம் பிழையாமல் ஆடுகின்றார். காவடிமேளம் கலகலக்கின்றது.

பக்தர்கள் இருவரின் பேச்சுச் செடிலைப் பிடிப்பவரைப்பற்றி நடக்கின்றது.

"இந்தக் காவடியைப் பழக்கியவர் மகா கெட்டிக்காரன்."

"இந்த ஆள் கத்திமேல் ஆடும்"

"சாவித்திரி சத்தியவான் கூத்திலே கோமாளியாக வந்து சக்கைவாங்கியது இந்தமனிதன்தான், சிவராத்திரிக் கூத்து அது"

ஏன்? "அந்தரக் காவடி, ஏணிக்கரகம் எல்லாம் இந்த மனிதனுக்குத் தண்ணீர் பட்டபாடு".

ஏன்? தீக்குளிப்பதும் இந்த ஆள்தான்.

இந்த உரையாடலின் நடுநாயகமாக அமைந்துள்ளவர் அளவையூர்க் கரக்காவடிக் கலைஞர்திலகம் முத்தையா ஐயாத்துரை, வீரசைவர் குலத்திற் தோன்றிய இருவரின் கலை நிகழ்ச்சிகள் இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் நிகழ்ந்துள்ளன.

அந்தக்காலத்தில் உள்ள பெரியார்கள் பலரும் இவரின் கலையைப் புகழ்ந்து பாராட்டியுள்ளனர். இவர் ஒருமுறை கத்திமேல் ஆடினார். ஆட்டம் முடிந்ததும் இறங்கினார். இவரின் அபாரத் திறமையைக் கண்டும் நம்ப மறுத்த ஆங்கிலேயர் ஒருவர் கத்தியின் கூர்மையைப் பரிசோதிக்கத் தன் விரலால் தடவினார். கத்தி அவரின் கையைப் பதம்பார்த்து விட்டது. கைக்குட்டையை எடுத்து துடைத்துக் கொண்டு ஐயாத்துரையின் காலைக் குனிந்து பார்த்தார்.அந்த ஆங்கிலேயர்.அங்கு மருந்துக்கும் ஒரு காயமும் இல்லை.

இப்போது இக் கலைஞருக்கு வயது 75 ஆகின்றது தன் ஓய்வுநேரத்தை அம்மன் தியானத்திலேயே இவர் கழித்து வருகின்றார் "கலையின் முடிவு கடவுளை அடைதல்" என்பதே இவரின் குறிக்கோள் இவரிடம் சென்று, "உங்கள் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய குறிப்புகளைச் சொல்லுகிறீர்களோ? என்று வினவினேன்.

"வாழ்வின் இறுதிக் கட்டத்தை நோக்கி நிற்கின்ற நான் என்ன சொல்ல இருக்கின்றது? சிவம்" என்றார்.

உங்களைபற்றி பிற்காலத்தவர்கள் அறிந்து வைக்க வேண்டும் சொல்லுங்கள்" என்றேன். என்னுடன் வந்த நண்பன் கவிஞர் செ. கதிரேசம்பிள்ளையும் "சொல்லுங்கள் பார்க்கலாம்" என்று உற்சாகமாகக் கூறினார். கலைஞர் திலகம் பேசத் தொடங்கினார்

"எனது தகப்பனாரின் பெயர் முத்தையா தாயாரின் பெயர் வள்ளிப்பிள்ளை நான் பிறந்து வளர்ந்த ஊர் நுணாவில் எனது தந்தையார் இந்திரசால வித்தையில் கைதேர்ந்தவர் இசைக்கருவிகள் பலவற்றையும் நன்கு வாசிக்கக் கூடியவர் தயாரின் தகப்பனார் வேலுப்பிள்ளை இவர் மாந்தீரிகத்தில் ஈடுபாடுடையவர் பெருமளவிலே கமமும் இவர் செய்து வந்தார். எனக்கு ஏழு வயது வரையில் ஏடு தொடக்கப்பட்டது. நுணாவில் சைவ வித்தியாசாலையிலே ஐந்துவரை கற்றேன் சிறுவயதாக

இருக்கும்போது எனக்கு ஏதோ கடும் வருத்தம் ஏற்பட்டதாம். "அம்மன் கோயிலுக்கு காவடி எடுப்பதாக என் பாட்டியம்மா தாயாரின் தாய் நேர்த்திக் கடன் செய்தார். நானும் நோயினின்றும் தப்பிவிட்டேன். ஏழு வயதிலே எனக்கு நல்ல நாள் பார்த்துக் காற்சலங்கை கட்டி காவடி பழக்கப்பட்டது. இதற்கு குருவாக அமைந்தவர் வேலுப்பிள்ளை அண்ணாவியார். ஒருமாதகாலம் முறையாகப் பயின்றேன். ஒருநாள் என் பாட்டியம்மாவைப் பார்த்து "இந்தப் பெடியனை என்ன செய்வது" என்றார் அண்ணாவியார்

"ஏன் இவன் குழப்படியோ?" என்றார் பாட்டி. அப்படி ஒன்றும் இல்லை நான் சொல்லிக் கொடுப்பதிலும் பார்க்க இவன் மூன்று மடங்கு கற்றுக்கொள்கிறான். இவனின் இரத்தத்திலே தாளம் கலந்து போய்விட்டது. எதிர் காலத்தில் பெரும் யோககாரனாவான். என்று வாழ்த்தினார். நுணாவில் குளத்தடி அம்மன் கோயிலுக்கு நான் பொங்கல் தினத்தன்று காவடி எடுத்துச் சென்றேன் எல்லோரும் என் ஆட்டத்தை பாராட்டினார்கள் அன்று தொடங்கியது என் கலைவாழ்க்கை அதைத் தொடக்கி வைத்தவர் அம்பிகை, அங்கயற்கண்ணி கலைஞரின் கண் பனிக்கின்றது உணர்ச்சிப் பெருக்கால் கைகள் நடுங்குகின்றன. தொடர்ந்து பேசுகிறார். கலைஞர் திலகம்

'பள்ளிப் படிப்பை ஐந்துடன் முடித்துக் கொண்டு வீட்டிலிருந்து படித்துக்கொண்டிருந்தேன். எனது தகப்பனாரும் கமத்தில் ஈடுபட்டிருந்தார். சில காலம் முல்லைத்தீவிலே போய்க் குடியேறிக்கமஞ்செய்தோம் கமத்திலே ஈடுபட்டாலும் எனது எண்ணம் எல்லாம் கலையைப் பற்றியே இருந்தது ஆண்டு தோறும் அம்மன் பொங்கலுக்கு நான் எடுக்கின்ற காவடியை எல்லோருமே பாராட்டினர். முல்லைத்தீவை விட்டு மீண்டும் நுணாவிலுக்கு வந்தேன். அப்பொழுது சாவகச்சேரியில் புத்துவாட்டி சுப்பையாவின் நாடகக் குழுவினர் வந்தனர். அங்கு சில காலம் தங்கி நாடகங்களை நடாத்தினர். எனக்கு அந்த நாடகங்களில் பெரும் ஈடுபாடு ஏற்பட்டது. பகல் நேரங்களில் நடிகர்களுடன் சேர்ந்து பழகுவேன். அவர்களுக்கு ஏதாவது உதவி ஒத்தாசை செய்வேன் இரவிலே பார்த்த நாடகப் பாத்திரங்களைப்போல, அதே நடிகர்கள் முன் பேசிக் காட்டுவேன், பாடிக் காட்டுவேன், நடித்துக்காட்டுவேன், இந்தியாவிலிருந்து வந்த கோமாளி நடிகர் சேதுராமையா என்பவர் என்மீது பெரும் அன்பு கொண்டிருந்தார். அவரின் ஆசியைப் பெற்றேன் அவரின் கட்டளைப்படி சிறுபாத்திரங்களாகத் தோன்றி அந்த நாடகக் குழுவில் நன்கு நடித்தேன் நாடகம் பார்க்க வந்திருந்தவர்கள் உள்ளூர்ப் பையனான என்னை நன்கு பாராட்டினர். என் கலையறிவு பெரும்பாலும் கேள்வி ஞானம்தான் ஒருவரிடமும் கட்டுப்பட்டிருந்து நான் படிக்கவில்லை அம்பிகையின் விருப்பம் அதுபோலும், என் தகப்பனார் என் கலை வாழ்விற்கு ஊன்று கோல் போல இருந்தார். தாயாரின் அன்பும் ஆதரவும் இம்மட்டும் என்று கூற முடியாது.

"எமது ஊரில் உள்ள வயிரவர் அம்மன் கோயிலுக்குச் செல்லும் போது சில வேளைகளில் கலைவந்து ஆடுவேன். சூலத்தைக் கையில் வைத்து ஆடுவேன். சிறுவனாக இருக்கும் போது எனது மாமனார் சண்முகம் இந்தக் கோயிலுக்கு வந்து கரகம் ஆடினார். அவர் ஆடிய பின்னர் இறக்கி வைத்த கரகத்தை எடுத்துத் தலையில் வைத்து" நான் ஆடினேன். உடுக்குப் பாட்டுக் கலைஞர்களும் என்னை ஊக்குவிற்கும்

பொருட்டு அம்மன் காவியத்தைப் பாடினார். அம்பிகையின் அருளால் நன்கு ஆடினேன். அதுவே எனது முதற் பயிற்சியும், ஏன்? அரங்கேற்றமும் எனலாம்.

"இருபது வயதாக இருக்கும் போது கரைப் பாதையாகக் கதிர்காமஞ் சென்றேன். முருகனை வணங்கிய பின்னர் ஒருநாள் பௌத்தபிக்கு ஒருவரைச் சந்தித்தேன். அவர் நன்கு தமிழ் பேசுவார். ஒரு ஆண்டு காலம் அந்தப் பிக்குவின் பர்ணசாலையில் வாழ்ந்தேன். அவரின் அறிவுரைகளைக் கேட்டேன். முருகன் தியானத்தில் ஈடுபட்டேன். வீட்டைப் பற்றியே சிந்திக்கவில்லை. இது இப்படியிருக்க கதிர்காமத்திற்கு இஸ்லாமிய குரு ஒருவர் வந்திருந்தார். அவரின் உரை என்னைக் கவர்ந்தன. அவருடன் கொழும்பிற்கு வந்தேன். வரும் பொழுது வீட்டு எண்ணம் வந்தது. "இந்தக் கட்டை இந்தியா யாத்திரை போகின்றது". என எழுதிவிட்டு, இஸ்லாமிய குருவுடன் நாகூர் ஆண்டவர் சந்நிதிக்குப் போனேன். பின்னர் பழனி சிதம்பரம், வேதாரணியம், மதுரை என்று தல யாத்திரை செய்தேன். மடியில் ஒரு சதம் கிடையாது. எல்லாம் அம்பிகையின் அருள். மதுரையில் சில காலம் தங்கி அம்பிகையை வழிபட்டேன். அங்கிருந்து மலையாளம் போனேன். கொச்சியிலுள்ள வீரகத்தி என்பவர் சிறந்த கலைஞர். கம்பத்திலிருந்து "திரௌபதை அம்மன்" கதை செய்வார். அவருடன் நான் சிலகாலம் தங்கியிருந்தேன். அப்பொழுது அங்கு யாழ்ப்பாண வியாபாரிகள் பலர் கொச்சியில் இருந்தனர். என் கலையைக் கண்டு அவர்கள் என்மீது அன்பு பாராட்டினர். வீரகத்தி என்பவருக்குப் போட்டியாக "அம்மன் தவசு கம்பக் கதையை நிகழ்த்தினேன். அவருக்கு என்மீது பொறாமையும் ஏற்பட்டது. இப்படியாக நான் இருக்கும் போது என் அன்பர்கள் எனக்குப் பாராட்டு விழா ஒன்றை நடத்திப் பொற்கிளி ஒன்றையும் தந்தனர். அவர்களில் ஒருவர் என்னைப் பார்த்து, "நீ யாழ்ப்பாணம் போ. வீட்டுக் கவலை இல்லையோ?, என்றார். யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தேன் என்னைக் கண்டதும் வீட்டாரின் மகிழ்ச்சிக்கோ அளவில்லை. கலியாணப் பேச்சுத் தொடங்கியது. கலைஞர் சீனியரின் மகள் இராசம்மாவை எனக்குரிய முறைப்படி திருமணஞ் செய்து வைத்தனர். உடுக்குப் பாட்டுக் கலைஞர் சி.சிதம்பரப்பிள்ளையின் சகோதரி இவர் என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். யாழ்ப்பாணத்தில் கரக ஆட்டத்தைத் தொடங்கினேன். உடுக்குப் பாட்டை மைத்துனர் சிதம்பரப்பிள்ளை நிகழ்த்துவார். என் கனவிலும் நினைவிலும் கலையே இடம் பெற்றது. ஒன்று சொல்ல மறந்து விட்டேன். மறுவன் புலவிலே சமாதியான ஏரம்புச் சாமியாருக்குப் பணிவிடைகளை நான் சிறுவனாக இருக்கும் போது செய்வேன். ஒருநாள் அவர் நிட்டையில் இருந்து கலையும் போது "நீ பெருங்கலைஞன் ஆவாய்" என்று அருள்வாக்குத் தந்தார். அந்தப்பெருமானின் ஆசீர்வாதம் எனக்குத் துணையாக அமைந்தது.

"அளவெட்டி அம்மன் கோயிலில் வழிபாடு செய்வேன் இங்கு தான் என் கலை வாழ்வு வளர்ச்சி அடைந்தது. ஆண்டுதோறும் மாவை முருகன் தேர்த்திருவிழாவுக்குக் காவடிகளைப் பழக்கி வந்துள்ளேன். இந்தப் பணி தொடர்ச்சியாகச் சுமார் நாற்பது ஆண்டுகள் வரை நிகழ்ந்தது. அம்பிகையை தொழுது அழகிய முருகன் கோயிலுக்குக் காவடியுடன் போவேன். இந்தத் தொண்டே என்னை வாழ வைத்தது. இதைச் சொல்லுவதில் நான் பூரிப்படைகிறேன்.

"ஒருநாள் அம்பிகை என் கனவிலே தோன்றி, கத்தி மீது ஆடும் என்று கட்டளையிட்டார். 'நான் ஆடமாட்டேன். கத்தி வெட்டும்" என்றேன். முருகனுடன் தோன்றிய அம்பிகை "நான் இருக்கின்றேன் ஒன்றும் நடவாது ஆடு" என்றார்.

"வாசி வழக்கம் அறிய வேண்டும் மறுமந்திர வீடு கட்ட வேண்டும். நாசி முளைக்குள்ளே யோகம்..."

என்ற சித்தர் பாடலை அம்மன் ஒலித்தது போல இருந்தது. அளவெட்டி அம்மன் கோயில் வீதியில் அதிகாலையிலே எவருக்கும் தெரியாமல் கத்தியை நட்டு ஆடப்பழகினேன். பொங்கலன்று இந்த ஆட்டத்தை அம்பாள் சந்நிதியில் பக்தர்கள் முன் ஆடிக்காட்டினேன்.

என் இல்லற வாழ்க்கை இனிது நடக்கின்றது. எனக்கு இரண்டு ஆண் குழந்தைகளும், நான்கு பெண் குழந்தைகளும் இருக்கின்றனர். எனது மகள் புஷ்பராணி பரதக் கலையை நன்கு பயின்றவர். வெள்ளிக்கிண்ணப் பரிசுகள் பலவற்றைப் பெற்றவர். இக்குழந்தையின் அகால மரணம் எனது பேரிழப்பு. இளையமகன் சிவபாதம் இன்று மிருதங்க வித்துவானாக இருக்கின்றார். மூத்தமகன் குலசேகரம் என்னைக் போலக் கலை வாழ்வில் ஈடுபட்ட பின்னர் ஓய்வு பெற்றிருக்கின்றார். மருமகன் விநாயகலிங்கமும் சிறந்த கலைஞர்.

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் மறக்க முடியாத நிகழ்ச்சி எது? என வினவினேன்.

இரண்டைக் குறிப்பிட விரும்புகிறேன் தம்பி. டிக்கோயாவில் நிகழ்ந்த கரகவிழா ஒன்றிலே இந்தியக் கலைஞர்களும் அடியேனும் கலந்து கொண்டோம். எனக்குத் தங்கப் பதக்கமும், கரகதிலகமும் என்ற பட்டமும் எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியக் கலைஞர்களின் பாராட்டும் அன்பும் கிடைத்தன. மற்றது யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் நடந்த தமிழ் வளர்ச்சிக்கழக விழா. இநத விழாவிலே காலஞ்சென்ற தந்தி தபால் அமைச்சரும் இராமநாதன் துரையின் மருமகனுமான கௌரவ சு.நடேசபிள்ளையின் ஏற்பாட்டின்படி எமது நிகழ்ச்சி நடந்தது. இந்தியாவிலிருந்து வந்த அறிஞர்கள் பேராசிரியர் ரா.சேதுப்பிள்ளை உட்பட எம்மை ஒருமுகமாகப் பாராட்டினர். இதனை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்.

தம்பி ஒன்று சொல்ல மறந்து விட்டேன். நான் நாடி நாடித் தொழுதேன். தொழுகின்றேன். அம்பிகையையும் அவரின் திருக்குமரன் முருகனையும் என்னை ஆடவைத்தவர்களும் பாடவைத்தவர்களும் இவர்களே. மலைக்கந்தன் காதல் அம்மன் தாலாட்டு கந்தன் காவியம் ஐயனார் காவியம் கும்பிளாவளைப்பிள்ளையார் பிரார்த்தனை போன்ற நூல்களை யாத்து இந்தக் கட்டை வெளியிட்டது. நான் பண்டித் அலலன். புலவன் அல்லன். அறிஞன் அல்லன். ஆனால் அம்பிகையின் அடிமை முருகனின் தாசன் சிவம் என்றார்.

"எதிர்காலச் சந்ததியினருக்குக் குறிப்பாக ஏதாவது சொல்ல விரும்புகின்றீர்களோ?" என்றேன்.

"பலவற்றைச் சொல்லாம். முக்கியமானது ஒன்று. கடவுளை அடைதல் கலைகளின் நோக்கம். இதனையே அழுத்திக் கூற விரும்புகின்றேன். தெய்வ நம்பிக்கையின்றிக் கரகம் ஆடினால் அது கிரகமாக மாறிவிடும்" என்று தன் பேச்சை முடிக்கின்றார். நாமும் விடை பெறுகின்றோம்.

**கரகத் திலகமணி மூ.ஐயாத்துரை அவர்கள் பாடிய**

**கீர்த்தனைகளுள் ஒன்று**

இராகம் :- தோடி தாளம் :- ஆதி

## உன்னை நம்பினேன் தாயே

பல்லவி

உன்னை நம்பினேன் தாயே -ஈரேழ
உலக மாதே அருளு வாயே (உ)

அனுபல்லவி

என்னை இருவினையில் ஈடழியாது காப்பாய்
அன்னை பராசக்தியே ஆதரிப்பாய் மாரியே (உ)

சரணங்கள்

கண்ணொளி இரண்டளித்தாய் கரகத் திறமை தந்தாய்
கத்தி முனையிலாடும் கருணை யெனக்களித்தாய்
சக்தி நிறைந்த மாதே தாபரிப்பாயென் கோதாய்
எத்திசையு மேமதிக்க என்னை வளர்த்தாயே உ)

ஓம் சிவம்

கணபதி துணை

## மாவைக்கந்தன் பேரின்பக்காதல்

விநாயகர் துதி

ஆதிமூலப் பொருளே ஐங்கரனே
சோதரனாம் ஆறுமுகனார் மீது
அருள் சுரக்கும் காதல்தனை
ஓதவே ஊற்றெடுக்க உற்றதுணை செய்யுமையா.

### சுப்பிரமணியர் துதி

ஆதிசிவன் மகனே ஐங்கரனார் சோதரனே
கானமயில் ஏறிவந்து காட்சி அளித்தோனே
வேலவனே உன்காதல் வினைதீர்க்கப் பாடுதற்கு
ஞானமணி நல்லொளியே நற்கிருபை தாருமையா.

### சரஸ்வதி துதி

கல்விக் கழஞ்சியமே கற்றோர்கள் நாமணியே
வெள்ளைத் தாமரைமீது வீற்றிருக்கும் தேவியே
கந்தர்மேற் காதல்தனை கல்வியிலான் பாடுதற்கு
வந்திருந்து நாவில் வாசனைபோல் வீசுமம்மா.

### காதல்

மாவைப் பதியுறைந்த வள்ளலை நாம் தெண்டனிட்டே

காதல் சொல்லத் தந்திமுகக் கற்பகமும் காப்போமே.
அண்ட பகிரண்டம் அத்தனையும் தானாகி
இன்பம் சுரக்க வைத்த ஈசனுக்குக் காப்புரைப்போம்.
ஒன்றுடன் இரண்டறலக் கலந்து உலகெலாம் போற்றவைத்த
மங்கை உமாபதிக்கும் மனமுவந்து காப்புரைப்போம்.

மங்கை சிவகாமி மனமகிழப் புதல்வனாக
வந்துதித்த எங்கள் வடுகனுக்கும் காப்புரைப்போம்.
தக்கன்தவம் அளிக்க தாரணியில் தோற்ற வைத்த
மிக்க புகழ் வீரனுக்கு வினைஅகலக் காப்புரைப்போம்.

காங்கேயன் என்னும் கருணைப்பெயர் புனைந்து
கடல் தாண்டி வந்துறைந்த கந்தவேளைக் கைதொழுவோம்.
எங்கள் வினை தீர்க்கடல் ஏறிவந்த சற்குருவை
முந்தவினை தீர்த்து வைக்க முருகனை நாம் போற்றிடுவோம்.

மாருதப் புரவல்லி மறுமுகம் பெற்று ஸ்தாபித்த
மாவைப்பதிக் கந்தவேளை எங்கள் வறுமைதீரப் போற்றி செய்வோம்.
ஞான ஒளியை நற்கீரர் சற்குருவை
பாசவினை அறுக்கப் பணிவுடனே போற்றி செய்வோம்.

அம்பிகையின் நற்புதல்வன் ஆறுமுக வேலவனை
பந்தவினை தீர்ப்பவனைப் பணிவுடனே போற்றி செய்வோம்.
கந்தன் கடம்பன் தன்னைக் கதிர்வேல் பிடித்தோனை
எங்கள் வினை தீர்த்து வைக்க எப்பொழுதும் போற்றி செய்வோம்.

தீராவினை அகற்றும் சித்திர வேலயாயுதமே
வாராவினை வந்தாலும் வளிமறித்துக் காருமையா
பாலர்களைக் காருமையா பமரசிவன் பாலகனே
வீரவேலேந்தி நிற்கும் வெற்றி வேலாயுதமே.

அழகுமயி லேறிவரும் ஆறுமுக வேலவனே
அடிமை உடை உடைய அனுக்கிரகம் தாருமையா.
இவ்வுலகந் தன்னில் இடரடைந்து வாடாமல்
மதியைப் பெருக்கி வாழ்வுதர வாருமையா.

பழக்கந்தன் என்று சொல்லிப் பாருலகோர் போற்றுகிறார்
எனக்கோர் பழமீந்து என்வினையைத் தீருமையா.
பழமுண்டு பசிஅறி மாவைப் பதிகனிலே நீர் இருக்க
நிதமும் தொழுவோர்க் கோர்கனிநீர் கொடுக்கலாகாதோ.

வறுமைப்பிணி தீர்க்கக்கனி மனமுடைந்து கேட்பவற்கு
பருவமில்லை என்று சொல்லி பகருதற்கு நீதியுண்டோ.
கயிலைவாசர் மாங்கனியைக் கைதனிலே காட்டி
உலகைவலம் முன்புவந்தோற் கீந்திடுவேன் என்றுரைக்க

கான மயிலேறிஓர் கணம்தனிலே சுற்றிவந்து
கனிகேட்டு நிற்கக் கணபதிக்கு ஈந்தேனென்றார்
அப்போது கண்சிவந்து அழுது வருந்திநிற்க
அதுபோற் கனிஅழைத்து அன்பாய்த் தரவிலையோ

அடியவர்கள் உமதருகில் அழுதுகண்ணீர் தான் சொரிய
அருட்கனி ஒன்றீயுமையா ஆதிசக்தி வேலோனே.
அருவிபோற் கண்ணீர் சொரிந்து அலறிடும் பாலர்கட்கு
கருணைசெய்ய வாருமையா எங்கள் காங்கேயவேலோனே

கந்தா கடம்பா கதிர்வேலா கார்த்திகேயா
வந்தெங்கள் வல்வினையை வளிவிலகச் செய்யுமையா
ஐந்து பஞ்ச பூதங்களும் அருள்வடிவேலை நினைந்தால்
தன் தன் கருமங்களைச் சரிவரச் செய்யுமையா

பஞ்சேந்திரியங்களும் பரமன் சுதன் வேலைக்கண்டால்
அங்கங் கடங்கி அசைவற்று நிற்குமையா
ஞானேந்திரியம் ஐந்தும் ஞானவடிவேல் விழித்தால்
கன்மேந்திரியம் ஐந்தின் களையிடுங்கி வாழ்வு தரும்

கண்மேந்திரியக் களைபிடுங்கி வாழ்வு பெற்றால்
மும்மலமும் தானழிந்து முத்திவழி தோற்றுமையா
மூத்திக்கு வித்தான முருகவடி வேலோன் மேல்
பக்தியுடன் காதல்பாடி பழவினைகள் தீர்த்திடுவோம்

அந்தக்கரணம் ஏழும் ஐயாவடிவேலா என்றால்
சொத்தக்குணம் மாறித் துடுக்கடங்கி நிற்குமையா
தத்துவம் தொண்ணூற்றாறும் சத்துருசங்காரா என்றால்
பக்தியுடனடங்கிப் பணிவிடைகள் செய்யுமையா

சூரனைச் சம்மாரஞ் செய்த சுப்பிரமண்ய வேலோனே
மாவைரத மேறிவந்து வல்வினையைத் தீருமையா
கொவ்வைக்கனி வாயழகன் குமரவேலை மாவையிலே
ஓதிக்கலங்கி நின்றால் ஊழ்வினைகள் தீருமையா

கானமயி லேறிவரும் கந்தவேளை எங்கள் வினை
பாறிவிழச் செய்யுமையா பச்சைமயில் வாகனரே
பச்சைமயி லேறிவந்து பாம்பின் வாய்த் தேரையைப்போல்
இத்தலத்தில் வாடுவோர்கள் இடர் தீர்த்து வையுமையா

ஐயா தேரேறிவீதிவாத் தில்லையில் மூவாயிரர்போல்
வாடி வருந்திநிற்போர் வல்வினையைத் தீருமையா
கர்மவினை தீர்க்கக் கந்தனல்லான் இவ்வுலகில்
பந்தவினை போக்கும் தெய்வம் பாருலகில் வேறுமுண்டோ

அன்னக் கொடைஈந்து அறுமுகனை வேண்டி நின்றால்

என்ன இடர் வந்தாலும் எரிந்து நீறாய்ப் போகாதோ
சூரசம்மாரம் செய்த சுப்பிரமண்ய வேலவனை
இப்பார்தனிலே போற்றிடவே பாழ்வினைகள் பாறுமையா

கேளிக் கொடியோனைக் குமரவேள் சிவசுதனை
பாடித் துதிக்கும் பக்தர்களைக் காருமையா
தந்தைக்குபதேசம் செய்த சற்குருவாம் வேலவனை
சிந்தையிலே நாம் நினைக்க எங்கள் தீவினையைத் தீருமையா

மா,பலா,வாழை,தென்னை வளர்ந்தாடும் கமுகுடனே
தோடை,மாதுளை பலவும் தோற்றுதையா உன்பதியில்
இக்கனி யெல்லாம் புசித்து இளைப்பாறிக் குளிர்ந்திருக்க
பக்தியுடன் வேண்டுவோர்க்கு முத்திக்கனி தாருமையா

கீர்த்திபெற்ற தேரேறிக் கிருமைதா வீதிசுத்த
உம்மைக் கீழ்படிந்து வேண்டுவோர்க்கு கீரிபலைத் தீர்த்தந் தந்தாய்
அப்பன் பதிக்குவந்தோர் அறுமுகனைத் தோத்தரிக்க
கீரிமலை அடைந்து கீர்த்திபெற்ற தீர்த்தம் தந்தாய்

ஆடி அலசி அமுக்கருத்த அன்பர்கட்கு
பாவமகற்ற பரமசிவன் கோவில் தந்தாய்
ஐயா அருள்வடிவே உன் ஆதிசிவன் தந்தையிடம்
சொல்லிவினை தீர்த்துவையும் சுடர்வடிவேலாயுதமே

நகுலமுனி ஈசர் நற்தவத்தில் ஆழ்ந்தமலை
கீரிமுகம் மாற்றிக் கீர்த்திபெற்ற கீரிமலை
கீரிமலைத் தீர்த்தங்காணக் கிருபைசெய்வாய் வேலானே
மாதவத்தோர்க் கருள்புரியும் வர்ணவடி வேலோனே

குதிரை முகத்தோடுதித்த கோன்மகள் மாருதப்புரவல்லி
மாபெரும் தவமியற்றி மாமுகந்தான் மாறலையோ
அருள்சுரந்த தீர்த்தமதை ஆடிஅடியவர்கள் வாழ
மறைமுகமாய் வையாமல் வெளிதிறந்து காட்டுமையா

ஆறுமுகா என்றஐதால் அருள்சுரக்கும் அருள்வடிவே
வேலவனே என்றழுவோர் வினைதீர்த்து வையுமையா
கந்தாவென்றுனை அழைப்பார் கண்ணன் மருகோனே
வந்து ஒளிவீசுமையா மாவைப் பதியோனே

முருகா முருகாவென்று உன்மூர்த்திதல தீர்த்தமதில்
மூழ்கஅருள் தாருமையா முப்புரிநூல் வேலோனே.
கார்த்திகேயக் குமரா கன்னிவள்ளி தெய்வியுடன்
உம்மைப் பார்த்து மனமுருகப் பழவினைகள் தீருமையா

செத்தோர்கள் தீவினைகள் தீர்த்துவைக்கும் இப்பதியில்
மற்றோர் பிணியகற்ற வந்து வழிகாட்டுமையா

உம்மைநம்பி வந்துருகி உளம்மெலிந்து நிற்போர்கள்
தன்வினை கழையுமையா சக்திவடி வேலோனே

ஆயிரம் பரப் பாடினாலும் ஆசைவிட்டுத் தீருதில்லை
அலைகடல்போல் பந்தவினை அதுவும் தொலையுதில்லை
பந்தவினை தீருமையா பழனிப்பதி வேல்முருகா
எங்கள்மனம் ஆற இன்பக்கனி தாருமையா

கானமயில் தோகைகட்டி கனத்தசெண்டு தானடுக்கி
செண்டு குலுங்கத் திருநடனம் ஆடிவாறார்
பன்னங்குக் சாவடிக்குள் பால்பழங்கள் தானெடுத்து
பக்கவாத்தியம் முழங்கப் பக்தர்களும் பாடிவாறார்

கன்னியரும் பாலெடுத்து கரகம்கட்டித் தலையில் வைத்து
காவடிக் கோஷ்டியுடன் கலந்துவீதி வலமாய்வாறார்
பாலர்களும் பக்தர்களும் பஜனைபாடி ஆடிவாறார்
நீதியோளங்கள் முகம் நீபாரா திருப்பதுவும்

சூரனைச் சம்மாரஞ்செய்த சுப்பிரமண்ய வேலவனே
காத்தருள வேணுமையா கதிரைப்பதிக் கந்தவேளே
சிங்கமா சூரனையும் சீரளித்துப் படையளித்து
பங்கஞ்செய்த பாலகனே பன்னிருகை வேலோனே

தாரகா சூரனையும் சைனியங்க ளத்தனையும்
தலையளியச் செய்த சண்முகனே காருமையா
ஔவைக்குச் சுட்டகனி அருள்வடிவே நீகொடுத்தாய்
அக்கினியில் ஒன்று அடியார்க் களிக்கொணாதோ

நாவற்கனியீந்து நல்லறிவு காட்டி வைத்தாய்
இப்பாவிக்கோர் கனிஈந்து பாவவினைகள் தீருமையா
அமுதவல்லி அரும்கிளியாள் உம்மை அடையத்தவமியற்ற
அத்தவப் பெருமைகண்டு யானைவயிற்றுதிக்க வைத்தாய்

ஐயாரவதம் பெற்ற அதியதெய்வ யானை தனை
முறையுடன் மணம்புரிந்து முப்புரிநூல் வேலவனே
சோதரியாள் சுந்தரவல்லி தூய தவமியற்ற
கானில்நல்ல மான்வயிற்றில் கன்னியைப்பிறக்க வைத்தாய்

மான்வயிற்றிலே பிறந்த வள்ளியை வதுவை செய்து
கானகத்தில் வேங்கையாகி காட்சிதந்த வேலோனே
வேலுக் கிழவனாகி வேல்பிடித்த ஆண்டியாகி
தாகந் தணிக்கவென்று தனிக்கெங்கை கொண்டுசென்றாய்

கெங்கைதனிலே விழுந்து கீர்த்திபெற்ற நீராடி
வள்ளியை வதுவை செய்து மானபங்கம் செய்தவேலே

மானமழியாள் வள்ளி மனமதனை நீரறிந்து
கானில்யானையை அளைத்துக் கல்யாணம் செய்தவேலே

பழனிப்பதி உறைந்த பண்டார வேலவனே
எங்கள்வினை களைய விரைந்தோடி வாருமையா
வேடரூபம் தாங்கிநின்ற வேலவனே மாவைதனில்
பாலரூபங் காட்டிப் பக்தர்களைக் காருமையா

வளையல்ச் செட்டியாகநின்று வளையல்விற்ற வேல்முருகா
அருமைச் செட்டியாகவந்து ஆட்கொள்வாய் வேலவனே
அமரரிடர் தவிர்த்து ஆட்கொண்ட வேலவனே
குமரனடி போற்றக் குதித்தோடி வாருமையா

துதிப்போர்க்கு வல்வினைகள் துன்பமெல்லாம் போக்கி வைப்பாய்
செல்வம் தழைத்தோங்கச் செந்திறிபதி வேல்முருகா
குன்மவினை தீருடையா குமரவடி வேல்முருகா
வள்ளிதெய்வ யானையுடன் வரம் அருள வாருமையா

வாழ்வுமிகத் தாருடையா மாவைப்பதி வேல்முருகா
காதல்பாடும் அன்பர்கட்குக்கு உற்றதுணை செய்யுமையா
கந்தனைநாம் போற்றிசெய்வோம் கதிர்வேலனையும் போற்றிசெய்வோம்
எங்கள் குலவிளக்கை இப்புவியில் போற்றிசெய்வோம்

கார்த்திகைத் திருநாளை கண்டவர்கள் சந்நிதியில்
போற்றிப் புகழ்ந்திடுவார் உன்புதுமைநகர் மாவையிலே
மாவிளக்கின் காட்சிதனை மாவையிலே கண்டவர்கள்
தேவலோகமென்று சொல்லி திகைத்து ஒடுங்கிநிற்பார்

வீதிமூன்றும் சுற்று மேல்வீதி வந்தவர்கள்
கோபுரத்தைக்கண்டு குளிர்ந்து மனம் ஒடுங்கிநிற்பார்
கோபுரத்தைக் கண்டு குளிர்ந்துமனம் ஒடுங்கிநின்றால்
மாபெரிய தீவினையும் மாற்றிவைப்பாய் வேலவனே

உன்வீதியிலே அந்தணர்கள் வேதங்கள் ஓதுவதைக்
காதினிலே கேட்க கர்மம் தொலையுமையா
நாதசுர ஓசைகளும் நல்லதவில் வாத்தியமும்
உன் வீதிளங்கும் கேட்குமையா வெற்றிவேலாயுதமே

வீரசைவ கோத்திரமும் வேறுபல மரபினரும்
வாழவழி வகுத்தாய் மாபெரிய மாவையிலே
கற்றவரும் மற்றவரும் கனத்தசெல்வ முற்றவரும்
பக்தர்களும் வாழுகிறார் பன்னிருகை வேலைநம்பி

பாவலரும் நாவலரும் பண்புமிக்க ஜீவர்களும்
மாவையிலே வாழுகிறார் மால்மருகன் வேலைநம்பி

பஞ்சரதம் ஓடுகின்ற பாலன்மாவைப் பதிதனிலே
வந்து அழுபவற்கு மயக்கம் தெளியுமையா

ஐந்து ரதம் ஓடுமுந்தன் அருட்காட்சி காண்பவற்கு
பஞ்சப்பிணி நீக்கிஉடன் பாலர்களைக் காருமையா
பீசாட்சரத்தில் பெருமை பெற நீ இருந்து
பஞ்சாட்சரத்தில் பரந்துதித்த பாலகனே

அட்டாட்சரத்தில் அநேக பல தோற்றமாகி
யோகாட் ஷரத்தில் உண்மைகண்ட பாலகனே
ஞானாட்ஷரம் கண்டு நான்நீயும் ஒன்றாகி
மட்டிப் பிரமனென்று குட்டிச்சிறை வைத்ததேவா

தந்தைக்குப தேசம்செய்த சற்குருநாதனே உந்தன்
மைந்தர்க்குப தேசம்செய்ய வாருமையா மாவையிலே
அல்லும் பகலும் அளுது வருந்துவோர்க்கு
தொல்லைவினை தீரும்ஐயா சுப்பிரமண்ய வேலவனே

அட்டமா சித்தாடும் ஆறுமுக வேலோனே
இப்பாவிக் கோர்சித்து ஈந்திடவா வேலோனே
அரோகரா என்பவர்க்கு அருள்கொடுக்கும் பாலகனே
அரிதிருமருகா என்போர் அச்சம் குறையுமையா

மோனகத்தில் நீஉதித்தால் மூழ்கவைப்பாய் மாய்கையிலே
தம்பனத்தில் நின்றாயானால் சாந்தம் அடைந்திடுவோம்
வசீகரத்தில் தோற்ற மானிலமெல்லாம் மகிழும்
உச்சாடனம் கொண்டால் உலகமெல்லாம் படருமையா

வித்து வேதனத்தில் வீற்றிருந்த சக்திவேலே
அக்ருஷணம் கொண்டாயானால் ஆரடங்காரிவ்வுலகில்
தம்பனத்தில் நின்று தவிக்காது காருமையா
பேதனத்தில் நின்றால் பேதலிப்புத் தீருமையா

அமரா குமரா ஆறுமுக வேலோனே
சமரது புரிந்த எங்கள் சத்துருசங்கார வேலே
எங்கள் குருநாதன் என்று குவலயமெல்லாம் போற்ற
அருள்வாழ்வு தந்து ஆளுமையா வேலோனே

நீதியோ எங்கள் துயர் நீக்கா திருப்பதுவும்
பாரனைத்தும் காத்துவைக்கும் பரமன் திருமகனே
குருநாதன் என்று குவலயமெல்லாம் போற்ற
அருள்வாழ்வு தந்து ஆளுமையா வேலோனே

கந்தன் பக்தன் சிக்கிரவேல் இக்காதல்களை அச்சிலிட்டு
பக்தியுடன் கோர்வை செய்த இப்பாலனையும் காருமையா

கற்றோரும் மற்றோருமுன் காதல்பாடிக் கண்ணீர்விட்டால்
பக்திஅருள் சுரந்து இப்பாலருகம் வாழுமையா.

ஐயாத்துரையன் வேலை அன்பர்களே இவ்வுலகில்
தேவியைத் தேடுவதும் திருச்சபையை நாடுவதும்
இப்பாலருகில் ஜீவர்கட்குப் பணிந்து நடப்பதுமே
வாழி சொல்லிப் பாடுகிறேன் மதனை ஐயாத்துரையும்

மங்களங்கள் கூறிவிட்டேன் மனவருத்தம் தீருமையா
மங்களம் மங்களம் மங்களம்

வணக்கம்.

விருத்தம்

என்ன நான் செய்திடும் பாவவிதி கர்மமோ
எளியனுடை நேரன்பின் பலனோ
என்னால் மூத்தோரை வைதிட்ட கர்மமோ
களிளோரைப் பளித்த விதமோ
தன்னிகரிற் பூமியில் வழக்கோரம் சொன்னனோ
சத்ராதி கோப முறையோ
தரணியிற் கவிபாடும் புலவரைத் தடுத்தேனோ
தாய்க்குப் பழி என் செய்தனோ
மண்ணுலகில் மறையவரை முன்புகொலை செய்தனோ
மங்கையர்கள் சாபமிதுவோ
மாறாமல் முன்செய்த பாவத்தை நீக்கியே
மைந்தர்க்கு வரம் தருகுவாய்
ஆதிவடிவே அரிய ராசவடிவே அருளும்
அன்பும் நிறைந்த வடிவே

ஆறுமுகமான திரு நீறினொளி யானபொருள்
ஆறுமுக மான குருவே.

**அடியேனின் மணி மொழிகள்**

அறிவே தெய்வம் அன்பே சிவம்
தாயே கோவில் தந்தையே தெய்வம்
பிறர்க்குதவி செய்தால் தனக்குதவி தானே வரும்
கள்ளச் சரீரம் வளர்ப்பவன் கடவுளுக்கும் விரோதி
கூலிக்கு வேலை செய்தோர் வேளைக்கு சாப்பிடுவார்
முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார்
நித்தம் போக முற்றம் தேயும்
ஒருவரை வருத்தி உடம்பை வளர்க்காதே
தோன்றிய உருவம் மறைவது திண்ணம்
பணம் அற்றவர் பிணத்திற்கு சரி
நீதியைக் கண்டு நிறைவுறத் தேடு
வேலையைச் செய்தோர் கூலியை பெறுவார்
பாடுபட்டோர் பட்டம் பெறுவார்
உண்மை உரைத்தோர் உத்தமனாவார்
உற்றாரன்பு உழைக்கும் வரையும்
உண்மை அன்பு உடல் அழியும் வரை



வேரூன்றி விழுதுபரப்பும் ஆலமரம்
ஐயாத்துரை சிவபாதம் அவர்கள்

செய்நன்றி மறந்தோர் என் நன்றியும் மதியார்
பிள்ளை உறவு கொடுக்கும் வரை
தன்னை உணர்ந்தோர் ஒருவரை இகழார்.

ஆக்கம்
கரகத்திலகம்
ஐயாத்துரை அவர்கள்

## ஐயாத்துரை சிவபாதம்

யாழ்ப்பாணம் அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஓர் மிருதங்க வித்துவான் ஆவார். மிருதங்கம் மட்டுமல்லாது தவில், தபேலா, கெஞ்சிரா, கடம், கொன்னக்கோல் போன்ற தாளவாத்தியக் கருவிகளை வாசிப்பதிலும் திறமையுடையவர். ஒரு கலைக் குடும்பத்தில் பிறந்த இவர் சிறுவயது முதலே கலையார்வம் கொண்டு விளங்கினார்.

மிருதங்கத்தின் ஆரம்பப் பாடங்களை திரு.ஆறுமுகம் என்பவரிடம் பின்பு கலாசூரி, ரி.இரத்தினம் அவர்களிடமும் பயின்றுள்ளார். மேலும் இந்தியா சென்று இத்துறையில் சிறப்புப் பயிற்சியினை திருவாரூர் நாகராஜனிடமும் பெற்றுக் கொண்டார். உலகப் புகழ் பெற்ற தவில் மேதை கலைஞான குபேரபூபதி திரு.தெட்சணாமூர்த்தி அவர்களிடம் தவில் வாத்தியக் கலையைக் கற்றார்.

இலங்கையின் இசைக் கலைஞர்கள் என்.சண்முகரத்தினம், S.சண்முகராகவன், இந்தியக் கலைஞர்கள், சித்தூர் சுப்பிரமணியம்பிள்ளை, M.தியாகராஜன், கல்லாறு கிருஷ்ணபாகவதர், மகாராஜபுரம் சந்தானம், பண்ணிசைப் புலவர் S.இராஜசேகரம் ஆகியோருக்கு மிருதங்கம் வாசித்துள்ளார். அத்துடன் இலங்கையின் புகழ் பெற்ற நாதஸ்வரக் கலைஞர்களான N.Kபத்மநாதன், அளவெட்டி மு.பாலகிருஷ்ணன், திரு.நாகேந்திரன், திரு.பஞ்சமூர்த்தி கானமூர்த்தி சகோதரர்கள், கோண்டாவில் பாலகிருஷ்ணன் ஆகியோருக்கும் தவில் வாசித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் இலங்கையில் மட்டுமன்றி, வெளிநாடுகளுக்கும் சென்று பல நிகழ்ச்சிகளில் பங்காற்றியுள்ளார். வானொலி, தொலைக்காட்சிகளில் பல நிகழ்ச்சிகளையும் வழங்கியுள்ளார். "பார்வதி சிவபாதம்" என்ற பெயரில் ஒரு இசைக்குழுவை நடாத்தியுள்ளார். அத்துடன் காவடி, கரகம், நடிப்பு என்பவற்றோடு பாடல் இயற்றிப் பாடக்கூடிய தகுதியும் இவருக்கு உண்டு.

இவரின் கலைச் சேவையைப் பாராட்டி முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களால் "லய வாத்தியத் திலகம்" எனும் பட்டமும், இணுவில் பண்டிதர் பஞ்சாட்சரம் அவர்களால் "பல்லியக் கலைமாணி" என்ற பட்டமும்

வலிகாமம் வடக்கு கலாசார பேரவையால் "'கலைச்சுடர்" என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இவர் "கலாபூஷணம்" விருதும் 2008.12.15 அன்று வழங்கிக் கௌரவிக்கப்பட்டார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## அளவெட்டி தவளக்கிரி முத்துமாரியம்மன் கும்பிப்பாடல்

திருவாய் மலர்ந்து அருள் பொழியும் - எங்கள்
கும்பிழாவளை சித்திவிநாயகனே
கருப்பொருளே உன் தாழ் பணிந்தேன் - எந்தன்
கவிக்கு காப்பாக வாருமையா.

பெற்றவளே முத்துமாரியம்மா நான்
பேசும் தமிழ் எந்தன் தாய் மொழியாம்
கற்றிட நற்றமிழ் தாருமம்மா எங்கள்
தவளக்கிரி முத்துமாரியம்மா.

அழகான வண்ணப் பட்டாடை கட்டி
அன்னநடையும் தான் நடந்து
இழந்தளிர் பூப்போல வாறாளாம் என்று
ஏந்திழையே கும்பி கொட்டுங்கடி.

கும்பத்தின் மேலே அமர்பவளாம் - தாயார்
குலுங்கும் வேப்பிலை காரிகையாம்
குங்குமத்திலகம் கொண்டவளாம் - அன்னை
கோபாலன் தங்கையாய் வந்தவளாம்.

அக்கினிப் பார்வையும் அவள் பார்ப்பாள் - அம்மன்
ஆனந்தப் பார்வையும் பார்த்திடுவாள்
சிக்கலைத் தீர்த்திட வேண்டுமென்றால் - அம்மன்
சின்னக் கண்ணோட்டம் செலுத்திடுவாள்.

ஆங்காரி ஓங்காரி மாரியம்மா நீயும்
ஆனந்தத் தாண்டவம் ஆடிடம்மா
சிங்கவாகனம் சேர்ந்தாட - இப்போ
சித்திடையே நடனம் ஆடுமம்மா.

கொங்கை குலுங்கி அசைந்தாட அம்மன்
கூந்தல் கலைந்து விரிந்தாட

செங்கையில் சூலமும் சேர்ந்தாட தாயே
சேவடி தூக்கி ஆடுமம்மா.

உன்னை நினைந்து வருவோர்க்கு அம்மா
உறுதுணையாக நீயிருந்தாய்
பொன்னும் பொருளும் தருபவளே அம்மன்
புவியில் வாழ்வோங்க செய்பவளே.

செய்யும் தொழிலுக்கு அதிபதியே அம்மன்
தேசம் முழுதும் காப்பவளே
உய்ய வழிகாட்டும் உத்தமியே தேவி
உருவம் பலவும் கொள்பவளே

அக்கினி சொரூபமாய் நீயிருப்பாய் - அம்மா
ஆவேசக் கண்ணோடும் பார்த்திடுவாய்
திக்கெட்டும் ஆட்சி புரிபவளே அம்மா
தீயில் நடமாடும் சுடரொளியே

மண்ணுக்கும் விண்ணுக்கும் பேரரசி எங்கள்
மாதாவே பத்திரகாளியம்மா
கண்போல மக்களைக் காத்திடுவாய் - தாயே
காமாட்சி மீனாட்சி காளியம்மா.

தீச்சட்டி ஏந்தி கன்னியர்கள் - அம்மா
தீவினை தீர்த்திட வேண்டுமென்று
ஆச்சியுள் ஆலய வாசல் வந்தால் - தாயே
அத்தனை குறைகளும் தீர்ப்பவளே.
கையில் சிலம்பு கலகலக்க அம்மன்
காலில் கதங்கை மிகவொலிக்க
வைய மாந்தரை காத்தருள எங்கள்
மாதா வாறாள் கும்பி கொட்டுங்கடி.

மாவிலை தோரணம் கட்டி வைத்து பக்தர்
மாதரசே நீயும் வாருமென்று
கூவி அரோகரா கோசமிட்டு தாயே
கும்பிட்டு நிற்பதை பாருமம்மா.

பாரினில் வாழும் தமிழர் குலம் - இதை
பக்தியுடன் நித்தம் பாடி வந்தாய்
காரிகையே எங்கள் மாரியம்மா நீயும்
கருணை தந்திட வந்திடுவாய்.

அறியாத மூடன் பாடி வைத்த - இந்த
அழகு செந்தமிழ் பாக்கினிலே
நெறி தவறிப் பிழை இருந்தால் - தாயே
நெஞ்சம் மகிழ்ந்து பொறுத்திடம்மா.

### சிவபெருமான்

ஆதிசிவனே அருட்கடலே புவி
அனைத்தும் காக்கும் முழுமுதலே
சோதி வடிவாக நின்றவரே எங்கள்
சொக்க நாதரே வாருமையா
கீரிமலை அமர்ந்திருந்து
கீரிமுகம் மாற்றியவா
கீர்த்தியுடன் வாழ்வதற்கு
கிருபை செய்வீர் என்னப்பா

### முருகன்

ஆறுமுகம் கொண்ட வேலவனே குரு
அன்னையைப் பக்கம் கொண்டவனே
ஏறு மயிலேறும் வித்தகனே தமிழ்
என்றும் தருகின்ற உத்தமனே

### விஷ்ணு

கருட வாகனமும் கொண்டவரே என்றும்
காக்கும் தொழிலுக் கதிபதியே
திருடியே வெண்ணை உண்டவரே நல்ல
தித்திக்கும் நற்கவி தாருமையா


### சரஸ்வதி

வெள்ளைக் கமலத்தே வீற்றிருந்து பக்தர்
உள்ளமறிந்து வரமருளும்
தெள்ளுதமிழ்ச் செல்வ நாயகியே எந்தன்
சிந்தையில் வந்து அமருமம்மா

### அம்மன்

கல்வி செல்வம் வீரம் என்னும் - நல்ல
கலை ஞானம் எல்லாம் எமக்களிக்கும்
வல்லமை கொண்டவள் துர்க்கையம்மா என்று
வஞ்சியரே கும்மி கொட்டுங்கடி

ஆக்கம்
கலைச்சுடர், கலாபூஷணம்
ஐயாத்துரை சிவபாதம் அவர்கள்
அம்பாள் குளம், கிளிநொச்சி.



புலவர் காளிதாசன் அவர்கள்

## காளிதாசன் புலவர்

தமிழ் பண்பாட்டிற்கு இலக்கணமாக முனீஸ்வரம் என்னும் அருள் நிறைந்த ஊரில் விஸ்வப்பிரம்ம குலத் தோன்றலாகிய முத்துவேல் ஆசாரியார் அவர்கட்கும், ஔவை அம்பாளுக்கும் கடைசி மகனாக 1933.01.31 முனிஸ்வரம் வடிவாம்பிகையின் அருளால் அவதரித்தவர் காளிதாசன் புலவர் ஆவார்.

கலைகளில் ஆர்வம் உடைய காளிதாசன் புலவர் அவர்கள் தம் ஊரில் இருந்து வெளியேறி கேசாவில் எனும் ஊரில் குடியிருப்பதற்கு சென்று வாழ்ந்து வருகையில் அங்குள்ள பிள்ளையார் ஆலய அருகில் நல்லையா அவர்கள் சிறுவர்களுக்கு பரதக் கலை, சிவசக்தி, நடனம், கண்ணன் நடனம், கோலாட்டம், குறவன் குறத்தி நடனம், செம்பு நடனம், மயில் நடனம் போன்ற தமிழ் பண்பாட்டில் உள்ளடங்கிய நடனங்களை கற்றுக்கொடுத்தார்.

தாம் வசிக்கும் ஊரில் கலை கற்றுக் கொடுக்கும் கருவை அறிந்த காளிதாசன் அவர்கள் மிகவும் ஆனந்தம் கொண்டு தமது 9 வயதில் நடனம், நாடகம் பழகுவதற்கு நல்லையாவையே குருவாகி ஏற்றார். இவ்வாறு நாடகம் பழகும் வேளைதனில் கிருஷ்ண லீலா எனும் தெய்வ அம்சம் பொருந்திய நாடகக் கலையில் கிருஷ்ணர் அவதாரத்தை பாத்திரம் ஏற்று மிகவும் சிறப்பான முறையில் நடித்துக் காட்டினார். இதற்கு சான்றாக பிரதம விருந்தினராக P.S டாக்டர் அவர்கள் காளிதாசப் புலவர் அவர்கட்கு தங்கச் சங்கிலியை அணிவித்துள்ளார்.

நாவலர் பாடசாலையில் தமது ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் மிகவும் திறமையான முறையிலும், சிறப்பான முறையிலும் தனது கல்வியைத் தொடர்ந்தார். ஆனாலும் இவரது கல்வி வாழ்விலும் முழுமையைப் பெற முடியாம காளிதாஸ் புலவர்கள் அவர்கள் 18 வயதில் கல்வி வாழ்வை நிறுத்தி விவேகானந்தா அச்சுக்கூடத்தில் சேர்ந்து தனது வாழ்வை சிறப்பாகத் தொடர்ந்தார். சில ஆண்டுகள் சென்ற பின் அவர் இராசையா கண்மணியம்மை ஆகியோரின் புதல்வியான யோகம்மாவை கரம் பிடித்து தனது இல்லற வாழ்க்கையை நடாத்தி வந்தார். இல்லறம் சிறக்கவும், நல்லறம் பெருகவும் ஒழுக்கத்துடன் வாழ்ந்து வந்த காளிதாஸ் புலவர் அவர்கள் மிகுந்த மெய்யன்புடனும், ஆதிபராசத்தியை வழிபட்டவர். அதனால் ஆதிபராசக்தியின் பக்தன் ஆனார்.

இதனால் ஆதிபராசக்தியின் திருவுருவை நேரில் கண்டு ஆனந்த பரவசம் அடைந்தவர் இப்புலவர் ஆவார். இதன் மூலம் ஞானம் பெற்ற இவர் ஆதிபராசக்தியை எண்ணி மெய்யன்போடு பாடிய பாடல்கள் பின்வருமாறு:-

### முத்துமாரி அம்பாள்

திருநெல்வேலி அருள் விளக்கே எங்கள் முத்து மாரியம்மா
திருவருளைத் தந்தருள்வாய் எங்கள் தாய் நீயல்லவோ
பார் முழுவதும் உந்தன் அருள் பரவி நிதம் அமைதி பெற
எழுந்தோடி வந்திடுவாய் எங்கள் முத்துமாரியம்மா

நாஸ்திகர் கொடுமைகள் நாளுக்கு நாள் வளருதம்மா
மாநிலத்தில் நல் மக்கள் மதிபிடிந்து வாழுவதோ?
வேப்பிலைக்காரி அம்மா முத்தான வடிவழகி
வேறு வழி தெரியவில்லை வேதனைகளை நீக்கிடம்மா

## கலைவாணி

நாவிலே திரு நடனம் ஆடிடும்
நாயகியே அன்னை கலைவாணி
உலகமே அழிந்தாலும் உனது புகழ் என்றும் அழியாது
உத்தமர் நாவினில் நித்தமும் விளையாடும்

தெய்வீக முக்கலை வளரும் இடமெல்லாம்
உனது சக்தியை எமக்கருள்வாய் தாயே
வீணைதனை மலர்க் கரத்தினில் ஏந்தி
தேன் இனிமை தந்திடுவாய் நீ

கருணை உள்ளம் கொண்ட கற்பகமே அருள் தருவாய்
புலவர்கள் எல்லாம் கூடி புகழ்மாலை பல பாடும்
வாணி சரஸ்வதியே வாக்கினிலே வந்தருள்வாய் (நாவிலே)

## விக்கினேஸ்வரன்

விக்கினேஸ்வரா கருணாகரா
வினைகளை தீர்த்து எமைக் காக்கா வா
இசை, ஞானம் தருவது
உனது அருளாகுமே
இதயம் அருள் வீசும் கோவில் ஆகுமே.

ஐங்கரனின் திருப்பாதம் பணிவோர்க்கு
ஐஸ்வரியம் கிடைக்கும் என்பதே
ஆன்றோர் அருள்வாக்கு இசையினில் ஒலிப்பது ஓங்காரம்
ஒரு மனதுடன் துதித்தால் கிடைக்கும் சிவலோகம்.

ஔவையின் பாடலுக்கு அருள் கொடுத்தாய்
துதிக்கையால் தூக்கி சிவன் திருப்பாதம் வைத்தாய்
ஆயிரங்கோடி வணக்கம் ஐயா
உலக அமைதி தர வேண்டும் ஐயா (விக்கினேஸ்வரா)

## மூர்த்தி விநாயகன்

முர்த்த விநாயகனே
முன் நின்று காப்பவனே

சக்தியின் தலை மகனே சண்முகன் சோதரனே
சர்வ வல்லமை பெற்றவனே மனச் சாந்தியை தாரும் ஐயா
அடைக்கலம் அண்ணா என்றார் அழகு வேலன் அருமைத்தம்பி
யானையாக வடிவெடுத்தாய் குறவள்ளியை தம்பிக்கு மணம் முடித்தாய்

பஞ்சமுகம் கொண்ட ஐயா பஞ்சமா பாதகம் குறைய வேண்டும்
பார் எல்லாம் அமைதி பெற பார்வதி மைந்தனே பரிவுடன் காப்பாய்.

எம்மை சில மனிதர் கேடயமாகப் பயன்படுத்தி சுயநலவாதிகள் தங்கள் நலனுக்காக தாம் நினைத்தவை நிறைவேறும் வரையில் நன்றாக உபசரித்த பின்னர் அனைத்தும் முடிவுற்ற பின்பு எம்மை அவமதிப்பார்கள். ஆனாலும் எம்மை எம் அன்னை குறைய வைக்கவில்லை. இதை அனைவரும் தெரிந்து கொண்டால் போதும்.

## விக்கினேஸ்வரா கருணாகரா

விக்கினேஸ்வரா கருணாகரா
குறைகளை தீர்த்து எமைக் காக்கவா (வி)

இசை, ஞானம் தருவது
உனது அருளாகுமே
இதயம் அருள் வீசும் கோவில் ஆகுமே (வி)ஐங்கரனின் திருப்பாதம் பணிவோர்க்கு
ஐஸ்வரியம் கிடைக்கும் என்பதே
ஆன்றோர் அருள்வாக்கு
இசையினில் ஒலிப்பது ஓங்காரம்
ஒருமனதுடன் துதித்தால்
கிடைக்கும் சிவலோகம் (விக்கினேஸ்)

ஔவையின் பாடலுக்கு
அருள் கொடுத்தாய்
துதிக்கையால் தூக்கி
சிவன் திருப்பாதம் வைத்தாய்
ஆயிரங் கோடி வணக்கம் ஐயா
உலக அமைதி தர வேண்டும் ஐயா (விக்கினேஸ்)

## மூர்த்தி விநாயகனே

மூர்த்தி விநாயகனே
முன்நின்று காப்பவனே

சக்தியில் தலை மகனே
சண்முகன் சோதரனே
சர்வ வல்லமை பெற்றவனே
மனச்சாந்தியை தாரும் ஐயா (மூர்த்தி)
அடைக்கலம் அண்ணா என்றார்
அழகுவேலன் அருமைத்தம்பி
யானையாக வடிவெடுத்தாய்
குறவள்ளியை தம்பிக்கு மணம் முடித்தாய் (மூர்த்தி)

பஞ்சமும் கொண்ட ஐயா
பஞ்சமா பாதகம் குறைய வேண்டும்
பார் எல்லாம் அமைதி பெற
பார்வதி மைந்தனே பரிவுடன் காப்பாய் (மூர்த்தி)

## வடிவேலனே சிவபாலனே

வடிவேலனே சிவபாலனே ஓம்
அருள் ஒளியாகி நெஞ்சினில் நின்று
ஆடிடுவாய் சிவபாலனே (வடிவே)

நீதியும் நேர்மையும் இல்லாத நாட்டில்
நீதியை என்றும் நிலை நாட்டுவாய்
எங்கும் அருள் அமுதை
தினம் ஊட்டுவாய் (வடிவே)

ஓம் சரவணபவ என்னும் திருமந்திரத்தை
ஜெபித்திடுவோம் என்நாளுமே கூடிடுவோம்
மெய்யடியார்கள் எல்லோருமே
கள்ளமில்லா மெய்யடியவர் தம்மை
காத்திடுவாய் கதிர்வேலவா
கருணை மிகுந்த தேன் தமிழ் காவலா (வடிவே)

## மறவேனே எந்நாளும்

மறவேனே எந்நாளும்

முருகா எமது சேதி கேளும் (மறவே)

மெய்யடியார் உள்ளம் தன்னில்
ஞானச் சுடராக நிற்கும் வேலா
ஆதரவு தாரும் ஐயா (மறவே)

சோதனை ஏனோ கந்தா
துணையாக வந்து காப்பாய்
இருள் சூழும் தமிழர் வாழ்வில்
இருள் நீக்கி ஒளியைத் தாராய் (மறவே)
ஈசன் தந்த தமிழ் செல்வா
தமிழர் இடர்தனை தீரும் ஐயா
குழந்தை போன்ற தமிழ் தெய்வம்
வேறு எந்த உலகில் உண்டோ ஐயா (மறவே)

சோதனை இன்றோடு மறைந்தே
தமிழர் வாழ்வில் இன்னல் அகன்றே
உன்பாத சேவை தினமே
அடையும் நல்வழியைத் தாராய்
இனி என்றும் கண்ணின் இமையாய்
துணையாக வந்து காப்பாய்
தீராத துன்பம் தீரும்
அனைத்தும் உன்னால் உண்டாகும். (மறவே)

**வேல்முருகன்**

வேல்முருகன் காட்சி தந்தான்
செல்வச் சன்னதியிலே (வேல்)

அங்கு சென்று ஆடிப் பாடினால்
முருகன் அருள் கொடுப்பான்
நல்ல வரங் கொடுப்பான் (வேல்)

ஆறு பெருகி ஓடுவது
அப்பன் திருவடியிலே
அங்கு பக்தர் சென்று
தேவற்கு அரசனான வேல்முருகனை
அரோகரா முருகா என்று

ஆடிப்பாடுவார் (வேல்)

சன்னதிக்கு வந்த மெய் அடியார்க்கு எல்லாம்
சஞ்சலமற்ற நல்வாழ்வு கொடுப்பார்
கற்பூர ஒளியினிலே காட்சி கொடுக்கும்
கருணை உள்ள வேலவனில்
திருத்தாழ் பணிவோமே (வேல்)

## நல்லை நகர் அழகு முருகன்

எம் சிந்தையில் நின்று
பல நன்மைகள் செய்தவன்
மெய்யடியார் உள்ளத்தில்
ஞானஜோதியாய் இருப்பவன்
அம்மைக்கும் அப்பனுக்கும்
செல்வக்குமரன்

சேவற் கொடியோடும்
இருமாதர் துணையோடும்
ஆடும் மயில் மீது, அமர்ந்தவன்
ஐங்கரனின் அழகுச் சோதரன்
உலகெல்லாம் போற்றும்
நல்லை நகர் அழகு முருகன்

தேன் தமிழால் இசைபாடும்
மெய்யடியார் நாவில்
செந்தமிழ் தேனாக இனிப்பவன்
ஒளவைக்கு பழம் கொடுத்த
மெய்யான தமிழ்ப் பண்டிதன்
கார்த்திகைப் பெண்கள்
அறுவர் மடியிலே வாழ்ந்த
நல்லை நகர் முருகன்

நல்லூரானைக் காண வாருங்கள்
நாள் எல்லாம் அவன் திருப்புகழ் பாடுங்கள் (நல்லூ)

## சன்னதி முருகன்

சன்னதி முருகன் சங்கரன் புதல்வா

சஞ்சலம் தீர்ப்பாய் சண்முகநாதா

பன்னிரு கையால் பரிந்து எம்மை அணைத்தே
பரிவுடன் காப்பாய் பார்வதி பாலா (சன்னதி)
அருள் தரும் வேலனின் அழகிய தோற்றம்
நினைத்தாலே கிடைத்திடும் பேரின்ப மாற்றம் (சன்னதி)

பிரமனை சிறையில் அடைத்தவன் நீயே பிரணவப் பொருளே
தந்தைக்கு உரைத்திட்ட சேயே ஆறுபடை வீட்டில்
அமர்ந்தவன் நீயே அருள் வடிவான
செல்வச் சன்னதியானே (சன்னதி)

## கதிரமலை கந்தன்

அழகுத் தெய்வமாக வந்து கதிரமலை மீது அமர்ந்து
அடியாரைக் காக்க வந்த முருகனே அமுதசுவை ஊறும் எங்கள்
ஆறுமுகனை நாடி வந்தேன் கதிரமலை மேலே (அழகுத்)

இனியதமிழ் தேன் சுவையாய்
மதுர கீதம் பாட வந்தேன் முருகனே
மெய்யடியார்கள் நாவினிலே
தமிழோடு விளையாட வந்த வடிவேலா
சிவந்த உடம்போடு வந்து
பவள நிறவாய் திறந்து அருள்தர
வேண்டும் ஞானச் சிவபாலா
வேறு கதியில்லை அருள் தருவாய்
அருட்கவி பாட (அழகுத்)

மனமிரங்கி நீ எனக்கு மரணபயம் தீரும் மட்டும்
கவலை இல்லாமல் இருக்க கனகமயில் மீது அமர்ந்து
கருணை மழையே பொழிந்து அருள்தர வேண்டும் மயில்வீரா

ஆக்கம்
புலவர் முத்துவேல் காளிதாசன்
முனீஸ்வரம்,
நல்லூர், யாழ்ப்பாணம்

## பெண்புலவர் ம.சிவயோகம்

வணக்கம்

அடியேன் 1960ஆம் ஆண்டு மாசி மாதம் 17ஆம் திகதி கோட்டைக்காடு சாளம்பை பதி அருகில் முத்துக்கிருஸ்ணர் பரிமளம் தம்பதிகளுக்கு மகளாக வாழப்பிறந்தேன். சிறு வயதில் இருந்தே நாங்கள் முருகன் அருகே வாழ்ந்ததால் எங்கள் குலதெய்வமாக முருகன் இருந்து வந்தார். இருபத்தைந்து வருடங்களாக முருகன் பக்கத்தில் ஒரே வேலி எல்லையில் தெற்குப் பக்கத்தில் வாழ்ந்தோம். பின்பு திருமணமாகி குப்பிளான் தெற்கு மயிலங்காட்டில் வாழ்ந்து வருகிறோம்.

மயிலங்காட்டில் வைரவப்பெருமான் அருகே இன்று வரை எங்கள் வாழ்க்கை தொடர்கின்றது. வைரவப்பெருமான் திருவிழாக்காலங்களில் பஜனை பாடும்படி எங்களைப் பலரும் வேண்டுவார்கள். அவர்களின் விருப்பப்படி பஜனை சொல்லிக் கொடுப்பேன். அப்போ பிற தெய்வங்களின் பாடல்களைத்தான் அதிகம் படிப்போம். ஆனால் வைரவப்பெருமான் மீது பாடல்கள் எமக்குத் தெரியாது. ஆகவே 1992ஆம் ஆண்டளவில் எங்கள் எண்ணத்தில் தோன்றிய நினைவுகளை பாடலாக்கி வைரவப்பெருமானை தோத்தரித்தோம்.

அவையாவன:

ஆதிமூலத்தில் வைரவப்பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதால் முதலில் அதை ஆரம்பித்து அடியேன் பாடலை ஆரம்பித்தேன்.

*ஆதிமூலப் பெருமானே ஞானவைரவா என்றபாடல்*

ஆதிமூலப் பெருமானே ஞானவைரவா எங்கள்
ஆதிசிவன் பாலகனே ஞானவைரவா
திரிசூல நாதனே ஞானவைரவா எங்கள்
தில்லை நாதன் பாலகனே ஞானவைரவா

பாலால் அபிஷேகம் ஞானவைரவா உனக்கு
பன்னீரால் நீராட்டாம் ஞானவைரவா
தேனால் அபிஷேகம் ஞானவைரவா உனக்கு
செவ்விளநீர் நீராட்டாம் ஞானவைரவா

பூசை நடக்குதையா ஞானவைரவா உந்தன்
புதுமையுள்ள ஆலயத்தில் ஞானவைரவா
தீபம் எரியுதப்பா ஞானவைரவா உந்தன்
திருக்கோவில் வாசலிலே ஞானவைரவா

கற்பூர வாசனையாம் ஞானவைரவா உனக்கு



பெண்புலவர் சிவயோகம் அவர்கள்

கமறி மணம் கொள்ளுதப்பா ஞானவைரவா
சாம்பிராணி வாசனையாம் ஞானவைரவா உனக்கு
சாந்த மணம் கொள்ளுதப்பா ஞானவைரவா

பிள்ளையாரின் தம்பியரே ஞானவைரவா எங்கள்
பிழைகளெல்லாம் பொறுத்திடப்பா ஞானவைரவா
ஆறுமுகன் அண்ணனாரே ஞானவைரவா எமக்கு
ஆறுதலைத் தந்திடப்பா ஞானவைரவா

எல்லையிலே காவல் கொள்ளும் ஞானவைரவா நீயும்
எங்கள் குலதெய்வமப்பா ஞானவைரவா
வீதியோரம் வீற்றிருக்கும் ஞானவைரவா எங்கள்
வினைகளெல்லாம் தீர்த்தருள்வாய் ஞானவைரவா

வடை மாலை தரித்தவனே ஞானவைரவா எம்மை
வளமாக வாழவைப்பாய் ஞானவைரவா
பூமாலை நாம் தருவோம் ஞானவைரவா இந்தப்
புவனமெல்லாம் காத்தருள்வாய் ஞானவைரவா

கருநாயின் மீதேறி ஞானவைரவா எங்கள்
காவலனே வந்திடையா ஞானவைரவா
கருங்காலிப் பொல்லுடனே ஞானவைரவா எம்மை
காத்தருள வேண்டுமையா ஞானவைரவா

***அடுத்து அகர வரிசையில் ஒரு பாடல் படிக்க வேண்டும் போல் தோன்றியது.***

***அன்பருள்ளக் கோயில் கொண்டாய் ஞானவைரவா என்று தொடங்கும் பாடல்***

அன்பருள்ளக் கோயில் கொண்டாய் ஞானவைரவா
ஆறுதலைத் தந்திடுவாய் ஞானவைரவா
இன்பமெல்லாம் நீயல்லவோ ஞானவைரவா
ஈடில்லாக் கருணை வெள்ளம் ஞானவைரவா
உற்ற துணை நீயல்லவோ ஞானவைரவா
ஊழ்வினைகள் தீர்த்து வைப்பாய் ஞானவைரவா
எங்கள் குல தெய்வமல்லோ ஞானவைரவா
ஏழைகளைக் காத்தருள்வாய் ஞானவைரவா
ஐயா உன் நாமத்தையே ஞானவைரவா
அல்லும் பகலும் சொல்வோம் ஞானவைரவா
ஒரு குறையும் வந்திடாமல் ஞானவைரவா
ஓடி வந்து காத்திடுவாய் ஞானவைரவா
ஔடதம் எல்லாம் நீயே ஞானவைரவா
எ்.கின் பலம் எமக்கருள்வாய் ஞானவைரவா
காவலுக்கு வீரனன்றோ ஞானவைரவா
காத்து வரம் அருள்வாய் ஞானவைரவா

*அடுத்து அடியேனுக்கு சங்கீதம் என்றால் என்ன என்றே தெரியாது. இருந்தாலும் இப்படி ஒரு பாட்டை எழுதிப் படிக்க வேண்டும் என்று தோன்றியதால் படித்தது.*

சூலம் கைப்பிடித்த சுந்தரனே
சூழ்ந்த பகை அகற்றி எம்மை காப்பவனே
ஞானம் எமக்கருள்வாய் நாயகனே உன்னை
நாள்தோறும் நாம் பாட அருள்தருவாய் (சூலம்........)

அஞ்சுதலை நீக்கி எங்கள் வாழ்வினிலே
ஆறுதல் நீ தந்திடுவாய் ஆண்டவனே
வஞ்சமில்லா அன்பர் நெஞ்சில் வாழ்பவனே
வல்வினைகள் போக்கிடுவாய் காவலனே (சூலம்........)

வடை மாலை சூடிய வைரவனே
வாஞ்சையுடன் எம்மை என்றும் காப்பவனே
தடைபோட முடிந்திடுமா உன் அருளை
தரணி எல்லாம் காப்பவனும் நீயல்லவோ - இந்த
தரணி எல்லாம் காப்பவனும் நீயல்லவோ (சூலம்........)

அடுத்து சாளம்பை முருகனுக்கு பஜனை படிக்க வேண்டிய சந்தர்ப்பம் அடியேனுக்கு கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக கிடைத்தது. அப்போது அடியேன் மனதில் தோன்றியது.

*முதலில் பிள்ளையாருக்கு*

சாளம்பை வீதியிலே கணபதியே வந்திடுவாய்
அடியவர்கள் தோள்மீது காட்சியும் தந்திடுவாய்

கந்தனுக்கு முன்பிறந்த ஆனைமுகத்தோனே
கருணை பொங்கும் வள்ளலே ஐந்து கரத்தானே
முதல்வனாக நீ இருப்பாய் பிள்ளையாரப்பனே
முன் வந்தே காத்திடுவாய் மூசிக வாகனனே
தொந்திக் கணபதியும் நீயல்லவோ
தோத்தரித்தோம் முதலில் உன்னை நாமல்லவோ
சித்தி விநாயகனே சக்தி சிவ பாலகனே
முத்தி தருபவனே மூத்தவனே வந்தருள்வாய்

ஆற்றங்கரை மீதிருந்து அடியவரைக் காப்பவனே
ஆறுமுக வேலவனின் அண்ணனே கணநாதா
ஆகு வாகனனே ஆனந்த ஐங்கரனே
அனுதினம் வலம் வந்தோம் ஆறுதல் தந்திடுவாய்

தந்தை தாய் உலகமெனும் தத்துவத்தைச் சொன்னவனே
பெற்றோரைச் சுற்றி வந்து மாம்பழம் பெற்றவனே
மாங்கல்யம் அருள்பவனே மங்களம் தருபவனே
அன்பர்கள் நாவினிலே நீ இருந்து பாட வைப்பாய்

***அடுத்து நாட்டில் பிரச்சினை நடந்த காலகட்டத்தில் மயிலங்காடு கருணாகரப்பிள்ளையாரை மனதில் எண்ணி வேண்டியது.***

பிள்ளைகளைக் காத்திடுவாய் பிள்ளையாரே அவர்
பிழைகளெல்லாம் பொறுத்திடுவாய் பிள்ளையாரே
கருணையுள்ள தெய்வமப்பா பிள்ளையாரே
கவலைகளைத் தீருமையா பிள்ளையாரே

இடியோசை கேட்பது போல் பிள்ளையாரே - இங்கு
வெடியோசை கேட்குதையா பிள்ளையாரே
உனை நாடி ஓடி வந்தோம் பிள்ளையாரே
நல்ல முடிவொன்று காட்டுமையா பிள்ளையாரே

கூறி அழ முடியாமல் பிள்ளையாரே
மனம் குமுறுகிறார் மக்களெல்லாம் பிள்ளையாரே
வேறு இடம் எமக்குண்டோ பிள்ளையாரே
ஆறுதல் நீ தந்திடப்பா பிள்ளையாரே

பொருள் தேடி ஓடுகிறோம் பிள்ளையாரே
அக இருள் நீக்கி வைத்திடையா பிள்ளையாரே
அருள் தேடி ஓடி வந்தோம் பிள்ளையாரே
எம்மை புகழோடு வாழ வைப்பாய் பிள்ளையாரே

***எங்கள் வறுமை நிலை நினைத்து கருணாகரனை வேண்டியது.***

கருணாகரனே கஜமுகனே வருவாய்
கவலைகள் தீர்த்து ஆறுதலைத் தருவாய்
அருணோதயனே ஆனைமுகா வருவாய்
அடியவரெம்மை ஆதரித்தே அணைப்பாய்

உன் புகழ் என்றும் நாம் பாட வேண்டும்
உள்ளத்தில் என்றும் நீ வாழ வேண்டும்
நன்மைகள் இங்கே நாம் காண வேண்டும்
நல்லவராக நாம் வாழ வேண்டும்
வல்லபை கணபதி நீயல்லவோ
வல்லமை எமக்கு தருவாயே
வறுமை நிலைதனை நீக்கிடையா
வாட்டத்தை நீயும் போக்கிடையா

**அந்தச் சந்தர்ப்பத்தில் வாணியையும் நினைக்கத் தோன்றியது.**

கலை வாணியே உந்தன் அருள் வேண்டுமே
செந்தமிழாலே இசை பாடவே

ஏழு ஸ்வரங்கள் அறியாதவள்
ராக தாளங்கள் தெரியாதவள்
இன்னிசை தனைப் பாட ஆசை கொண்டேன்
என் இதயத்தில் நீ இருந்து இசை கூட்டுவாய்

கற்றவர் மற்றவர் முன்னிலையில்
சொற்பிழை இல்லாமல் இசைத்திடவே
அதற்கு உன் அருள் இன்று நான் கேட்கிறேன்
உன் அடிமை என் வாழ்வில் ஒளியேற்றுவாய்.

***அதே காலகட்டத்தில் ஸ்ரீமுருகன் பாடசாலைக்கு அருகே நாகதம்பிரான் கோயில் கொண்டுள்ளார். அவருக்கும் பஜனை பாடும் பாக்கியம் அடியேனுக்கு கிடைத்தது. அப்போ பாடியது. அப்போ கடும் வெயிற் காலம்.***

தம்பிரானே நாக தம்பிரானே
தர்மம் நிலைக்க வேண்டும் தம்பிரானே

கவலையுடன் நாங்களெல்லாம் தம்பிரானே
உந்தன் காலடியைத் தேடி வந்தோம் தம்பிரானே
கருணையுள்ள தெய்வமப்பா தம்பிரானே
கவலைகளைத் தீருமையா தம்பிரானே

பாம்பென்றால் படை நடுங்கும் தம்பிரானே
உன் பக்தர்கள் நாம் நடுங்கலாமோ தம்பிரானே
வேம்படியில் இருப்பவரே தம்பிரானே
வேதனையைத் தீருமையா தம்பிரானே

மழையின்றி மண்மேலே தம்பிரானே
பயிர்களெல்லாம் வாடுதையா தம்பிரானே
பயிரின்றி நாட்டினிலே தம்பிரானே
உயிர்களெல்லாம் வாடுதையா தம்பிரானே

நாடு வளம் பெற வேண்டும் தம்பிரானே
நாட்டு மக்கள் நலம் பெற வேண்டும் தம்பிரானே
வீடு நலம் பெற வேண்டும் தம்பிரானே
எங்கள் வாழ்வு வளம் பெற வேண்டும் தம்பிரானே

**அடுத்து எங்கள் வறுமை துன்பங்களை நினைத்து அடியேன் பாடும் பாடல்.**
ஏன் இன்னும் எந்தனுக்குச் சோதனை
என்று தீருமோ நான் படும் வேதனை

உடலின் குறைகளை நீ அகற்றி விடு
உள்ளத்தில் உன்னை என்றும் இருத்தி விடு
வல்லமை எந்தனுக்கு தந்து விடு
என்றும் உன் அருள் உண்மை என்று உணர்த்தி விடு

வேல் வந்து வினை யாவும் ஓட்ட வேண்டும்
திருநீறு துயர் யாவும் தீர்க்க வேண்டும்
கருணை மழையில் உள்ளம் மூழ்க வேண்டும்
என்றும் மகிழ்வோடு உன் புகழ் நான் பாட வேண்டும்

அடுத்து எங்கள் வீட்டுக்குச் சமீபத்தில் ஓர் நரசிங்கவைரவப்பெருமான் கோயில் கொண்டுள்ளார். அவர் ஆலயத்திலும் பஜனை செய்வது அடியேன் தொண்டு. ஒருமுறை எனக்கு உடல் நிலை சரியில்லை சிறிய சத்திரசிகிச்சை செய்து வைத்தியசாலையில் இருந்து வந்து சில நாட்களில் திருவிழா ஆரம்பமாகி விட்டது. அயலவர்கள் 'பவா' அக்கா இந்தமுறை வரமாட்டீர்களா? என்று கேட்டார்கள். எனக்கும் போக ஆசைதான் அம்மா போக விடவில்லை. நீ போய் சத்தம் போட்டு பாடுவாய் அது உனக்கு கூடாது என்று மறித்து விட்டார். வந்தவர்களிடம் சொன்னேன் ஒரு பாட்டு எழுதித்தருகிறேன் என்னை நினைத்து நீங்கள் படியுங்கள் என்று இசையுடன் பாடிக்காட்டினேன். இதோ அவர்கள் அழுது அழுது தான் உண்மையில் படித்தார்கள்.
நரசிங்க நாயகரே
உனக்கு என்மீது அருளில்லையோ
உன் வாசல் வந்து வணங்கிடவே
என் உடலை வருந்த விட்டு
என்னைத் தடுத்ததும் ஏனையா

வாசல் வாரா உடல் எதற்கு
உனைப் பாடாத நா எதற்கு
இனியாவது கருணை தந்து
உன் வாசல் வர வழிவிடையா

உன் புகழைப் பாடிடவே என்
உள்ளம் ஏங்கும் வேளையிலே
என் உடலை வருந்த விட்டு
என்னை வாட்டுவதும் ஏனையா

கூவி உனை நான் அழைத்தேன்
என் குரலோசை கேட்கலையோ

பாவி எனைக் காப்பதற்கு
நீயும் பறந்தோடி வந்திடையா

முருகனை நினைத்த நேரத்தில் சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி படிப்போம். அதை எழுதமுடியாது. எப்படி அழுதாலும் தொழுதாலும் எங்களை ஏழ்மை நிலையில் இருந்து எங்களை மீட்க முருகனால் இன்னும் முடியவில்லை இதுதான் எங்கள் கவலை. எது வந்தாலும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவனை நாடிச்சென்று அவன் புகழ் பாடாமல் இருப்பதில்லை. முடிந்தவரை எல்லாம் அவன் நடத்தும் நாடகம் என்று எண்ணி மனதை ஆறுதல் படுத்தி எங்கள் வாழ்க்கையைத் தொடர்கிறோம். "வறுமையும் புலமையும்" என்ற பகுதியில் எங்கள் எண்ணங்களுக்கு இடமளித்த அனைவருக்கும் எங்கள் நன்றிகள் உரித்தாகட்டும்.

ஆக்கம்
ம.சிவயோகம்
மயிலங்காடு

நன்றியுரை

**துர்க்கா கவிஞானியின் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்**

எனது இன்ப ஊற்றிற்கு அருள் அளித்த அன்னை துர்க்கையின் பாதம் பணிந்து, இவ்வாக்கத்திற்கு பல வழிகளிலும் ஆலோசனை ப்றி என்னை ஊக்குவித்து புலமையும் வறுமையும் எனும் இந் நூலினை ஆக்கி இவ் உலகிற்கு அறிய வைத்து ஆசியுரை, வாழ்த்துரை வழங்கிய அனைத்து அந்தணர்களுக்கும் மற்றும் ஆசிரியப் பெரியோர்களுக்கும் பற்பல இடங்களில் இருந்து நிதி உதவிகள் புரிந்தவர்களுக்கும், எம்மை வழிப்படுத்தும் எமது இந்து இளைஞர் சங்கத்தினருக்கும் மேலும் என் அன்புக்கும், பக்திக்கும் துணை நிற்கும் மெய்யடியார்களுக்கும், இந்நூலினை அச்சிட்டு அழகுபடுத்தி அனைவரின் உள்ளங்களையும் கவரும்படி ஆக்கித்தந்த சுன்னாகம், மகிந்தன் அச்சகத்தினருக்கும் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்து, எல்லாம் வல்ல துர்க்கை அம்பாள் என்றென்றும் அருள்புரிய வேண்டுகின்றேன்.


இப்படிக்கு அருள்மிகு அம்பிகையின் சிறு அடியேன்

கு.கமலேஸ்வரன்
துர்க்கா
கவிஞானி
துர்க்காபுரம்
தெல்லிப்பழை.

**அடியேனின் அடுத்த ஆக்க நூலாக புயலுக்குள் பூகம்பம் வெளிவர இருக்கின்றது.**

என் வாழ்வில் அறியாத் தன்மை கொண்ட காலத்தில் இருந்து இன்று வரை இடம் பெற்ற துன்பங்களும் இன்பங்களும் இவற்றுடன் சம்பந்தப்படும் மனிதர்களை வெளிச்சத்தில் காட்டும் நூலாக வரவிருக்கும் "புயலுக்குள் பூகம்பம்" வாழ்வின் அனுபவம்.

நன்றி


அரச
இலக்கியக் கலை
பெருவிழா

சிவசிந்தையின் வெற்றியின் சின்னம்



அறிவின்தரு விநாசித்தம்பிப்புலவர்



துர்க்கா கவிஞானி த.கமலேஸ்வரன்



திரு.நாகத்தினம்



திரு.ஈஸ்வரநாதன் (அதிபர்)



பிரம்மஸ்ரீ சுந்தரரேஸ்வரக்குருக்கள்



ஆசிரியமணி பஞ்சாட்சரம் ஐயா



வாசுதேவ குருக்கள்



வாசுதேவ குருக்கள் ஆசீர்வதித்தல்



பிரம்ஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள்



அருட்கவி விநாசித்தம்பிப்புலவர்





இந்து சமயப்பேரவைத் தலைவர் (அருட்கவி சி.விநாசித்தம்பிப் புலவர்) அவர்களால் திரு.கமலேஸ்வரன் அவர்களுக்கு துர்க்கா கவிஞானி (12-05-2001 )அன்று வழங்கப்பட்ட தங்கப்பதக்க நிகழ்வின்போது



உரும்பிராய் பர்வதவதனி அம்மன் ஆலய திருவுருவங்கள்




வழிபடல்



பிரம்மஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள்



அருட்கவி விநாசித்தம்பிப்புலவர்





12.03.2001 அன்று நடைபெற்ற நாம இன்பரசம் என்னும் நூல் வெளியிடப்பட்டபோது எடுக்கப்பட்ட ஆவணப்படம்



அப்துல்ஹமீத் ஜெயராஜ் அவர்கள் துர்க்கா கவிஞானியை நேர்காணல்



ஐயப்பன் மலைதரிசனம் செய்யும் ஆனந்த பஜனை



உடுவிலில் நடைபெற்ற இன்னிசைக் கச்சேரி



தெல்லிநகர் அற்புதக்காளியின் ஆலயத் தோற்றம்



2003 ஆம் ஆண்டு ஆலயம் புனரமைத்து அபிஷேகத்தின்போது



அருள்மிகு துர்க்கை அம்பாள் வீதியுலா வருதல்



ஏழாலை அருள்மிகு ஞானவைரவர் ஆலய
கீர்த்தனை தரிசனம்



மாதிரைப்பதி உறை அருள்மிகு ஞானவைரவர் ஆலய
தேர் உற்சவ கீர்த்தனை தரிசனம்



கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய
கீரிமலை சிவன் ஆலய
சிவராத்திரி கீர்த்தனை தரிசனம்



உரும்பிராய் பர்வதவதனி ஆலயத்தில்
நூல்வெளியீட்டில் கீர்த்தனை தரிசனம்



அருள்மிகு தெல்லிநகர்த் துர்க்கை அம்பிகையின்
தேர் உற்சவத்தின்போது கீர்த்தனை தரிசனம்



யாழ்பலநோக்குக்கூட்டுறவுச் சங்க வாணிவிழா
கீர்த்தனை தரிசனம்

சிவனின் அருட்கடாட்சம்
இறைவன் இன்றி இவ்வுலகம் இல்லை
இக்கூற்றின் உண்மைக் கருத்தினை
எழுதப்பெற்ற நாடகம்




இறைவனை நாடி சிறுவர்களுடன்
அடியேனும் சேர்ந்து நடித்து
சிறப்புப்பெற்ற நாடகமாக
சிவராத்திரி தினத்திலும் பல
இடங்களிலும்
மேடையேற்றிப் பாராட்டுப்பெற்ற
நாடகத்தினை இந்நூலின்
படத்தொகுப்பில்
வெளிப்படுத்துகின்றேன்.



திருமுறைபாராயயணம்



தீப ஆராதனையின்போது





சிவஉரு தாங்கும் வேடம்

பல அடியவர்களின் வேண்டுகோளிற்கிணங்க
அருள்திகு தெல்லிநகர் துர்க்கையின் அற்புத சித்தி பெற்ற
அடியேனின் சிந்தையில் பல வடிவங்கள் கொண்ட
தெய்வங்கள் மீது இயற்றிப் பாடப்பெற்ற
முதலாவது தொகுப்பான

# நாம இன்பரசம்

பின் இணைப்பாக வெளிவருகின்றது.

## பொருளடக்கம்


ஆசியுரைகள்
முன்னுரை
தியானநிலை
பன்னிரு திருமுறை
அருள்மிகு துர்க்கையின் அதி அற்புதம்
எமக்கு நேர்ந்த இன்னல்கள்
விநாயகர் காப்பு
பிள்ளையார் துதி
ஜெயகணேசன் துதி
கணநாதன் துதி
இணுவில் பரராஜசேகரன் துதி
கொள்ளங்கிராய் பிள்ளையார் துதி
அளவை கும்பளாவளை விநாயகர் துதி
தனங்கிளப்பு பிள்ளையார் துதி
கல்கமுவாப்பிள்ளையார் துதி
மல்லாகம் பழம்பிள்ளையார் துதி
ஏழாலை மடத்துப்பிள்ளையார் துதி
தெல்லிப்பழை காசிவிநாயகன் துதி
பிழை பொறுத்தருளும் பிள்ளையார் துதி
சிவபெருமான் நடனத் துதி
சங்கரன் துதி
சுவரிலே சித்தரிக்கப்பட்ட கலைவாணி துதி
கதிரொளியான சரஸ்வதி துதி
கருணைமுகம் கொண்ட கலைவாணி துதி
லக்சுமி துதி
தெல்லிப்பதியுறைந்தவளே துதி

அன்பு கொண்டு அழைக்கின்றோம்
துர்க்காதேவி தாலாட்டுத் துதி
தேவி துணை வேண்டி நின்ற துதி
வீறுநடை போடுகின்ற துர்க்கை துதி
எண்ணம் எமக்கறிவித்த எங்கள் துர்க்கை துதி
தேர் இறங்கி ஆடிவரும் துதி
கல்லென்று சொல்பவர்க்கு கல்லாய் இருப்பவளே துதி
ஞானத்தின் திருவடிவே துர்க்கை துதி
காலையிலே நான் எழுந்து தேரடியை நாடி வந்த துதி
கேதாரகௌரி துதி
தேரேறி வருகின்ற துர்க்கை துதி
அன்னை துர்க்கை தாயே துதி
ஆதிசக்தி ஆனவளே துதி
துர்க்கை அம்பிகையின் தீர்த்தப்பாமாலை
அம்மா உன் அருள் ஞானம் சொல்லச் சொல்ல துதி
தெல்லிநகர்த் துர்க்கை என்ன தவம் செய்தேன் துதி
துர்க்கா போற்றி
மட்டுநகர் கண்ணகையம்மன் துதி
கண்ணகை அம்மன் துதி
சோலைப்பதி சக்தித்தாய் துதி
மல்லாகம் முதலித்தாயார் வீரமாகாளி துதி
சாவகச்சேரி தெல்லிப்பழை இணையப் பெற்ற காளி துதி
சாவகச்சேர் கருமாரி அம்மன் துதி
அளவையூர் தவளக்கிரி முத்துமாரி துதி
திங்களில் திகளும் மார் தாலாட்டுத் துதி
நயினை நாகபூசணி அம்மன் துதி
நயினை கடல் எழுந்தருளிய துதி
நந்தாவில் மனோன்மணி துதி
மறுவம்புலவு நாட்சியார் துதி
திருநெல்வேலி பத்திரகாளி துதி
நல்லைக்கந்தன் துதி
நல்லை நகர்க்கந்தன் எல்லோ துதி
நல்லருள் புரியும் நல்லூரான் துதி
தேரேறி வருகின்ற நல்லைக்கந்தன் துதி
மாவைக்கந்தன் துதி
மரகத மயில் கொண்ட மாவைக்கந்தன் துதி
ஆவரம்பிட்டி முருகன் துதி

மாத்தனைப்பதி முருகன் துதி
உசன் முருகன் துதி
மல்லாகம் கந்தனின் கந்தஷஷ்டி துதி
சந்நிதிக் கந்தன் துதி
கதிர்காமக்கந்தன் ஆடிவேற் துதி
வன்சொல் தந்திட்ட தவத்துதி
இணுவில் கந்தசாமி துதி
கொக்குவில் மஞ்சவனப்பதிக் கந்தன் துதி
ஏழாலை சாளம்பை முருகன் துதி
வல்லிபுர ஆழ்வார் கண்ணன் துதி
கருணை வடிவான கண்ணன் துதி
அளவை நாகவரத நாராயணர் துதி
யாழ்ப்பாணம் பெருமாள் துதி
கோண்டாவில் நந்தகோபாலன் துதி
பொன்னாலை வரதராஜப் பெருமாள் துதி
மல்லாகம் காலகண்டக்கையப்பன் துதி
மல்லாகம் பதியுறைந்தகையப்ப துதி
கையப்பன் புகழ்பாடும் துதி
இணுவில் பதியுறைந்தத ஆஞ்சநேயர் துதி
ஆஞ்சநேயா அப்பா ஆஞ்சநேயர் துதி
அன்பு கொண்ட அனுமார் துதி
சனீஸ்வரர் துதி
கோண்டாவில் ஞான வைரவர் துதி
வைரவசுவாமி வலம்வரும் துதி
மங்களம்

## உண்மையின் தத்துவம்

உண்மை இது என்று உணரப் பெறுவீர்
மனிதா ஒருநொடி சிந்தி
இன்று கண்ட அனுபவம்
கற்றுக்கொள்ள வேண்டியவை
அடியேன் கொண்ட இலட்சிய வழிகள்
நன்றி உரை

## மஹாராஜ ஸ்ரீ து.சண்முகநாதக்குருக்கள்
## மாவையாதீனம்
## அவர்கள் வழங்கிய
## ஆசி உரை

கலியுகம் ஆரம்பமாகி 5103 வருஷமாகிறது. இவ்வளவு காலமாக பிறவிப்பயன் யாது என்பது பற்றியும் ஆன்மா சிவனையடைந்து பேரின்பத்தை அடையும் மார்க்கங்களையும் பலர் பலவிதமாகக் கூறி சாந்தி செய்கிறார்கள். நாயன்மார்களும் ஆழ்வார்களும் "தர்மத்தைச் செய்த வழி அன்பு பெருகும். அன்பு பெருகிய வழி அருள் தோன்றும். அறனும், அருளும், தவமும் கூடிய வழியில் உள்ளம் தெளிவு பெறும். உள்ளத்தெளிவு கொண்ட ஆன்மா இறைவனைச் சாருமென ஆறுமுகநாவலர் எமக்கெடுத்துக்காட்டியதோடு நில்லாமல் ஆலயங்கள் தோறும் சென்று சரியை, கிரியை, யோக, ஞான மார்க்கங்களையும் அவை எதுவென செயலிலும் காட்டி இரவு பகலாக தோத்திரங்களால் பாடி மகிழ்ந்து முடிவிலா ஆனந்தத்தினைப் பெற்ற செய்திகளை நாமறிவோம். அதனால்தான் சைவம் சிவமயமாகிறது. சிவமயமாக வாழ்ந்தோர் சிவத்தமிழை ஏற்று மகிழ்ந்தனர்.. சிவநெறியில் இனிமையான பொழுதையும் இன்பமயமாக்கினர். நாடு பிடிக்க வந்த நயவஞ்சகரும் வியாபாரக் கொள்ளையடிக்க இங்கு நுழைந்த ஈனர்களும், சிவத்தமிழை உயிரெனக்கருதி வாழ்ந்த சைவர்களை அவர் தம் இரக்க மனப்பான்மையை துணையாகக் கொண்டு மிலேச்ச கலாசாரங்களை விரிவுபடுத்தி, சிவாலயங்களை இடித்துத்தள்ளி சைவமரபுகளை அழித்தொழித்து, சிவநாமங்களையோ, நாயன்மார்களது தேவார திருப்பதிகங்களையோ பாட முடியாதவாறு அப்பிரபந்தங்களை உள்ளடக்கிய ஏடுகளை அபகரித்து எரித்து நாசமாக்கியும் கொடும் அநீதிகளைச் செய்து வைத்தனர். அவர்களது அடிவருடிகள் இன்னும் இங்கு பிரசன்னமாகி நச்சு விஷவித்துகளான தமது போதனைகள், சைவம் சார்ந்த போதனையென மெல்ல மெல்ல நுழைக்க முற்பட்டு விட்டன.

அதன் ஓர் பாகம்தான் பாதிரி ஒருவர் சைவசித்தாந்தம் போதிக்க முன்வந்துள்ளார். சைவசின்னங்களான வீபூதி, உருத்திராசம் கொள்ளாமலும், சிவனை நிந்திப்பவனும், சிவத்தமிழைக் கொலை செய்பவனும் சைவசித்தாந்தம் போதிக்க முயலுகிறானெனில், எவ்வாறு சைவர்களை இழிவுபடுத்துகின்றான் என்பது தெளிவாகிறது. பசுத்தோல் போர்த்த புலியின் கதையாக இப்பாதிரி வலம் வருவது சிவமயமான ஈழநாட்டிற்கு பீடித்த பெரும் கேடாகும். பக்திப்பாடல்களை பாடசாலைகளிற்கூட பாட இயலாதவாறும், ஆறுமுகநாவலரது சைவ வினாவிடையை பாடநூலாக கற்பிக்க இயலாதவாறும், ஆலயங்களிலே கதாபிரசங்கம், பஜனை போன்றவற்றை நடாத்த முடியாதவாறும் பாதிரிகளின் அநியாயம் படர்ந்து வருகிறது. கந்தபுராணத்தில் தபம், ஜெபம், பூஜை முதலியனவற்றால் தன்னையும், உண்மைப் பொருளையும் அறியத் திருவருள் கூடும்படி பொருந்தியதே இக்கண்டம். இது பாரதநாடு உட்பட்ட குமரிக்கண்டமே பெருமக்களைக் கொண்டிருந்தது. ஏனைய கண்டங்களான அமெரிக்கா, ஐரோப்பியா, ஆபிரிக்கா, ருஷ்யா, சைனா, யப்பான் என்பனவாகும். இங்கெல்லாம் தேவநெறி ஒழுகி, கொல்லாமை பூண்டு, அன்புருவாகி அனைத்துயிரும் இறைவன் சந்நிதானமெனக்கருதும் உத்தமர்களைக் காண இயலாது.

அடக்குமுறை, ஆதிக்கநெறி, காமலீலைகள், கற்பிலாமை, போகம், பெருமிதம், பொல்லாங்கு, செய்யக்கூடாமை, கொலை முதலான பாங்களை சுமந்து கொண்டு உண்மைப் பொருள் விளக்கமின்றி, இரும்பு மனதுடன் தீய வாழ்வைப் பெருக்கும் ஈசனர்களையே காணமுடியும். மிலேச்சத்தன்மையே முன்னிற்கும் எனவுண்டு. இவ்வளவும் இன்று ஈழநாட்டில் இத்தகைய அநியாயங்களை அடித்து வீழ்த்தவே, கவி சுப்பிரமணிய பாரதியார், சுத்தானந்த பாரதியார், ரவீந்திரநாதாகூர், இராஜகோபாலச்சாரி போன்றோர் ஒவ்வொரு வினாடியும் சிவநாம மகிமையையும் சிவத் தோத்திரங்களையும் பக்திப்பாடல்களையும் பாடிப்பாடி சிவனது அருளால் வெற்றி கொண்டனர். இத்தகைய நிலை இன்றைய காலகட்டத்தில் அதுவும் யாழ்ப்பாணத்திற்கு மிகவும் அவசியமாகிறது. இதை உணர்ந்துதான், மணிபாகவதர் ஆத்மஜோதி முத்தையா என்போர் பாதயாத்திரைகள் அமைத்து பாடிப்பாடி ஊரெங்கும் உலாவி தேவார திருவாசங்களாலும் நாட்டைப் புனிதமாக்கினர். இவர்களுக்கு இடையூறும், தொல்லைகளும் கொடுத்து பாதகர்களை அவர்களையும் சாகடித்தனர். அமைதியாக இருந்து தெய்வீக சிந்தனைகளோடு பாதிரிகளின் பேயாட்டத்தை முறியடிக்க முனைந்த சிவத்தமிழ் யோகியான மகாலிங்கம் அவர்களையும் அண்மையில் சாகடித்துவிட்டனர். அடுத்த சிவநேயச்செல்வன் புலவர் வினாசித்தம்பி மேல் இப்போ கண்வைத்து விட்டனர்.

எனவே, தமிழ் மக்கள், சைவத்தமிழர்களாக மாறி எங்கும் சிவமயமான சூழ்நிலை ஏற்படுத்த தெய்வீக பாடல்களை முழுமூச்சாகப் பாடியும், பாடுவித்தும் சிவனருளால் எம்மை பீடித்திருக்கும் மிலேச்சமாயையை விரட்டியடிக்க முன்வர வேண்டியது அவசியமாகிறது. அந்தவகையில் துர்க்காபுரம் குலசேகரம் கலேஸ்வரன் அவர்கள் பாமாலையால் பகவானுக்கு மாலை சூட்டி மகிழ்ந்து பவனி வருகிறார். தெய்வங்களோடு உரையாடும் வகையிலும், தெய்வ அருளை வாரி வழங்கிவிட வேண்டுமென்ற முறையிலும் இறைவனையே நினைந்து பாடிப்பாடி பணியும் செய்து இரந்து நிற்கும் அற்புத செயலைக்கண்டு நாம் மகிழ்கிறோம். இவரது பாடல்களையும் நாயன்மார்களது பாசுரங்களோடு இணைத்து நாமனைவரும் எப்போதும், எங்கும், பாடிப்பாடி, எம்மைப் பீடித்து நிற்கும் பாவ மாயையை அடியோடு அகற்ற முன்வர வேண்டுமென இறைவனது துணையை நாடி பிரார்த்திப்போமாக.

மஹாராஜ ஸ்ரீ சு.து.ஷண்முகநாதக்குருக்கள்
மாவையாதீனம்.

## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுருவும், மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் தர்மகர்த்தா அவர்கள் வழங்கிய

## நல்லாசிகள்

"தர்மம் சர" என்பது உபநிடத வாக்கியம் ஆகும். இதன் பொருள் தர்மத்தின் படி நட, இறை புகழை பாடுதல். அவன் புகழ் பரப்புதல், இறை தொண்டுகள் செய்தல் என்பனவாகும். இவ்வழியிலே தெல்லிப்பழை துர்க்காபுரத்தில் வாழ்ந்துவரும் திரு.கு.கமலேஸ்வரன் அவர்கள் தன் இறை தொண்டுகளை இடைவிடாது தன்நலம் பாராது செய்து வருவதை நான் பல நாட்கள் கண்கூடாக கண்டு வந்துள்ளேன். கோவிலில் சரியைத் தொண்டு மட்டுமல்லாமல் இறை புகழை அழகாக

சித்தரிப்பதாகவும், அல்லலுறும் மக்களின் மன எழுச்சிகளை வெளிப்படுத்துவதாகவும் காணப்படுகிறது. சிறுதுளி பெரு வெள்ளம் என இவர் இயற்றிய பாடல்களை எல்லாம் தொகுத்து இன்று ஓர் பாடல் தொகுப்பு ஒன்றினை இவர் வெளியிடுகின்றார். எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ துர்க்காதேவியின் அருளாலும், ஆஞ்சநேயப் பெருமானின் அருளாலும் இவரின் இறைபணிகள் மென்மேலும் வளர வேண்டும் என பிரார்த்தித்து என் ஆசிகளையும் கூறி அமைகின்றேன்.

லோகா சுகினோபவந்து

**சிவஸ்ரீ.ஐ.சுந்தரேஸ்வரக் குருக்கள்**

பிரதமகுரு,ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,தெல்லிப்பழை.

ஆதீனகர்த்தா, அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய கோயில்,

மருதனார்மடம், இணுவில், சுன்னாகம்.

## சைவ நற்சிந்தனை
## பண்டிதமணி மு.கந்தையா அவர்களால் வழங்கிய
## ஆசி உரை

பாடுமின் பாடிப் பணிமின் திருமந்திரம்

பாடுமின் பக்தர்கள் பரகதி பெறலாமே தேவாரம்

சைவ வழிபாட்டில் மௌனத்தில் வாய்மூடித் தியானம் பண்ணும் அளவில் இருப்பது போதாது வாய்திறந்து பாடி ஆடி வழிபடும் வழக்கமும் அவசியம். அதற்காகவே சைவ திருமுறைகள் விசேஷமாக உள்ளன. அவற்றிற் பயிற்சி இல்லாததோடும் தமது அறிவுத் தத்துவத்துக்கேற்குமளவு தம்வாக்காகக் கீர்த்தனைகள் பாடி வழிபடலாம். அவரவர் கல்வித் தரத்துக்கேற்ப அது அமையப் பாடலாம். எத்தரத்தில் என்றாலும் சைவர்கள் சைவத் தெய்வங்களைக் கீர்த்தனை பாடி வழிபடல் அவசியம்.

அன்பர் - ஐயாத்துரை தலைமகன் குலசேகரம் வழிவந்த மகன் கமலேஸ்வரன் இதற்கொரு நல்ல முன்மாதிரி இயல்பான பக்தி உணர்வுடைய இன்ப நாமங்கள். இவருடைய பக்தியுணர்வுக்கு அருள்மிகு தெல்லிநகர் துர்க்காதேவி அற்புத நீர்ப்பாய்ச்சி செழிக்க வைத்த சுவையான சம்பவமும் ஒன்று உண்டு.

இவர் துர்க்காதேவிக்கு மட்டுமன்றி பிள்ளையார், சிவன், முருகன், கண்ணன், வைரவர் இன்னும் பல வடிவம் கொண்ட தெய்வங்களுக்கும் கீர்த்தனைகள் பாடியுள்ளார். பாடுதல் மட்டும் அல்லாமல் பாடல்களை உணர்வு முகத்துடன் பாடிக்காட்டி மற்றவர்களிலும் பக்தியுணர்வு ஏற்றும் பண்பும் இவரிடம் இருத்தல் விசேஷகுணமாகும்.

சைவக்கோயில்களெங்கும் பக்தி பரிமளிக்க வைக்கும் இவரது நல்லூக்கமும் நற்றொண்டுகளும் புரிவது கண்கூடாகும். கமலேஸ்வரன் இத்துறையில் மென்மேலும் ஆட்சி அனுபவம் மிகுந்த ஆன்ம நலம் அடைய விநாயகர் அருள்புரிவாராக. இவரது நல்லாக்கத்திற்கு எல்லாம் வல்ல விநாயகன் அருள்புரிய வேண்டி எமது நல்லாசிகள்.

**மு.கந்தையா**

ஏழாலை.

இந்துசமயப் பேரவைத் தலைவர் தெய்வீக பெருந்தகை
அருட்கவி சீ.வினாசித்தம்பி அவர்கள் வழங்கிய

## வாழ்த்துக் கவி

பொன்னுயரும் அளவையூர் வாழ்ந்த செம்மல்
பொலிந்து கரகம் முதலாம் கலைபடைத்தோன்
முன்னிய ஐயாத்துரையாம் பேர்படைத்தோன்
முது தவத்தால் வந்தகுல சேகரன்தன்
நன்நெறியில் வருமைந்தன் தெல்லித்துர்க்கை
ஞானமுணர் திருகமலேஸ்வரன் வகுத்த
அன்னையருள் ஞானரசம் என்னுந் தெய்வ
அருளமுதம் கற்பகம் போல் வாழி வாழி

அம்பலத்தில் ஆடும் சிவன் ஐங்கரத்தான்
ஆறுமுகன் அம்பிகை வான் நீல வண்ணன்
நம்புபல தெய்வங்கள் கருணை செய்ய
ஞான கமலேஸ்வரன் நெஞ்செழுந்து வந்த
உம்பர் மகிழ் இந்நன்னூல் அடியார் நெஞ்சில்
ஓங்கார ஒளிபரப்பி அன்புத்தேனை
இப்பாரிலே தரவல்ல இமயம் போல
இசைஞானக் கனியமுதாய் வாழி வாழி

**அருட்கவி.சீ.விநாசித்தம்பிப்புலவர்**
நாகேஸ்வரம்,அளவெட்டி.

மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணிஐயர் அவர்கள்
வழங்கிய

## கலைவாணி துணை

நாமகளின் நல்லருளால் அளவை யூரின்
நற்கலையாம் கரகங்கள் நாடகங்கள்
பூமகிழ வளர்த்த பெருங் கலைஞனான
பூங்கலைஞன், ஐயாத்துரை தந்த பேரன்
நாமக் கமலேஸ்வரனாம் கவிஞன் தெய்வ
நாம இன்ப ரஸக்கவிதை ஆக்கித் தந்தான்
தேமதுரத் தமிழமுதம் வாயி னிக்கும்
தெய்வீகக் கவிஞனிவன் நீடு வாழி!

இங்ஙனம்
மஹாவித்துவான்,
**பிரம்மஸ்ரீ.ந.வீரமணிஐயர்,**
25.04.2001.

முதறிஞர் வித்துவான் க.சொக்கலிங்கம் எம்.ஏ
(சொக்கன் ஆசிரியர்) வழங்கிய

## வாழ்த்துரை

நம்பிக்கை பக்தி என்னும் தளர்வேயில்லா
நல்லோராம் கமலேஸ்வரனின் இல்லம்
செம்பரிதி தருகின்ற மதியநாளில்
தேடி வந்து தாம் செய்தத பக்திப்பாடல்
செம்மையுற இசையுடனே பாடிக்காட்டி
சிந்தையை தூண்டிஜெனை உருகவைத்தார்
அம்பிகையாம் துர்க்கையது தொண்டரான
அவர் வாழ்வில் நிகழ்ந்த அற்புதமுஞ் சொன்னார்.

கமலேஸ்வரன் மனையால் துர்க்கை அன்னை
கவினாரும் சன்நிதியில் அடியாளாகி
இளமைப்பொழுதும் சேராது பணிகள் செய்த
ஏற்றத்தைப் போற்றி மணம் செய்த பின்னர்
நமை வருத்த என்றிங்கு வந்த அண்டை
நாடாகும் பாரதத்துப் படையின் தொல்லை
தமைவருத்திய இடர் எடுத்துச் சொன்னார்
தம்வாழ்வில் நிகழ்ந்த அற்புதமுஞ் சொன்னார்

மனையாளின் மாங்கல்யம் தொலைந்ததாலே
மனக்கவலைக்கடலாக மாறிநிற்கத்
திணைப்பொதும் மறவாது துர்க்கைபாதம்
சிந்தையிலே இருத்தியே புலம்பியன்னார்
வினை நீங்கும் காலம்வர மலையின் நாட்டுப்
பெண்மணியால் மாங்கல்யம் திரும்பப் பெற்ற
தனிமாட்சிக்கதை கேட்டுப் புழக்கம் கொண்டேன்
தகைமை பெறும் அவர் பக்திக் கிணையே இல்லை

தெல்லிநகர்த்துர்க்கை அருள் நிரம்பப்பெற்று
திரவியமாம் அருட்காட்சி திகளப்பெற்று
அன்பரிவர் துர்க்கையோடு தும்பிக்கையான் துணைபெறுகுமரனவன்
இன்பமுறு என்னும பல தெய்வங்களை இயற்றிப்பாடிடும்
இன்னருளும் தெய்வ அருள் இவருக்கென்றும்
இருப்பதனை உணர்ந்துள்ளேன் வாழ்க்க அன்பர்
பல்கலைகளும் பெற்றுலகில் நீடு வாழப்
பராபரனாம் முருகனருள் பொலிக மாதோ.

**க.சொக்கலிங்கம்**
நாயன்மார்க்கட்டு.

# ஆசிரியர் முன்னுரை

திருமந்திரம்

அன்பும் சிவமும் இரண்டென்பர்
அறிவிலர் அன்பே சிவமாதல் யாரும் அறிகிலார்.
அன்பும் சிவமும் ஒன்றென்று அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பார்.

எமது வாழ்வின் உண்மைத் தத்துவத்தை எண்ணிப்பார்த்தால் அது ஒரு விசித்திரமானது என்பதை நாம் அறிவோம். நாம் ஒரு தாய் வயிற்றில் கற்பகத்தில் உருவாகி பத்து மாதங்கள் வரை அவளின் உதிர ஊட்டச்சத்தினை பெற்று இப்பூமியில் அவதரிக்கின்றோம். இப்பூமியில் அவதரித்ததும் எமது தொப்பூள் தொடர்பு அற்றுப்போகிறது. இவ்வாறு தாய் வேறு சேய் வேறாக வாழ்ந்து வரும் நாம் தாயின் பாலை அருந்தி வளர்கிறோம். அதேவேளை அவளது அன்பு எம்மை அரவணைக்கின்றது. அத்துடன் "அறிவுதனையும் எமக்கு போதிக்கின்றாள். அவளது வளர்ப்பு முறையே எம்மை நல்லவர்களாகவும் கெட்டவர்களாகவும் மாற்றுகின்றது." இதை ஒரு கவிஞன் பின்வருமாறு கூறுகின்றான். எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணிற் பிறக்கையிலே அதில் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே என்று கூறப்படுவதை நாம் நோக்கலாம்.

இவ்வாறு அன்னையின் அன்பு, அரவணைப்பு ஆகியவற்றை பெற்ற நாம் நல்லது எது கெட்டது எது என்று அறிந்து "எமது வாழ்க்கையை நல்வழியில் செல்வதற்கு இறை நம்பிக்கையும் விடாமுயற்சியும் உறுதுணையாக கைப்பற்ற வேண்டும்.

இறை நம்பிக்கையை பெற ஆண்டவனை பல வடிவங்களில் சிலைகளாக வடித்து வணங்குகின்றோம். இந்தச் சிலையை வடிப்பதாயின் இதற்கான அறிவினை ஆண்டவனிடமிருந்தே பெற்றுக்கொள்கிறோம். இந்தச் சிலை வழிபாட்டின் மூலம் இறை சக்தியை பெற்றுக்கொண்ட சித்தர்களும் ஞானிகளும் இன்றைய உலகின் விஞ்ஞானிகளும் இறைவனை நம்புகின்றார்கள். சந்திரனில் காலடி பதித்த ஆம்ஸ்ரோங் என்ற மனிதனும், சந்திரனில் காலடி பதித்த போது முதலில் சொன்ன வார்த்தை 'ஆண்டவனுக்கு நன்றி' என்பதே ஆகும். இறை சக்தி இன்றி இவ்வுலகம் இல்லை என்பதேயாகும்.

இந்த இறை நம்பிக்கையில் அடியவனாகிய எனக்கு ஏற்பட்ட 15 வருட காலங்களாக எனது உள்ளத்தில் தோன்றிய உண்மைகளை இந்த உலகம் அறிய வேண்டும். உண்மையான வழிபாடு உலகெங்கும் பெருக வேண்டும் என்பதே எது அவா.

மனிதனின் உள்ளத்தை ஒரு நிலைப்படுத்தி வழிபடும் போது அவனது உடலும் உள்ளம் அவனது விக்கிரகக் கடவுளின் நிலைக்குள் புகுந்து இன்பம் பெறுகின்றான். இலட்சிய உலக சுகபோக இன்பங்களில் ஈடுபடும் போது துன்பத்தால் உழறுகிறான். இவ்வாறு இன்ப துன்பங்களை கண்டறியும் மனிதன் அவனின் நன்மை தீமைகளுக்கேற்ப நரகத்தையும் சொர்க்கத்தையும் அடைகிறான்.

ஆகவே உலகில் வாழும் மக்களிடையே சமய வழிபாடு கலாச்சார ஒழுக்க நெறி என்பனவற்றை அடைவதற்கு இறை வழிபாடு அவசியம் என்பது உண்மை.

இந்த உண்மையை அடியேனாகிய நானும் சக்தியின் தெய்வமாக விளங்கும் தெல்லிநகர் துர்க்கை அம்பிகையின் அருளும் ஆசியும் கிடைத்துள்ளதை அடியேன் நம்புகின்றேன். இவ் அருளினால்தான் அடியேன் அன்று முதல் இன்று வரை இயற்றிய இப்பாடல்களை ஓர் பாமாலைத் தொகுப்பாக இன்று வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இவ் இறைபணி மேலும் தொடர பெரியோர்களின் ஆசியையும் அம்பாளின் அனுக்கிரகத்தையும் வேண்டி அவள் பாதங்களைத் தொழுது நிறைவு செய்கின்றேன்.

அருள்மிகு அம்பிகையின் அடியேன்

**கு.கமலேஸ்வரன்**

துர்க்காபுரம், தெல்லிப்பளை.

## தியான நிலையில் உலக மக்களை மேன்மைப்படுத்துவது இறைவழிபாடு

நாம் எம்முள் இருக்கும் ஐம்புலனையும் ஒரு நிலைப்படுத்தி வழிபடுதலின் மூலம் அந்த இறை சக்தியை எம்மால் காணமுடிகிறது. இவற்றின் நிலையை அடைவதற்கு முதலில் மனநிலையை ஒருநிலைப்படுத்த வேண்டும். பின் நாம், வழிபடுகின்ற விக்கிரகத்தின் மீது எமது புலனை செலுத்தி கண்களை இமையாது உற்று நோக்கல் வேண்டும். அவ்வழியில் நாம் நோக்கும் போது எமது மெய், வாய், கண், காது, மூக்கு என்பனவற்றில் ஏற்படும் சலனங்கள் கட்டுப்பாட்டை அடைகின்றன. அதன்பின் எமது சக்தியின் நிலை அவ்விக்கிரகத்தின் ஒளியுடன் ஒன்றாக கலந்து இன்பம் தருகின்றது. இவற்றின் மூலம் எமது சிந்தனைகள் ஒருநிலை அடைந்து நல்லதோர் செயல் ஆற்றல் உள்ள மனிதர்கள் ஆக்கி உலகில் வாழும் மக்களை நல்வழியில் வாழும் மனித சமூகத்தை கட்டி வளர்க்கின்றது. இவ்வழியை ஆக்கி வழிபட்ட தவசீலர்களும், சித்தர்களும், விஞ்ஞானிகளும் ஒரு நிலையை பெற்ற சக்தி கொண்ட மனிதர்கள் தான். இவற்றுக்கெல்லாம் காரணம் ஒரு நிலை தியானம், விடாமுயற்சி, மன நம்பிக்கை மூன்றும் சேர்ந்தது தான். தமிழ் இசையால் வசமாகா இதயம் எது இறைவனே இசை வடிவம் எனும் போது, என் இசைக்கு வித்திட்டவள் அருள்மிகு துர்க்கை அவர் பாதமே சரணம்.

உ

சைவ மக்களுக்கு உயிர் போன்றது பன்னிரு திருமுறைகளாகும். நாம் வீடுகளில் வாரத்தில் ஒரு நாளாவது பன்னிரு திருமுறைகளிலும் இருந்து ஒவ்வோர் அருட்பாடலை எடுத்து ஓதுதல் வேண்டும்.

## பன்னிரு திருமுறைகள்

1ஆம் திருமுறை: திருஞானசம்பந்தர் அருளியது

பண்: நட்டபாடை ராகம் :- நாட்டை

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப்பொடிபூசி யென்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடை பிரமாபுர மேவிய பெம்மானிவனவன்றே.

2ஆம் திருமுறை: திருஞானசம்பந்தர் அருளியது

பண்: நட்டராகம் ராகம் :- பந்துவராளி

விருது குன்றமா மேருவில் நாணர
வானவலெரி யம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருதுகின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரம் கைதொழ
கடுவினை யடையாவே.

3ஆம் திருமுறை: திருஞானசம்பந்தர் அருளியது

பண்: புறநீர்மை ராகம் :- பூபாளம்

நிரைகழலரவம் சிலம்பொலி யலம்பு
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
அளப்பரும் கனமணி வரன்றிக்
குரைகடலோதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந்தாரே.

4ஆம் திருமுறை: திருநாவுக்கரசு நாயனார் அருளிய தேவாரம்

பண்: கொல்லி ராகம் :- நவரோஸ்

கூற்றாயினவாறு விலக்ககலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறையம்மானே.

5ஆம் திருமுறை: திருநாவுக்கரசு நாயனார் அருளிய தேவாரம்

பண்: திருக்குறுந்தொகை ராகம் :- நாதநாமக்கிரியை

வேதநாயகன் வேதியர் நாயகன்
மாதிக் நாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயகன் ஆதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே.

6ஆம் திருமுறை: திருநாவுக்கரசு நாயனார் அருளிய தேவாரம்

பண்: திருத்தாண்டகம் ராகம் :- அரிகாம்போதி

பேராயிரம் பரவி வானோர் ஏத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க்கென்றும்
வாராத செல்வம் வருவிப்பானை
மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத் தண்சிலை கைக்கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே.

7ஆம் திருமுறை: சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய தேவாரம்

பண்: தக்கேசி ராகம் :- காம்போதி

ஆலந்தானுகந் தமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் முடையானைச்
சிந்திப் பாரவர் சிந்தையுளானை
ஏலவார் குழலாளுமை நங்கை
என்றுமேத்தி வழிபடப்பெற்ற
காலகாலனைக் கம்பனெம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே

8ஆம் திருமுறை: மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிய திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே யனையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்தோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ
இதற்கு நாயகமே.

9ஆம் திருமுறை: திருவிசைப்பா - சேந்தனார் அருளியது

ஏக நாயகனை இமையவர்க்கரசை
என்னுயிர்க்கமு தினை எதிரில்
போகநாயகனைப் புயல் வணற்கருளிப்
பொன்னெடுஞ் சிவிகை யாவூர்ந்த
மேகநாயகனை மிகு திருவீழி
மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோகநாயகனை யன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

9ஆம் திருமுறை: திருப்பல்லாண்டு - சேந்தனார் அருளியது

ஆரார்வந்தார் அமரர்குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முகன்அங்கி இரவியும் இந்திரனும்
தேரார்வீதியில் தேவர்குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார்தொல்புகழ் பாடியுமாடியும் பல்லாண்டு கூறுதுமே.

10ஆம் திருமுறை: திருமூலர் அருளிய திருமந்திரம்

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்ன்ச் சிவகதி தானே.

11ஆம் திருமுறை: கபில தேவநாயனார் அருளியது

விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் "பணிமின் கனிந்து"

12ஆம் திருமுறை: சேக்கிழார் அருளிய பெரியபுராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகி
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

உ
தேவி துணை
பொற்பதி வீதிதனில் பொறுமையுடன்
வீற்றிருக்கும் ஐங்கரனின்
அற்புத சித்தி தந்தருளியமை இக் காப்பு

தெல்லிப் பதி தனிலே பொறுமையுடன் வீற்றிருக்கும் ஐங்கரனே
நற்றமிழ் சொல்லெடுத்து நல்லதோர் கவிபுனைந்து
இப்புவி அன்னைக்கு இனிதுடன் அளித்திட
நீ எனக்கு வரம் அருள்வாய் ஐங்கரா எம்கரா.

## 1. பிள்ளையார் துதி

ராகம் :- பிரிந்தாவன் சாரங்கன்

ஐங்கரா எம்கரா
ஐயம் நீக்கி ஆள்பவனே ஐங்கரா
அன்னையுடன் வீற்றிருக்கும் ஐங்கரா

அருளை அள்ளித் தந்தருள்வாய் ஐங்கரா
பக்தியோடு பஜனை செய்வோம் ஐங்கரா
பக்கபலம் நீ தருவாய் ஐங்கரா
ஆதிமூல நாதனானாய் ஐங்கரா
ஆனந்தமாய் நடன் செய்வாய் ஐங்கரா
நாளும் உனைநாடி வந்தோம் ஐங்கரா
நாடி வந்து போற்றிடுவோம் ஐங்கரா
ஆன தமிழ் நூல் இதற்கே ஐங்கரா
அருள் துணையாய் நீ இருப்பாய் ஐங்கரா.

## 2. துதி

ராகம் :- மாண்டு

ஜெய கணேச ஜெயகணேச ஓடி வா
ஜெயகணேச ஜெயகணேச பார்வதியின் புத்திரா
ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ஓடி வா
அன்பர்களின் ரட்சகா ஐங்கரா மைந்தனே
அவல நிலை தீர்த்தருள ஐங்கரா ஓடி வா
ஆடி வா ஆடி வா அற்புதனே ஆடி வா
ஆனந்தமாய் நடனம் அகம் குழைந்து ஆடி வா
நாடி வா நாடி வா விநாயகனே நாடி வா
நாடி உனை வேண்டுகிறோம் விநாயகா ஓடி வா
சர்வலோக நாயகனே ஐங்கரா ஓடி வா
சாந்தி நிலை தந்தருள ஐங்கரா ஓடி வா
சாந்தி நிலை தந்தருள ஐங்கரா ஓடி வா
சாந்தி நிலை தந்தருள ஐங்கரா ஓடி வா

எல்லாம் வல்ல கணநாதன் மெய் அன்பர்களுக்கெல்லாம் அருள் புரிய வேண்டி இவ்வுலகின் விடிவினை வேண்டி **“அ. என்று தொடங்கி க்ஷ”** என்று முடிக்கும் இப்பாமாலை அனைத்து அடியவர்களுக்கும் சமர்ப்பணம்.

## 3. துதி

ராகம் :- மாண்டு

கணநாதா கணநாதா
அன்பர்க்கு அருள் புரி கணநாதா
ஆதி அந்த முதல்வனே கணநாதா
இன்பம் தனைத் தருவாய் கணநாதா
ஈழ மண்ணைக் காத்தருள் கணநாதா
உலகத்தின் முதல்வனே கணநாதா
ஊழ்வினை காப்பாய் கணநாதா
என்மனதில் நீ நிறைந்தாய் கணநாதா
ஏழைக் கருள் புரிவாய் கணநாதா

ஐங்கரா முதல்வா கணநாதா
ஒளிதனைத் தருவாய் கணநாதா
ஓங்கரா வடிவமே கணநாதா
ஔவைக் கருள் புரிந்தவா கணநாதா
ஃதிலும் இனியவா கணநாதா
சரணம் சரணம் கணநாதா
சரவண பவஓம் கணநாதா

உ

தத்துவ வித்துவ ஞானிகள் வளர்த்திட்ட இணுவில் பதிதனிலே பல கலைக்கும் ஆதி முதல்வனாய் அமைந்திட்ட பரராஜசேகரப் பெருமானின் யாககுண்ட வேதிய பூஷைஅன்று பரராஜ சேகரப் பெருமான் பக்தன் நாவிலே அருளிய பாமாலை பக்த அடியவர்கள் நாவில் மலர்ந்திட இப்பாமாலை இனிதுடன் சமர்ப்பணம்.

## இணுவில் பதி பரராஜ சேகரர் துதி

ராகம் :- பிரிந்தாவன சாரங்கா

சேகரா எங்கள் சேகரா
பக்தர் போற்றும் சேகரனே பரராஜ சேகரா
இச்சையுடன் வேண்டுகிறோம் சேகரா
இணுவில் பதி உறைந்தவனே சேகரா
உச்சி மலை சென்றவனே சேகரா
உள்ளம் போற்றும் ஜோதியே சேகரா
(எங்கள் சேகரா)

கலை வடிவாய் நீ அமைந்தாய் சேகரா
கலியுகத்தில் தோற்றம் கொண்டாய் சேகரா
காணுகின்ற காட்சி எல்லாம் சேகரா
கணநா உன்வடிவே சேகரா
(எங்கள் சேகரா)

சித்தி புத்தி தருபவனே சேகரா
சிந்தையிலே அருள் புரிந்தாய் சேகரா
சக்தி மயம் கொண்டவரே சேகரா
சர்வலோக நாயகனே சேகரா
(எங்கள் சேகரா)

உ

நாம் இடம் பெயர்ந்து மட்டுவில் தனில் வசித்த காலத்தில் கல்வயல் என்னும் கிராமத்தை அண்மித்து அமைந்துள்ள கொல்லங்கிராய் என்னும் இடத்தில் கருணையின் வடிவமாக அமையப் பெற்ற பெரும் சிலை கொண்ட விநாயரை வழிபட்டதன் பயனாக 1996ம் ஆண்டு அவ்விநாயகப் பெருமானுக்கு இயற்றப்பட்ட இப்பாமாலை சமர்ப்பணம்.

## கொல்லங்கிராய்ப் பிள்ளையார் துதி

ராகம் :- கருநாடக கேத காந்தாரி

கருணை வடிவானவரே பிள்ளையாரே
காத்தருள வாரும் ஐயா பிள்ளையாரே
கொல்லங்கிராய் பதி அமர்ந்தாய் பிள்ளையாரே
கொடுமைகளை களைந்தருள்வாய் பிள்ளையாரே
பிரணவத்தின் பொருளானாய் பிள்ளையாரே
பிணி யாவும் நீக்கி வைப்பாய் பிள்ளையாரே
தன்னம் தனிமையிலே பிள்ளையாரே
தவம் இருக்கும் வடிவம் என்ன பிள்ளையாரே
தொல்லைகளைத் தீர்த்தருள்வாய் பிள்ளையாரே
தொழுதிடுவோம் எந்நாளும் பிள்ளையாரே

(கருணை வடிவானவரே)

மதியூகம் கொண்டவரே பிள்ளையாரே
மாங்கனியைப் பெற்றவரே பிள்ளையாரே
உவமானப் பரம்பொருளே பிள்ளையாரே
உலகத்தை ஆண்டு கொண்டாய் பிள்ளையாரே
கலியுகத்தில் காட்சி கொண்டாய் பிள்ளையாரே
கறந்த பாலை நீ உண்டாய் பிள்ளையாரே
ஞானப் பழம் பெற்றவரே பிள்ளையாரே
ஐந்து கரம் கொண்டவரே பிள்ளையாரே
ஐயம் தனை நீக்கிடையா பிள்ளையாரே
வெற்றி தனைத் தந்தருள்வாய் பிள்ளையாரே
வேதனைகள் தீர்த்தருள்வாய் பிள்ளயைாரே

(கருணை வடிவானவரே)

என்ன வரம் வேண்டினாலும் பிள்ளையாரே
எம் மனமும் உன்னிடமே பிள்ளையாரே
சஞ்சலங்கள் தீர்த்தருள்வாய் பிள்ளையாரே
சக்தி தனைத் தந்தருள்வாய் பிள்ளையாரே
மலர் எடுத்து சாத்தி வந்தோம் பிள்ளையாரே
மனச் சாந்தி தந்திடையா பிள்ளையாரே
உன்னடியை நாடி வந்தோம் பிள்ளையாரே
உள்ளத்தில் நீ வருவாய் பிள்ளையாரே
திருவருளை வேண்டி நின்றோம் பிள்ளையாரே
திருவடியே சரண் அடைந்தோம் பிள்ளையாரே

உ

ஆதிமுதல்வனாக அமையப் பெற்ற அரும்பெரும் கும்பளாவளைப் பிள்ளையார் என அளவையூர்ப் பதிதனிலே அமையப் பெற்று பள்ளிச் சிறார்களுக்கு எல்லாம் கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கும் கும்பளாவளைப் பிள்ளையார் பக்தனான என்மனதிலே தந்திட்ட இத்துதியை அன்பு கொண்ட அடியார்களுக்கு சமர்ப்பணம்.

அளவைப்பதியில் வீற்றிருக்கும் கும்பிளாவளை பிள்ளையார் துதி

ராகம் :- கருடகேதகாந்தாரி

அளவைபதி உறைந்த பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
அருளை அள்ளி தந்தருள்வாய் பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
ஆதிமூல நாதனே பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
ஆனை முகம் கொண்டவரே பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
ஐந்து கரம் கொண்டவரே பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
ஐம்புலனை அடக்கியவா பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
ஜோதி வடிவானவரே பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
சோதனைகள் நீக்கிடய்யா பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
தொந்திக் கணபதியே பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
தொல்லைகளை நீக்கிடய்யா பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
கந்தனுக்கு முன் பிறந்த பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
காத்தருள வாரும் ஐயா பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
முன் வினை நீக்க வல்ல பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
முன் நின்று காத்தருள்வாய் பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
சித்தி புத்தி தருபவரே பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
சிந்தையிலே தான் வருவாய் பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
தன்னம் தனிமையிலே பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
தவம் இருக்கும் வடிவம் என்ன பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
ஓம் சிவ கணபதியே பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
ஒளி விளக்காய் நீ வருவாய் பிள்ளையாரே -எங்கள் பிள்ளையாரே
சரணம் சரணம் ஐயா பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
சக்தி தனை தந்தருள்வாய் பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
உன்னடியை நாடி வந்தோம் பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
உன் பாதம் சரணம் அப்பா பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
உன் பாதம் சரணம் அப்பா பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே
உன் பாதம் சரணம் அப்பா பிள்ளையாரே - எங்கள் பிள்ளையாரே

மண்ணுலகிலே பிறந்த மாயம் தெரியாது வாழ்ந்த 39 ஆவது வயதில் தனங்கிளப்பு என்னும் ஊருக்கு முதல் முதலில் பூநூல் சடங்கு ஒன்றிற்குச் சென்ற நான் அந்தணர்கள் இல்லத்துக்கு அருகிலே அமைந்திருந்த விநாயகர் ஆலயத்தில் அன்றைய மாலைப்பொழுதில் அவ் ஆலயத்தின் சுற்றாடலை துப்பரவு செய்துவிட்டு ஆலயத்தின் கங்கையிலே குளித்து விட்டு அந்த விநாயகரை துதித்து விட்ட பின்னர் அந்த ஆலயத்து நதிக்கு அருகிலே படுத்து தூங்கிய போது திடீரென அக் கோடை காலத்தில் பெரும் காற்றுடன் பெய்த மழை என்னைத் திடுக்கிட்டு எழ வைத்தது. அந்த நிலையில் பலவகை எண்ணங்களை எண்ணி சிந்தித்து மனம் கலங்கிய வேளை மனதை சாந்தப்படுத்த அந்த நல்லிருள் வேளையில் கண்ணாடி விளக்கொளியில் கம்பிக் கேற்றின் ஊடாக விநாயகரை பார்த்து கை கூப்பிய வேளையில் என் கண்களையே நம்ப முடியாத அற்புத தீப்பிளம்பு போன்ற ஓர் ஒளியொன்று அந்த விநாயகருடைய விக்கிரத்தில் இருந்து ஏற்பட்ட ஒளிப் பிளம்பினால் ஓர் புத்துணர்வு போன்று என் சிந்தையிலே மலர்ந்த இத்துதி என் வாழ்வில் பெரும் வெற்றியைத் தந்தது? தமிழ் மா மன்றத்தில் 94.09.28 அன்றைய 5 வது இலக்கியச் சுற்றுப் போட்டியில் சிறந்த மெல்லிசைப் பாடல் என முதலாவது பரிசைப் பெற்றுத் தந்தது.

அந்த விநாயகரின் அற்புத துதி எங்கும் துதிபாடிட இப் பிரசுரம் மூலம் தருகின்றேன்.

## தனங்கிளப்பு பிள்ளையார் துதி

ராகம் :- கம்பிர நாட்டை

பாருலகம் போற்றிடும் பரம் பொருளாய் அமர்ந்தவனே
ஓம் எனும் பிரணவத்தின் திருவுருவாய் இருப்பவனே
ஆனைமுகம் கொண்டவா அற்புதங்கள் புரிபவனே
எங்கள் விக்கினேஸ்வரா

துதி சுபந்துவராளி

தனங்கிளப்பில் அவதரித்த தான் தோன்றிப் பிள்ளையாரே
தனிமையிலே அமர்ந்திருக்கும் தான் தோன்றிப் பிள்ளையாரே
ஆனைமுகம் கொண்டவனே ஐங்கரனே
அனைத்திற்கும் முன் நிற்பான் ஐங்கரனே
(தனங்கிளப்பில்)

வயல் வெளியில் அமர்ந்தவனே ஐங்கரனே
வையகமே போற்றிடும் தூயவனே
வேண்டும் வரம் தருபவனே வேதனைகள் தீர்த்தருள்வாய்
நாளும் உன்னைத் துதித்திட நல்லவனாய் ஆக்கிடுவாய்
(தனங்கிளப்பில்)

சக்தியைத் தருபவனே
சரித்திரமாய் நிலைத்தவனே
வித்தகர்கள் போற்றிடும் விக்கினேஸ்வரா
எங்கள் வினைதனை தீர்த்தருள்வாய் ஞானேஸ்வரா
(தனங்கிளப்பில்)

அற்புதங்கள் புரிபவனே அள்ளி அள்ளித் தருபவனே
கந்தனுக்கு மூத்தவனே கலியுகத்து வேலவனே
கண்டோர்கள் போற்றிடும் ஞானேஸ்வரா
உன்னைக் கணமேனும் நான் மறவேன் ஞானேஸ்வரா
(தனங்கிளப்பில்)

ஆதி முதல்வனாக அமையப் பெற்ற அரும்பெரும் பழம்பிள்ளையார் என மல்லாகம் பதிதனிலே அமையப் பெற்று, பள்ளிச்சிறார்களுக்கு எல்லாம் கல்வி ஞானத்தை எல்லாம் அள்ளி வழங்கும் பழம்பிள்ளையார் - பக்தனான என் மனதினிலே தந்திட்ட இப்பாமாலை அன்பு கொண்ட அடியார்களுக்கு சமர்ப்பணம்.

## மல்லாகம் பழம் பிள்ளையார்

துதி

ராகம் :- மாண்டு

வீதியோரம் வீற்றிருக்கும் விக்ன விநாயகனே
விரைந்து நம்துயர் தீர்க்கும் விக்ன விநாயகனே
சாலைப்பதியோரம் சலனம் இன்றி வீற்றிருப்பாய்
சடுதியில் வரும் துயரில் எமையெல்லாம் காத்தருள்வாய்

பிள்ளையாரே பழம் பிள்ளையாரே
பிள்ளையாரே பழம் பிள்ளையாரே
(வீதியோரம்)

மல்லாகப் பதியினிலே மகிமைமிகு பிள்ளையாரே
மாணவ சமுதாயம் வளர்த்திடும் பிள்ளையாரே
மா-பாரதம் எழுதி மகிமை புரிந்த பிள்ளையாரே
மாயனின் மருமகனாய் வந்துதித்த பிள்ளையாரே
பிள்ளையாரே பழம் பிள்ளையாரே
பிள்ளையாரே பழம் பிள்ளையாரே
(வீதியோரம்)

கமண்டல நீர்தனிலே காவேரியை தோற்ற வைத்தாய்
கண்ணீர் சொரிந்திடவே கவிதனை தந்தாயே
கயமுகாசூரனை சங்காரம செய்தவனே
கருணையின் வடிவமாக காலமெல்லாம் திகழ்பவனே
பிள்ளையாரே பழம் பிள்ளையாரே
பிள்ளையாரே பழம் பிள்ளையாரே
(வீதியோரம்)

## ஏழாலை மடத்தடி பிள்ளையார்
## கருணையின் கணபதி
### துதி

ராகம் :- புண்நாகவராளி

கருணையின் கணபதியே
கந்தனுக்கு மூத்தவனே
கலியுக கணபதியே வாருமையா
கண்திறந்தே எமை பாருமையா

சிவ சிவ கணபதி
சிங்கார கணபதி
சிந்தையில் வந்துறைவாய் சித்தி விநாயகரே

ஓம்சிவ கணபதியே
ஓங்கார கணபதியே
ஓடியே வந்தருள்வாய்
ஒலிதரும் கணபதியே
சரணம் சரணம் கணபதியே
சரவணபவ ஓம் கணபதியே
சரவணபவ ஓம் கணபதியே
சரவணபவ ஓம் கணபதியே

## பன்றிக்கோட்டுப் பிள்ளையார்

அருள்மிகு அற்புத பிள்ளையாரின் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று. 1992.02.10. வெள்ளிக்கிழமை வேலைக்குச் செல்லும் வேளையில் வழமைபோல் கும்பிட்டுவிட்டு சென்ற போது திடீரென்று எனது உள்ளத்தில் சுடர் விட்டெழுந்த இந்த நாமம் பின் சில உண்மைகளை அறியத்தந்தது. அவற்றின் உண்மைகளை இவ்வரியில் இருந்து எவரும் இலகுவில் அறிந்து விடலாம். தத்துவம் தரவல்ல விநாயகனின் இத்துதி அன்பு கொண்ட அடியவர்க்கு சமர்ப்பணம்.

### துதி

குண்டுகொண்ட பிள்ளையார்
குண்டே இல்லாப் பிள்ளையார்
குன்றுதோறும் குடியிருந்து குலம் காக்கும் பிள்ளையார்
குன்றுதோறும் குடியிருந்து குலம்காக்கும் பிள்ளையார்
(குண்டுகொண்ட)

நன்றே செய்வார் நல்லது செய்வார் நலம் அருளும் பிள்ளையார்
நாநிலம் எங்கும் போற்றி வணங்கிடும் நமசிவாயப் பிள்ளையார்
(குண்டுகொண்)

ஐங்கரனாக வந்துதித்த யானைமுகப் பிள்ளையார்
ஐயங்கள் நீக்க ஆண்டருளும் ஆதிமுக பிள்ளையார்
பன்றிக்கோட்டுப் பிள்ளையார் பல வினைகள் தீர்ப்பவர்
பாதந்தனை பற்றிடவே பக்தியுடன் அணைப்பவர்
(குண்டுகொண்ட)

வந்த வினைகள் தீந்திட வழிகள் வகுத்துத் தந்த பிள்ளையார்
வாழ்வினில் இன்பம் தந்தருளும் வைத்தீஸ்வரப் பிள்ளையார்
சஞ்சலங்கள் தீர்த்தருளும் சக்தி விநாயகபிள்ளையார்
சாந்திநிலை தந்தருளும் நவசக்திப் பிள்ளையார்

அருள்மிகு அற்புத விநாயகர் எங்கள் காசியப்பன் அவரின் சித்தியினைப் பெற்று அருளும் சிறு அடியேனின் இப்பாமாலை தனை அன்பு கொண்ட அடியார்கள் பாடி இன்புறும் வண்ணம் இத்தேர்த்திருவிழா தினமான 09.05.99 அன்று வெளியிடப்பட்டது.

## அருள் மிகு தெல்லிப்பழை காசிவிநாயகர்

### துதி

ராகம் :- புனநகவராளி

காசி விநாயக கருணையின் கணநாதா
காத்தருள்வாய் எங்கள் கணநாதா
மூஷிக வாகனா மோதக ஹஷ்தர
மூவுலகும் போற்றும் கணநாதா
(காசி விநாயக)

தெல்லிப் பதிதனிலே தேடிவரும் அடியவர்க்கு
தெவிட்டாத தேனமுதாய் அருள் அளிப்பாய்
ஔவைக்கு அருள் புரிந்து கைலைமலை தனிலே
சிவ சக்தி காட்சிதனைக் காண வைத்தாய் (காசி விநாயகா)
ஆற்றங் கரைதனிலே அருந்தவம் கொண்டவனே
அருள் உடைப் பிள்ளையாராய் அவதரித்தாய்
ஆறுமுகன் வேண்டிடவே அருள்தனை வழங்கிடவே
ஆனை உருவாய் வலம் வந்தவனே (காசி விநாயகா)

எக்குற்றம் இருப்பினும் அக்குற்றம் பொறுத்தருளும் விநாயகப் பெருமானை எப்பிழைகளையும் பொறுத்தருள வேண்டி அவன் திருவடியில் சரணம் அடைந்திட சமர்ப்பணம்.

## அப்பனே பிள்ளையாரே
## பிழை பொறுத்தருள வேண்டி
## துதி

ராகம் :- மாண்டு

அப்பனே அப்பனே பிள்ளையார் அப்பனே
பிழை பொறுத்தருள்வாய் பிள்ளையார் அப்பனே
ஆனைமுகம் கொண்டவரே பிள்ளையார் அப்பனே
ஆறுதலைத் தந்தருள்வாய் பிள்ளையார் அப்பனே (அப்பனே அப்பனே)

தொந்திக் கணபதியே பிள்ளையார் அப்பனே
தொல்லைகளைத் தீர்த்தருள்வாய் பிள்ளையார் அப்பனே
கந்தனுக்கு முன் பிறந்த பிள்ளையார் அப்பனே
காத்திடவே வந்தருள்வாய் பிள்ளையார் அப்பனே (அப்பனே அப்பனே)

பானை வயிறு கொண்டவரே பிள்ளையார் அப்பனே
பக்தர்களைக் காத்தருள்வாய் பிள்ளையார் அப்பனே
சரணம், சரணம், பிள்ளையார் அப்பனே
சாந்தி நிலை தந்தருள்வாய் பிள்ளையார் அப்பனே (அப்பனே அப்பனே)

உலகெங்கும் சாந்தி நிலையைத் தந்தருளவும் செல்வத்தைத் தந்தருளவும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவடிகளே சரணம், சரணம், சரணம்.

உ

## சிவபெருமான்

எல்லாம் வல்ல சிவபெருமானை மன சிந்தையோடு வழிபட்ட போதிலும் அவருடைய நாமங்கள் எதுவும் சிந்தையில் தோன்றவில்லை. நாம் 1996 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து இருந்த காலத்தில் சாவகச்சேரியில் உள்ள சிவன் கோயிலிலும் முருகன் கோயிலிலும் வழிபாடு செய்து வந்த வேளையில் அவ் ஆலயத்தை வந்து வழிபட்டுச் செல்லும் ஒரு பெரியார் என்னை அழைத்து நித்தமும் வழிபாடு செய்கின்ற நீர் உருத்திராட்சம் மாலை அணியும் படி கூறினார். அதைக் கேட்ட நான் இல்லறத்தில் இருந்து கொண்டு உருத்திராட்சம் அணிய விரும்பவில்லை என்று கூறிய போது தனது

வீட்டிற்கு என்னை அழைத்துச் சென்று உருத்திராட்சத்தின் மகத்துவம் உள்ள புத்தகம் ஒன்றை தந்தார். அதை வாசித்துப் பார்த்த போது சில மகத்துவ நிலைகளை புரியக்கூடியதாகவும் இல்லறத்தில் இருப்பவர்களும் உருத்திராட்சம் அணிந்து கொள்ளலாம் என்றும் அறிந்து கொண்ட நான் அன்றைய தினம் அந்தப் பெரியாரின் கையாலே எனக்கு உருத்திராட்சம் அணியப் பெற்றேன். உருத்திராட்சம் அணியப் பெற்ற மூன்றாம் நாள் இன்று இரவு தூங்கிய வேளையில் சிவபெருமானுடைய திருநடனம் கொண்ட கனவுக் காட்சி கண்டு விழித்தெழுந்த நான் அக்காட்சி நிலை கொண்ட "சிவ துதியை" ஆக்கம் செய்துள்ளேன். இவ் ஆக்கம் அடியார்களுக்கு சமர்ப்பணம்.

**துதி** **ராகம் :- நாதநாமக்கிரியை**

சிவ நடனம் ஆடிவரும் சிவபெருமானே
சிவ கவியைத் தந்திடய்யா சிவபெருமானே
நடராஜன் வடி வெடுத்து சிவபெருமானே
நடனம் இட்டு வந்திடய்யா சிவபெருமானே
சுடலை வனம் சென்றவரே சிவபெருமானே
சுடலைப் பொடி பூசியவரே சிவபெருமானே
புலித்தோலை நீர் உடுத்தீர் சிவபெருமானே
புவி நடுங்க நடனம் இட்டாய் சிவபெருமானே
சக்தி தனைத் தான் எதிர்த்தோ சிவபெருமானே
சதிர் நடனம் ஆடி வந்தீர் சிவபெருமானே
கங்கை தனைச் சடையில் வைத்தாய் சிவபெருமானே
கவி தனை மனதில் தந்தாய் சிவபெருமானே
செம்மேனி நிறம் உடைய சிவபெருமானே
செந்தமிழைக் காத்தருள்வாய் சிவபெருமானே
மக்கள் இங்கு கலங்குகின்றார் சிவபெருமானே
மண்ணை நீயும் மீட்டிடய்யா சிவபெருமானே
நஞ்சை உண்ட கண்டன் எல்லோ சிவபெருமானே **(சிவநடனம்)**

பக்தி மயம் கொண்டிருந்தோம் சிவபெருமானே
பக்கத் துணையாய் நீ வருவாய் சிவபெருமானே
சிந்தை எல்லாம் நீ புகுந்தாய் சிவபெருமானே
சிறியேனை ஆண்டு கொள்வாய் சிவபெருமானே
எந்த நிலை வந்தாலும் சிவபெருமானே
என் மனமும் உன்னிடமே சிவபெருமானே
சக்தி மயம் கொண்டவரே சிவபெருமானே
உந்தன் சந்நிதியை வந்தடைவோம் சிவபெருமானே
சரணம் சரணம் ஐயா சிவபெருமானே
சாந்தி நிலை தந்தருள்வாய் சிவபெருமானே
சாந்தி நிலை தந்தருள்வாய் சிவபெருமானே
சாந்தி நிலை தந்தருள்வாய் சிவபெருமானே

உருத்திராட்சம் அணியப் பெற்ற மகத்துவத்தினால் சிவசங்கரனின் திருஞான நாமமாக சிந்தையிலே மலரப் பெற்ற இரண்டாவது துதி சங்கர, சங்கர, சங்கரனே என்ற இத்துதி அடியார்களுக்கு சமர்ப்பணம்.

## இராமநாதன் கல்லூரியில் எழுந்தருளி இருக்கும் சிவனார்க்கு இயற்றப்பெற்ற துதி

ஆபேதி ராகம் :- மாண்டு

சங்கர சங்கர சங்கரனே
சஞ்சலம் தீர்த்தருள் சிவபரனே
சாமரை வர்ணா சிவபரனே
சாம்ப சதாசிவ குருபரனே
சிவ சிவ சிவ சிவ சிவபரனே
சிதம்பரத்தில் நடம் இடும் சிவ பரனே
சீற்றம் கொண்ட சிவ பரனே
சீர்நிலை தந்தருள்வாய் சிவ பரனே
சுந்தர ரேசா சிவபரனே
சுற்றம் தனை காத்தருள் சிவபரனே
சூழ் நிலை மாற்றிடு சிவபரனே
அண்டம் எல்லாம் காத்தருள் சிவபரனே
அன்பர் உள்ளம் கோயில் கொண்டாய் சிவபரனே
ஆனந்த நடனம் இடும் சிவபரனே
ஆதி சிவமாய் அமர்ந்தாய் சிவபரனே
எம் உயிர் காத்தருள் சிவபரனே
எம் முன்னே வந்தருள் சிவபரனே
திருவருள் தந்தருள் சிவபரனே
திருவடியே சரணடைந்தோம் சிவபரனே
திருவடியே சரணடைந்தோம் சிவபரனே
திருவடியே சரணடைந்தோம் சிவபரனே

உ

என் ஞானத்தின் திருவடிவமாக அமையப் பெற்ற துர்க்கை அம்பிகையின் மேற்கு வீதியிலே அமையப் பெற்ற வேட்டை மண்டபத்தில் சித்தரிக்கப்பட்ட கலைவாணியின் ஓவியம் சாதாரண ஓவியம் அல்ல. 01.08.1994 என் தூக்கத்தில் காட்சி தந்து தன் திருவருள் சிந்தையைத் தந்து தன் புகழ் நாமம் பாட வைத்து இலக்கிய தமிழ் மாமன்றில் 31.08.1994ம் ஆண்டு சிறந்த மெல்லிசைப் பாடலுக்கான முதலாவது பரிசைப் பெற்றுத் தந்த அவள் திருநாமம் உலகெங்கும் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்ற மனம் மகிழ்வுடன் அனைத்து அடியவர்களும் அவள் துதி பாட கல்வி ஞானம் ஓங்க கலைவாணியின் பாதம் பணிந்து அடியேனின் சமர்ப்பணம்.

சுவரிலே சித்தரிக்கப்பட்ட ஓவியம் அல்ல கலைவாணி
என் சிந்தையிலே நிறைந்திட்ட கலைவாணியே அன்றி
  பக்தர் மனமெல்லாம் கொள்ளை கொள்ளும் கலைவாணியே
  பக்தியுடன் உன்னைப் பாட எனக்கு அருள் புரிவாய் கலைவாணியே

கவலைகளைத் தீர்த்தருள்வாய் சரஸ்வதி தாயே
சொல்லுக் கெல்லாம் அதிபதியே சரஸ்வதி தாயே
சொல்லினிலே இருப்பவளே சரஸ்வதி தாயே
இசையினிலே இருப்பவளே சரஸ்வதி தாயே
இன்னல்களைத் தீர்த்தருள்வாய் சரஸ்வதி தாயே
புலமையின் புத்திரியே சரஸ்வதி தாயே
புலவர்க் கெல்லாம் அதிபதியே சரஸ்வதி தாயே
யாழினை மீட்பவளே சரஸ்வதி தாயே
யாழ் நகரை மீட்டிடம்மா சரஸ்வதி தாயே
சிந்திக்க வைத்தவளே சரஸ்வதி தாயே
சிந்தை எல்லாம் உறைந்தருள்வாய் சரஸ்வதி தாயே
எந்த நிலை வந்தாலும் சரஸ்வதி தாயே
எம் மனமும் உம்மிடமே சரஸ்வதி தாயே
உலகத்தின் அறிவொளியே சரஸ்வதி தாயே
உள்ளத்திலே நீ இருப்பாய் சரஸ்வதி தாயே
உன்னடியே நாடி வந்தோம் சரஸ்வதி தாயே
உன் பாதம் சரண் அடைந்தோம் சரஸ்வதி தாயே

நவராத்திரி பூஜைதினமான 1996.9 மனபக்தியுடன் கும்பம் வைத்து மன சிந்தைகளை ஒரு நிலைப்படுத்தி பூசித்ததன் பலனாக அருள்மிகு கலைவாணியின் திருநாமமாக மூன்றாவதாக சிந்தையிலே தரப்பட்ட இப்பாமாலை அனைத்து அடியவர்களும் பாடி இன்புறும் வண்ணம் சமர்ப்பணம்.

## கருணை முகம் கொண்ட கலைவாணி துதி

ராகம் :- கிந்தோளம்

கலைவாணியே அம்மா கலைவாணியே
கருணை முகம் கொண்ட கலைவாணியே
கல்வியின் முதலான கலைவாணியே அம்மா
கலைகளில் அதிபதியே கலைவாணியே
(கலைவாணியே)

நாவினில் ஒலியானாய் கலைவாணியே - அம்மா
நாமத்தின் மொழியானாய் கலைவாணியே
வித்தகர் போற்றிடும் கலைவாணியே அம்மா
வீணையின் இசை ஆனாய் கலைவாணியே
சிந்தையில் நிறைந்திட்ட கலைவாணியே அம்மா
சிவ கவி தந்தருள்வாய் கலைவாணியே (கலைவாணியே)

உள்ளத்தில் உதித்தருள்வாய் கலைவாணியே அம்மா
உலகத்தின் அறிவொளியே கலைவாணியே
என் நாவில் குடியிருப்பாய் கலைவாணியே - அம்மா
என்றைக்கும் நான் அடிமை கலைவாணியே

## சுவரிலே சித்தரிக்கப்பட்ட சரஸ்வதி துதி

ராகம் :- துர்கா

வெள்ளை உள்ளம் கொண்ட கலைவாணியே
வேண்டும் வரம் அருள்வாய் கலைவாணியே
துள்ளிடும் உள்ளத்து ஆசை தனை
துணை நின்று காத்தருள்வாய் கலைவாணியே

பக்திக்கு வித்தான பரம் பொருளாய்
பாடிட எந்நாளும் வரம் அருள்வாய்
துன்பம் தனைப் போக்கும் தூயவளே நீ
துணை நின்று தமிழ் மண்ணைக் காத்தருள்வாய்

கல்விக்கு விளக்கான கலைவாணியே
காத்தருள்வாய் எங்கள் தமிழ் மொழியை
சொல்லுக்கு இனிதாக இருப்பவளே நீ
சுருதி கொண்ட வீணையுடன் அமர்ந்தவளே

வெள்ளைத் தாமரையில் இருப்பவளே
விரும்பும் இசைதனை மீட்பவளே
கள்ளம் இல்லாத அன்பருக்கே நீ
கல்விதனை அள்ளித் தருபவளே

நாளும் உன்னை வேண்டி நின்று நலம்பாடிட வேண்டுமே
நல்லவர்கள் நாளும் உன்னை வணங்கிடவும் வேண்டுமே
வையகம் எங்கும் வறுமைகள் நீங்கி வாழ்ந்திடவும் வேண்டுமே
வாழ்வினிலே நாளும் உன்னை மறவாது இருக்க வேண்டுமே
வரம் வேண்டுமே வரம் வேண்டுமே.

## கதிர் ஒளியான சரஸ்வதி அருள் துதி

ராகம் :- மாண்டு

கதிர் ஒளியாய் வந்தருள்வாய் சரஸ்வதி தாயே
கருணைக் கடல் ஆனவளே சரஸ்வதி தாயே
கலைகளின் அதிபதியே சரஸ்வதி தாயே
கலியுகத்தில் வந்தருள்வாய் சரஸ்வதி தாயே
நற்றமிழைக் காத்தருள்வாய் சரஸ்வதி தாயே
நல்லருளைத் தந்தருள்வாய் சரஸ்வதி தாயே
நாவினில் இருப்பவளே சரஸ்வதி தாயே
நாமந்தனை தந்தருள்வாய் சரஸ்வதி தாயே
ஓம் என்னும் ஒலியினிலே சரஸ்வதி தாயே
ஓர் இசையாய் நீ இருப்பாய் சரஸ்வதி தாயே
கல்வி தனைத் தருபவளே சரஸ்வதி தாயே

திருவருள் தந்தருள்வாய் கலைவாணியே - அம்மா
திருவடி சரணம் அம்மா கலைவாணியே
திருவடி சரணம் அம்மா கலைவாணியே
திருவடி சரணம் அம்மா கலைவாணியே

உ

நவராத்திரி பூஷைதினமான 1996 ஆண்டு மனபக்தியுடன் கும்பம் வைத்து, மன சிந்தைகளை ஒரு நிலைப்படுத்தி பூசித்ததன் பலனாக அருள்மிகு லஷ்சுமியின் திருநாமமாக முதலாவதாக சிந்தையிலே தரப்பட்ட இப்பாமாலை அனைத்து அடியவர்களும் பாடி இன்புறும் வண்ணம் சமர்ப்பணம்.

## இலக்ஷ்சுமி மனோலயம்

## துதி

ராகம் :- (லட்சுமி)

செல்வத்தின் அதிபதியே லக்ஷ்சுமி தாயே அம்மா
செந்தமிழை நாம் வளர்ப்போம் லக்ஷ்சுமி தாயே அம்மா
ஆதாரம் உன்னை அல்லால் லக்ஷ்சுமி தாயே அம்மா
ஆர் எமக்கு துணை ஆவார் லக்ஷ்சுமி தாயே அம்மா (செல்வத்தின்.....)

கலைகளின் ஆபரணம் லக்ஷ்சுமி தாயே அம்மா
கருணையின் வடிவமானாய் லக்ஷ்சுமி தாயே அம்மா
கண் கலங்கி வாடுகின்றோம் லக்ஷ்சுமி தாயே அம்மா
காத்தருளும் சக்தியும் நீ லக்ஷ்சுமி தாயே அம்மா (செல்வத்தின்.....)

மனக் கோயில் நான் அமைத்தேன் லக்ஷ்சுமி தாயே அம்மா
மறுபடி பிறப்பதற்கு லக்ஷ்சுமி தாயே அம்மா
மக்களை நாம் பிரிந்தோம் லக்ஷ்சுமி தாயே அம்மா
மறுபடி சேர்த்து வைப்பாய் லக்ஷ்சுமி தாயே அம்மா (செல்வத்தின்.....)

சக்தியின் வடிவானாய் லக்ஷ்சுமி தாயே அம்மா
சஞ்சலங்கள் தீர்த்தருள்வாய் லக்ஷ்சுமி தாயே அம்மா
சரணம் சரணம் அம்மா லக்ஷ்சுமி தாயே அம்மா
சாந்தியைத் தந்தருவாய் லக்ஷ்சுமி தாயே அம்மா
சாந்தியைத் தந்தருள்வாய் லக்ஷ்சுமி தாயே அம்மா
சாந்தியைத் தந்தருள்வாய் லக்ஷ்சுமி தாயே அம்மா (செல்வத்தின்.....)

மக்கள் படும் துயர்நிலை கண்டு வேதனை கொண்டு அம்பிகையின் திருப்பாதங்களைப் பற்றி மக்கள் இடர் நீக்கிட வேண்டி சிந்தையில் இயற்றப்பெற்று பாடிப் பாதம் பணிந்து வேண்டி நின்ற இத்துதி அடியவர்க்கு சமர்ப்பணம்.

## தெல்லிப்பதி உறைந்தவளே

ராகம் :- சுபபந்துவராளி

தெல்லிப்பதி உறைந்தவளே எங்கள் துர்க்கை அம்மா
தேசந்தனைக் காத்தருள்வாய் துர்க்கை அம்மா
அல்லல் தனை நீக்கி வைப்பாய் துர்க்கை அம்மா
அருகிருந்து எமைக் காப்பாய் துர்க்கை அம்மா (தெல்லிப்பதி.....)

பரிவுடன் நாடி வந்தோம் பார்வதியே பாருமம்மா
பக்தர் குறை தீர்த்தருள்வாய் தேவி சக்தி நீயே அம்மா
கண் கலங்கி வாடுகின்ற கன்னியரைப் பாருமம்மா
காக்கும் சக்தி வடிவான கண்ணகியும் நீயே அம்மா (தெல்லிப்பதி.....)

பாடிப்பாடி பக்தி கொண்டோம் பரவசம் ஆனோமம்மா
பைந்தமிழ் தமிழ் இனத்தை பார்வதியே காருமம்மா
அள்ள அள்ளக் குறையாத ஆழியம்மா உந்தன் உள்ளம்
தெள்ளு தமிழ் காக்கும் சக்தி கொண்டவளே துர்க்கை அம்மா (தெல்லிப்பதி.....)

தத்துவங்கள் தந்த தாயார் இப்புவியின் இன்பத்தேரோடும் நன்நாளில் ஆண்டுக்கு ஓர் நாமம் அள்ளியே தந்திட்ட இரண்டாம் பிரசுரம்

தமிழ் பற்றுற்று "தமிழினும் இனியவளே" எனும் துதியை இன்புறத் தருகின்றேன்.

## அன்பு கொண்டு அழைக்கின்றோம்

விருத்தம்

தமிழினும் இனியவளே தாய் போன்று எம்மைக் காப்பவளே
தயாபரியே தயவு புரிவாய் அம்மா
**அம்மா, அம்மா, அம்மா**

**துதி**

ராகம் :- பிரிந்தாவனசாரங்கம்

அன்பு கொண்டு அழைக்கின்றோம் ஓடி வாம்மா
அன்னை பராசக்தியும் நீயே அம்மா
பண்பு கொண்ட பாலகர்கள் நாங்கள் அம்மா
பரிவு கொண்டு பாடுகின்றோம் கேளும் அம்மா (அன்பு.....)

எண்ணற்ற துன்பங்கள் எங்கள் நெஞ்சில்
எரிமலை போல் சுமக்கின்றோம் நீ அறிவாயே
இத்தனையும் அறிந்தும் ஏன் மௌனம் அம்மா
இன்னும் எமக்கு இடர் உண்டோ சொல்லுமம்மா (அன்பு.....)

மாங்கலியம் தந்தவளும் நீயே அம்மா
எங்கள் மணவாளன் வாழ வழி தாருமம்மா
குங்கும நிறத்தாளே கோல வள்ளி
எங்கள் குலவிளக்கை காத்தருள வாருமம்மா (அன்பு.....)

வேண்டும் வரம் தருபவளும் நீயே அம்மா
எங்கள் வேதனைகள் தீர்த்தருள்வாய் நீயே அம்மா
சாதி மத பேதம் இன்றி சான்றோர்களின்
சஞ்சலங்கள் தீர்த்தருள்வாய் நீயே அம்மா (அன்பு.....)

வீறு கொண்டு எழுந்திடுவாய் துர்க்கை அம்மா
வீணர்களை சாய்த்திடுவாய் நீயே அம்மா
பாருலகம் போற்றிடவே துர்க்கை அம்மா
பறந்தோடி வந்தருள்வாய் நீயே அம்மா (அன்பு.....)

ஓராண்டு, ஈராண்டு, மூவாண்டு மூவுலகும் போற்றிடும் எம் பிராட்டியை இன்ப ஊஞ்சலில் தாலாட்டுப் பாடிட இவ்வாண்டு இன்பமுடன் இத்துதி சமர்ப்பணம்.

## துர்க்காதேவி தாலாட்டுப் பாடல் துதி

ராகம் :- ஆனந்த பைரவி

தெல்லி நகரினிலே
எங்கள் தேரோடும் வீதியிலே
செல்வவதி நீ வருவாய்
எங்கள் செல்வம் எல்லாம் காத்தருள்வாய் (தெல்லி.....)

முத்து நகை அணிந்து கொண்டு
முழு மதியாய் நீ வருவாய்
பக்தர் படை சூழ்ந்திடவே
பவனி வரும் தாயல்லவோ (தெல்லி.....)

கண்மணி போல் நீ இருந்து
எங்கள் கன்னியரைக் காத்தருள்வாய்
கதி கலங்கும் எம்மவரை
கணப் பொழுதில் காத்தருள்வாய் (தெல்லி.....)

நாளும் உன்னை வேண்டி நின்று
நலமுடனே பாடிடவே
நீ எனக்கு வரம் அருள்வாய்
நித்தம் உன்னை வணங்கிடவே (தெல்லி.....)

அல்லல் உற்ற மக்கள் ஆறாத்துயரிலே ஆழ்ந்திட்ட துயர் கண்டு தாங்காது துயர் கொண்டு தாயாரை வேண்டி தமிழ் இனத்தின் இடர் நீக்க வேண்டிப் பிரார்த்தித்த இத்துதி உங்கள் நாவிலும் துதித்திட வேண்டுகின்றேன்.

## தேவி துணை வேண்டி
## துர்க்காதேவி துதி

ராகம் :- மனோலயம்

தேவி துணை வேண்டி நின்று தேம்பி அழும் மக்கள் அச்சம்
வேண்டும் வரை வேண்டி நின்றும் வேதனைகள் தீரவில்லை

இன்னும் என்ன சோதனையோ
இன்னும் என்ன சோதனையோ
சொத்திருந்தும் சுகமிருந்தும் சொந்தம் கொள்ளப் பலர் இருந்தும்
இப்புவி மீதினிலே எமக்கென்றோர் இடம் இங்கில்லை
இன்னும் என்ன சோதனையோ
இன்னும் என்ன சோதனையோ (தேவி துணை......)

பால் இருந்தும் பழம் இருந்தும் பஞ்சணை இருந்தும் என்ன
நெஞ்சில் ஓர் அமைதி இன்றி நித்தம் நித்தம் வாடுகின்றோம்
இன்னும் என்ன சோதனையோ
இன்னும் என்ன சோதனையோ (தேவி துணை......)

தாயே உன் திருவடியே நித்தம் நித்தம் வேண்டுகின்றோம்
தமிழினம் அழிந்திடவோ தாரணியே சொல்லுமம்மா
இப்பிறப்பில் எமக்கென்று எதுவும் இங்கில்லையம்மா
எம்மினம் வாழ்ந்திடவே இடர்தனை நீக்கிடம்மா
இன்னும் என்ன சோதனையோ
இன்னும் என்ன சோதனையோ (தேவி துணை......)

அன்பு கொண்டு அழைத்திடும் அடியவர் முன் விந்தைகள் புரிந்திடும் வித்தகியாம் துர்க்கையவள் 1995.09.06 திகதி வீறுநடை போட்டு வீதியுலா வந்து வினை தீர்த்தருளும் அம்பிகை சிந்தனையில் தந்திட்ட இத்துதி.

## வீறுநடை போடுகின்றாள் துர்க்கை துதி

ராகம் :- மாண்டு

வீறுநடை போடுகின்றாள் எங்கள் துர்க்கை அம்மா
வீதி உலா வருகின்றாள் எங்கள் துர்க்கை அம்மா
மக்கள் துன்பம் போக்குபவள் எங்கள் துர்க்கை அம்மா
மகாசக்தி ஆனவள் எங்கள் துர்க்கை அம்மா (வீறுநடை.....)

தெல்லிப்பதி உறைந்தவளே எங்கள் துர்க்கை அம்மா
தென் இலங்கை போற்றுகின்ற எங்கள் துர்க்கை அம்மா
தேடிவரும் அடியவர்க்கோ எங்கள் துர்க்கை அம்மா
தேனமுதம் தான் அழிப்பாள் எங்கள் துர்க்கை அம்மா (வீறுநடை.....)

புஸ்ப ரகத் தேரினிலே எங்கள் துர்க்கை அம்மா
புதுவடிவாய் வருகின்றாள் எங்கள் துர்க்கை அம்மா
பக்தர் படை சூழ்ந்திடவே எங்கள் துர்க்கை அம்மா
பவனி வலம் வாறா வெல்லோ எங்கள் துர்க்கை அம்மா (வீறுநடை.....)

எத்தனையோ எதிரிகளைத் தோற்றிடவே வைத்தவள்

எம்மண்ணைக் காத்திடவே பெண் உருவாய் வந்தவள்
கோடான கோடி மக்கள் துன்பந்தனை நீக்கியவள்
கோணம் எங்கும் கொடி ஏற்றி நிலைத்தே நிற்பவள் (வீறுநடை.....)

மங்கையரின் மானம் காக்க மகாகாளி ஆனவள்
மதுரைக்கோர் நீதி சொல்ல கண்ணகியாய் வந்தவள்
எங்கும் ஒரே சக்தி மயம் ஆகியே இருப்பவள்
எந்நாளும் என்மனதில் நிலைத்தே இருப்பவள் (வீறுநடை.....)

நின்மதியைத் தந்திடவே எங்கள் துர்க்கை அம்மா
நீதிக் கண்ணைத் திறந்து நின்று நித்தம் அருள் புரிபவள்
சக்தி தனைத் தந்திடம்மா எங்கள் துர்க்கை அம்மா
சாந்தி நிலை தந்தருள்வாய் எங்கள் துர்க்கை அம்மா (வீறுநடை.....)

ஆண்டுகள் பல கழிந்தாலும் உள்ளத்தில் ஆழப்பதிந்த ஆண்டாம் 1996 மட்டுநகர் பதியிலே மன இன்பம் இன்றி வாழ்ந்த வேளையில் இடம் பெயர்ந்து இன்னல்தனை அனுபவித்தாலும் துன்பத்தின் மத்தியிலும் தன்னை தரிசிக்க அருள் புரிவேன் என்று என் மன நிலையை அறிந்து கனவில் காட்சி தந்து இவ்வழியினை கடைப்பிடித்து வாழ்வாய் என்று எனது மன சிந்தையில் தந்திட்ட பாடலை அனைத்து மக்களும் அறிந்து பாடி பரவஷம் அடைவதோடு மட்டும் அல்லாது இவ்வழியை கடைப்பிடித்து எல்லோரும் அருள்மிகு அம்பிகையின் அருளைப் பெற வேண்டுகின்றேன்.

## என்ன எமக்கு அறிவித்தாள் எங்கள் துர்க்கை துதி

ராகம் :- மாண்டு

என்ன எமக்கு அறிவித்தாள் எங்கள் துர்க்கை அம்மா
எது நிலை அறியென்றாள் எங்கள் துர்க்கை அம்மா
முன்ன வினை நீக்கென்றாள் எங்கள் துர்க்கை அம்மா
முழுமனதைத் திறவென்றாள் எங்கள் துர்க்கை அம்மா
நெஞ்சில் உறுதி கொள் என்றாள் எங்கள் துர்க்கை அம்மா
நேர் வழியில் நடவென்றாள் எங்கள் துர்க்கை அம்மா
பஞ்சம் பசி போகும் என்றாள் எங்கள் துர்க்கை அம்மா
காத்திருந்து பார் என்றாள் எங்கள் துர்க்கை அம்மா
போமே போம் வினை என்றாள் எங்கள் துர்க்கை அம்மா
போக்கிட வழி உண்டென்றாள் எங்கள் துர்க்கை அம்மா
சாதி மதம் பாராய் என்றாள் எங்கள் துர்க்கை அம்மா
சஞ்சலத்தை நீக்கிடென்றாள் எங்கள் துர்க்கை அம்மா
தான தர்மம் செய்யென்றாள் எங்கள் துர்க்கை அம்மா
தர்மம் உனைக் காக்கும் என்றாள் எங்கள் துர்க்கை அம்மா
கடவழியைத் திற வென்றாள் எங்கள் துர்க்கை அம்மா
கட்டுப்படும் மனம் என்றாள் எங்கள் துர்க்கை அம்மா

தாமே தாம் உண்டென்றாள் எங்கள் துர்க்கை அம்மா
தாமதமே இன்னும் என்றாள் எங்கள் துர்க்கை அம்மா
பொல்லா வினை எல்லாம் எங்கள் துர்க்கை அம்மா
போக்கிடுவேன் தான் என்றாள் எங்கள் துர்க்கை அம்மா
நல்லோர் மனதில் எல்லாம் எங்கள் துர்க்கை அம்மா
நலம் அருள்வேன் என்று சொன்னாள் எங்கள் துர்க்கை அம்மா
ஓம் ஓம் என்று உரைத்தாள் எங்கள் துர்க்கை அம்மா
ஓங்கார வடிவெடுத்தாள் எங்கள் துர்க்கை அம்மா
சிங்கத்திலே வலம் வருவாள் எங்கள் துர்க்கை அம்மா
சீர் நிலையைத் தந்திடுவாள் எங்கள் துர்க்கை அம்மா
சரணம் சரணம் என்றோம் எங்கள் துர்க்கை அம்மா
சரண் அடைந்தோம் உம்மிடமே எங்கள் துர்க்கை அம்மா

அருள்மிகு துர்க்கைத் தாயார் தங்கரதத்தில் இருந்து பச்சை சாத்தப் பெற்று சிம்மாசனமேறி ஆரோகணித்து திருவீதி உலா வரும் நடனக் காட்சியினை நாமதோத்திரமாக அன்பு கொண்ட பக்த அடியவர்க்கு அம்பிகையின் தேர்த் திருநாளான இன்று பாடி இன்புறும் வண்ணம் சமர்ப்பணம்.

பாருலகும் போற்றிட வைத்திட்ட துர்க்கை அம்பாள் பக்தர் குறை தீர்த்திட பலபல வடிவங்களில் காட்சி அளிக்கும் துர்க்கை அம்பாளின் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருந்த அன்றைய காலத்தில் என்மீது பற்றுக்கொண்ட குருக்கள் அம்மா உங்கள் சிந்தை கொண்ட துதியை இந்த கும்பாபிஷேக தினத்தில் வெளியிடவில்லையா? என்று கேட்டார். அதற்கு மனவேதனையுடன் துர்க்கை அம்பாள் இன்று வரையும் என் சிந்தைக்கு எதுவும் தரவில்லை என்று கூறிவிட்டு மனக்கவலையுடன் நந்திக்குப் பக்கத்தில் சென்றமர்ந்தேன். அம்பிகையை கவலையுடன் கண்ணீர் மல்கி கருங்கல் சிலையை நோக்கிய வண்ணம் ஐம்புலனையும் ஒரு நிலைப்படுத்தி அம்பிகையின் உருவச் சிலையை பார்த்துக் கொண்டிருந்தபோது என் மனக்கண் முன்னே தோன்றியதனால் பிரமிப்புற்று உடம்பெங்கும் மயிர்கள் மெய்சிலிர்க்க வைத்திட்ட தாயார் அக்கணமே என் சிந்தையில் தோன்றப் பெற்ற "கல் என்று சொல்பவர்க்கு கல்லாய் இருப்பவளே" என்ற துதியை 15.10.11997 அன்றைய தினம் இயற்றி எழுதப்பட்டு பின் 21.10.1997 செவ்வாய்க்கிழமை மண்டலா அபிஷேக பூர்த்தி தினமாகிய அன்று வெளிடப்பட்டது. அன்பு கொண்ட அடியவர்களுக்கு அம்பிகையின் அருள் கிடைக்க வேண்டி அவளின் நாமத்தை பாடிட இத்துதி.

## கல் என்று சொல்பவர்க்கு கல்லாய் இருப்பவள்

துதி

ராகம் :- புன்நகவராளி　　　　தாளம் :- கண்ட ஜாடை ஏகம்

கல் என்று சொல்பவர்க்கு கல்லாக இருப்பவளே
கருணைக் கடல் போன்ற துர்க்கை அம்மா
நில் என்று சொன்ன உடன் நின்றிட்டேன் எந்தாயே
நீ வாழும் இடம் எந்தன் உள்ளம் அம்மா　　　　(கல் என்று.....)

பக்தர் உமை வேண்டிடவே பாவவினை
தீர்த்தருள பறந்தோடி வந்தருளும் துர்க்கை அம்மா
மங்கையர் மனைவாழ் மாங்கல்யம் காத்தருளும்
மகா சக்தி துர்க்கை அம்மா (கல் என்று.....)

தந்தான தனதான தந்தான தனதான தந்தானா (தனதானனா.....)
தந்தான தனதான தந்தான தனதான தந்தானா (தனதானனா.....)
தெல்லிநகர் பதிதனிலே தேசந்தனைக் காத்தருள
உதித்திட்ட துர்கை அம்மா
தேவர்கள் போற்றிடவே தேசந்தனைக் காத்தருளும்
தேவியே துர்க்கை அம்மா
ஆவணித் திருநாளில் அபிஷேக கலசங்கள்
அருளிய துர்க்கை அம்மா
ஆலய மணியோசை அருள் ஒலி தந்திட்ட
அற்புதத் துர்க்கை அம்மா (கல் என்று.....)
தந்தான தனதான தந்தான தனதான தந்தான (தனதானனா)
தந்தான தனதான தந்தான தனதான தந்தான (தனதானனா)
சக்தியின் வடிவான சங்கர் துணைவியின்
தங்கையே துர்க்கை அம்மா
சலனங்கள் நீக்கியே சக்தியைத் தந்திட்ட
தேவியே துர்க்கை அம்மா
சரணம் இது சரணம் இது என்றென்றும் ஒலித்திட
சாந்தியைத் தந்தருள் துர்க்கை அம்மா
சரணம், சரணம், என்றென்றும் உன்பாதம் சரணம் துர்க்கை அம்மா
சரணம், சரணம், என்றென்றும் உன்பாதம் சரணம் துர்க்கை அம்மா

உ

நவராத்திரி பூஷைதினமான 1996ஆம் மனபக்தியுடன் கும்பம் வைத்து மனசிந்தனைகளை ஒருநிலைப்படுத்தி பூசித்ததன் பலனாக அருள்மிகு துர்க்கையின் திருநாமமாக சிந்தையிலே தரப்பட்ட இப்பாமாலை அனைத்து அடியவர்களும் பாடி இன்புறும் வண்ணம் சமர்ப்பணம்.

## ஞானத்தின் திருவடிவம் துர்க்கை

துதி

ராகம் :- சம்கனந்தணப்பிரியா

ஞானத்தின் திருவடிவே
நல்லறத்தின் பெருவடிவே
நாற்குணம் அறிந்த எங்கள் - நாயகியே
நான் என்றும் உந்தன் அடிமை அம்மா (ஞானத்தின்.....)

மோகத்தின் நிலை கண்டு
மோதிடும் அடியவர்கள்

யோகத்தை தந்திட்ட நாயகியே
என்றைக்கும் நான் உந்தன் அடிமை அம்மா (ஞானத்தின்.....)

பக்தியில் தளைத்திட்ட
பாலகன் எனை காத்தாய்
என் தாயும் நீயே அம்மா
என்றென்றும் நான் உந்தன் அடிமை அம்மா (ஞானத்தின்.....

உன் பாதம் பணிந்திட்ட
உலகத்து மக்களுக்கு
பாதையை வழி கொடம்மா - (கொடுத்தாய்)
பார்வையில் காட்சி தந்தாய்
பாதத்தை பணிந்திட்டேன்
உன் பிள்ளை நானே அம்மா
உன் திருவடி சரணம் அம்மா
உன் திருவடி சரணம் அம்மா (ஞானத்தின்.....)

அம்பிகையாள் தேரினிலே வரும் எழில் தோற்றத்தின் காட்சிதனை காணவரும் பக்த அடியவர்களுக்கு அருள்மிகு அம்பிகையின் சிந்தைதனை பெற்ற அடியேனின் நாவிலே மலரப் பெற்ற பாமாலை உலகின் அமைதி வேண்டி உள்ளத்தில் இன்புறும் அற்புதக் காட்சியின் நிலைகொண்டு ஆனந்தம் அடைந்து இன்புறும் அடியேன் அடியவர்களுக்கு அளித்திடும் இப்பாமாலை 24.08.1999 இன்றைய தினம் அம்பிகையின் பாதம் தனில் சரணடைந்து இன்பமுடன் துதித்திடவே இன்னல்கள் நீக்கி அருள்வாய் ஈடில்லா ஜோதி அவள். பாதமே என்றென்றும் சரணம்.

## காலையிலே நான் எழுந்து தேரடியை......

### தேர்த்துதி

ராகம் :- மனோலயம்

காலையிலே நான் எழுந்து தேரடியை நாடி வந்தேன்
கதிரவன் ஒளியில்லையே - அம்மா
உந்தன் கண்களில் ஒளி காண்கின்றேன் - அம்மா
உந்தன் கண்களில் ஒளி காண்கின்றேன் (காலையிலே.....)

அம்மா ஆதவன் ஒளியினிலே அத்தனை மாயம் கண்டேன்
அருள் சக்தி நீயே அம்மா - அம்மா
எங்கும் அருள் சக்தி நீயே அம்மா
அம்மா தேவர்கள் படைசூழ தேன்மலர் சொரியக்கண்டேன்
தெய்வத்தாய் நீதானம்மா - அம்மா
எங்கும் தெய்வத்தாய் நீ தானம்மா (காலையிலே.....)

நாடிவரும் அடியவர்கள் தேடி வந்து வடம் பிடிக்க
ஆனந்த நீர் மல்குதே - அம்மா
கண்கள் ஆனந்த நீர் மல்குதே

அம்மா வாடிய முகம் கண்டு வருந்திய ஏழைக்கு
வரம் தந்த தாய் அல்லவோ - அம்மா
எங்கும் வரம் தரும் தாய் அல்லவோ
அம்மா தாய் இழந்த கன்றினைப் போல் தவித்து நான் நின்ற
போது தளிர்க்கரம் தந்தாய் அம்மா - அம்மா
எங்கும் தளிர்க்கரம் தருவாய் அம்மா (காலையிலே.....)

தங்கரதத்தின் தேரினிலே தளிர்க்கொடி தாங்கி நின்று
தாயகம் காப்பாய் அம்மா - அம்மா
எங்கள் தமிழினம் காப்பாய் அம்மா
அம்மா நெல்லிநகர் பதிதனிலே தேடி வரும் அடியவர்க்கு
தேன் மொழி தந்தாய் அம்மா - அம்மா
என்றும் தேன் மொழி தருவாய் அம்மா
அம்மா சாதிமத பேதமின்றி சரித்திடம் நிலைத்திடவே
சாந்தியைத் தருவாய் அம்மா - அம்மா
எங்கும் சாந்தியைத் தருவாய் அம்மா - அம்மா
எங்கும் சாந்தியைத் தருவாய் அம்மா
எங்கும் சாந்தியைத் தருவாய் அம்மா (காலையிலே.....)

அருள்மிகு அம்பிகையின் கேதாரகௌரி விரதத்தினை ஐந்து ஆண்டுகள் அனுஷ்டித்ததன் பலனால் அருள்மிகு நெல்லிநகர் துர்க்கை அம்பாளின் கேதாரகௌரி பூர்த்தி திருநாளான இன்று 31.10.1997 வெள்ளிக்கிழமை அம்பிகையின் அருள் சக்தியினால் என் நாவில் இருந்து மலர்ந்திட்ட இப்பாமாலைதனை சகல அடியவர்களும் இன்புற்றுப்பாடும் வண்ணம் இப்பிரதியினை வெளியிட்டுள்ளேன்.

## கேதாரகௌரி துதி

ராகம் :- சுபபந்துவராளி

சிந்தையில் நின்றாடும் சிவகாமி அம்மையே சீக்கிரம் வந்தருள்வாய்
சிவலிங்க மூர்த்தியை பூசிக்கும் எம்தாயே சிவகவி தந்தருள்வாய்
கேட்டவரம் தந்தருளும் கேதாரகௌரியே கேட்கின்றேன் உன்னை அம்மா
கேதீச்சரம் சென்று அடியேன் உன் புகழ்பாட கேட்டவரம் அருள்வாய்
(சிந்தையில்.....)
முக்கண்ணன் துணைவியே முகுந்தனின்
தங்கையையே சக்தியை தந்தருள்வாய்
முதுமையிலும் உனை வேண்டி முத்தமிழ்
பாடிட சித்தியைத் தந்தருள்வாய்
மூன்று நல்வாரங்கள் முயன்றுனை வேண்டினேன் சக்தியைத் தந்தருள்வாய்
மூவுலகும் போற்றிடும் சக்தி வடிவாம்பிகையே முன் நின்று காத்தருள்வாய்
(சிந்தையில்.....)

தர்மத்தை காத்திடவே தனிநடம் புரிந்திடும் தேவியே துர்க்கை அம்மா

தந்தையும் தாயுமாய் என்னுள் இருப்பவள் நீதானே துர்க்கை அம்மா
தத்தளிக்க வைத்தென்னை தயவுடன் வேண்டிட வைத்திட்ட துர்க்கை அம்மா
தாலிதனைத் தந்தெம்மை தாவி அணைத்திட்ட தேவியே துர்க்கை அம்மா
(சிந்தையில்.....)

உலகத்து நிலைதனை நான் மறந்தாலும்
உனையென்றும் மறவோம் அம்மா
உற்றோர்கள் வாழ்வினை நான் மறந்தாலும் உன்னடி மறவேனம்மா
உன்னடி பணிவதும் உன் பணி செய்வதும் என் பணியாகுமம்மா
உலகத்து நாயகியே உன்னடி பணிந்திட்டேன்
சரணம், சரணம், சரணம் அம்மா
சரணம், சரணம் அம்மா, சரணம், சரணம், சரணம்

அருள்மிகு துர்க்கைத் தாயார் தேரேறி வலம் வந்து, தேம்பி அழும் மக்கள் துயர் நீக்கி, நிம்மதியான வாழ்வைத் தந்திட அவள் பாதம் தனை வேண்டி வழிபடும் அடியேனின் சிந்தையில் மலரப் பெற்ற இந்நாமம் அனைத்து அடியார்களும் பாடி அவள் பாதம் பணிந்திட அடியேனின் சமர்ப்பணம்.

## தேர் ஏறி வருகின்ற எங்கள் துர்க்கை துதி

ராகம் :- மனோலயம்

தேரேறி வருகின்ற எங்கள் துர்க்கையம்மா
தேசம் தனைக் காப்பாய் எங்கள் துர்க்கையம்மா
தெல்லிப்பதி உறைந்த எங்கள் துர்க்கையம்மா
தென்னிலங்கை போற்ற வைத்தாய் எங்கள் துர்க்கையம்மா (தேரேறி.....)

பக்தருக் கருள் புரியும் பரம தயாபரியே
பரந்தாமனின் தங்கையே பார்த்தருள் புரிவாய்
பாவிகள் உன்னை வேண்டி பாடி அழைக்கின்றோம்
பாசமுள்ள தாயே பாருலகும் காப்பாய் (தேரேறி.....)

நாதஸ்வர கானம் நாடெங்கனும் ஒலிக்க
நர்த்தன நாயனியாள் நடனமிட்டே காக்க
நால்வகை வேதங்கள் நல்வழிகள் கூற
நாடெங்கனும் செழித்து நல்லருள் பெருக (தேரேறி.....)

ஆதியந்தம் இல்லா அருள் பெரும் ஜோதியானாய்
ஆனந்த அடியவர்க்கு அருள் ஞான ஒளிதந்தாய்
ஆதிசக்தியாய் நின்று அருள் மழை பொழிபவளே
அகிலங்கள் யாவையும் காத்தருள் தாயே (தேரேறி.....)

அன்னை துர்க்கை தாயார் அடியேனிற்கு அருள் புரிந்தது போல் எல்லா அல்லலுறும் மக்கள் அனைவருக்கும் அவள் அருட்காட்சம் கிடைத்திட, அவர்கள் மனபக்தியுடன் வழிபாடு பஜனைகள் பாடி வளர்த்திட, அடியேனின் உள்ளத் துதிப்பில்

மலர்ந்திட்ட இச்சிந்தை நாமம் என்றென்றும் எங்கெங்கும் எதிரொலியாக ஒலித்திட அவள் பாதம் வேண்டி அடியவர்களுக்கு சமர்ப்பணம்.

## அன்னை துர்க்கை தாயே துதி

ராகம் :- குறுச்சி

அன்னை துர்க்கை தாயே அம்மா அங்கிருந்து காப்பாய்
அல்லல் நீக்கி எங்கும் அம்மா இன்ப வாழ்வு தருவாய்
தொல்லை நீக்கி எங்கும் உந்தன் பாதம் வேண்டி நின்று
தொழுது வாழ மக்கள் வாழ்வில் இன்பம் காண வேண்டும்
எந்தன் நாளும் உந்தன் அம்மா பாதம் வேண்டி நின்றே
எல்லை அற்ற இன்பம் அம்மா என்றும் காண வேண்டும்
ஏற்றத் தாழ்வு நீங்கி அம்மா எங்கும் வாழ வேண்டும்
ஏழை மக்கள் வாழ்வில் அம்மா இன்பம் காண வேண்டும்
கள்ளம் அற்ற நெஞ்சில் அம்மா கலி நடனம் புரிவாய்
கன்னியர்கள் வாழ நல்ல வாழ்வு தந்து அருள்வாய்
இன்னல் நீங்கி எங்கும் அம்மா இன்ப வாழ்வு தருவாய்
இறைவன் பாதம் நாடி மக்கள் இனிது வாழ வேண்டும்
சக்தி தாயே என்றும் உந்தன் நாமம் சொல்ல வேண்டும்
சாந்தி நிலையை தருவாள் எங்கள் துர்க்கை தாயே அம்மா
சாந்தி நிலையை தருவாள் எங்கள் துர்க்கை தாயே அம்மா
சாந்தி நிலையை தருவாள் எங்கள் துர்க்கை தாயே அம்மா

உ

அகிலங்கள் யாவுக்கும் ஆதிசக்தியாக விளங்கும் அருள்மிகு துர்க்கைத் தாயார் அபிராமிப்பட்டருக்கு காட்சி கொடுத்தது மட்டுமன்றி அடியேனின் உள்ளம் மகிழ அற்புதக்காட்சி தந்து அடியேனின் சிந்தையில் தந்திட்ட சக்தி நாமம்.

## ஆதிசக்தியானவள்
## துதி

ராகம் :- துர்க்கை

ஆதிசக்தி ஆனவளே
எங்கள் அன்னை துர்க்கை தேவியளே
ஜோதிசக்தி ஆனவளே
எங்கள் ஜோதிமயம் தந்தருள்வாய் (ஆதி.....)

தெல்லி நகர்ப்பதினிலே
தெள்ளுத் தமிழ்ப்பாட்டிசைத்து
தேர் ஓடும் வீதியிலே
எமை தேனிசைகள் பாட வைத்தாய் (ஆதி.....)

கன்னியாக வாழ்பவளே
எங்கள் கவலை எல்லாம் தீர்ப்பவளே
கன்னியர்க்கு வாழ் வழிக்கும்

எங்கள் கனக துர்க்கை தேவியரே (ஆதி.....)

கண்கண்ட தெய்வம் என்று
எனை கவி பல பாட வைத்தாய்
காலம் எல்லாம் வேண்டி உமை
கைகூப்பித் தொழுதிடுவோம் (ஆதி.....)

அபிராமிப் பட்டருக்கு
அருள் புரிந்த தேவியளே
அமாவாசை நாள்தனிலே
அம்புலியைக் காட்டி நின்றாய் (ஆதி.....)

அக்கினியைதான் தணிக்க
அருள்மழை பொழிந்தாயே
அபிராமி அந்தாதியை
அனைவருக்கும் அறிய வைத்தாய் (ஆதி.....)

சக்திதனை தருபவளே
சர்வமயம் கொண்டவளே
சாந்தி நிலை தந்தருள
சரணடைந்தோம் உன் பாதம்
சரணடைந்தோம் உன் பாதம்
சரணடைந்தோம் உன் பாதம்

அற்புதத்தின் மகிமை அடியவர்கள் அறிய வேண்டிய உண்மை அம்பிகையின் தேர்த்திருநாளான இன்றைய தினம் அம்பிகை மீது கொண்ட பற்றினால் இயற்றப்பெற்ற பாமாலைப் பிரசுரத்தை வெளியிட்டு தேரின் பின்னால் பாடுவதற்கு சில அடியவர் செய்த இடையூறின் நிமித்தம் மனக்குழப்பமுற்ற அடியேன் வேதனையோடு அடியவர்க்கு பாமாலைப் பிரசுரத்தை வழங்கினேன். அன்றைய தினம் பஜனையை முழுமனதுடன் பாட முடியாத கவலையினால் வேதனையுடன் துக்கத்தில் ஆழ்ந்த நான் மறுநாள் அதிகாலை 4.00 மணி அளவில் எழுந்து தோய்ந்து அம்பாளின் தீர்த்தத் திருவிழாவை தரிசிப்பதற்கு வீட்டினுள் இருந்து வெளியே புறப்பட்டவேளை வீட்டுநிலை எனது மண்டையை அடித்து என்னை ஒருகணம் மெய்மறக்க வைத்தது. இந்நிலையில் களைப்புற்ற நான் சற்று ஓய்வெடுத்திருந்த வேளை திடீரென்று தீர்த்தத்தை தரிசிக்கச் செல்லும் நீ தீர்த்த நாமம் பாட முடியாது செல்வதா என மனப்போராட்டம் ஏற்பட்டவேளை உடம்பெல்லாம் சிலிர்த்தது. உள்ளத்தில் இருந்து எழுந்ததோர் அருள் ஞானக்கவி அக்கியே அன்றைய தீர்த்தத் திருநாளை தரிசிக்க வந்த அடியவர்களுக்கு திகைப்பூட்டும் சிந்தை நாமமாக பாடி மகிழ அடியேனின் நாவாற இன்புறப்பாடி அனைத்து உள்ளங்களையும் அம்பிகையின் தீர்த்தத் திருப்பாதத்தை மனதாரப்பற்றிக் கொள்ள வைத்தது. அப்பாமாலை தீர்த்தத் திருநாளில் பாடி மகிழும் பாமாலையாக இப்புத்தகத்தில் பிரசுரமாக சமர்ப்பணம்.

## துர்க்கை அம்பாள் தீர்த்தப்பாமாலை

### துதி

ராகம் :- மாண்டு

ஆடிவாறா அம்பாள் ஆடிவாறா
ஆனந்தத் தீர்த்தம் ஆடி ஆடிவாறா
அம்பாள் ஆனந்த தீர்த்தம் ஆடி ஆடிவாறா
நாடிவாறா அம்பாள் நாடிவாறா
நாடும் வீடும் காத்தருள நாடிவாறா
அம்பாள் நாடும் வீடும் காத்தருள்ள நாடிவாறா (ஆடிவாறா.....)

தெல்லிநகர்த் துர்க்கையம்பாள் நாடிவாறா
தெள்ளுத்தமிழ் பாட்டுகேட்டு நாடிவாறா
அம்பாள் தெள்ளு தமிழ் பாட்டுக்கேட்டு நாடிவாறா
தேவர் மூவர் போற்றிடவே நாடிவாறா
தேசந்தனைக் காத்தருள நாடிவாறா
அம்பாள் தேசந்தனைக் காத்தருள நாடிவாறா (ஆடிவாறா.....)

எந்தன் உள்ளம் இன்பம் கொள்ள நாடிவாறா
எல்லோரையும் வாழவைக்க நாடிவாறா
அம்பாள் எல்லோரையும் வாழவைக்க நாடிவாறா
ஏற்றத்தாழ்வு நீக்கிடவே நாடிவாறா
ஏகபோகம் தந்தருள நாடிவாறா
அம்பாள் ஏகம் போகம் தந்தருள நாடிவாறா (ஆடிவாறா.....)

அன்பர் இல்லம் இன்பம் கொள்ள நாடிவாறா
அர்த்தயாம வேளையிலே நாடிவாறா
அம்பாள் அர்த்தயாம வேளையிலே நாடிவாறா
அன்னை துர்க்கை அம்பிகையே நாடிவாறா
அல்லல் உற்ற மக்கள்தனை காக்கவாறா
அம்பாள் அல்லல் உற்ற மக்கள்தனை காக்கவாறா (ஆடிவாறா.....)

ஜோதி வடிவாக இங்கு நாடிவாறா
ஜோகபோகம் தந்தருள நாடிவாறா
அம்பாள் ஜோகபோகம் தந்தருள நாடிவாறா
சரணம் சரணம் என்று சொல்ல நாடிவாறா
சாந்தி நிலை தந்தருள நாடிவாறா
சாந்தி நிலை தந்தருள நாடிவாறா
சாந்தி நிலை தந்தருள நாடிவாறா (ஆடிவாறா.....)

## அம்மா உன் அருள்ஞானம்

மெய்யடியார்களே உள்ளத்தை வேதனைப்படுத்தி பார்க்கும் இன்றைய உலகின் மக்கள் 17.03.2000 எனது உடன் பிறப்பான தம்பி இறந்த கவலையின் நிமித்தம் ஆலயத்தினுள் செல்ல முடியாத நிலைமையில் வாசலிலே நின்று வழிபட்டு செல்வேன். 28.03.2000 செவ்வாயன்று என்னை மறந்து பாடியவேளை அவற்றை பார்த்துக்கொண்டு நின்ற பக்திமிகு பண்டிதர் புகழ்பெற்ற பட்டிமன்றத் தலைவர் எனது தொழிலுக்கு அணியும் ஆடையுடன் இருந்து பாடியதை கவனித்த அவர் பலருக்கு மத்தியிலே எள்ளி நகைத்து ஏளனம் செய்து சிரித்தார். என்னை அழைத்து கேலி செய்தார். இவ்வேதனை தாங்காது கவலை பொங்கிய மனத்துடன் சைக்கிளை

எடுத்துக்கொண்டு அம்பிகையின் முப்புற வாசலைத் தாண்ட முற்பட்டவேளை தேகம் யாவும் மைப்புச் சொரிய அக்கணமே சிந்தையில் அருள் பொங்கும் ஞானமாக அம்மா உன் அருள் ஞானம் சொல்லச் சொல்ல அருள்மிகு மனமின்பம் கொள்ளுதம்மா. இத்துதி அனைத்து அடியவர்களும் தத்துவம் புரிந்து பாடி மகிழ்ந்திட சமர்ப்பணம்.

தேவி துணை

# அம்மா உன் அருள் ஞானம் சொல்ல.....

## துதி

ராகம் :- சம்கனந்தனப்பிரியா

அம்மா உன் அருள் ஞானம் சொல்லச் சொல்ல
அருள்மிகு மனம் இன்பம் கொள்ளுதம்மா
அன்னையாய் வந்தாயே அருள் காட்சி தந்தாயே
ஆனந்த நிலை தோன்றுதே மனம் ஆனந்தநிலை தோன்றுதே (அம்மா.....)

பொன் வேண்டிப் பொருள் வேண்டிப் புகழ்பாடும் மனிதர்கள்
பொறுமைகள் கொள்ளுவதில்லை அவர் புதுமைகள் காண்பதுமில்லை
பொல்லா மனம் என்று இகள் பேசும் மனிதர்முன்
உன்புகழ் சொல்வேன் அம்மா என்றும் உன்புகழ் சொல்வேன் அம்மா (அம்மா.....)

எண்ணற்ற துன்பங்கள் எனை வந்து சூழ்ந்தாலும்
என்மனம் மாறாதம்மா என்றும் என்மனம் மாறாதம்மா
ஏழையாய் வந்தாலும் எள்ளி நகைத்தாலும்
எவர் பாதம் பணியேன் அம்மா என்றும் உன்பாதம் பணிவேன் அம்மா (அம்மா.....)

மானிடப் பிறவியெடுத்து மானிட வாழ்வின் மாயமறியாது மனக்கவலையுடன் வாழும் என்முன்னே தோன்றி அருள் ஞானம் தந்திடும் என்தாயை எப்படி வேண்டிப் பாடுவது. தவத்தின் நிலை அறியேன். தாயின் பாதம் பற்றி நின்றேன். பாவலர் வாழ்வினை நானறியேன். பாட்டின் பொருளினையும் நான் அறியேன். ஆதிபராசக்தி பாதம் பணிந்து பித்தனாய் பாடுகின்றேன். இப்பாட்டினை சிந்தை கலங்காது பாடி மகிழ்ந்திட பக்தர்களுக்கு சமர்ப்பணம்.

## தெல்லிநகர் துர்க்கை அம்மன்

## துதி

ராகம் :- வந்தனதாரனி

என்ன தவம் செய்தேன் - தாயே
என்ன தவம் செய்தேன்

உன்னருளை நாம் பெறவே - தாயே
உன்னருளை நான் பெறவே (என்ன தவம்.....)

மானிட வாழ்வு தன்னின்
மாயம் தனை அறியேன்
மாறிலா ஜோதியாய்
வந்தருள் தந்தாயே (என்ன தவம்.....)

சிந்தையெல்லாம் புகுந்து
சித்தம் தனில்கலந்து
பித்தனைப் போல் என்னை
பாடவைத்தாய் தாயே (என்ன தவம்.....)

ஆரும் அறியார்கள்
அடியேனின் நிலைதன்னை
ஆதிசக்தியாய் நின்று
அருள்ஞானம் தந்தாயே (என்ன தவம்.....)

நீ என்றும் என் துணையாய்
நின்றருளல் வேண்டுமம்மா
நின்பாதம் பணிந்து
வாழ்ந்திடுவேன் தாயே (என்ன தவம்.....)

வையமெல்லாம் போற்றிடும் அருள்மிகு தெல்லிநகர் துர்க்கைத் தாயார் கையெடுத்து கும்பிடவே கடிதன ஆதாரம் தந்திட்ட என் தத்துவத் தாயென என் அகம் குழைந்து இன்புற போற்றி, போற்றி என துதித்து மகிழ்ந்திட என் சிந்தையில் தந்திட்ட இப் போற்றி பாமாலை அனைத்து பக்தர்களின் நாவிலும் போற்றி மகிழ்ந்திட சமர்ப்பணம்.

ராகம் :- மோகனம்

போற்றி போற்றி துர்க்கா போற்றி
துதிக்கத் துணையே துர்க்கா போற்றி
துள்ளி வரும் நாயகியே துர்க்கா போற்றி
துதி பாட அருள் புரிந்தாய் துர்க்கா போற்றி
துதி பாடி வந்தோமே துர்க்கா போற்றி
துன்பம் தனைத் தீர்த்தருள்வாய் துர்க்கா போற்றி
தூயமனம் கொண்டவளே துர்க்கா போற்றி
தூக்கத்தில்கவி தருபவளே துர்க்கா போற்றி
தூயவளே என் உள்ளம் புகுந்தாய் துர்க்கா போற்றி

தெல்லிநகர் உறைந்தவளே துர்க்கா போற்றி
தெள்ளுதமிழ் பாடவைத்தாய் துர்க்கா போற்றி
தெருத் தெருவாய் நாம் அலைந்தோம் துர்க்கா போற்றி
தெவிட்டாத அமுதளிப்பாய் துர்க்கா போற்றி
தேடிய செல்வமே துர்க்கா போற்றி
தேவர்கள் போற்றிடும் துர்க்கா போற்றி
தேனினும் இனியவள் துர்க்கா போற்றி
தேடிய தாயானாள் துர்க்கா போற்றி
தேசம் எங்கும் காப்பாய் துர்க்கா போற்றி

அன்பர் உள்ளம் கோயில் கொண்டாய் துர்க்கா போற்றி
அற்புதத்தின் வடிவமே துர்க்கா போற்றி

அடியேனுக்கு அருள் புரிந்தாய் துர்க்கா போற்றி
அன்பின் வடிவமே துர்க்கா போற்றி
அன்னையாக நீ வருவாய் துர்க்கா போற்றி
அறிவின் ஒளியானாய் துர்க்கா போற்றி
அபிராமிப்பட்டருக்கு துர்க்கா போற்றி
அள்ளி அருள் புரிபவளே துர்க்கா போற்றி
ஆனந்த ஜோதியோ துர்க்கா போற்றி

உலகமெங்கும் தாயானாய் துர்க்கா போற்றி
உள்ளத்திலே நீ உறைந்தாய் துர்க்கா போற்றி
உற்றோர் என்னை வெறுத்தாலும் துர்க்கா போற்றி
உன்னடியே நான் மறவேன் துர்க்கா போற்றி
உன்நாம மொழியே துர்க்கா போற்றி
உலகெங்கும் ஒளிரவைப்பேன் துர்க்கா போற்றி
உண்மையின் நிலைதன்னை உணரவைப்பாய் துர்க்கா போற்றி
உலகெங்கும் அறிய வைப்பேன் துர்க்கா போற்றி
உன் பாதம் பணிந்திடுவேன் துர்க்கா போற்றி
கன்னியாய் நின்றாய் துர்க்கா போற்றி
கருணையின் வடிவமே துர்க்கா போற்றி
கலங்கிய நிலை கண்டாய் துர்க்கா போற்றி
கதறிய வேளையிலே துர்க்கா போற்றி
கண்முன்னே வந்தாயே துர்க்கா போற்றி
காரிருள் வேளையிலே துர்க்கா போற்றி
காட்சியும் தந்தாயே துர்க்கா போற்றி
கானகத்தில் வாழ்ந்தாலும் துர்க்கா போற்றி
காலமெல்லாம் உனைமறவேன் துர்க்கா போற்றி

தர்மத்தை காப்பவளே துர்க்கா போற்றி
தத்தளிக்க வைத்தாளே துர்க்கா போற்றி
தயவு புரிந்தாயே துர்க்கா போற்றி
தத்துவங்கள் புரிய வைத்தாய் துர்க்கா போற்றி
தனிமையிலும் வாழ்வளிப்பாய் துர்க்கா போற்றி
தயங்கிய வேளையிலே துர்க்கா போற்றி
தாலி தனைக் தந்தவளே துர்க்கா போற்றி
தாயினும் இனியவளே துர்க்கா போற்றி
தாள் பணிந்து வாழ்வோமே துர்க்கா போற்றி

நித்திய கன்னியே துர்க்கா போற்றி
நிம்மதியை தந்தருள்வாய் துர்க்கா போற்றி
நிழலாய் வந்தருள்வாய் துர்க்கா போற்றி
நின் திருவடியே துர்க்கா போற்றி
நித்தமும் தொழுதிடுவோம் துர்க்கா போற்றி
நீதியின் தாயே துர்க்கா போற்றி
நீயின்றி தாயே வேறில்லை துர்க்கா போற்றி

நீங்காத பற்றுற்றேன் துர்க்கா போற்றி
நீயே என்று என்துணை துர்க்கா போற்றி

முன்னே வந்து காட்சி தந்தாய் துர்க்கா போற்றி
முன்நின்று காப்பவளே துர்க்கா போற்றி
முதுமையின் வடிவமானாய் துர்க்கா போற்றி
முன்னே வந்து காட்சி தந்தாய் துர்க்கா போற்றி
முன்நின்று காப்பவளே துர்க்கா போற்றி
முனிவர்கள் போற்றிடும் துர்க்கா போற்றி
முதுமையிலும் உனை வேண்டிடுவேன் துர்க்கா போற்றி
முத்தமிழ் பாடிடுவேன் துர்க்கா போற்றி
முழு நிலவின் வடிவமே துர்க்கா போற்றி
மூவாம்பிகையே துர்க்கா போற்றி
மூவுலகம் காப்பவளே துர்க்கா போற்றி

பகவதி தேவியே துர்க்கா போற்றி
பசுமைமிகு பதியே துர்க்கா போற்றி
பரந்தாமன் சோதரியே துர்க்கா போற்றி
பகைவரை அழித்தாயே துர்க்கா போற்றி
பாலகன் எமைக்காத்தாய் துர்க்கா போற்றி
பார்வையில் காட்சி தந்தாய் துர்க்கா போற்றி
பாடிட வைத்தாயே துர்க்கா போற்றி
பாவலர்கள் போற்றிடும் துர்க்கா போற்றி
பாதமே சரணடைந்தோம் துர்க்கா போற்றி

மணியின் ஒளியே துர்க்கா போற்றி
மங்கள விளக்கே துர்க்கா போற்றி
மனம் தனைக் காத்தாய் துர்க்கா போற்றி
மணிமுடி கொண்டாய் துர்க்கா போற்றி
மலைமகள் ஆனாய் துர்க்கா போற்றி
மதிமுக அமுதே துர்க்கா போற்றி
மறையாச் செல்வமே துர்க்கா போற்றி
மாங்கல்யம் தந்தாய் துர்க்கா போற்றி
மாறாப் புகழ் தந்தாய் துர்க்கா போற்றி

என்னிலை அறிந்தாய் துர்க்கா போற்றி
எல்லோர்க்கும் தாயானாய் துர்க்கா போற்றி
எம்பயம் நீக்கிடும் துர்க்கா போற்றி
என்நாளும் நாம் மறவோம் துர்க்கா போற்றி
எல்லையில் நடமிடும் துர்க்கா போற்றி
என்நாளும் எமைக்காப்பாய் துர்க்கா போற்றி
ஏழைக்கருள் புரிவாய் துர்க்கா போற்றி
ஏகாந்த நாயகியே துர்க்கா போற்றி
ஏழுலகும் காப்பவளே துர்க்கா போற்றி

சக்தியின் வடிவமே துர்க்கா போற்றி
சடுதியில் அருள்புரிந்தாய் துர்க்கா போற்றி
சஞ்சலங்கள் தீர்த்தாய் துர்க்கா போற்றி
சங்கு சக்கர நாயகியே துர்க்கா போற்றி
சரித்திரம் படைத்தாய் துர்க்கா போற்றி
சகலமும் நீயே துர்க்கா போற்றி
சர்வலோக நாயகியே துர்க்கா போற்றி
சரணம் சரணம் துர்க்கா போற்றி
சாந்தியை தந்தருள்வாய் துர்க்கா போற்றி

அருள்மிகு துர்க்கைத் தாயார் உலகெங்கும் சாந்தியையும், சமாதானத்தையும் அவளது திருநாமங்களையும் திருக்காட்சியையும் செல்வத்தையும் நீதியையும் வெற்றியையும் தந்தருள அவள் திருவடிவங்களை எந்நாளும் சரணம் சரணம் சரணம் தாயே அம்மா. துர்க்கைத் தாயே இங்கிருந்து எமைக்காப்பது போல் அனைத்து உயிர்களையும் காத்தருள்வாய் தாயே ஓம் சக்தி தாயே ஓம் சாந்தி சாந்தி சாந்தி தருவாய் தாயே.

## மட்டுவில் கண்ணகை அம்மன்

நாம் மட்டுவிலில் இடம் பெயர்ந்து இருந்தபோது மக்கள்படும் துயர நிலையைக் கண்டு கண்ணகி அம்பாளை வேண்டி வழிபட்டுக் கொண்டிருந்த போது 1995.12.03 அன்றைய தினம் என் சிந்தையிலே தோன்றப்பட்ட இப்பாடல் அனைத்து மக்களின் வாழ்வின் துயர நிலையை நீக்கிட வேண்டி இயற்றப்பட்ட துதிப்பாடல்.

### துதி

ராகம் :- சுபந்துவராளி

மட்டுநகர் வீதியிலே கண்ணகி அம்மா
மக்கள் துயர் போக்கிட நீ ஓடிவாம்மா
எத்தனையோ துயரினிலே வாடுகின்றோமே
அத்தனையும் போக்கிட நீ ஓடிவாம்மா (மட்டுநகர்.....)
சொத்து இழந்தோம் சுகம் இழந்தோம்
சொந்தங்களை நாம் பிரிந்தோம்
எத்தனையோ இடரினிலே உயிர்களை நாம் இழந்தோம்
இன்னும் இடர் வந்திடுமோ எம்மை நீயும் காத்திடம்மா
எங்கள் அம்மா கண்ணகியே எம் தாயும்
நீ அல்லவோ (மட்டுநகர்.....)
பஞ்சம் பசி வந்திடினும் பார்த்திடல் சரியோ அம்மா
பரிதவிக்கும் மக்கள் துயர் தீர்த்தி வந்திடம்மா
நெஞ்சம் இன்னும் துடிக்குதம்மா சிந்தை தடுமாறுதம்மா
நிம்மதியைத் தந்தருள்வாய் நீயே எங்கள்
கண்ணகியே (மட்டுநகர்.....)
கையிழந்து கால் இழந்து கண் இழந்து மனம் இழந்து
கன்னியர்கள் வாழ்விழந்து வாழ்வது அம்மா
உந்தன் நெஞ்சம் இரங்கிடனும் எங்கும் இன்பம் விளங்கிடனும்
நீயே எங்கள் கண்ணகியே நிம்மதியைத் (மட்டுநகர்.....)

அருள்மிகு கண்ணகித் தாயாரின் கள்ளம் அற்ற இன்பம் பெற்ற அடியேன் மக்கள் துயர் நீக்கிட வேண்டி கண்ணகித் தாயாரின் பாதங்களை வேண்டி வழிபட்ட வேளையில் இரண்டாவது பாமாலையாக மட்டுநகர் பதியுறைந்த கண்ணகியம்மா என்ற பாமாலை 1996ஆம் ஆண்டு அம்பிகையின் தேர் உற்சவ நாளில் பாடி மகிழ்வு பெற்ற இத்துதி அடியார்களுக்கு சமர்ப்பணம்.

கண்ணகை அம்மன்

ராகம் :- நவரோஸ்

மட்டுவில் பதியுறைந்தாய் கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
மக்கள் துயர் தீர்த்தருள்வாய் கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
அன்னையாக நீ வருவாய் கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
அணைத்தெடுத்து காத்தருள்வாய் கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
வயல் வெளிகளைக் கொண்டவளே கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
வறுமைதனை நீக்கிடம்மா கண்ணகை அம்மா அம்மா கண்ணகி அம்மா
மழைதனைப் பொழிந்திடுவாய் கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
மந்தநிலை தீர்த்தருள்வாய் கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
உடுக்கோசை கேட்டுதென்னா கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
உருவெடுத்து தான் வருவா கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
நத்தனங்கள் ஆடிவரும் கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
நல்லருளைத் தந்திடம்மா கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
மதுரை நகர் நீ எரித்தாய் கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
மதியுகத்தால் வெற்றி கொண்டாய் கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
பக்கம் எங்கும் ஓல ஒலி கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
பறந்தோடி வந்தருள்வாய் கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
சூலம் எடுத்தவளே கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
சூழ்நிலையை மாற்றிடம்மா கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
கள்ளம் அற்ற அன்பு கொண்டாய் கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
கன்னியரைக் காத்தருள்வாய் கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
புத்தி தடுமாறுதம்மா கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
புதுமை ஒன்றைக் காட்டிடம்மா கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
தத்துவங்கள் பொய் என்றோ கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
தர்மம் என்றும் தோற்றதுண்டோ கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
கத்திதனைத் தான் எடுத்தோ கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
கதிகலங்க வைத்திடுவாய் கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
சித்தம் தெளிய வைப்பாய் கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
சிந்தையிலே தான் வருவாய் கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
பக்தர் உமை வேண்டுகின்றோம் கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
பக்கத்துணை நீ வருவாய் கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
எம் மனதில் நீ இருக்க கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
எமக்கென்றும் பயம் எதற்கு கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
எந்த நிலை வந்தாலும் கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா

எம்மை என்றும் காத்தருள்வாய் கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
சரணம், சரணம் அம்மா கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா
உன் பாதம் சரணம் அம்மா கண்ணகி அம்மா அம்மா கண்ணகி அம்மா

உ

தேவி துணை

நான் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து மட்டுவிலில் வாழ்ந்த காலத்தில் சோலைப்பதி அம்மனை வழிபட்டு வந்தவேளையில் 01.03.1996 வெள்ளிக்கிழமை இரவு சோலையம்மன் கனவில் காட்சி தந்த அவ்வேளையில் இயற்றப்பட்ட இப்பாடல் அனைத்து மக்களின் விடிவிற்காக வேண்டிப் பாடப்பட்டது.

சோலைப்பதிதனிலே சொந்தங்கள் இன்றி துதித்த அந்நாளில் கதிரவன் ஒளியினிலே தந்த காட்சியின் வடிவத்தை இப்பாமாலை மூலமாக அடியார்களுக்கு சமர்ப்பணம்.

## சோலைப்பதி சக்தி தாயே துதி

ராகம் :- நவரோஸ்

சோலைப்பதி வாழுகின்ற சக்தி தாயே அம்மா சக்தி தாயே
சொந்தம் இன்றி வாழுகின்றோம் சக்தி தாயே அம்மா சக்தி தாயே
பரமசிவன் பார்வதியே சக்தி தாயே அம்மா சக்தி தாயே
பழனி மலை முருகனுக்கு சக்தி தாயே அம்மா சக்தி தாயே
புவனமுழு சுந்தரியே சக்தி தாயே அம்மா சக்தி தாயே
புவி ஆளும் நாயகியே சக்தி தாயே அம்மா சக்தி தாயே
சிவனாரின் ஆட்டத்திலே சக்தி தாயே அம்மா சக்தி தாயே
சிவநடனம் ஆடிவந்தாய் சக்தி தாயே அம்மா சக்தி தாயே

(சோலைப்பதி.....)

நாடு இழந்தோம் நகர் இழந்தோம் சக்தி தாயே அம்மா சக்தி தாயே
நாயாக நாம் அலைந்தோம் சக்தி தாயே அம்மா சக்தி தாயே
பக்தர் இங்கு பாடுகின்றோம் சக்தி தாயே அம்மா சக்தி தாயே
பறந்தோடி வந்தருள்வாய் சக்தி தாயே அம்மா சக்தி தாயே
வஞ்சம் அற்ற பிள்ளைகள் நாம் சக்தி தாயே அம்மா சக்தி தாயே
வாடி இங்கு நிற்கின்றோமே சக்தி தாயே அம்மா சக்தி தாயே
செந்தமிழைக் காத்தருள்வாய் சக்தி தாயே அம்மா சக்தி தாயே
செய்வதொன்று அறியோமே சக்தி தாயே அம்மா சக்தி தாயே
சூலம் எடுத்தவளே சக்தி தாயே அம்மா சக்தி தாயே
சூழ்நிலையை மாற்றிடம்மா சக்தி தாயே அம்மா சக்தி தாயே
சரணம் சரணம் அம்மா சக்தி தாயே அம்மா சக்தி தாயே
சரணடைந்தோம் உம்மிடமே சக்த தாயே அம்மா சக்தி தாயே
உலகத்து நாயகியே சக்தி தாயே அம்மா சக்தி தாயே
உன்பாதம் சரணம் அம்மா சக்தி தாயே அம்மா சக்தி தாயே
உன் பாதம் சரணம் அம்மா சக்தி தாயே அம்மா சக்தி தாயே
உன் பாதம் சரணம் அம்மா சக்தி தாயே அம்மா சக்தி தாயே

## மல்லாகம் முதலித்தாயார் வீரமகாகாளி

ராகம் :- பீம்பிறாஸ்

மல்லாகப் பதிதனிலே ஆலுடன் இணையப்பெற்று அழகுற அருள்புரியும் முதலியத்தாயார் அடியேன் அவள் ஆலயத்தில் அடியெடுத்து வைத்ததும் சிந்தையெல்லாம் புகுந்து சிறு கவிஞானம் தந்திட்ட இன்பநாமம் சமர்ப்பணம்.

### துதி

அன்புருவாய் வந்திடம்மா வீரமகா காளி
அன்னையாக நீ வருவாய் வீரமகா காளி
வெண்ணீறு துலங்கிடவே வீரமகா காளி
வெற்றிதனைத் தந்திடம்மா வீரமகா காளி
கற்பூர ஒளியினிலே வீமகா காளி
கருணை முகம் காட்டிடம்மா வீரமகா காளி
எந்தன் முன்னே வந்திடம்மா வீரமகா காளி
என் நிலையைக் கூறிடம்மா வீரமகா காளி
வேப்பிலையைத் தான் எடுத்தே வீரமகா காளி
வேதனையைத் தீர்த்தருள்வாய் வீரமகா காளி (அன்புருவாய்.....)

கொடுவாளை நீ எடுத்தே வீரமகா காளி
கொள்ளையரைத் தாக்கிடம்மா வீரமகா காளி
குண்டு மழை பொழிகிறதே வீரமகா காளி
குவலயமே அதிருதம்மா வீரமகா காளி
இந்த நிலை மாற்றுதற்கு வீரமகா காளி
இன்னும் என்ன தாமதமோ வீரமகா காளி
புலியினிலே நீ வருவாய் வீரமகா காளி
புவி அனைத்தும் காத்தருள்வாய் வீரமகா காளி
ஈசன் துணையுடனே வீரமகா காளி
ஈழ மண்ணைக் காத்தருள் (அன்புருவாய்.....)

சிவகலையைக் கொண்டவளே வீரமகா காளி
சிந்தையிலே வந்ததுவே வீரமகா காளி
சிறுகவிதை தந்திடுவேன் வீரமகா காளி
சக்திதனைத் தந்தருள்வாய் வீரமகா காளி
சரணம் சரணம் அம்மா வீரமகா காளி
சரண அடைந்தோம் உன் பாதம் வீரமகா காளி
சரண் அடைந்தோம் உன் பாதம் வீரமகா காளி
சரண் அடைந்தோம் உன் பாதம் வீரமகா காளி (அன்புருவாய்.....)

## அருள்மிகு தெல்லிநகர் காளித்தாய்

அற்புத விந்தை புரியும் அருள்மிகு காளித்தாயாம் கற்கும் நிலையறியாது

கபடம் இன்றி வாழ்ந்த காளிதாசன் அவன் நாவிலே வரமளித்த காளித்தாயார் மன்னர் சபையிலே மதிகொண்ட புலவர்கள் மக்கள் சபை நடுவே புகழ்ந்திடும் நிலை கண்டு மதிமுக அழகென்று அருள்மிகு ஒளி கொடுத்து அருட்கவி பாட வைத்து மன்னர் சபையில் மதிகொண்ட புலவர்களை மதிகெட்டு ஓடவைத்து மகாகவி காளிதாசன் என்று புகளாரம் சூட்டி வைத்த காளித்தாயார் சின்னஞ்சிறு அடியேன் சீர்கெட்டு மக்களோடு, மக்களாக சிதறி ஓடிய 1995 ஐப்பசி மாதம் 30ம் திகதி சாவகச்சேரி என்னும் ஊரடைந்து வாழ்ந்தவேளை தரிசிக்க ஆலயம் ஒன்று தேடி கதி கெட்டு நின்ற வேளை கருணைக்கு ஒரு தாயென்று காளித்தாயின வாசலை நாடினேன். கள்ளம் கபடமின்றி கருத்து நிலை தந்தாள். சீர்நிலை கண்டு வாழ்ந்த ஊர் வந்து சேர்ந்த இந்நாளில் சிந்தை மறவாது சிவகாளியவள் நாமம் பாடிட வேண்டி அடியேன் கண்முன்னே அற்புதங்கள் காட்டி அன்று கண்ட காளி இவள் இன்றிங்கிருப்பது அறியாயோ? தெல்லிநகர் பதியுறைந்து தேடும் அடியவர் இன்றி காடு சூழ்ந்திருக்கும் கருணைமிகு காளியிவள். கற்றிடும் ஏடு தந்த கல்லூரி அருகமைந்து காணப்பெறும் காளி இவள் காரிருள் வேளையில் கலிநடம் கொண்டு நீறிடும் அடியேன் முன் நித்தம் நடம் புரிந்தாள். மாயம் அறியா மானிடன் இவன் கையால் மதி நிலா முகமன்று மாறிலா ஜோதி தீபம் ஏற்றென்றாள். அந்தணர் வீடு சென்று அந்நிலைை கூறவே அவரும் அருள் வேண்டி என்று அப்பணி செய்திடுவாய் என்றுரைத்தார். அக்கணமே அவள் பணி செய்து அருள் ஜோதி ஏற்றி வைத்தேன். அடியேன் சிந்தையிலே அவள் அளித்த அருள் நாமம் அன்பு கொண்ட அடியவர்களுக்கு இன்பரசமாக சமர்ப்பணம்.

## சாவகச்சேரி காளி தெல்லிப்பழை இணையப் பெற்ற காளி

விருத்தம்

காளி அம்மா கருமாரி அம்மா
கருணைக் கண்ணால் பாருமம்மா
கண்மணி போல் எம்முயிரை காத்தருள்வாய் எங்கள் காளியம்மா

துதி

ராகம் :- புன்நகவராளி

காளி அம்மா மகா காளி அம்மா
எங்கள் மக்கள் துயர் தீர்த்தருள்வாய் காளி அம்மா
சூலம் எடுத்தவளே காளி அம்மா
எங்கள் சுற்றந்தனைக் காத்தருள்வாய் காளி அம்மா
வேப்பிலையைக் கை பிடித்தாய் காளி அம்மா
எங்கள் வேதனைகள் தீர்த்தருள்வாய் காளி அம்மா
பக்தர் உமை வேண்டுகின்றோம் காளி அம்மா
எங்கள் பாவவினை தீர்த்தருள்வாய் காளி அம்மா
கன்னியர்கள் கலங்குகின்றார் காளி அம்மா
அவர் கண்ணீரைத் துடைத்தருள்வாய் காளி அம்மா
ஆங்கார சக்தி கொண்டாய் காளி அம்மா
எங்கள் அண்டம் எல்லாம் காத்தருள்வாய் காளி அம்மா
ஓங்கார சக்தி கொண்டாய் காளி அம்மா

எங்கள் ஓசையிலே நீ வருவாய் காளி அம்மா
செங்கதிராய் நீ வருவாய் காளி அம்மா
எங்கள் செந்தமிழைக் காத்தருள்வாய் காளி அம்மா
மலைமகளாய் நீ இருந்தாய் காளி அம்மா
எங்கள் சிந்தை எல்லாம் நீ நிறைந்தாய் காளி அம்மா
சாவகச்சேரியிலே காளி அம்மா
உந்தன் பாதமலர் சரணடைந்தோம் காளி அம்மா
உந்தன் பாதமலர் சரணடைந்தோம் காளி அம்மா
உந்தன் பாதமலர் சரணடைந்தோம் காளி அம்மா
உந்தன் ஆலயத்தில் சரணடைந்தோம் காளி அம்மா
தெல்லிநகர் பதிதனிலே காளி அம்மா
உந்தன் திருக்காட்சி நீ தந்தாய் காளி அம்மா
சரணம் சரணம் அம்மா காளி அம்மா
உந்தன் பாதமலர் சரணடைந்தோம் காளி அம்மா

உ

## சாவகச்சேரி கருமாரி அம்மன்

கருநாகமாக காரிருள் வேளையில் கனவில் காட்சி தந்து நாகதேவி நானென்று நல்லதோர் நாமந்தனை நாடியே பாடிடுவாய் என்று உரைத்த கருமாரி அம்மனவள் கள்ளமற்ற நெஞ்சம் தனிலே கருத்துற தந்திட்ட நாமமிது அடியார்களுக்கு சமர்ப்பணம்.

காத்தவராயன் மெட்டு

துதி

கருநாக வேடம் கொண்டாய் எங்கள் அம்மன் தாயே
நீயும் காரிருளில் காட்சி தந்தாய் எங்கள் அம்மன் தாயே
நெஞ்சம் துடிக்குதடி எங்கள் அம்மன் தாயே
உந்தன் வடிவழகைக் காட்டேனம்மா எங்கள் அம்மன் தாயே
சொல்ல முடியவில்லை எங்கள் அம்மன் தாயே
எங்கள் சோகக் கதைகளைத் தான் எங்கள் அம்மன் தாயே
பிஞ்சுக் குழந்தைகள் நாம் எங்கள் அம்மன் தாயே
நாமும் அஞ்சி நடுங்குகின்றோம் எங்கள் அம்மன் தாயே
கஞ்சிக்கும் வழியில்லையே எங்கள் அம்மன் தாயே
எம்மை காத்தருள வாவேனம்மா எங்கள் அம்மன் தாயே
பஞ்சம் பொறுக்கலையே எங்கள் அம்மன் தாயே
இந்த பாவிகளைக் காத்திடம்மா எங்கள் அம்மன் தாயே
கன்னியர்கள் கதறுகின்றார் எங்கள் அம்மன் தாயே
உந்தன் காதில் ஓசை கேட்கவில்லையோ எங்கள் அம்மன் தாயே
யாழ் பாடும் நகரினிலே எங்கள் அம்மன் தாயே
எங்கள் ஆலயத்தில் பூஷையில்லை எங்கள் அம்மன் தாயே
வஞ்சகர்கள் வாழுகின்றார் எங்கள் அம்மன் தாயே
அந்த வஞ்சகரை ஒழித்திடம்மா எங்கள் அம்மன் தாயே

தங்கை கலங்குகின்றாள் எங்கள் அம்மன் தாயே
எங்கள் தாரணியே காத்தருள்வாய் எங்கள் அம்மன் தாயே
விடிவிற்கோர் எல்லையுண்டோ எங்கள் அம்மன் தாயே
உந்தன் விந்தை தனைக் காட்டிடம்மா எங்கள் அம்மன் தாயே
சாவகச்சேரியிலே எங்கள் அம்மன் தாயே
உன்னை தஞ்சம் என நான் அடைந்தேன் எங்கள் அம்மன் தாயே
நாகம் குடை பிடிக்க எங்கள் அம்மன் தாயே
உனக்கு நல்லநாகம் தாலாட்ட எங்கள் அம்மன் தாயே
ஐந்து தலை நாகம் எல்லோ எங்கள் அம்மன் தாயே
உனக்கு ஆதரவாய்த் தாலாட்ட எங்கள் அம்மன் தாயே
நெஞ்சினிலே நீ நிறைந்தாய் எங்கள் அம்மன் தாயே
உந்தன் நேசக் கரம் நீட்டிடடி எங்கள் அம்மன் தாயே
சரணம், சரணம், அம்மா எங்கள் அம்மன் தாயே
உந்தன் சக்தி தனைத் தந்தருள்வாய் எங்கள் அம்மன் தாயே
உலகாளும் நாயகியே எங்கள் அம்மன் தாயே
உந்தன் பாதமலர் சரணம் அம்மா எங்கள் அம்மன் தாயே

உ

அளவையூர் தவளக்கிரி முத்துமாரி அம்மன்

முத்தாரம் தரவல்ல முத்துமாரியிவள் தத்துவ வளிவந்த தவளக்கிரி முத்துமாரி இவள். தத்துவ வளிவந்த தவக்குல நிலையளியாது சித்தர்கள் போற்றிப் பாடிட சிவதவம் புரிந்திட்ட தத்துவமாரி இவள். மக்களின் துயர் தாங்காது மாறுவேடம் கொண்டு சென்ற இவள் சிவன் பாதம் வேண்டி கண்டாசுர மாலைகளை கடும் தவத்தால் பெற்ற நல் குடுகுடு கூனல் கிழவியாய் கும்மிருள் வேளையிலே குடிமகன் வீடு நாடி குடிநீர் கேட்ட நள்ளிருள் வேளையில் நடுநடுங்கி விழித்தெழ நயம்பட உரைத்தவள். முத்தார நிலை கொண்டு முழுமதித் திங்கள் திகழ்ந்திடும் மாரி இவள் தித்திக்கும் தேனாக தில்லையில் நடமிடும் தாய் இவள். திரிபுரசுந்தரியாய் திருநாமம் மகிழ்ந்திட பக்தர் நாவுக்கோர் பாலமுதம் இதுவென்று பரிகிடும் நாம இன்பரசம் சமர்ப்பணம்.

தேவி துணை

## அளவைப்பதி உறைந்த மாரி அம்மன்

## காத்தவராயன் மெட்டு

## துதி

முத்து முத்தாய் முகத்தோரம்
அம்மா முகத்தினிலே புன் சிரிப்பு
பக்க மெங்கும் பாவவினை
அம்மா பரப்பியவள் நீயல்லவோ
பாத்திரத்தை கையெடுத்து
அம்மா பாவவினை நீக்கிடம்மா
இந்த ஏழைகளைக் காத்திட வந்திடம்மா
எங்கள் முத்துமாரி அம்மா

பாடல்

| | |
|---|---|
| பக்திகொண்டு பாடுகின்றோம் எங்க | முத்துமாரி அம்மன் |
| அம்மா பாவினை நீக்கிடம்மா எங்க | முத்துமாரி அம்மன் |
| பக்தர் இங்கே வாடுகின்றார் எங்க | முத்துமாரி அம்மன் |
| அம்மா பார்த்துருகி வாவேனம்மா எங்க | முத்துமாரி அம்மன் |
| தஞ்சம் என நாம் அடைந்தோம் எங்க | முத்துமாரி அம்மன் |
| அம்மா தாரணியே காரணியே எங்க | முத்துமாரி அம்மன் |
| சிந்தை துடிக்குதடி எங்க | முத்துமாரி அம்மன் |
| அம்மா சிந்தையிலே தான் வருவாய் எங்க | முத்துமாரி அம்மன் |
| சின்னக் குழந்தைகள் நாம் எங்க | முத்துமாரி அம்மன் |
| அம்மா சீக்கிரமாய் வாவேனம்மா எங்க | முத்துமாரி அம்மன் |
| உடுக்கோசை கேட்டுதென்னா எங்க | முத்துமாரி அம்மன் |
| அம்மா உல்லாசமாயத்தான் வருவா எங்க | முத்துமாரி அம்மன் |
| வெள்ளைத்துயில் உடுத்து எங்க | முத்துமாரி அம்மன் |
| அம்மா வெண்ணீறுதான் அணிந்தா எங்க | முத்துமாரி அம்மன் |
| வேப்பிலையைத்தான் எடுத்தோ எங்க | முத்துமாரி அம்மன் |
| அம்மா வேகமாகத்தான் வாறா எங்க | முத்துமாரி அம்மன் |
| துன்பநிலை போக்கிடத்தான் எங்க | முத்துமாரி அம்மன் |
| அம்மா துணையாகத்தான் வாறா எங்க | முத்துமாரி அம்மன் |
| தூயமனம் கொண்டவளே எங்க | முத்துமாரி அம்மன் |
| அம்மா தூரதேசம் கொண்டவளே எங்க | முத்துமாரி அம்மன் |
| மலையாள தேசம் எல்லோ எங்க | முத்துமாரி அம்மன் |
| அம்மா மலையேறத்தானன் வாறா எங்க | முத்துமாரி அம்மன் |
| கையிலே பிரம் எடுத்தா எங்க | முத்துமாரி அம்மன் |
| அம்மா கையிலைக்குத்தான் நடந்தா எங்க | முத்துமாரி அம்மன் |
| சந்தனப் பொய்கையிலே எங்க | முத்துமாரி அம்மன் |
| அம்மா சதுராடித்தான் வாறா எங்க | முத்துமாரி அம்மன் |
| கூனல் கிழவி அம்மா எங்க | முத்துமாரி அம்மன் |
| அம்மா குடு குடு என்றுதான் வாறா எங்க | முத்துமாரி அம்மன் |
| கூதல் எமக்குதடி எங்க | முத்துமாரி அம்மன் |
| அம்மா கும்மிருட்டில்தான் வாறா எங்க | முத்துமாரி அம்மன் |
| தாகம் எடுக்குதடி எங்க | முத்துமாரி அம்மன் |
| அம்மா தள்ளாடித்தான் வாறா எங்க | முத்துமாரி அம்மன் |
| வாசல் தடுக்குதடி எங்க | முத்துமாரி அம்மன் |
| அம்மா வந்துதவி செய்யேனம்மா எங்க | முத்துமாரி அம்மன் |
| சாவுக்கு அஞ்சுகின்றோம் எங்க | முத்துமாரி அம்மன் |
| அம்மா சஞ்சலம்தான் கொல்லுதடி எங்க | முத்துமாரி அம்மன் |
| நெஞ்சு துடிக்குதடி எங்க | முத்துமாரி அம்மன் |
| அம்மா நெஞ்சினிலே நீ நிறைந்தாய் எங்க | முத்துமாரி அம்மன் |
| முத்தான முத்தல்லவோ எங்க | முத்துமாரி அம்மன் |
| அம்மா முன் நின்று காத்திடம்மா எங்க | முத்துமாரி அம்மன் |

சரணம் சரணம் அம்மா எங்க முத்துமாரி அம்மன்
அம்மா உன்பாதம் சரணடைந்தோம் எங்க முத்துமாரி அம்மன்
அம்மா உன்பாதம் சரணடைந்தோம் எங்க முத்துமாரி அம்மன்
அம்மா உன்பாதம் சரணடைந்தோம் எங்க முத்துமாரி அம்மன்

உ

தேவி துணை

## தாலாட்டுப் பாடல்

அளவைப்பதி உறைந்த மாரியம்மா
அல்லலுற்று நாம் அலைந்தோம் மாரியம்மா
எமை காப்பாய் மாரியம்மா.

ராகம் :- புன்னகவராளி

## துதி

திங்களில் திகழ்பவள் மாரியம்மா
தித்திக்கும் தேன் அமுதம் மாரியம்மா
தில்லையில் நடம் இடம் மாரியம்மா
திரிபுர சுந்தரியே பாருமம்மா (திங்களில்.....)

அளவைப் பதிதனில் உறைந்தவளே
ஆஸ்தான மாரியும் நீயே அம்மா
அல்லல் உற்று நாம் அலைந்தோம் மாரியம்மா
ஆதரவை தந்தருள்வாய் மாரியம்மா (திங்களில்.....)

கண்ணனின் சோதரியே மாரியம்மா
கருணை உள்ள தாயாரே மாரியம்மா
கானகத்தில் நாம் அலைந்தோமம் மாரியம்மா
காத்திடவே வந்தருள்வாய் மாரியம்மா (திங்களில்.....)

சிவ தவம் கொண்டவளே மாரியம்மா
சீரளியும் மக்கள் தனைக் காருமம்மா
சின்னக் குழந்தைகள் நாம் மாரியம்மா
சீக்கிரமே வந்தெம்மைக் காருமம்மா (திங்களில்.....)

கண்ட சுரமாலை தனை மாரியம்மா
கடும் தவத்தால் நீ பெற்றாய் மாரியம்மா
கள்ளம் அற்ற அன்பு கொண்டோம் மாரியம்மா
கணப் பொழுதில் காத்தருள்வாய் மாரயம்மா (திங்களில்.....)

மாயரூபம் கொண்டெல்லோ மாரியம்மா
மாலை தனை நீ பெற்றாய் மாரியம்மா
மக்கள் உமை வேண்டுகின்றோம் மாரியம்மா
மானம் தனைக் காத்தருள்வாய் மாரியம்மா

(திங்களில்.....)

சரணம் சரணம் மாரியம்மா
சாந்தி நிலை தந்தருள்வாய் மாரியம்மா

உ
தேவி துணை
## நயினை நாகபூசணி அம்மன்

அருள்மிகு நயினைப் பதியுறைந்த நாகபூசணி அம்பாள் நல்லோர் உள்ளங்களில் நடனம் புரிவதில் வல்லவள். 1997 ஆனி மாதம் கட்டப்பிராயில் அமையப்பெற்ற அருள்மிகு முத்துமாரி தாயாரின் தேர்த் திருநாளான அன்றைய தின் தேர்முட்டிக்கருகிலே பஜனை பாடிக்கொண்டிருந்த வேளை திடீரென சிந்தையிலே அருள்மிகு நயினை நாகதாயாரின் தேர்த்திருவிழாவும் இன்று என்று உணரப்பெற்ற நான் அவ்விடத்தே தாயாரைத் தியானித்தவாறு இருந்தவேளை சிந்தையிலே அருளப் பெற்ற இத்திருநாமம் என அருகில் இருந்த பக்தர்கள் அனைவரையும் திகிலடையவைத்து பக்தியுடன் பஜனை பாடிய அடியவர்கள் மெய்மறந்து நயினை நாகபூசணித் தாயை வேண்டிநின்றார்கள். அன்று கண்மமமமம காட்சிகள் யாவும் கண்முன்ன அழியாக் காட்சியாக என் உள்ளத்தில் உள்ளன. இத்தகைய நிலைதந்த இந்நாமம் அனைத்து அடியவர்களின் உள்ளங்கங்ளிலும் இன்பம் கொள்ள நாம் இன்பரசமாக சமர்ப்பணம்.

மெட்டு :- காத்தவராயன்

### துதி

நாகம்மாளே அம்மா நாகம்மாளே
நயினை நகர் நீ அமர்ந்தாய் நாகம்மாளே
நடுக்கடலைத் தாண்டிடம்மா நாகம்மாளே
நம்முன்னே வந்திடம்மா நாம்மாளே

(நாகம்மாளே.....)

எத்தனையோ நேர்த்தி வைத்தோம் நாகம்மாளே
எம்மாலே முடியவில்லை நாகம்மாளே
எத்தனையோ காலம் அம்மா நாகம்மாளே
எம் முன்னே வந்திடம்மா நாகம்மாளே

(நாகம்மாளே.....)

வஞ்சகர்கள் வாழுகின்றார் நாகம்மாளே
வருவதற்கோ அஞ்சுகின்றோம் நாகம்மாளே
வருந்தி நாம் அழைக்கின்றோம் நாகம்மாளே
வந்திடம்மா எம் முன்னே நாகம்மாளே

(நாகம்மாளே.....)

பக்தர் உம்மை வேண்டுகின்றோம் நாகம்மாளே
பக்கத் துணை வந்திடம்மா நாகம்மாளே
பஞ்சம் இங்கே கூடுதம்மா நாகம்மாளே
பறந்தோடி வந்திடம்மா நாகம்மாளே (நாகம்மாளே.....)

மண் இழந்தோம் மனை இழந்தோம் நாகம்மாளே
மக்களையும் நாம் பிரிந்தோம் நாகம்மாளே
மந்தைகளை நாம் இழந்தோம் நாகம்மாளே
மனம் இன்னும் இரங்கவில்லையோ நாகம்மாளே (நாகம்மாளே.....)

சீரணியில் நீ இருந்தோ நாகம்மாளே
சீக்கிரமாய் வந்திடம்மா நாகம்மாளே
சிந்தையிலே வந்தவளே நாகம்மாளே
சீர் நிலையைத் தந்திடம்மா நாகம்மாளே (நாகம்மாளே.....)

கெஞ்சி நாம் பாடுகின்றோம் நாகம்மாளே
கேக்கலையோ உன்செவிக்கு நாகம்மாளே
கேது ரூபம் கொண்டவளே நாகம்மாளே
கேட்ட வரம் தந்திடம்மா நாகம்மாளே (நாகம்மாளே.....)

அத்தி மரம் அமர்ந்தவளே நாகம்மாளே
அல்லல் தனைத் தீர்த்திடம்மா நாகம்மாளே
அஞ்சி நாம் வாழுகின்றோம் நாகம்மாளே
அருகிருந்து காத்திடம்மா நாகம்மாளே (நாகம்மாளே.....)

பரமசிவன் கழுத்தினிலே நாகம்மாளே
பாம்பு மலையாய் அமர்ந்தாய் நாகம்மாளே
பரந்தாமன் வாசலிலே நாகம்மாளே
பாம்பணையாய் நீ இருந்தாய் நாகம்மாளே (நாகம்மாளே.....)

ஐந்து தலை நாகம் அல்லோ நாகம்மாளே
ஐயம் தனை நீக்கிடம்மா நாகம்மாளே
ஐந்து கரகம் கொண்டவளே நாகம்மாளே
ஐம்புலனும் அடக்கிடுவாய் நாகம்மாளே (நாகம்மாளே.....)

ஆதிசிவன் ஆணையிட்டான் நாகம்மாளே
ஆறுதலைத் தருவாயோ நாகம்மாளே
ஆற்றல் மிகு தெய்வம் எல்லோ நாகம்மாளே
ஆரையும் அஞ்ச வைப்பாளே நாகம்மாளே (நாகம்மாளே.....)

சீறி எழும் நாகம் எல்லோ நாகம்மாளே
சிறியேனை ஆண்டு கொள்வாய் நாகம்மாளே
சித்தரித்து வடிவழகி நாகம்மாளே
சிவனார்க்கு துணைவி எல்லோ நாகம்மாளே (நாகம்மாளே.....)

உலகத்து நாயகியே நாகம்மாளே
உன்னடியே நாடி வந்தோம் நாகம்மாளே

உற்ற துணை யாருமில்லை நாகம்மாளே
உன் பாதம் சரணடைந்தோம் நாகம்மாளே
சரணம் சரணம் அம்மா நாகம்மாளே
சக்தி பாதம் துணை நீயே நாகம்மாளே
சக்தி பாதம் துணை நீயே நாகம்மாளே
சக்தி பாதம் துணை நீயே நாகம்மாளே (நாகம்மாளே.....)

உ

## நயினை நாகபூசணி அம்மன்

அருள்மிகு நயினை நாகபூசணித் தாயாரின் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று. 1998 ஆனி மாதத்தில் வரும் தேர் உற்ஷவத்தை தரிசிப்பதற்கு குடும்ப சமேதர்களாக சப்பறத் திருநாளன்று தாயாரின் சப்பறம் இழுக்கப்பட்டபோது அவற்றுடன் பின் சென்று முன் சிந்தனையில் அருளைப் பெற்ற நாமத்தை பஜனை பாடி முடித்துவிட்டு தேர்முட்டிக்கருகேயுள்ள வேப்பமரத்தின் கீழ் இருந்து அம்பிகையின் கடற்பரப்பை நோக்கி சிந்தித்தவாறு சிந்தையில் மூழ்கினேன். அவ்வேளை என் உள்ளத்தில் எழுந்த கற்பனை அலைகள் கடல் கடந்து அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியவர்களின் உள்ளத்து நிலைமையையும் அம்பிகையாள் அவர்கள் மீது காட்டும் அருள்பற்றின் உணர்வையும் அதிகாலையிலே அம்பாள் தேர்மீது அமர்ந்து ஆரோகணித்து வரும் காட்சியையும் கண்ணின் முன் உணரப்பெற்று அக்கணமே அவ்விடத்தில் தியானித்தவாறு அவள் பாத்தை வேண்டியவாறு பாடினேன். இவ்நாமம் காலையிலே பஜனை பாடி மகிழ்வுற வைத்த தாயின் அற்புத திருவிளையாடலே அன்றி எனது செயலல்ல என்று உணரப் பெற்ற இச்சிறு அடியேனின் உள்ளத்தின் இன்பம் தந்த நாகதேவி நாமரசம் அடியவர்களுக்கு சமர்ப்பணம்.

விருத்தம்

கடல் கடந்து எழுந்தருளி
எங்கள் நாகபூசணி அம்பிகையே
உமதருள் வேண்டியே
நாம் இங்கு பாடுகின்றோம் - தாயே
உன் திரு அடியினை நாம் வேண்டுகின்றோம் தாயே

பாடல்

ராகம் :- சுபபந்துவராளி

நயினா தீவில் எழுந்தருளிய
எங்கள் அம்பிகையே
நாளும் உனை வேண்டுகின்றோம்
எங்கள் அம்பிகையே
சிந்தனையும் வந்தனையும் எங்குள்ளதோ
செந்ததிருவாய் வந்தருள்வாய் எம் தாயே (நயினா.....)

கடல் கடந்து படகில் வரும்
பக்தர் நெஞ்சில் பவனி வரும் அம்பிகையே

கதறி மனம் கலங்கிடவே
கடல் தனிலே துணை வருவாய் அம்பிகையே
அருள் தனை வேண்டியே அடியவர் வருகையில்
அலை தனை நீக்கியே துணை வருவாய் அம்பிகையே (நயினா.....)

சித்திரத் தேரினில் நீ வருவாய்
சிந்தை கலையாது நாம் வரவே
செங்கதிரோன் ஒளிதரவும்
செந்துருவாய் வருபவளே நம் தாயே
பக்தர் கோடி பாடிவர
பரவசம் உடனே நீ வருவாய் அம்பிகையே

உ

தேவி துணை

## நந்தாவில் பதி உறைந்த மனோன் மணித்தாய்

அருள்மிகு நந்தாவில் பதி உறைந்திட்ட மனோன்மமணி அம்பிகையானவள் கோண்டாவிலில் இடம்பெயர்ந்திருந்த காலத்திலே காலையிலே எனது துர்க்கைத் தாயாரை எண்ணி அவள் பாதத்தை வழிபட்டு வரும் காலத்தில் இரவுவேளை கனவிலே காட்சி தந்து தன் நாமத்தைப் பாட அருள்புரிந்தாள். மனோன்மணித் தாயெனப் பெயர்பெற்ற அத்தாயார் என் உள்ளத்தில் மங்காத செல்வமாக ஒளிவிடும் ஜோதியாக ஓங்கார சொருபமாக என் உள்ளத்தில் இடம்பிடித்துக் கொண்டாள். அவள் இச்சிறு அடியேனை பலநிலைகளில் சோதித்த பின் தன் திருநாமத்தைத் தந்து இன்புற வைத்து மகிழும் இந்நாமம் இன்பரசத்தில் சமர்ப்பணம்.

### துதி

ராகம் :- கிந்தோளம்

மனோன்மணித்தாயே மங்காத செல்வம் நீயே
மாறிலாஜோதியே மனம் கவர்ந்தாய் நீயே - அம்மா
நந்தாவில் பதியாளும் நாயகித்தாயே
நாநிலம் போற்றிடும் அருள்மிகு தாய்நீயே
(மனோன்மணி.....)

அள்ளி அருள் புரிவாய் மனோன்மணித் தாயே
அகிலங்கள் யாவையும் காத்தருள் தாயே
வாடியே உடல் கருகி சாவது நீதியன்றோ
வந்தருள் புரிவாயே மனோன்மணித்தாயே
(மனோன்மணி.....)

தங்கரதம் தன்னை சிதை உண்ண நீ கொடுத்தது
தவிக்கின்ற மக்கள்தனை காத்தவள் நீதாயே
எம் தாயும் நீயே ஏதுநிலை அறியேன்

ஏழை எனக்கருள்வாய் மனோன்மணித்தாயே
(மனோன்மணி.....)

ஆனி மாதம்தனில் வலம் வரும் தாயே
வையம் எல்லாம் நிறைந்து வந்தருள் தருவாயே
சரண் அடைந்திட்டோம் மனோன்மணித்தாயே
சாந்தி நிலை தந்தருள்வாய் மனோன்மணித்தாயே
சாந்தி நிலை தந்தருள்வாய் மனோன்மணித்தாயே
சாந்தி நிலை தந்தருள்வாய் மனோன்மணித்தாயே

உ

நாச்சியார்

சாவகச்சேரியிலே இடம் பெயர்ந்து இருந்த காலத்தில் நான் தொழிற் கடமையில் இரவுக் காவலாளியாக கடமை புரிந்த வேளையில் என்னிடம் வந்து வயது முதிர்ந்த ஓர் பெரியார் பல இடங்களில் தோன்றப் பெற்ற அருள்மிகு சக்தி கொண்ட தெய்வங்களைப் பற்றிய வரலாறுகளை கூறி எனது உள்ளத்துக்கு இன்ப மூட்டிச் செல்வார். இப்படியாக சில நாட்கள் கடந்தன. ஒரு நாள் இரவு அறுகு வெளியிலே நாச்சிமார் என்னும் தாயாக அமையப் பெற்றவள் நானே என்று கூறி என்னிடம் வரும் வயோதிபரையும் தன்னுடைய பக்தனென்று அடையாளம் காட்டி மறைந்து கொண்டாள். திடுக்கிட்டு விழித்த நான் கனவு என்பதை உணரப் பெற்று கனவுகளின் காட்சி எல்லாம் கற்பனை அல்ல. உண்மையின் காட்சி என்று உணரப் பெற்று சிந்தனையில் இயற்றப் பெற்ற இன்னாமம் உங்கள் சிந்தனைக்கு இன்பரசமாக சமர்ப்பணம்.

## துதி

மெட்டு :- காத்தவராயன்

அறுகு வெளி நீ அமர்ந்தாய் நாச்சியாரே அம்மா நாச்சியாரே
அன்னையாக நீ வருவாய் நாச்சியாரே அம்மா நாச்சியாரே
எருக்கலம் பதி அமர்ந்தாய் நாச்சியாரே அம்மா நாச்சியாரே
பெரும்படை தான் நீ அமைத்தாய் நாச்சியாரே அம்மா நாச்சியாரே
வயல் வெளியைக் கொண்டவளே நாச்சியாரே அம்மா நாச்சியாரே
வறுமை தனை போக்கிடம்மா நாச்சியாரே அம்மா நாச்சியாரே
உடுக்கோசை கேட்டு தென்றால் நாச்சியாரே அம்மா நாச்சியாரே
உருவெடுத்து வந்திடுவாய் நாச்சியாரே அம்மா நாச்சியாரே
நர்த்தனங்கள் ஆடி வரும் நாச்சியாரே அம்மா நாச்சியாரே
நல்லருளைத் தந்திடம்மா நாச்சியாரே அம்மா நாச்சியாரே
தில்லை வனம் சென்றவளே நாச்சியாரே அம்மா நாச்சியாரே
தித்திக்கும் தேன் அமுதே நாச்சியாரே அம்மா நாச்சியாரே
பக்கம் எங்கும் ஒலிஒலி நாச்சியாரே அம்மா நாச்சியாரே
பறந்தோடி வாவன் அம்மா நாச்சியாரே அம்மா நாச்சியாரே
சூலம் எடுத்தவளே நாச்சியாரே அம்மா நாச்சியாரே
சூழ் நிலையை மாற்றிடம்மா நாச்சியாரே அம்மா நாச்சியாரே
கள்ளம் அற்ற அன்பு கொண்ட நாச்சியாரே அம்மா நாச்சியாரே
கன்னியரை காத்திடம்மா நாச்சியாரே அம்மா நாச்சியாரே

புத்தி தடுமாறுதம்மா நாச்சியாரே அம்மா நாச்சியாரே
புதுமை ஒன்றை காட்டிடம்மா நாச்சியாரே அம்மா நாச்சியாரே
சித்தம் தெளிய வைப்பாய் நாச்சியாரே அம்மா நாச்சியாரே
சிந்தையிலே தான் வருவாய் நாச்சியாரே அம்மா நாச்சியாரே
மந்தநிலை போக்கிடத்தான் நாச்சியாரே அம்மா நாச்சியாரே
மழை தனை பொழிந்திடம்மா நாச்சியாரே அம்மா நாச்சியாரே
தத்துவங்கள் பொய் என்றோ நாச்சியாரே அம்மா நாச்சியாரே
தர்மம் என்றும் தோற்ற துண்டோ நாச்சியாரே அம்மா நாச்சியாரே
கத்திதனை தான் எடுத்தே நாச்சியாரே அம்மா நாச்சியாரே
கதிகலங்க வைத்திடுவாய் நாச்சியாரே அம்மா நாச்சியாரே
பக்தர் உனை வேண்டுகின்றோம் நாச்சியாரே அம்மா நாச்சியாரே
எம் மனதில் நீ இருக்க நாச்சியாரே அம்மா நாச்சியாரே
எமக்கென்றும் பயம் எதற்கு நாச்சியாரே அம்மா நாச்சியாரே
எந்த நிலை வந்தாலும் நாச்சியாரே அம்மா நாச்சியாரே
எம்மை என்றும் காத்திடம்மா நாச்சியாரே அம்மா நாச்சியாரே
சரணம் சரணம் அம்மா நாச்சியாரே அம்மா நாச்சியாரே
சரணம் சரணம் அம்மா நாச்சியாரே அம்மா நாச்சியாரே
சரணம் சரணம் அம்மா நாச்சியாரே அம்மா நாச்சியாரே

உ

## திருநெல்வேலிப் பதியுறைந்த பத்திரகாளி

1996ம் ஆண்டு நான் யாழ்ப்பாணத்தில் மீனக்குடி அமர்ந்த வேளை தொழிலுக்கு சென்று வரும் நேரத்தில் சில வேளைகளில் திடீரென்று ஏற்படும் ராணுவ மோதல் காரணமாக தின்னவேலியூடாக பத்திரகாளி ஆலயத்துக்கு முன்பாக அமைந்துள்ள வீதியால் சென்றவேளை அந்த ஆலயத்தை கும்பிட்டு விட்டு வீடு சென்ற நான் இரவு தூங்கிய வேளை கொடுவாளுடன் காட்சி தந்த தாயாரின் நிலையை இத்துதி மூலம் பக்த அடியவர்கட்கு பாடும் நாமமாக சமர்ப்பணம்.

### துதி

மெட்டு :- காத்தவராயன்

கொடுவாளை தானெடுத்தோ பத்திரகாளியம்மா
கொடியவரை தான் அழித்தா பத்திரகாளியம்மா
கோபம் கொண்டு தான் எழுந்த பத்திரகாளியம்மா
கோணம் எங்கும் நடுநடுங்கும் பத்திரகாளியம்மா (கொடுவாளை.....)

பக்தர் உமை வேண்டுகின்றோம் பத்திரகாளியம்மா
பகல் இரவா நாம் அலைந்தோம் பத்திரகாளியம்மா
பாருலகம் போற்றிடவே பத்திரகாளியம்மா
பாதகரை தானழித்தா பத்திரகாளியம்மா
(கொடுவாளை.....)

விண்ணுலகம் போற்றிடவே பத்திரகாளியம்மா

விந்தை பல தான் புரிந்தா பத்திரகாளியம்மா
வீரா ஆவேஷம் கொண்ட பத்திரகாளியம்மா
வீணர்களை தானழித்த பத்திரகாளியம்மா
(கொடுவாளை.....)

மங்கையின் மானம் காக்க பத்திரகாளியம்மா
மலையாளம் விட்டுவந்தா பத்திரகாளியம்மா
மாயரூபம் கொண்டெழுந்தா பத்திகாளியம்மா
மானம் தனை தந்து காத்து நின்றா பத்திரகாளியம்மா
(கொடுவாளை.....)

தினனவேலி பதியுறைந்த பத்திரகாளியம்மா
தினம் தினமும் வழிபடுவோம் பத்திரகாளியம்மா
சக்தி நிலை தந்தவளே பத்திரகாளியம்மா
சாந்தி நிலை தந்தருள்வாய் பத்திரகாளியம்மா
(கொடுவாளை.....)

சாந்தி நிலை தந்தருள்வாய் பத்திரகாளியம்மா
சாந்தி நிலை தந்தருள்வாய் பத்திரகாளியம்மா

ஓம் சாந்தி

உ

## நல்லையம் பதி கந்தன்

அருள்மிகு நல்லைக்கந்தன் யாழ் மீட்டு யாழ் நகருக்கு புகழ் தேடித்தந்த புலவர்கள் காலத்தில் அழியாப்புகழ் கொண்ட கந்தனாக திகழப் பெற்றவன் சிறு அடியேனின் சிந்தையில் அருள் நாமம் தந்து புகழாரம் சூடவைத்தான் 1994.10.26 இலக்கியமாமன்று நடத்திய முழு நிலா சுற்றுப்போட்டியிலே சிறந்த மெல்லிசைப் பாடலென 1ஆம் பரிசு பெற்றுத்தந்த இப்பாமாலை உங்கள் உள்ளங்களுக்கு இன்பம் பெற்றுத்தர இன்பரசமாக சமர்ப்பணம்.

### விருத்தம்

ராகம் :- கம்பீரநடை

யாழ் பாடும் நகரினிலே எழுந்தருளிய எங்கள் நல்லைக் கந்தன்
வேல் கொண்டு விரட்டிடுவான் வேதனைகள் நீக்கிடுவான்
நலமுடனே நாம் வாழ நல் வழியும் காட்டிடுவான்

துதி

எங்கள் ஞானக் கந்தன் எங்கள் ஞானக்கந்தன்
நல்லூரில் எழுந்தருளிய எங்கள் ஞானக்கந்தன்
நல்வழிகள் காட்டிடுவான் எங்கள் ஞானக்கந்தன்
வேப்பமர நிழலினிலே வீற்றிருக்கும் எங்கள் நல்லைக்கந்தன்
வேதனைகள் நீக்கிடுவான் எங்கள் ஞானக்கந்தன் (நல்லூரில்.....)

தாமரை இதழ்தனில் அவதரித்தான் எங்கள் ஆறுமுகன்
தழுவிடும் போது ஒன்றானான் எங்கள் ஞானக்கந்தன்
தந்தைக்கு ஓம் எனும் மந்திரத்தை உரைத்த எங்கள் ஞானக்கந்தன்
தமிழ் தாயக மண்ணை காத்தே நிற்கும் எங்கள் நல்லைக்கந்தன்
கலியுகத்துக் கந்தன் இவன் காட்டுகின்ற
விந்தை தனை வீதி வழியாகக் காண்கின்றோம்
வித்தகர்கள் கற்றவர்கள் கந்தன் புகழ் பாடி வருகின்றார்
மங்கையர்கள் மகிழ்வுறும் வாலிபர்கள் வழிபடவும்
எங்கள் கந்தன் வருகின்றான் நல்லைக் கந்தன் வருகின்றான் (நல்லூரில்.....)

பாலும் பழமும் பன்னீரும் பக்த கோடிகள் கொண்டு வர
பறவைக் காவடி ஆட்டக்காவடி தூக்குக்காவடி தூக்கி வர
எங்கள் கந்தன் வருகின்றான் தங்கரதத்தினில் வருகின்றான்
நல்லைக் கந்தன் வருகின்றான் நலமுடன் அருள்தர வருகின்றான்
அழகுக் கந்தன் வருகின்றான்
அன்னைக் கந்தன் வருகின்றான்
செல்லக் கந்தன் வருகின்றான்
நலமுடன் அருள் தர வருகின்றான்
நலமுடன் அருள் தர வருகின்றான்
வருகின்றான் வருகின்றான்

## முருகன் துதி

காத்தவராயன் மெட்டு

நல்லை நகர் கந்தன் எல்லோ
எங்கள நாமம் காக்கும் வேலன் எல்லோ
பார்வதியின் மைந்தன் எல்லோ
முருகன் பார்ப்பவர்கக்கு பாலன் எல்லோ
ஐங்கரன் தம்பி எல்லோ
எங்கள் ஐயம் தீர்க்கும் வேலன் எல்லோ
கலியுக்க கந்தன் எல்லோ
எம்மை காத்தருளும் வேலன் எல்லோ (நல்லை.....)

மயிலேறி வந்தவனே
எங்கள் மால்மருக வேலவனே
வேலைக் கையில் கொண்டவனே
முருகா வேண்டம் வரம் தந்தவனே
ஆறு படை கொண்டவனே
எங்கள் ஆறுமுக வேலவனே
சக்தி உமை பாலகனே
எங்கள் சடுதியில் காப்பவனே (நல்லை.....)

காவடிகள் நாம் எடுத்தோம்
உந்தன் காலடியில் வந்திடுவோம்

மாலை தனை நாம் தொடுத்தோம்
உந்தன் மார்மீது அணிந்திடுவோம்
அன்ன தானம் நாம் கொடுத்தோம்
உந்தன் அருள் தனைப் பெற்றிடுவோம்
இத்தனையும் செய்வதெப்போ
எங்கள் செல்லக் கந்தன் நீ அல்லவோ (நல்லை.....)
பல லட்சம் மக்கள் இங்கே
முருகா பாதிவழி துன்பம் கொண்டோம்
பாலர் இங்கே படும் துயரோ
உந்தன் பார்வையிலே தோன்றலையோ
செந்தமிழைக் காப்பதென்றோ
முருகா செந்தில் மலை சென்றதென்றோ
மலையேறி சென்றதென்றோ
முருகா ஈழ மண்ணைக் காப்ப தென்றோ (நல்லை.....)

பஞ்சம் பசி கொண்டால் என்ன
முருகா அன்னை மண்ணை மீட்டிடய்யா
நெஞ்சில் உறுதி கொண்டோமய்யா
முருகா வேல் கொண்டு எம்மைக் காத்திடய்யா
கந்தா உன்னை வேண்டி நின்றோ
இங்கே கதறும் மக்கள் லட்சம் ஐயா
இத்தனையும் ஒன்று சேர்த்து
முருகா இம் மண்ணில் வாழ வைப்பாய்
(நல்லை.....)

உன் நாமம் இங்கே சொல்லச் சொல்ல
முருகா எம் மனமும் இங்கே உருகுதய்யா
பக்தர் இங்கே ஒன்று கூடிடவே
முருகா பக்தியும் இங்கே பெருகுதய்யா
எத்தனை துயரோடு வந்தாலுமே
முருகா எம் மனமும் இங்கே உருகுதய்யா
சரணம், சரணம், சரணம் ஐயா
முருகா உன் பாதம் சரணம், சரணம், சரணம் ஐயா
முருகா உன் பாதம் சரணம், சரணம், சரணம் ஐயா
முருகா உன் பாதம் சரணம், சரணம், சரணம் ஐயா

## நல்லூரான்

நாடிவரும் அடியவர்க்கெல்லாம் நல்லருள் புரியும் நல்லூரான் 08.08.1997 வெள்ளிக்கிழமை கொடியேற்றத் திருநாளிலே அவன் திருப்பாதமே சரணம் என்று எண்ணிய என்னாவில் நல்லதோர் துதிதனை சிந்தையில் தந்திட்ட நாமம் தனை நாடிவரும் அடியவர்கள் துதி பாடிட கந்தனின் தேர் உற்சவ திருநாளில் சமர்ப்பணம்.

### துதி

ராகம் :- சண்முகப்பிரியா

நல்லருள் புரிவான் நல்லூரான்
நாம் வணங்கும் தெய்வமே நல்லூரான்
நாடிவரும் அடியவர்கள் நாமங்கள் பாடிடவே
நல்ல ஞானம் அளிப்பான் நல்லூரான் (நல்லருள்.....)

தேடிய செல்வம் தனை நாம் இழந்தாலும்
தேவர்கள் அணைப்பினிலே ஒன்றாக மலர்ந்திட்டான்
வாடி நான் நின்றபோதே வந்தருள் புரிந்த
வானவர் போற்றிடும் நல்லூரான் (நல்லருள்.....)

தாமரைப் பொய்கைதனில் தவழ்ந்திட்ட பாலகர்கள்
தாயின் அணைப்பினிலே ஒன்றாக மலர்ந்திட்டான்
ஆறிருதோள் கொண்டு அசுரரை அளித்திட்ட
ஆறுமுகம் கொண்ட நல்லூரான் (நல்லருள்.....)

கருணையின் வடிவமான கலியுக கந்தன் ஐயா
காத்தருளும் வேலும் உந்தன் கையிலே கொண்டாய் ஐயா
சரணம், சரணம் என்றோம் நல்லூரான்
சாந்தி நிலை தந்தருள்வாய் நல்லூரான்
சாந்தி நிலை தந்தருள்வாய் நல்லூரான
சாந்தி நிலை தந்தருள்வாய் நல்லூரான

## நல்லை முருகன்

அருள்மிகு நல்லைக்கந்தனின் தேர் உற்சவம் 08.09.1999 புதன்கிழமை இன்றைய தினம் அழகுமிகு கந்தன் அழகு ரதத்திலே வருகின்ற திருக்காட்சியை என் சிந்தையிலே தந்து அருள் புரிந்த முருகனின் நாமத்தை அனைத்து அடியவர்களும் பாடி இன்புறும் வண்ணம் இப்பிரசுரம் சமர்ப்பணம்

### துதி

ராகம் :- நாதநாமகிரியா

தேர் வருகுது தேர் வருகுது தேவ தேவன் தேர் வருகுது
தேடி வரும் அடியார் கூட்டம் தேரின் பின்னல் நாடிவர (தேர்வருகுது.....)

நல்லவர்கள் நாடிவர நாமங்களைப் பாடிவர
நல்லை நகர்க் கந்தன் இரு நலமுடனே தேரில்வர
அல்லல் உற்றலைந்தவர்கள் அலை அலையாய் நாடிவர
ஆறுமுகக் கந்தனிங்கு அழகுறவே தேரில்வர (தேர்வருகுது.....)

பக்தர் இங்கு பாடிவர பரவசத்தில் ஆடிவர
பரமசிவன் பார்வதியின் பாலகனே தேரில்வர
கருணைமிகு கந்தன் இங்கு கதிரொளியில் காட்சிதர
கலியுக வரதன் இங்கு தேரினிலே பவனிவர (தேர்வருகுது.....)

பால் பழமும் பன்னீரும் பக்தியுடன் நாம் தரவே

பைந்தமிழ் பழனியிங்கு தேரினிலே பவனிவர
செல்லப்பா தேரடியில் தவம் இருந்த மகத்துவத்தின்
செல்வஞானம் தவம் அனைத்தும் தந்தருள்வாய் வேலவனே
செல்வஞானம் தவம் அனைத்தும் தந்தருள்வாய் வேலவனே
செல்வஞானம் தவம் அனைத்தும் தந்தருள்வாய் வேலவனே

உ

## மாவைக்கந்தன்

மன்னர் காலம் தொட்டு மங்காப் புகழ் பெற்ற மாவைக்கந்தன் மக்கள் உள்ளங்களில் வேல் கொண்டு ஒளி கொடுக்கும் கலியுகக்கந்தன் கள்ளம் கபடமின்றி கைகூப்பி வேண்டிடவே கடிதென இன்ப நாதந் தந்திடுவான் என் சிந்தையிலே சிறுகுமரன் தந்திட்ட சிந்து காவடி நாமத்தை பல குமரன் ஆலயங்களை ஒன்று திரட்டி அடியவர் உள்ளங்களுக்கு இன்பரசமாக சமர்ப்பணம்.

### துதி

ராகம் :- மாண்டு

மாவைப்பதி வேலவனே வா வா முருகா
மக்கள் துயர் தீர்த்தருள வா வா முருகா
பழனிப் பதி வேலவனே வா வா முருகா
பன்னிருகை கொண்டவனே வா வா முருகா
பச்சிளம் பாலகனாய் வா வா முருகா
பாலர் துயர் தீர்த்தருள வா வா முருகா
இச்சையுடன் வேண்டுகின்றோம் வா வா முருகா
இன்னல்களைத் தீர்தத்தருள வா வா முருகா (மாவைப்.....)

செந்தில் மலை வேலவனே வா வா முருகா
செல்லக் கதிர்காமனே வா வா முருகா
திருப்பதி வேலவனே வா வா முருகா
தீயவினை தீர்த்தருள வா வா முருகா
நல்லைப்பதி வேலவனே வா வா முருகா
நம்துயர் தீர்த்தருள வா வா முருகா (மாவைப்.....)

ஞான வடிவேலவனே வா வா முருகா
ஞானம் தனை அள்ளி நீ தா தா முருகா
பக்தர் துயர் தீர்த்தருள வா வா முருகா
பாடி உன்னை வேண்டுகிறோம் வா வா முருகா
சரணவா சண்முகா வா வா முருகா
சரணடைந்தோம் உம்மிடமே வா வா முருகா
சரணடைந்தோம் உம்மிடமே வா வா முருகா
சரணடைந்தோம் உம்மிடமே வா வா முருகா

அழகுறு சிற்பக்கலை கொண்டு வானுயர்ந்த கோபுரமாய் வலம் வரும்

குமரனிவன் தவசிகள் வாழ்ந்திட தங்கும் மடம் கொண்டு தாரணி போற்றிடும் குமரனிவன் தன் புகழ் ஓங்கிட மாருதப்புரவீக வல்லியின் குதிரை முகம் நீக்கி கும்பிடவைத்திட்ட குமரனிவன். என் குரல் கேட்டு ஏறெடுத்து பார்த்திட்ட திருக்குமரனிவன் வேல்கொண்டு மரகத மயில் மீது கருணை மிகு கந்தனாக காட்சி தந்த குமரனிவன் கவி புனைந்து கந்தன் இவன் புகழ் பாட வைத்து கலிநடம் புரிந்திடும் குமரன் நாமம்தனை சிந்தையுடன் வாழும் சிறு அடியேன் சீர்நிலை தந்திட வேண்டி நின்று பாடிடும் சிந்தை நாமம் சமர்ப்பணம்.

## முருகன் துதி

ராகம் :- பீம்பிளாஸ்

மரகத மயில் கொண்ட வேலவனே
மலைக்குற வள்ளியை மணந்தவனே
மாவைப் பதிதனில் உறைந்தவனே
மாருத வள்ளிக் கருள் புரிந்தவனே (மரகத.....)
மின்னும் வேலுடன் வருபவனே
மிதிலையில் நடம் இடும் பாலகனே
மீளாத் துயரங்கள் தீர்ப்பவனே
மீட்டிடும் இம் மண்ணை வேலவனே (மரகத.....)

முத்திகள் பெற்ற முருகனே
முழு உலகைச் சுற்றி வந்த பாலகனே
மூஷிக வாகனன் தம்பியரே
மூலப் பொருள் உரைத்திட்ட பாலகனே (மரகத.....)

மென்மை உள்ளம் கொண்ட வேலவனே
மெய்யடியார் குறை தீரப்பாய் பாலகனே
மேதினியில் போற்றிடும் ஆண்டி வேலனே
மேனி சிலிர்க்க வைத்த பாலகனே (மரகத.....)

மையல் நடனம் ஆடிவரும் மயிலோனே
மைந்தர் குறை தீர்த்தருள்வாய் வேலவனே
கந்தசாமி தெய்வம் என அமர்ந்தவனே
கருணைக் கண்ணால் பாருமையா பாலகனே
சரணம், சரணம், சண்முகனே
சாந்திநிலை தந்தருள்வாய் சரவணனே
சாந்திநிலை தந்தருள்வாய் சரவணனே
சாந்திநிலை தந்தருள்வாய் சரவணனே

இடம் பெயர்ந்து இருந்த காலத்தில் குடிதண்ணீருக்கு வேல் கொண்டு அமையப்பெற்ற ஆவரம்பிட்டி முருகன் ஆலயத்தில் நீர் எடுத்த வேளையில் நாம் வழிபட்டு வந்தவேளையில் அவன் அருள் சிந்தை தோன்றப் பெற்று இயற்றி பாடப்பெற்ற பாமாலை இன்று இன்பரசத்தில் சமர்ப்பணம்.

## ஆவரம்பிட்டி முருகன் துதி

ராகம் :- மனோலயம்

வேல்கொண்டு எமைக் காக்கும் முருகா
வேண்டும் வரம் தாரும் முருகா
நாளும் உந்தன் சன்நிதியில்
நாம் வாழ வழி என்றும் தாரும் அப்பா (வேல்.....)

ஆவர் பிட்டி வயல் வெளியில்
மலை போன்ற துன்பத்தில் வந்தோம் அப்பா
இன்பம் தந்து எம்மை வாழ வைப்பாய்
இனி உந்தன் துணையின்றி ஏதப்பா (வேல்.....)

சக்தி உமை பாலன் அப்பா
சடுதியில் வந்தெமை காத்திடப்பா
செந்தில் மலை வேலப்பா
செய்வதறியோமே நாம் அப்பா (வேல்.....)

பக்தர்கள் எங்கும் பெருகிடணும்
பக்தி நெறி கொண்டு வாழ்ந்திடணும்
நித்தம் உந்தன் காலடியில்
நீ என்றும் எந்தன் துணை அப்பா (வேல்.....)

உ

கொக்குவில் பதி உறைந்து அற்புதம் புரியும் மாத்தனை கந்தன் நாம் இவ்விடம் இருந்து அவன் திருவிழாவிற்கு சென்று பஜனை பாடிவரும் நாளில் இருநாள் காலை திருமண வீட்டிற்குச் செல்வதற்கு இராணுவத்தை தடைதாண்ட வேண்டிமையால் நேரம் போதாத நிலையில் அவ்விடத்தை அடைந்து முருகா என்றவாறு வாகனத்தை விட்டு இறங்காது கும்பிட்டவண்ணம் போகவே உடம்பெல்லாம் சிலிர்த்த வண்ணம் மறுகணம் வாகனத்தை ஓடியவாறு சிந்தையில் பாடிக்கொண்டு சென்ற இவ்நாமம் பக்த அடியவர்களுக்கு இன்பரசத்தில் சமர்ப்பணம்.

## முருகன் துதி

ராகம் :- காபி

கந்தா என்றே உன்னை கூவி அழைத்திடுவேன்
என் வினை தீர்த்தருள ஓடியே வந்தருள்வாய்
வந்தனை செய்வோரும் வருந்திடும் அடியவரும்
உந்தன் மனம் முன்னே உருகிடப் பாடிடுவேன் (கந்தா.....)

கருணையின் வடிவமான கலியுகக் கந்தன் ஐயா
காத்தருளும் வேலும் உந்தன் கையிலே கொண்டாய் ஐயா
கண்கொள்ளாக் காட்சியாக வந்தருள வேண்டும் ஐயா
காணுகின்ற காட்சி எல்லாம் நீயாக வேண்டும் ஐயா (கந்தா.....)
நித்தம் உனைவேண்டி நின்றால் நிம்மதியை தந்தருள்வாய்

நீ என்றும் என்துணையாய் வந்தருள வேண்டும் ஐயா
என் உள்ளக் கோயில் கொண்டட கந்தனும் நீயே ஐயா
என்றென்றும் உனைப்பாட உன் அருள் தாரும் ஐயா (கந்தா.....)

உ

## உசன் முருகன்

மண்டலாபிஷேக பூர்த்தி தினமான 19.03.99 வெள்ளிக்கிழமை அருள்மிகு கந்தசாமிப் பெருமானை நாம் துன்பத்திற்கு ஆளாகி இடம்பெயர்ந்து இருந்த காலத்தில் அப்பெருமானை வழிபட்டதன் பயனாக அவருடைய திருநாமம் என் சிந்தையிலே திழைத்தது. இந்தத் திருநாமம் அனைத்து அடியவர்களும் பாடிப் பரவசமடைய வேண்டும். பக்திநிலை பெருக வேண்டும். உலகெங்கும் சாந்திநிலை தோன்ற வேண்டும் என்று அவன் திருப்பாதத்தை வேண்டி வாழும் சிறு அடியானாகிய நான் இன்றைய தினத்தில் இப்பிரசுரத்தை வெளியிட்டுள்ளேன்.

விருத்தம்

உச்சி மலை சென்றவனே வேல் முருகா
உள்ளம் போற்றும் நாயகனே மால் மருகா
உசன் பதி உறைந்திட்ட வேல் முருகா
உனையன்றி வேறுதுணை ஏதப்பா

துதி

கதிர் ஒளியில் தோன்றும் மால் மருகா
காக்கும் கருணையே வேல் முருகா
உசன் பதி உறைந்திட்ட உத்தமனே
உள்ளம் போற்றும் தூயவனே (கதிர் ஒளியில்.....)

வயல்வெளி கொண்டவனே வேல் முருகா
வள்ளி மணவாளனே வந்தருள் புரிவாய்
வேப்பமர நிழலில் ஒளிர்பவனே
வேதனைகள் தீர்க்கும் மாயவனே (கதிர் ஒளியில்.....)

மூலப்பொருள் உரைத்த ஞானக் குமரனே
மூவுலகம் போற்றும் முத்துக்குமரனே
ஆறு பொறிதனில் உதித்தவனே
ஆறுமுகம் கொண்ட வேலவனே (கதிர் ஒளியில்.....)

கருணையின் வடிவமான கலியுக கந்தன் ஐயா
காத்தருளும் வேலும் உந்தன் கையிலே கொண்டாய் ஐயா

## மல்லாகம் அருள்மிகு குமரன்

### கந்தனின் கந்தஷஷ்டி

அருள்மிகு பழம்பிள்ளையாருக்கு அருகிலே அமையப் பெற்ற முருகனை

கந்தசஷ்டி திருநாளான ஐப்பசி 16.10.99 இன்றைய தினம் கோயிலுக்குச் செல்லும் வேளை கவலையுடன் இத்திருநாளில் கூட கோயிலுக்குச் செல்ல முடியாத நிலையில் வேலை என்ற நிலையில் எண்ணியபடி செல்ல அவ்வேளையில் சைக்கிளில் ஓடியபடியே சிந்தையில் எழப்பெற்ற நாமம் கந்தன் புகழ் கூறும் கந்தஷஷ்டி துதி அன்புகொண்ட அடியவர்களுக்கு சமர்ப்பணம்.

ராகம் :- கம்சத்வனி

கந்தனின் திருநாமம் கந்த ஷஷ்டி
கருணையின் அருள்பொங்கும் திருவருள் ஷஷ்டி
எம்முயிர் காத்திடவே அனுஷ்டிக்கும் ஷஷ்டி
எம்பயம் நீக்கிடவே அவள் அருள் ஷஷ்டி (கந்தனின்.....)

ஐப்பசித் திருநாளில் அனுஷ்டிக்கும் ஷஷ்டி
ஐயங்கள் நீக்கிடும் அவள் அருள் ஷஷ்டி
பக்தர்கள் வேண்டிநின்று பலன்பெறும் ஷஷ்டி
பஞ்சங்கள் நீக்கிடவே அனுஷ்டிக்கும் ஷஷ்டி (கந்தனின்.....)

சக்தியின் வேல்கொண்டு காத்திடும் ஷஷ்டி
சஞ்சலம் நீக்கி எங்கும் இன்பம் தரும் ஷஷ்டி
சரணம் அடைந்திட்டால் காத்திடும் ஷஷ்டி
சாந்திநிலை தந்தருளும் கந்தனின் கந்தஷஷ்டி
சாந்திநிலை தந்தருளும் கந்தனின் கந்தஷஷ்டி
சாந்திநிலை தந்தருளும் கந்தனின் கந்தஷஷ்டி

## சந்நிதிக் கந்தன்

என் வாழ்வில் மறக்க முடியாத நிலைை தந்த சந்நிதி முருகன் என்து தொழிலின் நிலைமையினால் சந்நிதிக்குச் செல்ல முடியாது வேலைக்குச் செல்லும் வேளை சுன்னாகம் பெற்றோல் செற்றின் முன்னால் லொறியில் சந்நிதிக்குச் செல்லும் அடியவரைக் கண்டு அவர்களிடம் எனது சட்டைப்பையில் ஒரு ரூபா மட்டும் இருந்ததை ஐயா என்னிடம் உள்ள பணம் இதுதான் என்று கூறி அம்பிகையின் தேர்த்திருநாள் அன்று வெளியிட்ட பிரதியையும் கொடுத்து அந்த முருகனின் உண்டியலில் போடும்படி கூறியவேளை அந்த வயதான ஐயா என்னைப் பார்த்து உன்னுடன் முருகன் இருக்கும் போது கவலை ஏன் என்று சொல்லிவிட்டு அவர் சந்நிதியை நோக்கிச் செல்லும் வழியை பார்த்தவேளை எனது உடம்பெல்லாம் ஊசியால் குத்துவது போல் ஓர் உணர்வு ஏற்பட என்னை மறந்து அவ்விடத்திலே சைக்கிளில் ஊன்றிய படியே அவன் திருநாமம் பாடி முடித்த நான் எனது அருகில் நின்ற வழிப்போக்கு அடியவர்கள் கூறிய வார்த்தை என் பற்றுக்குரிய அந்த சந்நிதிக்குமரனை கண்ட இன்பத்தில் வேலைக்குச் செல்லலானேன். என் நெஞ்சில் இன்ப ஊஞ்சல் ஆடும் சந்நிதிக்கந்தன் நாமம் உங்கள் உள்ளத்தில் இன்ப ஊஞ்சல் ஆட சமர்ப்பணம்.

### துதி

ராகம் :- கம்சத்தனி

சந்நிதிக் கந்தா சங்கரன் புதல்வா
சரித்திரம் புகழ்ந்திடும் சண்முகநாதா
எம்துயர் தீர்த்திடவே வந்தருள் புரிவாய்
எமையாளும் குமரா ஏழை எனக்கருள்வாய்
வந்தருள் புரிவாய் வலம்வரும் குமரா
வந்து துயர் நீக்கி வாழ்வினில் இன்பம் தருவாய் (சந்நிதி.....)

அன்னமும் தானமும் அள்ளி வளங்கிடுவாய்
அவனியெல்லாம் போற்றும் அன்னக் கந்தனும் நீயே
சிந்தையில் அருள் புரிந்த சிவகாமி மைந்தன் நீ
சீர்காளி போற்றிடும் சீர்தமிழ் செல்வனும் நீ
மரகத மயிலும் மணிமுடி ஆறும்
மாயன் மருகன் வந்தருள் புரிந்தான்
மாயன் மருகன் வந்தருள் புரிந்தான்
மாயன் மருகன் வந்தருள் புரிந்தான் (சந்நிதி.....)

உ

## கதிர்காமக் கந்தன்

அருள்மிகு கதிர்காமக் கந்தன் 19.07.2000 புதன்கிழமை அன்று மதியபோசன வேளையில் தனது ஆலய வடிவம் கொண்ட பத்திரிகையை கையில் கிடைக்கச் செய்து அக்கணமே அவன் நாமத்தை இயற்றப்பெற்றேன். அன்பு கொண்ட அடியவர்க்கு சமர்ப்பணம்.

### துதி

ராகம்:- கம்சத்தனி

மரகத மயில் மீது பவனிவரும் வேல்முருகா
மலை மீது குடி அமர்ந்த மாயவனே வேல்முருகா
சேவற்கொடி அழகா செந்தில் மலை வேல்முருகா
செல்லக் கதிர்காம செந்தமிழ் வேல்முருகா (மரகத மயில்.....)

காட்டுப் புலம் தனிலே கருணைமிகு வேல்முருகா
கள்ளமற்ற நெஞ்சந்னை காத்தருளும் வேல்முருகா
நெஞ்சார துதிப்போர்க்கு நீதியின் வேல்முருகா
நெருங்கிடும் பகைதீர்க்கும் சக்தியின் வேல்முருகா (மரகத மயில்.....)

ஆறுபடை கொண்ட அழகுறு வேல்முருகா
ஆனந்தக் கொடியுடனே ஆடிவேலாய் வருபவனே
சரவணப் பொய்கையில் தவழ்ந்திட்ட வேல்முருகா
சண்முக கானம் தரும் சரவணனே வேல்முருகா (மரகத மயில்.....)

## சில மனிதர்களின் வெண்சொல் தந்திட்ட

## தத்துவ துதி

பற்றுற்றேன் பாலன் அடிபணிந்தேன் பக்தர் உள்ளங்களில் பரிவுடன் பற்றிக்கொண்டேன் - பாவலர் நிலை அறியேன் பாவி நான் ஓடினேன் நாடினேன்

நாவிலே தந்ததைப் பாடினேன். தத்துவம் உண்டு என்பதை அருட்கவி விநாசித்தம்பி ஐயா கூறும் நிலை கண்டு இன்புற்றேன். இவற்றின் நிலையே இப்பாமாலையின் தத்துவம். அனைத்து அடியவர்களின் உள்ளங்களில் இன்புற சமர்ப்பணம்.

## துதி

ராகம் :- யோன்புரி

ஓடிக்கொண்டேயிருப்பேன் - முருகா.....
ஓடிக்கொண்டேயிருப்பேன்
உனைத்தேடி ஓடிக்கொண்டேயிப்பேன்
நாடிக்கொண்டேயிருப்பேன் முருகா.....
நாடிக்கொண்டேயிருப்பேன் முருகா
இந்த நாடி நரம்பு ஓயும் வரை நாடிக்கொண்டே
இருப்பேன் முருகா.....
இப்பிறப்பின் நிலையறியேன் இறப்பின் தன்மை அறியேன்
இது என்ன மாயமப்பா முருகா.....
பொய்யெனும் உடல் சுமந்து போகத்தில் திளைத்திடும்
வாழ்வென்ன வாழ்வையா
பாடிக்கொண்டேயிருப்பேன் முருகா.....
பாடிக்கொண்டேயிருப்பேன்
பாமாலை சூடி உனை பாடிக்கொண்டே இருப்பேன் முருகா.....

பாவலர் நிலை அறியேன்
பாட்டின் பொருள் அறியேன்
பாதம் தனைப்பற்றி பாடுகின்றேனே முருகா.....

## இணுவில் கந்தசுவாமி

12.01.2001 வெள்ளிக்கிழமை இரவு தூக்கத்தில் ஆழ்ந்த வேளையில் முருகன் வாசலிலே கவலையுடன் வழிபட்டவேளை திடீரென வயோதிபர் ஒருவர் தோன்றி உனக்கு என்ன வேண்டுமென ஏளனமாகக் கேட்டார். நானோ கவலையில் நிற்ற என்னுடன் இருந்த இருந்த வயோதிபர் ஏளனம் செய்கின்றார் என்று முருகா நீயே கேட்டுக்கொள் என்று அலறியவேளை அவ்வயோதிபர் வேலைக்காட்டி மறைந்து கொண்டார். முருகா முருகா என்று அலறிய சத்தம் கேட்டு எனது மனைவி என்னப்பா என்று எனைக் கேட்டபோது கண்டது கனவென்று உணரப்பெற்று விழித்த நான் நேரத்தைப் பார்த்தபோது 12.10 அவ்வேளையில் சிந்தையில் மலர்ந்த இத்துதி சமர்ப்பணம்.

## துதி

ராகம் :- சிந்துபைரவி

எனக்கொரு வரம் வேண்டும் - முருகா
அதைநீ தரவேண்டும் முருகா
என்நாளும் அடியேன் மறவாமை வேண்டும்
அதைநீ தரவேண்டும் முருகா (எனக்கொரு.....)

நேர்வழியில் நடந்து வந்திட ஆசையப்பா
நெலிந்திடும் உடல்தன்னைக் காத்திடல் வேண்டும் அப்பா
நேரமே கடிதென்று ஓடுகின்ற வாழ்க்கை அப்பா
நேசக்கரம் கொண்டு காத்தருள வேண்டும் அப்பா
அதை நீ தரவேண்டும் முருகா (எனக்கொரு.....)

கண்ணாரக் காண்பதெல்லாம் கவலையின் காட்சி அப்பா
கானல்நீர் ஆகுதப்பா மானிடர் வாழ்க்கை அப்பா
கண்களோ காணவேண்டும் உன் அருட்காட்சி அப்பா
கவலையெல்லாம் மறந்து உன்நாமம் பாடவேண்டும்
அதைநீ தரவேண்டும் முருகா (எனக்கொரு.....)

உலகினை நான் மறந்து
உன் நாமம் பாடவேண்டும்
உன்னடி நாடுவோர்கள்
உள்ளம் நெகிழப் பாடவேண்டும்
அதைநீ தரவேண்டும் முருகா (எனக்கொரு.....)

## மஞ்சவனப்பதிக் கந்தன்

கனவில் ஆனந்த நடனங் காட்டி இன்பம் கொள்ள வைத்து விழித்தெழுந்து அக்கணமே பாடி மகிழ்ந்து அடியேன் உங்களையும் இன்புறவைக்க சமர்ப்பணம்.

### துதி

ராகம் :- புன்னகவராழி

ஆடிவா முருகா ஆடிவா முருகா
ஆனந்த யோதியாக ஆடிவா முருகா
நாடிவா முருகா நாடிவா முருகா
நாநிலத்தை காத்தருள நாடிவா முருகா (ஆடிவா முருகா.....)
வண்ணமயில் மீதேறி ஆடிவா முருகா
வள்ளி தெய்வானையுடன் ஆடிவா முருகா
செந்தில்மலை வேலவனே ஆடிவா முருகா
செல்லக்கதிர் காமனே ஆடிவா முருகா (ஆடிவா முருகா.....)
பக்தர்குறை தீர்த்திடவே ஆடிவா முருகா
பரமசிவன் பாலகனே ஆடிவா முருகா
உச்சிமலை சென்றவனே ஆடிவா முருகா
உள்ளம் போற்றும் நாதனே ஆடிவா முருகா (ஆடிவா முருகா.....)
தங்கவேலை கையில் ஏந்தி ஆடிவா முருகா
தவிக்கின்ற மக்கள் தனைக் காக்கவா முருகா
சக்திவேலை கொண்டவனே ஆடிவா முருகா
சஞ்சலங்கள் தீர்த்தருள ஓடிவா முருகா (ஆடிவா முருகா.....)

## சாலம்பைப்பதி முருகன் ஏழாலை

வரலாறு மிக்க வலம்வரும் குமரன் வரும்வினை தீர்த்து வாழ்வினில் இன்பம்

தரவல்லவன். என் வாழ்வில் சிறுவயதில் இருந்து வழிபட்டதன் பயனால் 15.10.1999 அன்று கனவில் காட்சி தந்து பாமாலை இயற்ற வைத்து பக்தியுடன் எனை அணைத்துக்கொண்ட அவன் நாமம் அடியவர்களுக்குச் சமர்ப்பணம்.

### துதி

ராகம் :- கிந்தோளம்

சாலம்பபை பதியாளும் சண்முகநாதா
சஞ்சலம் தீர்த்தருள்வாய் சண்முகநாதா
ஏழாலைப் பதிதனிலே எமையாளும் திருக்குமரா
ஏழை எமக்கருள்வாய் ஏகாந்தநாதா (சாலம்பை பதி.....)

ஆலமரம் கொண்டு அழகுறும் திருக்குமரா
ஆனந்த கொடியுடனே அசுரனை அழித்தவனே
ஈசனின் திருமகனே இணையிலா திருக்குமரா
ஈழம் தனைக்காப்பாய் ஈடில்லா ஜோதியனே (சாலம்பை பதி.....)

சோதகை நீக்கிடய்யா சொக்கனின் திருமகனே
சொல்வதெல்லாம் உந்தன் திருநாம மந்திரமே
சரணடைந்திட்டோம் உன்திரு பாதமையா
சாந்திநிலை தருவாய் சாலம்பைப்பதி முருகா
சாந்திநிலை தருவாய் சாலம்பைப்பதி முருகா
சாந்திநிலை தருவாய் சாலம்பைப்பதி முருகா

## கலியுகக் கண்ணன்

கலியுகக் கண்ணன் கள்ளமற்ற அடியவர் முன் காட்சிதர வல்லவன். நாம் இடம்பெயர்ந்து சாவகச்சேரியில் வாழ்ந்தவேளை இரவுக் காவலாளியாக கடமையில் இருந்தவேளை ஞாயிற்றுக்கிழமையான அன்று லீவு தரமறுத்ததால் கவலையுடன் இருந்தவேளை வல்லிபுர ஆழ்வாரிடம் சென்று வரும் பக்தர், நாமம் கொண்டு வந்து தந்துவிட்டு சென்றபின் கண்ணன் இரவு கடற்கரையில் காட்சி தந்து இன்புற வைத்து மறைந்து கொண்டான். திடுக்குற்று விளித்த நான் அக்கணமே இயற்றிப் பாடிய பாடல் அன்பு கொண்ட அடியவர்கட்கு இன்பமுடன் சமர்ப்பணம்.

### கண்ணன் வல்லிபுர ஆழ்வார்

விருத்தம்

கடல் ஏரிக் கரையிலே கண்ணா உன் காட்சி தந்தாய்
கலியுகத்துக் கண்ணக் எனக் கண்ணா உன் காட்சி தந்தாய்
வருந்தி வரும் அடியவர் நாம் வல்லையிலே காட்சி தந்தாய்
வலம் வந்து வழிபடவே ஆழ்வாராய் நீ இருந்தாய் (கடல் ஏரிக்.....)

### துதி

ராகம் :- கர்நாடக தேவகாந்தாரி

உன்னடியில் அன்பு வைத்தேன் கண்ண பரமாத்மா
உள்ளமெல்லாம் நீ நிறைந்தாய் கண்ண பரமாத்மா
உலகாளும் நாயகனே கண்ண பரமாத்மா

உன்னடியே நாடி வந்தோம் கண்ண பரமாத்மா
சர்வலோக நாயகனே கண்ண பரமாத்மா
சஞ்சலங்கள் தீர்த்தருள்வாய் கண்ண பரமாத்மா
சந்தனத்தில் நீ குளித்தாய் கண்ண பரமாத்மா
சக்தி தனைத் தந்திடய்யா கண்ண பரமாத்மா
வெண்ணை தனைத் திருடி உண்டாய் கண்ண பரமாத்மா
வெண்மை நாமம் தான் அணிந்தாய் கண்ண பரமாத்மா
வெண்மை உள்ளம் கொண்டவனே கண்ண பரமாத்மா
வெற்றி கானம் பாடுகின்றாய் கண்ண பரமாத்மா
வேணு கானம் பாடுகின்றாய் கண்ண பரமாத்மா
வேதனையில் வாடுகின்றோம் கண்ண பரமாத்மா
வேடிக்கை காட்டுகின்றாய் கண்ண பரமாத்மா
வேண்டும் வரம் தந்திடய்யா கண்ண பரமாத்மா
மண்ணை உண்ட கண்ணன் அல்லோ கண்ண பரமாத்மா
மலையாளும் மன்னன் எல்லோ கண்ண பரமாத்மா
மக்கள் இங்கு கலங்குகின்றார் கண்ண பரமாத்மா
மண்ணை நீயும் காத்திடய்யா கண்ண பரமாத்மா
பாரதப் போர் முடித்தாய் கண்ண பரமாத்மா
பாண்டவர் போல் எம்மைக் காப்பாய் கண்ண பரமாத்மா
பாம்பணையில் பள்ளி கொண்டாய் கண்ண பரமாத்மா
பாலர் தனைக் காத்திடய்யா கண்ண பரமாத்மா
சரணம் சரணம் ஐயா கண்ண பரமாத்மா
உன் பாதம் சரணடைந்தோம் கண்ண பரமாத்மா

## வல்லிபுர ஆழ்வார்

கருணையின் வடிவமாக கண் முன்னே தோன்றிய கண்ணனை எப்படி எல்லாம் பாடவேண்டும் என்று என் உள்ளம் பாடும் துதி சமர்ப்பணம்.

### துதி

ராகம் :- துர்க்கா

கருணை வடிவினன் கண்ணன்
கலியுக மானவன் கண்ணன்
கவலைகள் தீர்ப்பவன் கண்ணன்
எம்மை காத்து அருள்பவன் கண்ணன் (கருணை.....)

மழை தனைப் பொழிபவன் கண்ணன்
மதியுகம் ஆனவன் கண்ணன்
மனநிலை அறிபவன் கண்ணன்
எம் மானம் காப்பவன் கண்ணன் (கருணை.....)

பரந்தாமன் ஆனவன் கண்ணன்
பசுவினை மேய்த்தவன் கண்ணன்
பகைமை அழிப்பவன் கண்ணன்

எம்மை பார்த்து அருள்பவன் கண்ணன் (கருணை.....)

வெண்ணையை உண்டவன் கண்ணன்
வெண்நாமம் அணிந்தவன் கண்ணன்
வெற்றி தருபவன் கண்ணன்
எம் வேதனை தீர்ப்பவன் கண்ணன் (கருணை.....)

அபாயம் அபாயம் கண்ணா
அலறுகின்றோமே கண்ணா
அருள் தனைத் தருள்வாய் கண்ணா
என்றும் ஆறுதல் அருள்வாய் கண்ணா (கருணை.....)

சயனத்தில் இருப்பவா கண்ணா
சமயத்தை வளர்ப்போம் கண்ணா
சரணம் சரணம் கண்ணா
எங்கும் சாந்தியை தந்தருள் கண்ணா
(கருணை.....)

## நாகவரசு நாராஜனர்

அளவைப் பதியுறைந்த நாகவரசு நாராஜனர் நாடிவரும் அடியேன் முன் நாமம் தந்திட்ட நாராஜனன். நாடுநலம் பெற வேண்டி நின்று நாமங்கள் பாட வைத்த நாராஜனன். வாடி நிற்கும் அடியவர் குறை நீக்கி வலம்வரும் நாராஜனன். வந்த துயர் நீக்கி வாழ்வினில் இன்பம் தரும் நாகவரசு நாராஜனன். என் சிந்தைக்கு விருந்தளித்த நாராஜனன் துதி நாமம் எல்லா அடியவர் நாவிலும் ஒலித்திட இன்பநாமரசத்தில் சமர்ப்பணம்.

### துதி

ாநராஜனன் நாமம் பாடுங்கள்
நாடு நலம்பெற வேண்டிடுங்கள்
என்றும் நாடு சலம்பெற வேண்டிடுங்கள்
பாராயணம் செய்து பாடுங்கள்
பரந்தாமன் அருள்தனைப் பெற்றிடுங்கள்
அந்த பரந்தாமன் அருள்தனைப் பெற்றிடுங்கள் (நாராஜனன்.....)

ஆயர் குலத்தினர் வேண்டியே
ஆனந்த அருள்தனைப் பெற்றனர்
அன்று ஆனந்த அருள்தனைப் பெற்றனர்
வேதங்கள் பாடியே நின்றனர்
வேண்டும் வரம்தனைப் பெற்றனர்
அன்று வேண்டும் வரம்தனைப் பெற்றனர் (நாராஜனன்.....)

பாரதப் போரினில் பாண்டவர் வென்றதும்
பாஞ்சாலி துயில்காக்க கையை கொடுத்ததும்
பகவானின் பாதத்தை வேண்டியே நின்றதால்
அந்த பகவானின் பாத்தை வேண்டியே நின்றதால் (நாராஜனன்.....)

நாராயனன் என்று நாமங்கள் பாடியும்
நாடியே நாள்தோறும் வேண்டியே நின்றனர்
பரந்தாமன் மீதிலே பக்தியும் கொண்டனர்
பாரதம் எங்கும் வெற்றியே கண்டனர்
பாசமுடன் என்றும் அவன் பாதம் பணிவாமே (நாராஜனன்.....)

## கண்ணன்

## யாழ்ப்பாணம் பெருமாள் கோயில்

பற்றுற்றோர்க்கு பற்றுடையவன் பார்போற்றும் பெருமான் கந்தன். இவன் நெஞ்சில் அன்புருவாய் வந்தருளிய இவ்நாமம் அடியவர் உள்ளத்திற்க இன்பரசமாக சமர்ப்பணம்.

### துதி

ராகம் :- பீம்பிளாஸ்

அன்பு உருவாய் வந்திடடா கண்ணா கண்ணா
அருளை அள்ளி தந்திடடா கண்ணா கண்ணா
ஆலிலையில் துயில்பவனே கண்ணா கண்ணா
ஆறுதலைத் தந்திடடா கண்ணா கண்ணா (அன்புருவாய்.....)

இன்னும் என்ன சோதனையோ கண்ணா கண்ணா
இன்னல் தனைத் தீர்த்தருள்வாய் கண்ணா கண்ணா
ஈடு இணை அற்றவனே கண்ணா கண்ணா
ஈழம் தனை காத்திடடா கண்ணா கண்ணா (அன்புருவாய்.....)

உமையவளின் அண்ணன் ஆனாய் கண்ணா கண்ணா
உலகத்தை ஆண்டு கொண்டாய் கண்ணா கண்ணா
ஊழியர்க்கு அருள்புரிவாய் கண்ணா கண்ணா
ஊனினையைக் காத்தருள்வாய் கண்ணா கண்ணா (அன்புருவாய்.....)

எம்முன்னே வந்திடடா கண்ணா கண்ணா
எம் நிலையை கூறிடடா கண்ணா கண்ணா
ஏகாந்த நாயகனே கண்ணா கண்ணா
ஏக்கத்தை தீர்த்திடடா கண்ணா கண்ணா (அன்புருவாய்.....)

ஐவர் தனை காத்தவனே கண்ணா கண்ணா
ஐயம் தனை நீக்கிடடா கண்ணா கண்ணா
ஒளி தனை தருபவனே கண்ணா கண்ணா
ஒற்றுமையை தந்தருள்வாய் கண்ணா கண்ணா (அன்புருவாய்.....)

ஓங்கார இசையினிலே கண்ணா கண்ணா
ஓர் இசையாய் நீ இருப்பாய் கண்ணா கண்ணா
ஔவியத்தை நீக்கிடடா கண்ணா கண்ணா
ஔடதத்தைத் தந்தருள்வாய் கண்ணா கண்ணா (அன்புருவாய்.....)

## கோண்டாவில் பதி உறைந்த நந்தகோபாலன்

கோண்டாவில் பதி உறைந்து அருள் புரியும் நாராயணன் தந்தகோபாலனாக வந்து என் உள்ளம் புகுந்து நாடிவரும் அடியவர் முன் நின்று நத்தனம் ஆடிடும்

நந்தகோபாலன் என்று பாட வைத்து இன்பம் கொள்ள வைத்த இவ்நாமம் இன்பரசத்தில் சமர்ப்பணம்.

நந்தகோபாலா ஐயா நந்தகோபாலா
நாம் வணங்கும் தெய்வமே நந்தகோபாலா
ஐயா நாம் வணங்கும் தெய்வமே நந்தகோபாலா
நாடிவரும் அடியவர் முன் நந்தகோபாலா
நர்த்தனங்கள் ஆடிவருவாய் நந்தகோபாலா
ஐயா நர்த்தனங்கள் ஆடிவருவாய் நந்தகோபாலா (நந்தகோபாலா.....)

கீதை உபதேசம் செய்தாய் நந்தகோபாலா
கீர்த்தங்கள் பாடிவருவோம் நந்தகோபாலா
ஐயா கீர்த்தங்கள் பாடிவருவோம் நந்தகோபாலா
சயனத்தில் நீயிருந்தோ நந்தகோபாலா
சர்வலோகம் காத்தருள்வாய் நந்தகோபாலா
ஐயா சர்வலோகம் காத்தருள்வாய் நந்தகோபாலா (நந்தகோபாலா.....)

பக்தர் உம்மை நாடிவந்தோம் நந்தகோபாலா
பரந்தாமா ஓடி வருவாய் நந்தகோபாலா
ஐயா பரந்தாமா ஓடி வருவாய் நந்தகோபாலா
பாரதத்தின் போர் முடிக்க நந்தகோபாலா
பார்த்த சாரதியானாய் நந்தகோபாலா
ஐயா பார்த்த சாரதியானாய் நந்தகோபாலா (நந்தகோபாலா.....)

மண்ணை யுண்ட கண்ணன் அல்லோ நந்தகோபாலா
மலையாளும் மன்னன் அல்லோ நந்தகோபாலா
ஐயா மலையாளும் மன்னன் அல்லோ நந்தகோபாலா
மாய வித்தை செய்கின்றாயே நந்தகோபாலா
மானம் தனைக் காத்தருள்வாய் நந்தகோபாலா
ஐயா மானம் தனைக் காத்தருள்வாய் நந்தகோபாலா (நந்தகோபாலா.....)

வேணுகானம் பாடுகின்றோம் நந்தகோபாலா
வேடிக்கை காட்டுகின்றாய் நந்தகோபாலா
ஐயா வேடிக்கை காட்டுகின்றாய் நந்தகோபாலா
வேதனையில் வாடுகின்றோம் நந்தகோபாலா
வேண்டும் வரம் தந்தருள்வாய் நந்தகோபாலா
ஐயா வேண்டும் வரம் தந்தருள்வாய் நந்தகோபாலா (நந்தகோபாலா.....)

உலகாளும் மன்னன் அல்லோ நந்தகோபாலா
உன்னடியை நாடிவந்தோம் நந்தகோபாலா
ஐயா உன்னடியை நாடிவந்தோம் நந்தகோபாலா
உற்றதுணை யாரும் இல்லை நந்தகோபாலா
உன் பாவம் சரணடைந்தோம் நந்தகோபாலா
ஐயா உன் பாதம் சரணடைந்தோம் நந்தகோபாலா
ஐயா உன் பாதம் சரணடைந்தோம் நந்தகோபாலா

## பொன்னாலை ஸ்ரீ நாகவரத நாராயணர்

கலியுகக் கண்ணபகவானின் திருவிளையாடலில் இதுவும் ஒன்று. 2000 புரட்டாதி மாதம் அன்று தேர்த்திருவிழா பஜனை அடியவர்களோடு சேர்ந்து பாடிவிட்டு அடியவர்கள் மறுநாள் தீர்த்தத்துக்கு வரும்படி கூறவே எனது தொழிலின் நிமித்தம் வரமுடியாதென்று கூறி வீட்டிற்கு கவலையுடன் சென்றேன். அன்றிரவு அவன் கனவில் காட்டிய திருவிளையாடலே இப்பாமாலையின் தொகுப்பாக அடியவர்களுக்கு சமர்ப்பணம்.

### துதி

ராகம் :- சுபந்துவராளி

கண்ணா..... கண்ணா..... கண்ணா.....
கள்ளமற்ற அன்பு கொண்டாய் கண்ணா கண்ணா
காரிருளில் காட்சி தந்தாய் கண்ணா கண்ணா
கருநீல மேனிவண்ணா கண்ணா கண்ணா
காணக்காண இன்பம் கொண்டேன் கண்ணா கண்ணா
கண்ணா என் கார்முகில் வண்ணா
கண்ணா என் கார்முகில் வண்ணா
(கள்ளமற்ற அன்பு.....)

பொன்னாலைப் பதியுறைந்த கண்ணா கண்ணா
போற்றியுனை பாடவைத்தாய் என்னை கண்ணா
மண்ணளந்த மேனி வண்ணா கண்ணா கண்ணா
உன் மாயலீலை என்னிடம் தானா கண்ணா கண்ணா
கண்ணா என் கார்முகில் வண்ணா
கண்ணா என் கார்முகில் வண்ணா (கள்ளமற்ற அன்பு.....)

பாற்கடலில் துயில்பவனே கண்ணா கண்ணா
பாலர்களைக் காத்தருள்வாய் கண்ணா கண்ணா
பாருலகும் போற்றுகின்ற கண்ணா கண்ணா
இந்தப் பாவிகளைக் காத்தருள்வாய் கண்ணா கண்ணா
கண்ணா என் கார்முகில் வண்ணா
கண்ணா என் கார்முகில் வண்ணா (கள்ளமற்ற அன்பு.....)

## காலகண்டன் கையப்பன்

காலங்கள் கடந்தோடினாலும் கையப்பனின் காட்சிகள் கண்முன்னே மறையாது இருக்கின்றன. 1997ம் ஆண்டு தைப்பூச திருநாளில் அதிகாலை வேளையிலே அருள்மிகு துர்க்கையம்பிகையை தரிசிக்க வந்தவேளை இராணுவம் செல்ல அனுமதி தராததையால் மனவேதனையுடன் திரும்பி அவ்விடத்திலே தொங்க விடப்பட்டிருந்த படங்களை கும்பிட்டுவிட்டு செல்லும்போது சிவனும் விஷ்ணுவும் அவர் கையில் கருமை நிறம் கொண்ட விக்கிரகம் போன்று காட்சி அளிக்கப்பட் வேளை கையப்பன் என்று கூறுவது போன்று தென்பட்ட வேளையில் சிந்தையிலே தோன்றப் பெற்ற பாடல் அனைத்து அடியவரும் பாடிமகிழும் வண்ணம் இத்துதி சமர்ப்பணம்.

அன்பர் இல்லம் இன்பம் கொள்ள நாடிவாறா
அர்த்தயாம வேளையிலே நாடிவாறா
அம்பாள் அர்த்தயாம வேளையிலே நாடிவாறா
அன்னை துர்க்கை அம்பிகையே நாடிவாறா
அல்லல் உற்ற மக்கள்தனை காக்கவாறா
அம்பாள் அல்லலுற்ற மக்கள் தனைகாக்க வாறா (ஆடிவாறா ............)

ஜோதிவடிவாக இங்கு நாடிவாறா
ஜோகபோகம் தந்தருள நாடிவாறா
அம்பாள் ஜோகபோகம் தந்தருள நாடிவாறா
சரணம் சரணம் என்று சொல்ல நாடிவாறா
சாந்தி நிலை தந்தருள நாடிவாறா
அம்பாள் சாந்தி நிலை தந்தருள நாடிவாறா
அம்பாள் சாந்தி நிலை தந்தருள நாடிவாறா

அருள்மிகு துர்க்கைத்தாயார் உலகெங்கும் சாந்தி நிலையும் சமாதானத்தையும்
நல்லறிவையும் நல் ஞானத்தையும் அவரின் திருநாமத்தையும் திருவருட்காட்சியும்
நீதியும் செல்வத்தையும் வெற்றியையும் தந்தருள் அவவின் திருவடிகளே
வேண்டிநிற்கும் சிறு அடியேன்

"இறைநாமங்கள் தழைத்தோங்குக"
நன்றி

## முருகண்டி விநாயகர்

07.10.2011 மன்னாரில் உள்ள எழுந்தூர் அகிலாண்டேஸ்வரி ஆலயத்திற்கு சென்று அடியேன் தாயின் மீது இயற்றி பாடி விட்டு வரும் போது மோட்டார் சைக்கிளை முருகண்டி பிள்ளையாருக்கு அருகில் நிறுத்தி விட்டு அந்த அப்பனிடம் வேதனையை வாசலில் அமர்ந்து வேண்டுதல் செய்த போது தேகம் சிலிர்த்தது சற்று நேரம் மௌனத்தில் சிந்தித்தேன். சிந்தையில் உதித்தது அவன் நாமம் சிந்தைக்குரியவன் அவனிடம் சமர்ப்பணம்.

பாடல்
பால மரத்தடியில் பரம் பொருளாய்
உறைந்தவனே
பக்தர் குறை தீர்த்து பார் போற்ற
ஆள் பவனே
வேழ முகத்தவனே வேண்டும்

வரம் அருள்பவனே
வேண்டிடும் அடியவர்க்கு
வேதனைகள் தீர்ப்பவனே
(பால..........)

முருகண்டி பதி தனிலே
முதல்வனாய் அருள்பவனே
மூலப் பரம் பொருளாய் முன்னின்று
அருள்பவனே காப்பவனே
(பால..........)

ஞானத்தின் திரு உருவே
நலம் அருளும் நாயகனே
நாடி வந்து உனைப் பாட
நாவில் கவி தந்தவனே
(பால..........)

வேதனைகள் சொல்லி அழ
வேறு துணை இல்லை அப்பா
வேழ முகத்தோனே
வேடிக்கை காட்டி நின்றாய்
(பால..........)

ஆதி அந்தம் இல்லாத
அரும் பெரும் ஜோதியப்பா
அடியவர் குறை களைந்து
அற்புதம் காட்டுமப்பா
(பால..........)

**மாவை முருகன்**

11.10.2011 செவ்வாய் பௌர்ணமி தினமன்று மாவை முருகனின் ஆலயத்தில் பூஜை செய்யும் குருக்களிடம் ஆசியுரை பெறுவதற்கு சென்று அவன் பாதம் தரிசித்த வேளை மயிலை பார்த்து அது தோகை விரித்து ஆடுவதைக் கண்டு அந்த மயிலின் இறகு ஒன்று கிடைத்தால் எனது பூஜை அறையில் வைத்து வழிபடலாம் என்று நினைத்துக் கொண்டு உள் செல்லும் வேளை மயில் அகவும் சத்தம் கேட்டு எனது பேரன் தாத்தா உங்களைப் பார்த்து மயில் கத்துகிறது எனக் கூற நான் சுற்றி வந்து கும்பிட்டு வருவோம் என்று பின் வந்து பார்த்த பொழுது ஆச்சரியமாக இருந்தது. பெரிய இறகு கைக்கு கிடைக்கக் கூடிய நிலையில் கிடந்தது. அதை எடுத்து கும்பிட்டு விட்டு சிந்தித்த வேளை சிந்தையில் தோன்றிய இப்பாடல் அவன் பாதத்திற்கு சமர்ப்பணம்.

சம்பவங்கள் அழியா சரித்திரமாகுகின்றன. இவ்வரிசையில் ஆஞ்சனேய பெருமான் இறைபக்தி கொண்ட ராமபிரான் மீதும் சீதாபிராட்டி மீதும் கொண்ட பத்தி இன்றைய உலகில் வழிபடும் பக்த அனுமாராக திகழப் பெற்றது. எமது வாழ்வில் இன்பத்தின் நிலையாக அமையலாம். என் கண்ணில் காட்சி தந்து பக்தி நாமம் தந்து பஜனை பாடவைத்து இன்பம் அளிக்கும் இத்துதி அடியவர்கட்கு சமர்ப்பணம்.

### துதி

ராகம் :- மனோலயம்

இராமரிடம் பக்தி கொண்டாய் ஆஞ்சநேயா
இரட்ச்சிப்பாயே எம்மை நீயும் ஆஞ்சநேயா
சீதையிடம் அன்பு கொண்டாய் ஆஞ்சநேயா
சீர் நிலையை ததந்தருள்வாய் ஆஞ்சநேயா
சின்னக் குழந்தைகள் நாம் ஆஞ்சநேயா
சிந்தையிலேதான வருவாய் ஆஞ்சநேயா (இராமரிடம்.....)

செய்வதறியோமே ஆஞ்சநேயா
செந்தமிழைக் காத்திடய்யா ஆஞ்சநேயா
சூது வாது அற்றவனே ஆஞ்சநேயா
சூத்திரங்கள நீ அறிவாய் ஆஞ்சநேயா
வல்லவர்க்கு வல்லவன் நீ ஆஞ்சநேயா
வையம் எல்லாம் காத்தருள்வாய் ஆஞ்சநேயா (ஆஞ்சனேயா....)

நெஞ்சு துடிக்கிறதே ஆஞ்சநேயா
நெஞ்சம் எல்லாம் நீ நிறைந்தாய் ஆஞ்சநேயா
விடிடிவுக்கோர் எல்லையுண்டோ ஆஞ்சநேயா
உந்தன் விந்தைதனைக் காட்டிடய்யா ஆஞ்சநேயா
சரணம், சரணம் ஐயா ஆஞ்சநேயா
உன்பாதம் சரணடைந்தோம் ஆஞ்சநேயா
உன்பாதம் சரணடைந்தோம் ஆஞ்சநேயா
உன்பாதம் சரணடைந்தோம் ஆஞ்சநேயா

## இணுவில் பதி உறைந்த ஆஞ்சநேயர்

இணுவில் பதி உறைந்து இன்னல்கள் கலைத்திடும் ஆஞ்சநேயப் பெருமான் அன்பு கொண்ட அடியவர் உள்ளங்களிலும், இல்லங்களிலும் காக்கும் பெருமானாக திகழ்கின்றார். என் உள்ளத்தில் அவர் அடிக்கடி காட்சிதந்து என் சிந்தையில் மலரப் பெற்ற பாமாலை அவருடைய கும்பாபிஷேக மலரில் மூன்று நாமம் வெளி வந்துள்ளன. அப்பாமாலை அனைத்து உள்ளங்களிலும் இன்புற சமர்ப்பணம்.

### துதி

ராகம் :- புன்நாகவிராளி

ஆஞ்சநேயா அப்பா ஆஞ்சநேயா
அஞ்சலையின் புத்திரனே ஆஞ்சநேயா

அன்பர் உள்ளம் கோயில் கொண்டாய் ஆஞ்சநேயா
ஆலமாய் நீ அமைந்தாய் ஆஞ்சநேயா (ஆஞ்சநேயா.....)

இணுவில் பதி நீ உறைந்தாய் ஆஞ்சநேயா
இரட்சிப்பாயே எம்மை நீ ஆஞ்சநேயா
பக்தர்க்கு பக்தர் ஆனாய் ஆஞ்சநேயா
பரமபக்தன் ஆனாயே ஆஞ்சநேயா (ஆஞ்சநேயா.....)

சீதை தனைத் தேடிச்சென்றாய் ஆஞ்சநேயா
சிறைமீட்க தீயும் இட்டாய் ஆஞ்சநேயா
சுந்தரேசா நாதன் ஆனாய் ஆஞ்சநேயா
சுக்கிரனின் பார்வை கொண்டாய் ஆஞ்சநேயா (ஆஞ்சநேயா.....)

ஈடு இணை அற்றவனே ஆஞ்சநேயா
ஈடில்லா ஜோதி ஆனாய் ஆஞ்சநேயா
பாலகர்க்கு பாலகன் நீ ஆஞ்சநேயா
பாசமுள்ள நேசன் ஆனாய் ஆஞ்சநேயா (ஆஞ்சநேயா.....)

## அன்பு கொண்ட அனுமாரே

அன்பு கொண்ட அடியவர் உள்ளங்களில் இன்பம் தந்தாலும் ஆலயமாக திகழ்ந்திருப்பது அடியவர்க்கு இன்பம் கொழிக்கும் காட்சி. இவர் நாமம் ஈழத்தில் ஒலித்திட இன்பரசத்தில் சமர்ப்பணம்.

### துதி

ராகம் :- குறிஞ்சி

அன்பு கொண்ட அனுமாரே
ஆதிதூதன் ஆனாயே
அன்பருக்கு அருள் புரிய
ஆலயமாய் அமர்ந்தாயே (அன்பு.....)

இராவணன் பகை தீர்க்க
இராமதூதன் ஆனாயே
இன்னல்களைக் களைந்தருள
இணுவில் பதி உறைந்தாயே (அன்பு.....)

வானர சேனையுடன்
வலம் வந்து நின்றாயே
வாலியை தான் அளித்து
வல்லமைகள் பெற்றாயே (அன்பு.....)

சீதைதனை தேடிச்செல்ல
சிறு குரங்காய் சென்றாயே
சிந்தை பல தருபவனே
சீர் நிலையைத் தந்தருள்வாய் (அன்பு.....)

இலங்காபுரி தான் நோக்கி

இன்னல்களை புரிந்தாயே
இரக்கமற்ற அரக்கர்களை
இல்லாது அழித்தாயே (அன்பு.....)

சஞ்சலங்கள் தீர்த்தவனே
சர்வ பலம் கொண்டவனே
சரணடைந்தோம் உன் பாதம்
சாந்தி நிலை தந்தருள்வாய்
எங்கும் சாந்தி நிலை தந்தருள்வாய்
எங்கும் சாந்தி நிலை தந்தருள்வாய்

### சனீஸ்வரர்

ஒரு மனிதனின் வாழ்வை செழிப்புற செய்பவரும் அவரே மங்க வைப்பவரும் அவரே. அவரை சரணடைந்தால் துன்பத்திலும் இன்பத்திலும் காத்தருள்வார். என் சிந்தையில் கனவில் தந்த இவ்நாமம் அடியவர் சிந்தைக்கு சமர்ப்பணம்.

துதி

ராகம் :- மனோலயம்

சனீஸ்வரா அப்பா சனீஸ்வரா
சஞ்சலங்கள் தீர்த்தருள்வாய் சனீஸ்வரா எம்
சர்வ உலகையும் ஆட்டி வைப்பவா சனீஸ்வரா
உன்னை சரணடைந்தால் காத்தருள்வாயே சனீஸ்வரா (சனீஸ்வரா.....)

காக்கை தன்னில் வலம் வருவாயே சனீஸ்வரா
கருமை நிறம் கொண்டவனே சனீஸ்வரா
கள்ளம் அற்ற அடியவர் முன்னே சனீஸ்வரா
கருணை புரிய வல்லவன் நீயே சனீஸ்வரா (சனீஸ்வரா.....)

தர்மசீலனே ரவி நந்தா தர்மம் காப்பாய் சனீஸ்வரா
தன்னை உணர ஜோதி தருவாய் சனீஸ்வரா அப்பா
தவக்குலம் போற்றிடும் தயாளனே சனீஸ்வரா
தாழ் பணிந்தோமே உன் பாதம் சனீஸ்வர அப்பா
தாழ் பணிந்தோமே உன் பாதம் சனீஸ்வர அப்பா
தாழ் பணிந்தோமே உன் பாதம் சனீஸ்வர அப்பா

### கோண்டாவில் ஞான வயிரவர்

அருள்மிகு ஞானவைரவப் பெருமானே நாளும் பொழுதும் நினைத்திட அடியேனின் உடலின் வேதனை மிகுந்த உடல் அர்த்த சாமத்தில் ஆறாத்துயருடன் அவன் ஆலயத்தில் தஞ்சம் புகுந்த அடியேனுக்கு அவன் தீபத் தட்டிலே இருந்த கரிகளை உடலில் பூசி நாவினில் இட்டு வேதனையில் உருண்ட பொழுது அயர்ந்து தூக்கத்தில் ஆழ்ந்த நான் அவன் திருக்காட்சி கண்டு திடுக்கிட்டு விழித்தபோது உடலில் உள்ள வலி நீக்கப்பெற்று வயிரவப் பெருமானின் ஞான சிந்தை கொண்டு 22.09.1999 தேர் மலராக வெளியிடப்பட்ட இத்துதி சமர்ப்பணம்.

துதி

ராகம் :- புன்னகவராளி

ஞான வயிரவா நலம் காக்கும் வயிரவா
நம்பினோர்க்கு குல விளக்கே ஞான வயிரவா
கோண்டாவில் பதி உறைந்தாய் ஞான வயிரவா
கொடுமைகளை களைந்தருள்வாய் ஞான வயிரவா
(ஞான வயிரவா.....)

நோய் நொடியில் போக்கிடுவாய் ஞான வயிரவா
நொந்து மனம் வாடுகின்றோம் ஞான வயிரவா
பக்தியுடன் வருபவரை ஞான வயிரவா
பார்த்திருந்து காத்தருள்வாய் ஞான வயிரவா
(ஞான வயிரவா.....)

எட்டுத்திக்கும் காவல் நிற்பாய் ஞான வயிரவா
எம்மவரை காத்தருள்வாய் ஞான வயிரவா
பக்தர் படை சூழ்ந்திடவே ஞான வயிரவா
பவனி வலம் வந்தருள்வாய் ஞான வயிரவா
(ஞான வயிரவா.....)

நாய் தனிலே வலம் வருவாய் ஞான வயிரவா
நாடி உன்னை வேண்டுகின்றோம் ஞான வயிரவா
தீராத நோய் தீர்த்தருள்வாய் ஞான வயிரவா
உந்தன் தரிசனத்தைத் தந்தருள்வாய் ஞான வயிரவா
(ஞான வயிரவா.....)

வீறு நடை போட்டிடுவாய் ஞான வயிரவா
வீதி உலா வந்தருள்வாய் ஞான வயிரவா
நாளும் உனை வணங்கிடவே ஞான வயிரவா
நல் அருளைத் தந்தருள்வாய் ஞா வயிரவா
(ஞான வயிரவா.....)

சக்தி மயம் கொண்டவரே ஞான வயிரவா
எங்கள் சஞ்சலங்கள் தீர்த்தருள்வாய் ஞான வயிரவா
சரணம் சரணம் ஐயா ஞான வயிரவா
உந்தன் பாதமலர் சரணடைந்தோம் ஞான வயிரவா
உந்தன் பாதமலர் சரணடைந்தோம் ஞான வயிரவா
உந்தன் பாதமலர் சரணடைந்தோம் ஞான வயிரவா
(ஞான வயிரவா...)

உலகெங்கும் வாழும் உயிர்கள் யாவும் சாந்தி நிலை பெற்று அமைதியுடன் வழிபாடு பெருகி பக்தி பஜனை பாடி பண்புடன் வாழவேண்டி எட்டுத்திக்கும் காவல் புரியும் வயிரவப் பெருமானை வேண்டி சமர்ப்பணம்.

## துதி

ராகம் :- புன்னகவராளி

வயிரவா சுவாமி வலம் வருவார்
வாழ்வினில் இன்பம் தந்தருள்வாய்
ஜெகந்தனைக் காத்திட வேண்டுகின்றோம்
ஜெகம் எங்கும் பஜனைகள் செய்திடுவோம் (வயிரவ சுவாமி.....)
நற்றமிழ் போற்றிடும் நாயனிலே
நல்லிருளில் வலம் வந்து காத்தருள்வாய்
சூலம் ஏந்தியே வந்தருள்வாய்
சூழ் நிலை மாற்றியே காத்தருள்வாய் (ஞான வயிரவா.....)

பக்தர்கள் வேண்டிட வந்தருள்வாய்
பாவிகள் எம்முயிர் காத்தருள்வாய்
நித்தமும் உம்மை நாம் வேண்டுகின்றோம்
நிம்மதியை எங்கும் தந்தருள்வாய் (ஞான வயிரவா.....)

சித்தர்கள் போற்றிடும் வயிரவசாமி
சிந்தையில் வந்தருள்வாய் வயிரவசாமி
சரணம் சரணம் வயிரவசாமி
சாந்தியை தந்தருள்வாய் வயிரவசாமி
சாந்தியை தந்தருள்வாய் வயிரவசாமி
சாந்தியை தந்தருள்வாய் வயிரவசாமி (ஞான வயிரவா.....)

## மங்களம்

ராகம் :- கம்சத்வனி

ஆதிமுதலான எங்கள் ஐங்கரனுக்கு மங்களம்
அகிலம் இதை ஆளுகின்ற ஈஸ்வரர்க்கு மங்களம்
அன்னையாக வீற்றிருக்கும் அம்பிகைக்கு மங்களம்
ஆனைமுகன் தம்பியான குமரனுக்கு மங்களம்
கருணை வடிவான எங்கள் கண்ணனுக்கு மங்களம்
கலியுகத்தில் காட்சிதரும் கையனார்க்கு மங்களம்
சீதை தனை மீட்டுவந்த அனுமனுக்கு மங்களம்
காரிருளில் காத்தருளும் வயிரவர்க்கு மங்களம்
காலம் எல்லாம் காத்தருள வேண்டுகின்றோம் மங்களம்
மங்களம், மங்களம், மங்களம் ஜெய மங்களம்
மங்களம், மங்களம், மங்களம் சுப மங்களம்
மங்களம், மங்களம், மங்களம் சுப மங்களம்
மங்களம், மங்களம், மங்களம் சுப மங்களம்

உ

இறை சிந்தையில் தூங்கிய வேளையில் கனவில் காணப்பெற்ற காட்சியின் நிலைகொண்டு சிந்தையில் எழப்பெற்ற தத்துவ கருத்து ஞானம்.

## உண்மை இதுவென்று உணரப் பெறுவீர்

கருணைக்கு ஒருமுகம்
கானகத்தில் இருமுகம்
கண்கொள்ளாக் காட்சிதரும்
கருமையின் கருணைலிங்கம்
மூசிகவா கனனின் பாலபிஷேகம்
முத்துக்குமரன் தரும் மூவகை புஸ்பமாலை
முழு உலகின் உயிர் மூச்சே சிவலிங்கம்
தத்துவப் பொருள்தந்த தாயவள் துர்க்கை அன்னை
தள்ளாடும் வயதினிலும் தாழ் பணிவேன் தாயே
அம்மாதாயே உன்அருள் சக்தி ஒன்றே போதுமம்மா

## மனிதா ஒரு நொடி சிந்தி

சிந்தைக்கு ஒரு வினாடி
சிந்திக்க இரு வினாடி
முந்தை வினை தீர்க்கும்
முத்துக்குமரன் தந்திட்ட தத்துவ ஞானம்
மதிகெட்டு விதி வந்து மரணத்தின் பிடி கொண்டு
மாண்டு போகும் மனிதா
மமதையின் நிலை கொண்டு
மண்ணுயிர் வதைப்பது நீதியன்றே மனிதா

பொய் உன்னும் உடல் சுமந்து
போகத்தில் திளைத்திடும் மனிதா
மண்ணோடு மண்ணாக மாண்டு போகும் உடல்தனை
மறந்திடல் சரியோ மனிதா

நன்றே வருகினும் தீதே விளையினும் நான் அறிவது ஒன்றேயும் இல்லை உனக்கே பாரம் எனக்கு உள்ள எல்லாம் அன்றே உனதென்று அளித்துவிட்டேன் அழியாத குணக்குன்றே அருட்கடலே இமவான் பெற்ற கோமளமே.

## நன்றே வருகினும் தீதே விளைகினும் இன்று கண்ட அனுபவம்

வாடினேன் வாடினேன் புலமையின் வறுமையில் வாடினேன்
வாடியமுகம் கண்டு வதந்திகள் பேசிடும் வள்ளலார்களை கண்டேன்
நால்வனை மதங்களும் நல்வழிப்படுத்தும் நிலைகண்டேன்
நல்லதோர் வாழ்விற்கு வழிசமைத்திடும் நற் போதனைகளை கண்டேன்
பட்டாடை உடுத்தி பட்டை அணிந்து பகட்டித்திரியும் பாவலர்களைக் கண்டேன்
பட்டினி கிடந்து பட்டை அணிந்து பாடித்திரியும் பரதேசிப் பாவலர்களைக் கண்டேன்
கற்றதோர் கல்விக்கூடம் தனில் கடிந்திகழ்ந்திடும் ஆசிரியர்களைக் கண்டேன்
கண்டதும் களிப்புற்று கள்ளம் கபடமின்றி கருத்துப் பரிமாறி சமயக்கலை
வளர்ந்திட உதவி புரிந்திடும் ஆசிரியமணிகளைக் கண்டேன்
நாடினேன் நாடினேன் ஆண்டவனை நாடினேன் நல்லறத்தின் வாழ்வினை நான் கண்டேன்


நாவிலே நாமகளின் நாமங்கள் தந்திடப் பெற்றேன்
நல்லதோர் சமயகலை வளர்த்திட நல்லருள் பெற்றேன்
பாவலர் நிலைதனை அடியேன் அறியேன், பாட்டின் பொருளினை அறியேன்
ஆதிபராசக்தி பாதம்தனை பற்றினேன் பாடிடும் நிலைதனை பெற்றேன்
மண்ம கொண்ட இன்பமும் துன்பமும் அவள் பாதத்திற்கே சமர்ப்பணம்.


## கற்றுக்கொள்ள வேண்டியவை

அன்பு காட்டு ஆனால் அடிமையாகிவிடாதே
இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து போகாதே
பணிவாய் இரு ஆனால் கோழையாய் இராதே
கண்டிப்பாய் இரு ஆனால் கோபப்படாதே
சிக்கனமாய் இரு ஆனால் கஞ்சனாய் இராதே
வீரனாய் இரு போக்கிலியாய் இராதே
சுறுசுறுப்பாய் இரு ஆனால் பதட்டப்படாதே
தர்மம் செய் ஆனால் ஆண்டியாகிவிடாதே
பொருளைத் தேடு ஆனால் பேராசைப்படாதே
உழைப்பை நம்பு ஆனால் கடவுளை மறந்துவிடாதே
பக்தியுடன் இரு ஆனால் பகட்டை விரும்பாதே
நீதிக்குத் தலைவணங்கு ஆனால் நீதியற்று நடக்காதே

## அடியேன் கொண்ட இலட்சிய வழிகள்

தர்மம் செய் - தர்மம் உனைக் காக்கும்
தர்மத்தின் வழியில் செல் - அதர்மம் தானாய் அழியும்
நேர்வழியில் நட அதுவே - உனக்கு நீதி தரும்
நீதியைக் காப்பாற்று - நீதியுன்னைக் காப்பாற்றும்
மாடியில் வாழ்ந்தாலும்- குடிசையில் வாழ்பவரை மதித்து வாழ்வாய்
பணத்தில் புரண்டாலும்- ஏழ்மை நிலையை மறக்காதே
உள்ளத்தில் உறுதிகொள் - அதுவே உன் வாழ்வுக்கு உயர்வு தரும்.




திருஞானசம்பந்தர்
திருநாவுக்கரசர்
சுந்தரர்
மாணிக்கவாசகர்